# ஒரு அன்னமும் சில காகங்களும்

## இந்திரா சௌந்தர்ராஜன்



# ஒரு அன்னமும் சில காகங்களும்...

## இந்திரா சௌந்தர்ராஜன்

**திருமகள் நிலையம்**

சுகான்ஸ் அப்பார்ட்மெண்ட்ஸ்

பழைய எண் : 28 புது எண்.13, சிவப்பிரகாசம் சாலை,

தி.நகர், சென்னை–600 017.

தொலைபேசி : 2434 2899, 24327696

பேக்ஸ் எண் : 91–44–24341559

# 1. செலவில்லாத சந்தோஷங்கள்!

அரவிந்தை அழைத்தது அவனது இன்டர்காம்! காது கொடுத்தான்.

"சார், ரிசப்ஷன்ல இருந்து மாதவி பேசறேன். உங்களைப் பார்க்க ப்ரியாங்கற ஒரு லேடி வந்திருக்காங்க..."

மாதவி சொல்லி முடித்ததுதான் தாமதம்.....

அரவிந்துக்கும் குப்பென்று வியர்க்கத் தொடங்கியது.

ப்ரியா.....!

அவனுக்காகப் பார்க்கப்பட்டிருக்கும் பெண்!

பெண் பார்க்கும் படலம் முடிந்து நிச்சயதார்த்தத்தை நோக்கி நாட்கள் நகர்ந்தபடி உள்ளன. அதன்பின் திருமணம்.

மனைவியாக வரப்போகின்றவள் இப்பொழுது எதற்காக வந்திருப்பாள்?

கேள்விகள் மனதைக் கொத்திட, ஸீட்டை விட்டு எழுந்து அவளை நோக்கி நடந்தான்!

அவள் ரிசப்ஷன் சோபாவின் நுனியில் புறப்பட்டுவிடும் தோரணையில் அமர்ந்திருந்தாள். அவன் வரவும் 'ஹாய்' என்று மென்மையாய் சன்னமாகச் சிரித்தாள்.

அவன் சற்று இடைவெளிவிட்டு அமர்ந்தான். பதிலுக்குச் சிரித்தான்.

பேச்சை எதில் இருந்து தொடங்குவது என்பதில் ஒரு தடுமாற்றம் தெரிந்தது. ஆனால், அவளே ஆரம்பித்து விட்டாள்.

"ஒரு முக்கியமான விஷயமா உங்களைப் பார்த்துப் பேசணும்னு தோணிச்சு. அதான் வந்தேன்..."

"ஓ...வித் ப்ளெஷர். கேன்டீன்ல காபி சாப்பிட்டுக்கிட்டே பேசலாமா?" அவனும் பவ்யமாகக் கேட்டான்.

காபியை உறிஞ்சியபடியே அவள் பேச ஆரம்பித்தாள்.

"நான் இப்ப சொல்லப் போறதைக் கேட்டு நீங்க என்னை வித்தியாசமா நினைக்கக்கூடாது. எனக்கு இரண்டு அக்கா இருக்கிறது உங்களுக்குத் தெரியும்னு நினைக்கறேன். இரண்டு பேருக்குமே கல்யாணமாயிடுச்சு. ஒரு அக்கா மும்பைல இருக்கா! இன்னொரு அக்கா கோயம்புத்தூர்ல இருக்கா... ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆனதே ஒழிய, அவங்க ரெண்டு பேரும் சந்தோஷமாவே வாழலை. ஏன்னா பெரியக்காவோட கணவர் தினமும் நைட்ல தண்ணி அடிக்கிறவர். அதை மூடி மறைச்சு கல்யாணம் பண்ணிட்டாங்க. அடுத்த அக்கா கணவர் ஒரு அம்மாப்பிரியன். அம்மா சொல்றதுதான் அவருக்கு வேதம். அம்மாவா பார்த்து எப்ப சொல்றாங்களோ அப்பதான் அவர் அக்காகிட்டேயே வர்றார். இதை எல்லாம் ஏன் நான் சொல்ல வர்றேன்னா..."

ப்ரியாவின் இழுவையை ஒரு கட்டத்தில் கையை உயர்த்தித் தடுத்த அரவிந்த், சிறிது மௌனத்துக்குப் பின் அவளுக்குப் பதில் தரும் விதமாகப் பேச ஆரம்பித்தான்.

"ப்ரியா, உன் பயம் எனக்குப் புரியுது... நான் இப்ப என்ன செய்யணும்?" மிக நேராகப் பளிச்சென்று விஷயத்துக்கு வந்து விட்டான்.

ப்ரியாவையே அவன் கேள்வி சற்று திக்குமுக்காட வைத்துவிட்டது.

"இல்ல... என் அக்காக்கள்தான் சொன்னாங்க... நீயாவது பழகிப் பார்த்து பாஸிடிவ் நெகடிவ் எல்லாம் தெரிஞ்ச நிலைல கல்யாணம் பண்ணிக்கோன்னு..."

''ஒரு கோணத்துல நல்ல பதில்தான். அவங்க நிலைல அப்படி ஒரு அட்வைஸைதான் கொடுக்க முடியும். சரி, நான் என்ன பண்ணணும்? உன்னை எனக்குப் பிடிக்கலைன்னு சொல்லி ஒதுங்கிக்கணுமா?''

அரவிந்தின் மின்னலான கேள்வி முன் திரும்ப ஒருமுறை திணறிய ப்ரியா, ''நான் அப்படிச் சொல்ல வரலை... நாம கொஞ்சம் பழகிப் பார்த்தபிறகு கல்யாணம் பண்ணிக் கலாம்னுதான் சொல்ல வந்தேன்.''

அதைக் கேட்ட மறுநொடியே பெரிதாகச் சிரிப்பு வந்துவிட்டது அரவிந்துக்கு...

''எதுக்கு இந்தச் சிரிப்பு?''

''சிரிக்காம என்னம்மா பண்றது... நான் உன்னை ஏமாத்தற விதமா தினசரி நல்லவன் மாதிரி நடிச்சா என்ன செய்வே?''

திரும்பவும் ப்ரியா சிக்கிக் கொண்டதுபோல அவனைப் பார்த்தாள். அவனுக்கொரு பளிச்சென்ற பதிலை எப்படிச் சொல்வது என்பதில் ஒரு திணறல் அவளிடம். அவனே தொடர்ந்தான்.

''ஒளியத் தெரியாதவன் தலையாரி வீட்டுக்குள்ளயே ஒளிஞ்சுக்கிட்ட மாதிரி இருக்கு உன்னோட அப்ரோச்... சுருக்கமா சொல்லப்போனா உன் அக்காக்கள் சந்தோஷமா இல்லாதது உன்னைப் பாதிச்சிருக்கு. அதுதான் உன்னை என்கிட்ட இப்படிப் பேச வெச்சிருக்கு. ஒரு வகைல நீ இப்படி நேரா வந்து மறைக்காம பேசினதுல எனக்கு ரொம்பவே சந்தோஷம். உனக்கு எப்படி எனக்கான கணவன் இப்படியிப்படிதான் இருக்கணும்னு ஒரு எதிர்பார்ப்பு இருக்கோ அதேபோல எனக்கான மனைவி பத்தி எனக்கும் இருக்கும் இல்லையா?''

கேள்வியோடு அவளைப் பார்க்க, அவளது பெரிய ஜிமிக்கி அணிந்த காதுகள் இப்படியும் அப்படியும் ஆடிட, அவளும் ஆமோதிப்பாய் தலையசைத்தாள்.

"லுக் ப்ரியா... தண்ணி அடிக்கறது, சிகரெட் பிடிக்கறது, சீட்டு ஆடறதெல்லாம் பலவீனங்கள். அதெல்லாமும் தப்புதான்... ஆனா தாம்பத்யத்துல பெரிய தப்பே உண்மை இல்லாம இருக்கறதுதான். எதுல வேணும்னாலும் பொய் சூது இருக்கலாம். அந்த வகைல நான் உண்மையானவன். எனக்கு வர்ற மனைவி என் பலவீனங்களையும் நேசிக்கிறவளா இருக்கணும்கறது என் எதிர்பார்ப்பு.

பை த பை, அப்பப்ப பார்ட்டி அப்படி இப்படின்னு போனா நானும் தண்ணியடிப்பேன். இன்ஃபாக்ட் ரெகுலரா சிகரெட்டும் பிடிப்பேன். மற்றபடி பெருசா கெட்ட பழக்கங் கள் இல்ல. நிச்சயமா அம்மாக் கோண்டு கிடையாது.

அப்புறம் எவ்வளவு ட்ரை பண்ணாலும் நடிக்க வராது. நிறையவே கோபம் வரும். வந்த வேகத்துல போயிடும். எனவே உங்களுக்குப் பிடிக்காத தண்ணி, சிகரெட்டுன்னு ரெண்டு விஷயம் என்கிட்டே இருக்கே... ஆகையால நான் உங்களைப் பிடிக்கலைங்கற மாதிரி சொல்லிட்டு விலகிக்கிறேன். டோண்ட் வொர்ரி!"

நறுக்கென்று பேசிவிட்டு, முடிவுக்கும் வந்துவிட்டவன் போல அவன் எழுந்தான்.

இப்பொழுது அவள் சிரித்தாள்.

அவனுக்குக் காரணம் புரியவில்லை.

ஆனால், அவளே சொல்லத் தொடங்கினாள்.

"தேங்க்யூ சார்... வெளிப்படையா பேசினதுக்கு ரொம்ப தேங்க்ஸ். நீங்க சொன்ன மாதிரி பலகீனங்களை முயற்சி செய்தா திருத்திக்க முடியும். ஆனா, உண்மையில்லாத நிலைப்பாட்டை எதுவும் செய்ய முடியாது. எனக்

கென்னவோ இவ்வளவு ஓபனா இருக்கிற உங்களைக் கொஞ்சம் கொஞ்சமா மாத்திட முடியும்னு தோணுது. ஆகையால என்னைப் பிடிக்கலைன்னு நீங்க சொல்லத் தேவையில்லைன்னு நான் நினைக்கறேன்...'' என்றாள்.

''அப்ப கல்யாணத்தைக் கொஞ்சம் தள்ளிப் போட்டுட்டு நீ விரும்பின மாதிரியே பழகுவோம். நானும் என்னை முழுமையா திருத்திக்கிறேன். அப்புறமாவே உன் கழுத்துல தாலி கட்றேன். சரிதானே?''

அவன் கேட்டான்.

''இல்ல அது எனக்கும் சரி... உங்களுக்கும் சரி, ஒத்து வராது. பெரியவங்க விருப்பப்படி கல்யாணம்கறது நடக்கிற அன்னிக்கே நடக்கட்டும். ஒரு மனைவியாவே உங்களை நான் கவனிக்கிற விதமா கவனிச்சுக்கிறேன். வர்றேன்...''

அவள் சற்று ஒளிகூடிய புன்னகையோடு குழப்பம் விலகியவளாகக் கிளம்பினாள்.

அரவிந்துக்குப் பின்ஸீட்டிலேயே அவன் நண்பன் லக்ஷ்மண்....

''அரவிந்த்! எதுக்குடா இப்படி உன் உட்பீகிட்ட தம் அடிப்பே... தண்ணி அடிப்பேன்னே... நீதான் அந்த மாதிரி கெட்ட பழக்கமெல்லாம் இல்லாதவனாச்சே?.''

''வாஸ்தவம்தான லக்ஷ்மண். ப்ரியா வரைல புருஷனா வரப் போறவனோட பலகீனங்கள் ஒரு விஷயமல்ல. அவன் உண்மையா இருக்கிறதுதான் முக்கியம். அதனாலதான் அவகிட்ட நான் இப்படிச் சொன்னேன். இல்லாத இந்த பழக்கங்களை நான் அவளுக்காக விடவும் போறேன். அதுவரைல நான் உண்மை பேசினது ஒரு சந்தோஷம். கெட்ட பழக்கங்கள் விடப் போறது இரண்டாவது சந்தோஷம். எனக்கோ அவளுக்கு நான் செலவேயில்லாத சந்தோஷத்தைத் தந்த சந்தோஷம்!'' என்று அரவிந்த் கண் சிமிட்ட, லக்ஷ்மண் வாயைப் பிளந்து விட்டான்.

# 2. அய்யர் வீட்டு ஆலமரம்

**1998**-ம் வருடத்தில் ஒரு நாள்...

வெளியே கிளம்பிக் கொண்டிருந்தான் ஜனா. செருப்பை மாட்டிக்கொண்டு வீட்டின் மெயின் கேட் கதவைத் திறக்க முனைந்தபோது, "வணக்கம் ஜனா சார்...." என்கிற குரல் கேட்டது. எதிரில் புரோக்கர் வீரபாண்டியன்! முன்புதான் புரோக்கர்கள் நாலு முழ வேட்டி, முழுக்கை சட்டை, சந்தன பொட்டு என்று எல்லா ஊர்களிலும் ஒரேமாதிரி தோற்றத் தோடு இருந்தார்கள்.

இப்போது ஹீரோ ஹோண்டாவில் பேண்ட் சட்டை சகிதம் ஒருவித கார்ப்பரேட் ஸ்டைலுக்கு அவர்கள் மாறிவிட்டார்கள்.

வீரபாண்டியனிடம் கூடுதலாக தோள்பட்டை குறுக்காக லேப்டாப் பேக் ஒன்றும் தொங்கிக் கொண்டிருந்தது. "வாங்க வீரபாண்டியன்..." என்றபடியே ஜனாவும் வீட்டுக் குள் திரும்பத் தொடங்கினான். அவன் திறந்த கதவின் வழியாக வீரபாண்டியனும் பின்தொடர்ந்தார். யார் வீட்டு வாசற்கதவாக இருந்தாலும் கொய்ங்... என்றோ கிரீச் என்றோ பாஷைகளில் அகப்படாத தினுசில் சப்தம் போட் டாக வேண்டும் என்பது ஒரு சாபம் போலும். ஜனா வீட்டு வராண்டாவில் பிரம்பு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவைகளில் ஒருசில அழுக்கோடு கூடிய சதுரத் தலையணைகள்... அதில் ஒன்றில் வீரபாண்டியன் அமரவும்

எதிரில் உள்ள நாற்காலியில் அமர்ந்தான் ஜனா என்கிற ஜனார்த்தனன்.

உள்வாங்கல்கள் ஆரம்பமாயின. ''ஸாரி சார்... முக்கியமா எங்கயாவது கிளம்பிக்கிட்டு இருக்கும்போது வந்துட்டேனா?''

''பரவாயில்ல வீரபாண்டியன். நீங்க வந்த விஷயத்தை சொல்லுங்க.''

''நம்ம பில்டர் ராமச்சந்திரன் இரண்டு கோடி வரை வந்துட்டார். அதான் ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போக வந்தேன்.''

வீரபாண்டியன் இரண்டு கோடி என்று சொன்னது உள்ளே ஜனாவின் மனைவி உஷாவின் காதுகளிலும் விழுந்திருக்க வேண்டும். வேகமாக வராண்டா பக்கம் வந்து எட்டிப் பார்த்தாள். வீரபாண்டியனும் அவளைப் பார்த்து இணக்கமாக சிரித்தான்.

அப்படியே, ''எங்க உங்கள காணமேன்னு நினைச்சேன்'' என்றார். ஜனா முகத்திலோ ஒரு தீர்மானமான தெளிவு.

''ஸாரி வீரபாண்டியன்... நான் முந்தி உங்களுக்கு சொன்ன அதே பதிலைத்தான் இப்பவும் சொல்ல விரும்பறேன். இந்த வீட்டோட பின்பாகத்தை மட்டும் விக்கற எண்ணம் இங்க யாருக்கும் இல்லை. அதுக்காக இந்த வீட்டோட சேர்த்து வாங்கிக்க நீங்க முன்வந்தாலும் நான் விற்கத் தயாரில்லை. இரண்டு கோடி இல்ல மூணு கோடி கொடுத்தாலும் வேண்டாம். இனி ஒரு முறை இது சம்பந்தமா பேச வராதீங்க...'' என்றான் மிக தெளிவாக. வீரபாண்டியன் வரையில் மிக அருகில் வந்து கன்னத்தை தெளிவாக பார்த்து சுரீர் என்று வலிக்கிற மாதிரி அறைந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது. அதன்பின் வீரபாண்டியனால் அந்த நாற்காலியில் அமர்ந்திருக்க

முடியவில்லை. ஆனால், உஷா வரையில் இரண்டு கோடி என்கிற தொகை அவளை கவிழ்த்துவிட்டது போலத்தான் இருந்தது. அது அவள் உடனடியாக பேச ஆரம்பித்ததில் தெரிந்தது.

“புரோக்கர் சார்! நீங்க வருத்தப்படாதீங்க. இப்ப நீங்க போங்க. நான் உங்களுக்கு போன் பண்றேன்” என்றாள்.

வீரபாண்டியனும் கிளம்பிப் போனார்.

தவறாமல் கேட் சப்தமும் கேட்டு அடங்கியது.

ஜனா தன் மனைவியான உஷாவை வெறித்துப் பார்த்தான்.

“எதுக்கு இந்த பார்வை... ரெண்டு கோடிங்கறது ஒரு நல்ல தொகை. வேணும்னா இன்னொரு கோடி சேர்த்து மூணு கோடின்னு கேக்கறத விட்டுட்டு இந்த இடத்தை விக்கறதா இல்லைன்னா என்ன அர்த்தம்? ஏன் இப்படி வர்ற மகாலெட்சுமியை வராதே, அப்படியே திரும்பிப் போன்னு சொல்றீங்க...” என்று ஆரம்பித்து விட்டாள்.

“உஷா... நீ பணங்கற பாயிண்ட் ஆஃப் வியூவிலேயே பார்க்கிறே. இதை நானும் சரி. அப்பாவும் சரி, அப்படி பாக்க தயாரா இல்ல. நம்ம வீட்டு தோட்டத்துல இருக்கிற அந்த ஆலமரம் நூத்தி ஐம்பது வருஷத்து மரம். அதுல இந்த நூத்திஐம்பது வருஷத்துல லட்சக்கணக்கான பறவைகள் வாழ்ந்துருக்கு. வாழ்ந்துண்டும் இருக்கு! அதுல ஒவ்வொரு விழுது தரை தட்டும் போதும் இந்த குடும்பத்துல ஒரு நல்ல காரியம் நடக்கறதும் குழந்தை பிறக்கறதும் நடந்திருக்கு.

அப்போதைய காஞ்சி மடாதிபதி இந்த மைலாப்பூர் பக்கம் தேசாடனம் பண்ணப்போ அவர் கையால் நட்ட மரம் அது. அன்னியில் இருந்து இந்த ஏரியாவுக்கே அடையாளமாகவும் இது ஆயாச்சு! ஆலமரத்தய்யர் வீடுன்னா சென்ட்ரல்ல நிக்கற ஆட்டோக்காரனுக்குகூட தெரியும்.

அப்படிப்பட்ட மரத்தை வெட்டி எறிஞ்சுட்டு ஒரு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டறேன்னு ஒரு பில்டிங் காண்ட்ராக்டர் ஆசைப்படலாம். ஏன்னா, அவங்க வரைல அது தொழில்.

நம் வரைல இது அப்படி இல்ல. அந்த விருட்சமும் நம்ம குடும்பமும் ஒண்ணுன்னு நீ எப்ப உணரப்போறே? இது நம்ம குடும்பத்துக்கு மட்டுமல்ல, இந்த ஏரியாவுக்கே குளுமையைத் தந்துகிட்டிருக்கு. இது வளர வளரத்தான் இந்த ஏரியாவும் வளர்ந்ததுன்னு என் தாத்தா சொல்வார்...'' ஜனா ஒரு பிடி பிடித்தான். ஆனால், உஷாவுக்கு அதனாலெல்லாம் மனம் நிறையவில்லை.

''போதும்... சென்டிமென்ட்டா இப்படி யோசிக்கிறத முதல்ல விடுங்க... காத்துள்ள போதே தூத்திக்கடணும். அப்பா சொல்றார், தாத்தா சொல்றார்னு கேனத்தனமா பேசாம வர்ற மகாலெட்சுமியை வரவேற்கிற வழிய பாருங்க. இன்னிக்கெல்லாம் உங்க சம்பளத்துக்கு நீங்க ரிடையர் ஆனா இருபதுல இருந்து இருபத்தி அஞ்சு லட்ச ரூவா வரும். அது நம்ம ரெண்டு பொண்களோட கல்யாணத்துக்கே காணாது. அதுக்கப்புறம் நமக்கு ஒரு வாழ்க்கை இருக்கு. அதுவும் வயசான வாழ்க்கை. மூட்டுவலி, இருமல், அப்புறம் உங்க குடும்பச் சொத்தான சர்க்கரை, ஆஸ்துமான்னு கட்டாயமான வியாதிகளோட போராடுற வாழ்க்கை. அப்ப டாக்டருக்கு கொடுக்கவாவது கைல பணம் வேணும்கறதை மறந்துடாதீங்க...''

உஷாவின் பேச்சிலும் நியாயம் இருப்பது போலத்தான் தோன்றியது. மெல்ல மாடிப்பக்கம் சென்று மொட்டை மாடி கைப்பிடிச்சுவர் அருகே நின்று பின்னால் ஒரு முப்பது செண்ட் நிலப்பரப்புக்குள் பூதாகரமாக கிளை பரப்பி பொசியப் பொசிய வளர்ந்திருக்கும் அந்த ஆலமரத்தைப் பார்த்தான்.

உரம் போட்டுப் பார்த்துப் பார்த்து வளர்த்தாலும் அப்படி வளர்க்க முடியாது. நல்ல தரமான முரட்டு கிளைகள். முடிச்சு முடிச்சாய் கிளைகள். அங்கங்கே கை நிறைய அள்ளி குவித்து கூறு கட்டினதுபோல செந்நிறத்தில் ஆலம்பழங்கள். இலைகளுக்கு நடுவில் 'கீச்சு வீச்சு கீச்சு வீச்சு' என்று பறவைக் குரல்கள்.

முன்பெல்லாம் நிறைய சிட்டுக்குருவிகள் இருக்கும். கூஊளள... கூ ஊளள... என்று கூவிவரும். குயில்களும் நிறைய இருக்கும். இப்பொதெல்லாம் இவைகளில் ஒன்று கூட கண்ணில் படுவதில்லை. இருந்தால்தானே?

காக்கைகள் மட்டும மனித சமுதாயம் எவ்வளவுதான் படுத்தினாலும் நாங்கள் தப்பிப் பிழைத்துக் கொண்டிருக் கிறோம் என்பது போல அங்கும் இங்கும் நிறையவே கண்ணில் பட்டன.

சென்னைக் காற்று சூடாகி பலப் பல வருடங்கள் ஆகி விட்டது. இருப்பினும் அந்த பாகத்தில் மட்டும் கொஞ்சம் குளிர் பூசிக்கொண்ட காற்று இருந்து அது ஜனார்த்தனனின் கழுத்து மற்றும் காதெங்கும் உரசி, ஒரு சன்னமான இன்ப உணர்ச்சியை உருவாக்கிற்று. கூடவே கீழே உஷா பேசிய பேச்சும் உள்ளோடியது... அதோடு நண்பன் ஒருவன் சென்னையின் நடப்புக் காலம் பற்றி பேசியதுதான் உச்சகட்டம்!

"சென்னை நிறையவே மாறிவிட்டது. இப்படிச் சொல்வது கூட பிழைதான். ராட்சஸமாய் மாறிக்கொண்டே போகிறது.

தினம் தினம் பெட்டி படுக்கையோடு வேலை தேடிக் கொண்டு வருவோர்க்கெல்லாம் சென்னைதான் ஜென்ம வாசஸ்தலம்!

எறும்புகூட தன் புற்றுக்குள் ஒரு கணக்கு வைத்துக் கொண்டுதான் கூட்டம் சேர்க்கும். மனித ஜாதியிடம் அப்படியெல்லாம் எதுவும் இல்லை. சாலையோரம் கிடக்கும் வீராணம் குழாய் எல்லாம் மனித ஜாகைகள் இங்கே...

கடலோடு கலக்கும் ஆறு எப்போதும் தனி அழகு. அதெல்லாம் நூறு வருஷத்துக்கு முந்தி வரை... இன்றைக்கு சென்னை கூவத்தைப் பார்ப்பவர்களுக்கு இந்த மனித இனம்தான் எத்தனை கொடிய இனம் என்றே தோன்றும்!

சென்னைவாசிகளின் ஆறாம் அறிவுக்கு டவுன் பஸ்களில் பயணம் செய்வதும், டிராஃபிக்கில் நடப்பதும் இதனூடே வேலைக்குப் போய் மாசமானால் சம்பளம் வாங்கி வருவதுமே மகா பெரிய விஷயங்கள். இவர்கள் கண்களில் எங்கேயோ மலர்கிற மலர்கள் படுவதே ஒரு பெரிய விசேஷம். 'பரவாயில்லையே... இந்த மண்ணில் இன்னமும் பூக்கள் பயிரிடப்பட்டு அவை வாங்கவும்பட்டுக் கொண்டிருக் கின்றனவா? என்று கேட்டுவிடும் எல்லைக்குள்தான் இருக்கிறார்கள் எல்லோரும்...

ஒரு மனிதன் ஒரு நாளைக்கு இரண்டு லிட்டர் தண்ணீராவது குடிக்கவேண்டும் என்பது கட்டாயம். இது இங்குள்ள மனிதர்கள் காதில் தவறாக விழுந்து விட்டது போலும். இங்கே எல்லோரும் இரண்டு லிட்டர் பெட் ரோலை கட்டாயமாக, பயன்படுத்தி வெட்டவெளியை வெப்பப்படுத்துவதை ஒரு கொள்கையாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தெரு முக்கிலுள்ள பெட்டிக்கடை நோக்கிப் போவதாக இருந்தாலும் மோட்டார் பைக்தான். சென்னைவாசிகள் வரையில் கால்கள் என்பது வீட்டுக்குள் நடமாடவும் மாடிப்படி ஏறி இறங்கவும்தான்... இதனால் உடம்பை வளர்ப்பது என்பது மாறிப்போய் குறைப்பது என்பது ஒரு பெரும் போராட்டமாக ஆகிவிட்டது.

எல்லோருக்கும் தண்ணீரானது வீட்டுக்கொல்லையில் கிணற்றில் இருந்து கிடைக்கும். இங்கே இருப்பவர்களுக்கோ வீராணம்தான் வீட்டுக்கொல்லை...!?' இப்படியெல்லாம் அந்த நண்பனும் பேசியிருந்தான்... மாற்றங்கள் உண்டாகி அது ஒரு நிற்காத சுழற்சியாக சுழன்றுகொண்டிருக்கும் நிலையில் 150 வருட அந்த ஆலமரத்துக்கும் ஒரு அழிவு காண்ட்ராக்ட் வடிவில் வந்துவிட்டது!

தான் ஒருவன் மட்டும் மாறாமல் இருந்து இந்த சென்னையின் சிதைவை மீட்டுவிட முடியுமா என்ன? இறுதியாக ஜனாவுக்குள் அந்த கேள்விதான் தொக்கி நின்றது!

அந்த இருட்டு அறைக்குள் ஒரு நீண்ட வறட்டு இருமலோடு படுத்திருந்தார் ஜனார்த்தனின் அப்பா ரங்கராஜன். அவருக்குப் பக்கத்தில் ஒரு மேஜை. அதன்மேல் செங்கற்களை அடுக்கி வைத்தாற்போல பழைய புத்தகங்கள்.

அதில்தான் அவருக்கு இளைப்பாறல்!

முதுமையின் கொடுமைக்கு நடுவில் ஆறுதல் என்பது புத்தகங்களிடம்தான் இருப்பதாக அவர் கருதுகிறார்.

ஏனோ டி.வி-யை அவரால் நேசிக்க முடியவில்லை. உஷாவோ டி.வி-க்கு தன்னை எழுதிக்கொடுத்து விட்டவள். பலமுறை டி.வி. தொடர்களால், அதன் ஈர்ப்பால் அடுப்பில் பால் பொங்கி வழிந்திருக்கிறது. சாதம் அடிப்பிடித்துக் கொண்டுவிட்டிருக்கிறது.

டி.வி-க்கு அடுத்து செல்போன்! கண்கள் அதைப் பார்க்காத வேளைகளில் வாயும் காதும் இதன் நிமித்தம் தயாராகிவிடுகின்றன. உஷாவின் பிறந்தகத்தில் அன்றைக்கு என்ன சமையல் என்பதிலே இருந்து, அவள் மன்னி அவள் அப்பா அம்மாவுக்கு இரண்டாவது டிகாக்ஷனில் காபி போட்டுத் தந்தது வரை எல்லாத் தகவல்களும் உடனுக்குடன் உஷாவின் காதுக்கு வந்து பதிலுக்கு இவளாலே

மன்னியை எப்படி ஆட்டிவைப்பது என்பதற்கான ஆலோசனைகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டு, அந்த விஞ்ஞான கருவி இப்படியாக சமூகசேவை ஆற்றிவருகிறது.

ரங்கராஜன் இருண்ட அறைக்குள்ளேயே இருந்தபடி இதை எல்லாம் பார்த்து சிரித்துக் கொள்வார்.

'நேத்துவரை லவுட்ஸ்பீக்கரை தெருக்குழாய்ல கட்டி அக்கம்பக்கம் பத்தி கவலையே படாம ரேடியோவைத்தான் இந்த சமூகம் கற்பழிச்சது. இப்ப டி.வி., செல்போன் ரெண்டும் இது கைல மாட்டிண்டு பாடா படறது. எடிசன், மார்கோனி, கிரகாம்பெல் இவர்கள் ஒருவேளை உயிரோட இருந்து மைலாப்பூர் பக்கம் வந்ததாள்னா நாம விஞ் ஞானத்துக்கு கொடுக்கிற இந்த மரியாதையைப் பார்த்துட்டு இந்தச் சமுதாயத்துக்கு நாம இவ்வளவு பெரிய கேட்டைச் செய்துட்டோமேன்னு மெரீனா பீச்சுல ஊரைக் கூட்டி நிறுத்தி அந்த ஊர் முன்னாலேயே தங்களைத் தாங்களே சுட்டுண்டு தற்கொலை பண்ணிண்டுடுவா'' என்பதுதான் அவர் நகைச்சுவையாக வருந்திக்கொள்ளும் விதம்.

''உங்கப்பாக்கு வளர்ச்சிக்கும் மாற்றத்துக்கும் வித்தியாசமே தெரியலை. சரியான கர்னாடகம்...'' என்று உஷாவும் அவள் காதுபடவே பதிலுக்கு சலித்துக் கொள்வதுண்டு.

இப்படியாக அந்த வீட்டுக்குள் ஏற்கெனவே இரு கூறுகள் இருக்க இதற்கு நடுவில் வீட்டை விற்பது சம்பந்தமாய் தேடித் தேடி வந்து கோடி ஆசை காட்டும் வீரபாண்டியன் பற்றி ஒரு நாள் ஜனா பேசியபோது ரங்கராஜன் நெடுநேரம் மௌனமாகத்தான் இருந்தார்.

''அப்பா...''

''உம்...''

"என்னப்பா எதுவும் பேசாம மௌனமா இருக்கேள்...?"

"எனக்கு என்ன பேசறதுன்னு தெரியலைப்பா. உனக்கு ஆபீஸ்ல நல்லபடியா சம்பளம் வரதுதானே?"

"இப்ப எதுக்குப்பா இந்த கேள்வி...?"

"இல்ல தெரிஞ்சிக்கிறதுக்காக கேட்கறேன். நீ இப்ப சௌகர்யமாதானே இருக்கே?"

"இன்னிக்கு எந்த குறையும் இல்லப்பா... நாளைக்கு இதேபோல இருக்கமுடியுமோ முடியாதோன்னுதான் உஷா பயப்படறா... தேவி, பிரபான்னு ரெண்டு பெண்கள். இவாளுக்கு கல்யாணம் வேற பண்ணணும்..."

"அப்ப எதிர்காலம் மேல நம்பிக்கையில்ல. அப்படித்தானே?"

"இப்படி கேட்டா என்னத்தப்பா சொல்ல... காத்துள்ள போதே தூத்திக்கணும்னு நினைக்கிறது தப்பு இல்லையே...?"

"நம்ம பெரியவா சொல்லிவிட்டுப் போயிருக்கிற பழமொழிகளைச் சரியானபடி புரிஞ்சுண்டு, சரியானபடி பயன் படுத்திக்கணும். களத்துமேட்டுல நெல்லுக்கு சொன்னதை வாழ்க்கையோட தப்பா சம்பந்தப்படுத்திக்கக் கூடாது..."

"இல்லப்பா நான் தெரியாமதான் கேக்கறேன். நம்ம 30 சென்ட் நிலத்தையும், அதுல இருக்கிற ஆலமரத்தையும் விக்கறதாலேயோ இல்ல அழிக்கிறதாலேயோ எந்த குடிப்பா மூழ்கிப் போயிடும்? மாறா அந்த பில்டர் ஒரு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டி அதுல நூறு பேருக்கு வேலைதான் தரப்போறான். எப்படிப் பார்த்தாலும் இது வளர்ச்சி தானேப்பா?"

"ஏம்ப்பா இந்த வளர்ச்சியை வேற ஒரு வெட்ட வெளியில், இல்ல பொட்டக்காட்டுல அந்த பில்டர் செய்யக்கூடாது. இன்னிக்கெல்லாம் இப்படி ஒரு மரத்தை

எத்தனை கோடிய செலவழிச்சாவது யாராலயாவது உருவாக்க முடியுமா?''

''அப்படிப் பார்த்தா வீடுவாசலுக்கெல்லாம் யாரும் மரத்தையே வாங்க முடியாதுப்பா... இந்த நாட்ல ஒரு நாளைக்கு ஒண்ணேகால் லட்சம் ஆடுகள் வெட்டப் படறதாம். அடுத்து கோழிகள். நான் சொல்லலப்பா... புள்ளி விவரக்கணக்கு சொல்றது.''

''அதனாலதான் ஜனா அமைதியைத் தேடிப்போற கோயில்லகூட நம்மகிட்ட குண்டு இருக்கான்னு பரிசோதிக் கிற ஒரு நிலை வந்திருக்கு. தேமேன்னு நிக்கிற ரயில் வண்டியை எல்லாம் கடத்திண்டு போய் மனுஷ சமூகத்தை பயமுறுத்தற நிலை உருவாகியிருக்கு. வெளிய போற ஒருத்தன் உயிரோட திரும்பி வரதுங்கறது ஒரு உத்தரவாத மில்லாத ஒண்ணா போயிடுத்து...''

இப்படியாக வாதப்பிரதிவாதங்கள் பதிலுக்குப் பதில் நிகழ்ந்ததில் இறுதியாக ரங்கராஜன் சொன்னது அஸ்திரம்!

''ஜனா... நான் அந்த மரத்தை ஒரு ஜடமா பார்க்கலைடா. அது ஒரு விருட்சம். எங்கெல்லாம் எப்படி பிரமாண்ட விருட்சங்கள் இருக்கோ அங்கெல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்த ஒரு மக்கள் கூட்டம் இருந்திருக்குடா. அந்த விருட்சம் தழைப்பா இருக்கற வரை மனுஷக் கூட்டமும் நல்ல வாழ்க்கை வாழ்ந்தே தீரும். அதுக்கு ஏதாவது ஆனா சமுதாயமும் அழிஞ்சிடும்னு என் மனசு பயப்படறது. குறிப்பா நம்ம குடும்பம் அடையாளமே இல்லாம போயிடு மோன்னு பயப்படறேன் நான்... விருட்சங்களை காப்பத் தறது நம்ம கடமை. அது நன்னா இருக்கற வரை நாமளும் நிச்சயம் நல்லபடியாதான் இருப்போம். அதை நீ நம்பு. உன் எதிர்காலம் பத்தி எல்லாம் நீ கவலைப்படாதே... இப்ப உனக்கு என்ன குறை... இனி ஒரு குறை வந்துடும்னு

பயப்படறதுக்கு? ஊர் உலகத்துல யார் வேணா எப்படி வேணா மாறிட்டுப் போகட்டும். நல்லவிதமா இருக்கிற நாம மாறவேண்டாம். நம்மளப் பார்த்துதாண்டா இந்த சமுதாயம் மாறணும்.'' ரங்கராஜன் அழுத்தமாகக் கூறிவிட்டு இரும ஆரம்பித்துவிட்டார்... அதற்குமேல் ஜனாவால் அவரிடம் பேசமுடியவில்லை. அதுதான் இப்போது வீரபாண்டியன் வந்தபோதும் அவரிடம் அவனை அப்படிப் பேச வைத்துவிட்டது.

மொட்டைமாடியில் எல்லாவித எண்ணங்களும் அவனுக்குள் ஊர்வலம் போனபடியேயும் இருக்கின்றன. ஊடே கையில் செல்போனுடன் அவளை நோக்கி வந்தபடி இருந்தாள் உஷா!

அவன் எதிரில் நின்றவள் ஒரு முடிவெடுத்து விட்டவள் போல வீரபாண்டியனுக்கு போன் செய்தாள். மறுமுனையில் அகப்பட்ட அவனிடம் ''மூணேகால் கோடின்னா முடிச்சுக் கலாம். ஆனா, ஒரு மூணுமாசம் டயம் கொடுக்கணும். என் மாமனார் இங்க இருக்கும்வரை ரிஜிஸ்டர் ஆபீஸுக்கு நாங்க வரதோ, இல்லை நீங்க இந்த ஆலமரத்தை வெட்றதோ சாத்தியமே இல்லை. அவர் சத்தம் போட்டு ஊரைக்கூட்டி பெரிய ரசாபாசமாயிடும். அவரை நாங்க எங்க கிராமத்து ஊருக்கு ஒரு திருவிழாவை சாக்கா வெச்சு கூட்டிக்கிட்டு போயிடறோம். அங்கேயே அவர் ஒரு 6 மாசம் இருக்கிற மாதிரி ஏற்பாடும் பண்ணிடறோம். அப்ப ரிஜிஸ்டர் ஆபீஸ்ல ரெஜிஸ்ட்ரேஷனை முடிச்சுக்கலாம், சரியா?'' என்று கேட்டாள்.

வீரபாண்டியனிடம் மறுபேச்சில்லை.

ஜனா மனைவிக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் திருதிருவென விழித்தான்.

“திருதிருன்னு முழிக்கவேண்டாம். ஊரே ஒரு வழில போகும்போது நமக்கு மட்டும் எதுக்கு தனி வழி... இந்த மூணேகால் கோடிய பேங்க்ல போட்டா மாசம் வட்டி மட்டுமே ஒரு கோடிக்கு ஒண்ணரை லட்சம்... நம்ம வருமானமும் ஆவரேஜா அஞ்சு லட்சம். அந்த காலத்துல ஜமீன்தார்லாம் வாழ்ந்தாளாமே ஒரு வாழ்க்கை. அப்படி ஒரு வாழ்க்கை வாழலாம். இதுல ஒரு கோடிக்கு பெசன்ட் நகர், திருவான்மியூர் பக்கமா அரண்மனை மாதிரி வீட்டை கட்டிக்க முடியும். அங்க இந்த மாதிரி நூறு ஆலமரத்தை நீங்க வெச்சுக்கோங்க... உங்கப்பாவே தோட்டக்காரரா இருந்து அதுகளுக்கெல்லாம் தண்ணீர் விடட்டும்... இதுதான் பொழைக்கற வழி! அவள் அப்படிச் சொன்னபிறகு அவனாலும் எதுவும் செய்ய முடியவில்லை!

**2009** மே மாதத்தில் ஒரு நாள்...

அந்த டிஸ்பென்சரியை விட்டு வெளியே வந்தாள் பிரபா என்கிற மைத்ரேயி! அவள் கையில் ஒரு ஃபைல்... அதனுள் கடந்த ஆறு வருஷங்களாக அவள் மேற்கொண்ட சிகிச்சை களுக்கும் அதன் எதிரொலிகளுக்குமான முடிவான குறிப்புகள்.

“ஐ ஆம் வெரி ஸாரி பிரபா... ஒரு அநாதை இல்லத்துக்குப் போய் ஒரு பிறந்த குழந்தையை தத்து எடுத்துக்கறதுதான் உங்களுக்கு இருக்கிற ஒரே வழி. இந்த ஜென்மத்துல இயற்கையாகவும் சரி, செயற்கையாகவும் சரி, நீங்க தாயாக வழி இல்லை” என்கிற விஷயத்தை அவள் சற்று முன் சந்தித்த டாக்டர் நீலாயதாட்சி நல்ல ஆங்கிலத்தில் கூறியிருந்தாள்.

பிரபா என்கிற அந்த மைத்ரேயியின் கண்களில் அழுத்த மாய் ஒரு சோகம். வெளியே படகு கார் அவளுக்காக காத்திருந்தது. யூனிஃபார்மோடு டிரைவர். கூடவே அவளது அன்புத்தோழி ப்ரியா.

"பிரபா... டாக்டர் என்ன நோ சான்ஸ்னு சொல்லிட்டாங்களா?" ப்ரியா ஈனசுரத்தில் கேட்டாள். அவளும் கண்ணீரை சிந்தியபடி ஆமோதித்தாள்.

"ஓ.... நீலாயதாட்சியே கைவிரிச்சுட்டா, கடவுளே கைவிட்ட மாதிரிதான்... போகட்டும். என்ன பண்ணப் போறே? தனக்கொரு வாரிசு கட்டாயம் வேணும். அதுக்காகத்தான் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிறதுல என்ன தப்புன்னு கேக்கற உன் புருஷனுக்கு என்ன பதில் சொல்லப்போறே?"

"நான் டைவர்ஸ் கொடுத்துடறேன். தாராளமா பண்ணிக்குங்குன்னு சொல்லப்போறேன்.."

அவள் அப்படி ஒரு பதில் சொன்ன கையோடு காரில் ஏறி அமர்ந்தவளாக "டிரைவர்! காரை மைலாப்பூருக்கு விடு..." என்றாள்.

அதிர்விலிருந்த ப்ரியாவும், "இப்ப, எதுக்கு பிரபா மைலாப்பூர் போறே? அங்க யார் இருக்கா?" என்று கேட்டாள்.

"வா சொல்றேன்..." என்றபடியே வெளியே பார்த்துக் கொண்டே வந்தாள்.

"பிரபா! உன் ஹஸ்பெண்ட் கிட்ட நான் வேணா பேசட்டுமா. டைவர்ஸ்னு நீ சொன்னத என்னால ஜீரணமே பண்ண முடியலப்பா..."

"நான் பண்ணித்தான் ஆகணும் ப்ரியா.. இதெல்லாம் ஒருவிதத்துல பிராயச்சித்தம்னுகூட சொல்லுவேன். காசும் பணமும்தான் பெருசுன்னு நினைச்சதுக்கான தண்டனைன்னும் சொல்லலாம்." புதிரா இருந்தது அவள் பேச்சு. மைலாப்பூரும் வந்தது. டிரைவர் எங்கே போவது என்று கேட்டான். அவளும் ஒரு குறிப்பிட்ட இடத்தை சொன்னாள். அந்த

தெருவுக்குள் நுழையவும் அவளிடம் ஒருவித சிலிர்ப்பு... பரவசம்!

"ப்ரியா இது நான் வாழ்ந்த தெரு. ஹைஸ்கூல் காலேஜ்னு எல்லாமே இந்த தெருவுல இருந்தப்போ படிச்சதுதான்..." என்றாள்.

கார் ஒரு பெரிய ஷாப்பிங் காம்ப்ளெக்ஸை கடக்க முற்பட்டபோது தடுத்து நிறுத்தி கீழே இறங்கி அந்த பில்டிங்கை பார்த்தாள். கண்களில் நீர் பொங்கிவர ஆரம்பித்தது. அப்படியே அது பொங்கப் பொங்கப் பார்த்தபடியே நின்றாள். 'அடடே பிரபாவா...' என்று ஒரு குரல்! வயதான மாமி ஒருத்தி மிகச் சரியாக அவளை அடையாளம் கண்டுகொண்டு அருகில் வந்தாள்.

"மாமி நீங்களா...?"

"நானேதான்... நீ எங்க இந்த பக்கம்? உங்க பழைய வீடு இருந்த இடம் இப்ப எப்படி இருக்குன்னு பாக்க வந்தியா?" அடப்பமான ஆமோதிக்கும் மௌனம் பிரபாவிடம்... "என்னமோடிம்மா... எந்த வேளைல இந்த வீட்டை நீங்க வித்தீங்களோ எல்லாமே போயிடுத்து... மரத்தை காண்ட்ராக்டர் வெட்ட ஆரம்பிச்ச அன்னிக்கு உன் தாத்தா உயிர் கிராமத்துல தானாவே போச்சு...! மரம் இங்க முழுசா அழியவும் காத்திருந்த மாதிரி சுனாமி வந்து இந்த ஏரியாவுல சரிபாதி பேருக்கு மேல யாருமே உயிரோட இல்லை.

கல்யாணமாகி புருஷனோட அமெரிக்கா போனதால நீ தப்பிச்சே... அதுக்கும் உன் தாத்தா ஆசீர்வாதம்தான் காரணம். நீ அழகா ஸ்லோகம் சொல்லும்போதெல்லாம், தீர்காயுசா இரு... தீர்காயுசா இருன்னு அடிமனசுல இருந்து சொல்லுவார். அது பலிக்காம போகுமா என்ன?

ஆனாலும் நீ உன் அப்பா அம்மா தங்கைன்னு அவ்வளவு பேரையும் பலிகொடுத்தே! நானும் என் புருஷன் பிள்ளை

களை வாரிக்கொடுத்துட்டு உசுர்ப் பொணமா நடமாடிண்டு இருக்கேன்...''

மாமி பேசி முடிக்கும்போது அவள் கண்களிலும் நீர். ஏனோ இருட்டு அறைக்குள் அடங்காத இருமலுக்கு நடுவில் அன்று தாத்தா பேசியது மட்டும் பிரபாவின் காதுகளில் அசையாமல் திரும்ப ஒலிக்க ஆரம்பித்தது.

'ஜனா... நான் அந்த மரத்தை ஒரு ஜடமா பார்க்கலைடா... அது ஒரு விருட்சம். எங்கெல்லாம் இப்படி ஒரு பிரமாண்ட மரம் இருக்கோ அங்கெல்லாம் வாழ்ந்த ஒரு மக்கள் கூட்டமும் இருந்திருக்குடா... அந்த விருட்சம் தழைப்பா இருக்கிறவரை மனுஷக் கூட்டம் நல்ல வாழ்க்கை வாழ்ந்தே தீரும். அதுக்கு ஏதாவது ஆனா சமுதாயமும் அழிஞ்சிடும்னு என் மனசு பயப்படறது. குறிப்பா நம்ம குடும்பம் அடை யாளமே இல்லாம அழிஞ்சுடுமோன்னு பயப்படறேன் நான்...!' பிரபாவால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவே இல்லை.

''தாத்தா! உன்னோட வேல்யூவும் சரி, இயற்கையோட வேல்யூவும் சரி, அன்னிக்கு யாருக்கும் தெரியாமலே போயிடுத்தே தாத்தா. மரத்தை வெட்டின பாவத்துக்கு நான் கூட இன்னிக்கு சிலுவை சுமக்கறேனே... எப்படி தாத்தா எல்லாரும் முழிச்சுக்கப் போறா?''

அவளது கேள்வியும் விசும்பலும் ப்ரியா வரையில் நெற்றியைத் துளைத்த யேசுநாதருக்கு அடிக்கப்பட்ட ஆணியைப் போலத்தான் இருந்தது!

# 3. ஹீரோ

அந்தச் செய்தியை யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். டி.வி. நிகழ்சிகளுக்கு நடுவில் 'பிரபல நடிகர் சேகர்ராஜ் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார்!' என்கின்ற அந்தச் செய்தி தமிழ்நாட்டின் எல்லா நடவடிக்கைகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டது.

பத்து நிமிஷத்துக்கொருமுறை சேகர்ராஜின் பங்களாவை காட்டுவதும், சேகர்ராஜின் மனைவி கண்ணீரோடு சோகமாக அமர்ந்திருப்பதையும் மாறி மாறி காட்ட ஆரம்பித்துவிட்டார்கள்.

அங்கங்கே கூட்டம் கூட்டமாக கூடிப் பேசினார்கள்! சேகர்ராஜ் படம் ரிலீஸாகும்போதெல்லாம் 'உடல் மண்ணுக்கு - உயிர் சேகர்ராஜுக்கு!' என்று போஸ்டர் அடித்து ஒட்டியவர்களின் உயிர் சேகர்ராஜுக்காக துடித்துக் கொண்டிருந்தது.

அந்தத் துடிப்பை டி.வி-யிலும் காட்டினார்கள். ''எந்த நாய் என் தலைவனைக் கடத்தியிருந்தாலும் சரி... ஒழுங்கா விட்டுடணும். நாங்களெல்லாம் ஒண்ணா சேர்ந்து கிளம்பி வந்தா நாடு தாங்காது...'' என்று லுங்கியை மடித்துக் கட்டிக் கொண்டே ஒரு விடலை எகிறி எகிறிக் குதித்துக் கொண்டிருந்தான்.

தமிழ்நாட்டுக்கே குளுக்கோஸ் ஏற்றியது போல் எங்கே பார்த்தாலும் ஒரே பரபரப்பு... சரி, நிஜத்தில் சேகர்ராஜின் நிலைதான் என்ன?

அது எந்த மாவட்டத்து காடு என்றே தெரியவில்லை. அங்கே -

கையிரண்டும் உறுதியாக கட்டப்பட்ட நிலையில் ஒரு கட்டிலில் உட்கார வைக்கப்பட்டிருந்தான். அந்த கட்டிலும் ஒரு உயரமான மரத்துக்குக் கீழே இருந்தது. சுற்றிலும் துப்பாக்கியும் கையுமாக சில தீவிரவாதிகள். சினிமாவில் வருவதுபோலவே முகத்தை மூடிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் மட்டும் பேசினான்.

‘‘நாங்கள்லாம் தீவிரவாதிங்க. நாங்க படிச்ச பள்ளிக்கூடத்துல மழை பேஞ்சா ஒழுகும். அதுக்கு நடுவுலத்தான் படிச்சோம். காலேஜுக்கு போக ஆசைப்பட்டப்போ சராசரி மார்க் வாங்கினதால ஆசைப்பட்ட படிப்புல இடம் கிடைக்கல. படிச்சு முடிச்ச பிறகோ எவ்வளவு முயற்சி செய்தும் வேலை கிடைக்கலை. அல்பமா ஒரு டிரைவிங் லைசென்ஸ் வாங்கக்கூட 200 ரூபாய் லஞ்சம் கொடுக்க வேண்டி வந்தது. எங்கள்ல பலர் ஓட்டுப் போடப் போனப்போ அதைக்கூட கள்ளஓட்டா சில ரவுடிங்க போட்டுட்டாங்க. இப்படி சராசரி விஷயங்கள்லகூட எங்களுக்கு அதிர்ஷ்டம் இல்லை. ஆனா, நீயோ ஒரு யுகபுருஷன் மாதிரி சினிமாவுல பேசி நடிக்கிற. விக், கூலிங்கிளாஸ், சில மீட்டர் கம்பிகள் இந்த மூணுக்கும் தடை விதிச்சுட்டா நீ அவ்ளோதான்... தலைல இருந்து கால் வரை பொய்யான தோற்றத்தோடயும், யாரோ எழுதின வசனத்தையும் பேசி எடிட்டிங், பிக்ஸிங், கிராஃபிக்ஸ்’னு விஞ்ஞான விஷயங்களால மக்களைக் கனவு காண வெக்கற ஒன்கிட்ட எவ்வளவு கறுப்புப் பணம் இருக்கும்கறது ஒரு பாமரனுக்குகூட நல்லா தெரியும். ஆனா, உன்னை மட்டும் யாரும் ஒரு கேள்விகூட கேக்கறதில்லை...

உனக்கு பெரிய ஹீரோன்னு வேற பேர்...! வாஸ்தவத்துல உண்மையான ஹீரோ இப்ப நாங்கதான். எங்களுக்குத் தேவை உன் கறுப்பு பணம்! சைலண்ட்டா அதை ஒப்படைச் சுட்டா உன்னை நோகாம விட்டுடறோம் இல்லாட்டி சினிமாவுல நீ போட்ட சண்டையை இப்ப எங்க கிட்ட போட்டு எங்களை எல்லாம் அடிச்சு நொறுக்கிட்டு தப்பிச்சுப் போய்க்கலாம்...!'' நீளமாக பேசிய நபர் சேகர்ராஜை ஒரு உலுக்கு உலுக்கி விட்டான். அவனது ஏமாற்றம், கோவம் எல்லாவற்றிலும் ஒரு நியாயம் இருப்பதும், அது பொய்யான தன்னோடு மோதத் தொடங்கிவிட்டதும் சேகர்ராஜுக்கும் நன்றாகவே புரிந்தது.

சினிமா ஹீரோவாக ஆனதற்காக எவ்வளவோ கிடைத் துள்ளது. கோடி கோடியாக பணம்-ரசிகர்கள்! இப்படியும் சிலர் இருந்து கேள்வி கேட்டார்கள். அதையும் தான் சமாளித்தால்தான் தன்னைப் பற்றி ஜனங்களிடம் இருக்கும் பிம்பம் அதே கவர்ச்சியோடு இருக்கும். இல்லாவிட்டால் தான் ஒரு காமெடியனாகி விடும் அபாயம் சேகர்ராஜுக்குப் புரியவே செய்தது.

ஒரு அர்த்தமுள்ள புன்னகையை அவர்கள் எதிரில் சிந்தியவன், ''கஷ்டப்படறோம், ஏதாவது உதவி செய்யுங் கன்னா நிறையவே செய்வேன். லட்சக்கணக்குலகூட தருவேன். ஆனா, இது புதுமாதிரியான பிளாக்மெயிலா இருக்கே, மை டியர் தீவிரவாதி'' - என்றான். அடுத்த நிமிஷமே பளார் என்று ஒரு அறை! காதில் நாலைந்து வண்டுகள் பறக்கத் தொடங்கிவிட்ட மாதிரி ஒரு சப்தம்.

''என்னப்பா... அடிச்சா பயந்துடுவேன்னு நினைக்கறீங் களா!'' அடக்கிக் கொண்டு திருப்பிக் கேட்டான்.

''இல்லையில்லை... நீதான் பறந்து பறந்து அடிப்பியே, திருப்பி அடி. அதையும் பார்க்கிறோம்.''

''வேண்டாம்... இதுக்கெல்லாம் நீங்க பெருசா பதில் சொல்ல வேண்டியிருக்கும்.''

''தாராளமா... யார் வேணா வந்து என்ன கேள்வி கேட்கட்டும். நாங்க பதில் சொல்லத் தயாரா இருக்கோம். தெரு முக்குல வித்தை காட்ற கழக்கூத்தாடிக்கு நாலணா எட்டணா போட யோசிக்கிற மகா ஜனங்களே, ஸ்டண்ட் மாஸ்டர் சொல்லிக் கொடுத்தும் இருபது முப்பது டேக் வாங்கி பொய்யா சண்டை போட்டு உங்க காதுல பூ சுத்தப் பார்க்கற இந்த ஹீரோவுக்கு கோடி கோடியா கொட்டிக் கொடுக்கறது எந்த ஊர் நியாயம்னு நாங்க கேக்கறோம்... யார் வேணாலும் வரட்டும். இப்ப, கோடி பணத்தைக் கொடுத்துட்டு நீ தாராளமா போய்க்கோ!'' கேள்வியும் பதிலும் காரசாரமாகவே இருந்தது. சேகர்ராஜ் இறுதியாக ஒரு முடிவோடு அவர்களைப் பார்த்தான்.

டி.வி-யில் வெளியாகிக் கொண்டிருந்த சேகர்ராஜ் பற்றிய செய்திகளில் ஒரு திருப்பம்!

'சேகர்ராஜை கடத்தியது தீவிரவாதிகளல்ல... அவரது தீவிர ரசிகர்கள்...' என்று ஒரு புதிய செய்தி ஸ்க்ரோலிங்கில் ஓட ஆரம்பித்திருந்தது. டி.வி-கார பெண்மணியும் மைக்கை நீட்டி நீட்டி கேள்வி கேட்பதை விடவேயில்லை.

''என் தலைவனா கொக்கா..?''

''எந்த தீவிரவாதிக்கு என் தலைவன் மேல் கை வைக்க தில் இருக்கு...? அப்படியே கடத்துனது நிஜமா தீவிரவாதியா இருந்திருந்தாலும் எங்காளு அவங்ககிட்ட பேசியே அவங்களை திருத்திடுவாருல்ல...?'' இப்படி எல்லாம் கருத்துகள் தெறித்து விழுந்து கொண்டிருந்தன.

மறுநாள் காலை சேகர்ராஜ் ஒரு காரில் பங்களா வாசலில் வந்து இறங்கினான். காத்திருந்த ரசிகர் கூட்டத்திடம் ஒரே கரகோஷம். நிருபர் படையும் வந்து சுற்றி வளைத்தது.

"சார்! எப்படி சார் இருக்கீங்க... உண்மைல என்ன சார் நடந்தது?"

"அதான் பாக்கறீங்களே. ரொம்பவே நல்லாருக்கேன். என்னை கடத்தினது தீவிரவாதிகள் இல்ல. தீவிர ரசிகர்கள். அவங்களோட அவங்களுக்கே அவங்களுக்காக நான் இருக் கணும்கறது அவங்க விருப்பம். எனக்கும் அவங்க அன்பும் பாசமும் புரிய வரவும் ஒரே ஆச்சரியம். அவங்க விருப்பப் படியே அவங்களோட இருந்துட்டு வந்துட்டேன். தட்ஸ் ஆல்!"

"அப்ப எப்படி உங்களைத் கடத்தினது தீவிரவாதிகள்னு செய்தி பரவிச்சு. அவங்க உங்ககிட்ட கோடி கணக்குல பணம் கேட்டாங்கன்னும் செய்தி பரவிச்சே..."

"எப்பவும் சினிமாகாரங்க விஷயம்னாலே கை, கால், மூக்குன்னு எல்லாத்தையும் நிறையவே வைப்பாங்க. அதுலயும் நான் ஒரு சக்ஸஸ்ஃபுல் ஹீரோ... கேக்கணுமா? எல்லாம் பொய்.... என் ரசிகர்கள் அவ்வளவு பேருக்கும் என் நன்றி." சேகர்ராஜ் பெரிய கும்பிடாகப் போட்டுவிட்டு உள்ளே நுழைந்தான். தனி அறையில் மச்சினன் காத்துக் கொண்டிருக்க... அவன் வசம் ஒரு பெரிய சூட்கேஸைக் கொடுத்து பத்திரமாக சேர்த்துவிட்டு அவர்களிடம் பிணைக் கைதியாக இருக்கும் மகனை அழைத்து வரும்படியும் கூறினான். மச்சினனும் ஒரு காரில் கிளம்பிப் போனான்.

அன்று மாலையே அந்த தீவிரவாதிகளில் ஒருவனிடம் போன் வந்தது.

"பணம் வந்து சேர்ந்தது... எங்களை உன் ரசிகர்கள்னு சொன்னதுலதான் கொஞ்ச வருத்தம். இருந்தாலும் முதல் முதலா உன்னை நாங்க நல்லாவே ரசிச்சோம். மீடியாவுல எங்கள பத்தி சொதப்பிட்டா, என்ன பண்றதுன்னுதான் பள்ளிக்கூடம் போய்ட்டு வந்த உன் மகனை அள்ளிக்கிட்டு

வந்துட்டோம். இப்ப உன் மகன் பத்திரமா திரும்பி வந்து கிட்டிருக்கான்.

நீ உண்மையான ஹீரோவா இருந்திருந்தா மகனுக்கு என்ன ஆனாலும் பரவாயில்லைன்னு நீ எங்களை காட்டிக் கொடுத்திருக்கணும். ஆனா, நீ அப்படி இல்லைங்கற உண்மைதான் எங்களுக்குத் தெரியுமே...?'' மறுபக்கம் தொலைபேசி பேச்சு முடிந்து போனது. இந்தப் பக்கமாய் சேகர்ராஜின் தலையும் தொங்கிப் போனது. போதாக் குறைக்கு அவனது பி.ஏ. ஓடிவந்து, "சார்! இந்த வருஷத் தோட பெஸ்ட் ஆக்டரா உங்கள தேர்ந்தெடுத்திருக் காங்களாம். இப்பதான் சார் தகவல் வந்தது'' என்றான். வாழ்க்கையிலேயே முதல் தடவை கிளிசரின் துணை இல்லாமலேயே அழுகை வரத் தொடங்கியது அவனுக்கு...

# 4. பாசம்

செங்குறிச்சி நரசிம்ம ஐயங்காருக்கு எண்பது வயதாகிறது. பார்த்தால் அத்தனை வயது என்று சொல்லமுடியாது. காரணம், அவரது அன்றாட யோகாசனப் பயிற்சிகள். ஜெகன்னாதன் அவரைப் பார்க்க வந்திருந்தபோதுகூட ஜிலேபி போல ஒரு மாதிரி கோத்துக் கொண்டு கிடந்தார்.

''அப்பா...!''

''ஆரு ஜக்குவா...அடடே....!''

-கைகால் கோணல்களை மளமளவென்று நேராக்கியபடி நிமிர்ந்து எழுந்தவரிடம் ஒரு இளம் துள்ளல் அந்த வயதிலும் தெரிந்தது.

''எப்படிப்பா இருக்கேள்...?'' ஜெகன்னாதனும் கண் களில் ஒரு பாலிதீன் தாளை ஒட்டிக் கொண்டது போல ஈரம் சுரக்க அவரைப் பார்த்தான்.

''எனக்கென்னடா குறை... பூர்வீகமான கிராமம்... சுத்தமான காத்து, ஏரிக்குளியல், அப்புறம் வயக்காடு வீடுன்னு நான்பாட்டுக்கும் இருக்கேன்... ஆமா நீ எங்க இந்தப் பக்கம்...?''

''அத்தை உள்ற இருக்காளா?''

''ஆமாம்... அவ இடம் அதானே?''

''இருப்பா பார்த்துட்டு வந்துடறேன்...'' - ஜெகன்னாதன் உள்ளே சென்றான். அந்தக் காலத்து வீடு... தரையோடு

தரையாக முழங்கால் உயரத்துக்கு விறகடுப்பு மேடை. அதில் வாணலியில் கத்தரிக்காய் வதங்கிக் கொண்டிருந்தது. கப்பலான புகை... கூடவே கத்தரிக்காய் எண்ணெய்யுடன் புணர்வதால் உண்டான வாசம்!

ஜெகன்னாதனின் நாக்கு மொத்தத்திலும் அப்போதே ஜல ஊற்று ஃபார்ம் ஆகி விட்டது.

"அத்தே...!"

"யாரது?"

"நான்தான்த்தே. உன் மருமகன் ஜக்கு..."

'ஓ... ஓ! ஜக்குவா? எப்படா வந்தே?"

"உன்னையும் அப்பாவையும் இனியும் இந்தக் கிராமத்துல விட்டுட்டு எங்களால அங்க நிம்மதியாவே இருக்க முடியாது..." - ஜெகன்னாதன் வந்த விஷயத்தைத் தொட்டான்.

"வரும்போதெல்லாம் இதே டயலாக்தான் உன்னண்ட! ஆனா கிளம்பும்போது, மெட்ராஸ் வெயில் உனக்கு ஒத்துக் காதுன்னு ஆரம்பிச்சு, கொசுக்கடி, தண்ணி பிரச்சினைன்னு எல்லாத்தையும் சொல்லி டாட்டா காட்டிடுட்டுப் போறது தானே எப்பவும் உன்னோட வழக்கம்?" என்றாள் பட்டம்மாள்.

'இந்தத் தடவை அப்படி இல்ல அத்த. அதான் சொந்த வீடு வாங்கிண்டு தனியா போய்ட்டேனே...? இங்க தண்ணிப் பிரச்சினையெல்லாம் கிடையாது. உங்களுக்காகவே பாத்ரூம் டாய்லெட்டோடு ரெண்டு பெட்ரூமை நான் சேர்த்தே கட்டி இருக்கேன் தெரியுமா? போதும், ஃப்ளாட்ல நான் பட்டதெல்லாம்..."

"அப்ப இந்தத் தடவை நாங்க உன்னோட கட்டாயம் வரப்போறோமாக்கும்?"

"ஆமாம் அத்தை... இந்த மாதிரி விறகடுப்பு, இருட்டு கட்டிண்ட சமையலறைன்னு அங்க உனக்கு ஒரு சிரமமும் இல்லை. கேஸ் அடுப்பு, மாடர்ன் சிம்னி, ஃப்ரிஜ்ஜுன்னு எல்லா சௌகர்யமும் இருக்கு..."

ஜெகன்னாதன் அத்தையிடம் சொல்லிக் கொண்டிருந் தான்.

சென்னை! போரூர் பக்கம் ஒரு அத்துவான வெளியில் இருந்தது ஜெகன்னாதனின் வீடு. ஆட்டோவில் வீட்டுக்கு வரும்போது தென்னை மட்டையில் ஏராளமான கீற்றலுக்கு நடுவே ஒரு எறும்பு ஒரு கீற்று நுனியில் எங்கிருக்கிறோம் என்றே தெரியாதபடி இருப்பது போல இருந்தது பட்டம்மாளுக்கு.

"ஏண்டா! நீ மெட்ராஸ்ல இருக்கிறதால்லே சொன்னே?" என்று அவன் கேட்ட விதத்திலேயே போரூரை அவள் சென்னையோடு சேர்க்கவில்லை என்பதும் தெரிந்தது.

"அத்தே... என்ன கிண்டலா? மெட்ராஸ் இப்ப ஸ்ரீபெரும்புதூரை போய் தொட்டாச்சு. இது போரூர்... மாடில நின்று பார்த்தா எல்.ஐ.சி. கட்டடம் தெரியும். தெரிஞ்சுக்கோ" என்றபோது, அவன் வீட்டு முன் நின்றது ஆட்டோ. உள்ளிருந்து அவன் மனைவி ராதிகாவும் மகள் ப்ரியாவும் ஓடி வந்தனர்.

"வாங்கப்பா.. வாங்கத்தே..."

"ஹை தாத்தா!"

"யார்ராது ப்ரியா குட்டியா... என்னடா நீ இப்படி வளர்ந்துட்டே...?"

"நான் இப்ப செகண்ட் ஸ்டாண்டர்ட் படிக்கிறேன். கம்ப்யூட்டரெல்லாம் ஆபரேட் பண்ணுவேன் தெரியுமா, நோக்கு...?"

"அடேங்கப்பா..."

பட்டம்மாள் மோவாயில் வைத்த கைகளைக் கீழே இறக்கவில்லை. ஜெகன்னாதன் அவளுக்கு வீடு முழுக்க சுற்றிக் காட்டினான்.

"அத்தே! நன்னா பாத்துக்கோ, இதான் உன் ரூம்... உள்ள இருக்கிற டி.வி., ஃபேன்னு எல்லாம் இருக்கு பார்.."

"ஐயோ... ரொம்ப நன்னா கட்டியிருக்கேடா ஜெகா..."

"எல்லாம் உன் ஆசீர்வாதம் அத்தை... இனி நீ எங்கள விட்டுப் போகவே கூடாது..."

"நீ அடிச்சாகூட போக மாட்டேன்... உனக்குத்தான் எவ்வளவு ஆசை. இவ்வளவு நாளா அடக்கி வெச்சிருந் துருக்கே போலருக்கு..."

அத்தையின் கண்களிலும் ஈரப் பளபளப்பு நரசிம்ம ஐயங்காரும் வீட்டை ஒரு பார்வை பார்த்து முடித்தார். ஜெகன்னாதன் கிரகப்பிரவேசம் செய்தபோது, சிக்கன் குன்யா வந்துவிட்டிருந்ததால் அப்போது வர இயலாது போய்விட்டது.

வீடு முழுவதையும் சுற்றிப் பார்த்தவர் மாடிப் பக்கம் போனார். அங்கே ஆஸ்பெஸ்டாஸ் ஷெட் போட்டு நிழல் கொண்டு வந்திருந்தான் ஜெகன்னாதன்.

"அப்பா உங்களுக்காகவேதாம்ப்பா இங்க ஷெட் போட்டேன். நீங்க இங்க எவ்வளவு நாழி வேணும்னாலும் யோகாசனம் பண்ணலாம். அதேமாதிரி அக்கம் பக்கத்துல உள்ளவாளுக்கு சொல்லியும் தரலாம்..."

"அப்படியா... அப்ப எனக்கு இங்க நன்னா பொழுது போகும்னு சொல்லு..."

"அட என்னப்பா நீங்க... தலைக்கு இருநூறுன்னு தினசரி அம்பது பேருக்குச் சொல்லித் தந்தா போதும்ப்பா. பக்கத்துல மாங்காட்டுல ஒருத்தர் முந்நூறு ரூவா வாங்கறார்."

நரசிம்ம ஐயங்கார் வியந்து முடித்தார். மகன் கட்டிய வீடு என்று நெகிழ்ந்தும் போனார்.

மேலேயே வந்து சாப்பிட அழைத்தாள் ராதிகா. கால் கை கழுவிக் கொண்டு சாப்பிட உட்காரவும், ராதிகாவே பரிமாறினாள். ஆனால், நரசிம்ம ஐயங்கார்தான், அவள் கைப்பக்குவம் முன்னால் கொஞ்சம் சிரமப்பட்டு போனார்.

அப்போது பார்த்து கூடத்தில் டி.வி. மேல் வைத்திருந்த அவளது செல்போன் சிணுங்கியது. ஓடிப்போய் அதன் திரையைப் பார்த்தாள் அவள் தோழி சகுந்தலா.

செல்போனோடு வேகமாக மொட்டை மாடிப் பக்கம் போய் அதற்கு காது கொடுத்தாள்.

''என்ன ராதிகா! டூர் வரது பத்தி என்ன முடிவு செய்திருக்கீங்க.?''

''ஓகே. சகுந்தலா. பத்து நாள் இல்ல. இருபது நாள்கூட இந்தத் தடவை டூர் போகலாம். நாங்க ரெடி! நீ ஏஜென்ஸி கிட்ட சொல்லிடு.''

''ஒரே திருட்டுப் பயம். அதனால செக்யூரிட்டி கிடைச்சா பார்க்கலாம்னு சொன்னே, செக்யூரிட்டி கிடைச்சாச்சா?''

''செக்யூரிட்டி மட்டுமல்ல, சமையல்காரியும் கிடைச் சாச்சு!''

''பரவால்லியே. ஆமா செக்யூரிட்டி வாட்ச்மேனுக்கும், சமையல்காரிக்கும் எங்க போனே, அவங்களுக்கு என்ன சம்பளம்?''

''அதெல்லாம் சீக்ரெட்!''

ராதிகா மூடி வைத்தே பேசினாள்.

''ஏய்... ஏய்! உன் செக்யூரிட்டியையும் சமையல் காரியையும் கொஞ்சம் என் வீட்டுக்கும் அனுப்பி வையேன்.''

''அது சரி. என் மாமனாரையும், அத்தையையும் உன் வீட்டுக்கும் அனுப்பி வெச்சா நல்லாவா இருக்கும்?''

# 5. இந்த்ர நிலா

கூடல் மாநகரின் மேலே குவிந்து கிடந்தன மழை மேகங்கள்! ஐப்பசி மாதத்து மேகங்கள் என்பதால், உருக்குச் சட்டை போல உறுதியாகவும், நாள் கணக்கில் நசநசவென்று பெய்தபடியேயும் இருக்கும் என்பது நீலாவுக்கும் தெரிந்திருந்ததால் அவள் முகத்தில் சஞ்சல ரேகைகள் ஓடியபடி இருந்தன.

அவள் மனம் முழுக்க இந்த்ரசேனன் நினைப்பாகவே இருந்தது. பாழும் மழை அவனது காதல் சந்திப்புக்குத் தடை போட்டுவிடுமோ என்று வருந்தி நின்றாள்.

மாடவீதியில் உப்பரிகையோடு கூடிய சிறிய வீடுதான் அவளது வீடு. அவளும் உப்பரிகையில் நின்றுகொண்டுதான் வானைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இடையில் கூடலழகர் ஆலயமணிச் சப்தம் சேர்ந்து கொண்டது. உச்சிக் கால பூஜை தொடங்கிவிட்டதை, அது சொல்லாமல் சொல்லிற்று.

அதேசமயம் மாட வீதியிலும் ஒரு பரபரப்பு. அன்று சனிக்கிழமை. பெருமாளுக்கு உகந்த திருவோண நட்சத்திர நாள் வேறு. எனவே, கழுத்து மணிச் சப்தமுடன் யானை முன் வர, பின்னாலேயே பல்லக்கில் பாண்டிய மாமன்னன் கோச்சடையர் புதல்வன் பராந்தக நெடுஞ்செழியன் உச்சி பூஜை தரிசனத்துக்காகக் கூடலழகர் ஆலயம் நோக்கி சென்றபடி இருப்பதையும் கூட காண முடிந்தது.

பட்டர் அழகர் நம்பி சந்நிதி காரியமாக இருக்கும்போது, முகப்பில் அமர்ந்து கொண்டு துளசி ஆய்ந்து தருவது, பூக்கட்டித் தருவது என்று திருத்தொண்டு செய்து வரும் மதுரவல்லிதேவி நேற்று வரை ஏழை பிராமணரான அழகர் நம்பியின் மகள். ஆனால், இன்றோ அவள் பாண்டியனுக்குக் காதலி! ஆலய பூஜைக்குச் செல்வதால் பராந்தகனுக்கும் தெய்வ தரிசனமும் கிடைக்கிறது. தேவி தரிசனமும் கிட்டுகிறதே! அதை நினைத்த நீலாவுக்கு. இந்தக் காதலுக்குத் தான் என்ன ஒரு சக்தி என்று தோன்றியது. காதல் ஒன்றால்தான் அரசனும் ஆண்டி மகளும் ஒன்றுசேர முடியும். தனது காதலையும் எண்ணிப் பார்க்கிறாள்! உடனேயே அவள் மனக்கண்களில் வசீகரமான இந்த்ரசேனன் முகம் தான் மூண்டு எழும்பியது. அவனை எண்ணிய நொடியே கூடல்நகரான மதுரைக்குள்ளே கூடலழகர் ஆலயத்தை ஒட்டி ஒரு நீர் மாலையை அந்த ஆலயத்துக்கு அணிவித்தது போல அலைபுரண்டு ஓடும் கிரிதிருமால் நதியின் நினைவும் அவளுக்குள் சேர்ந்தே வந்தது.

அந்த நதிதான் அவளை அவனிடம் சேர்த்தது.

அன்று ஆடிப்பெருக்கு!

வைகையம்பதியில் இக்கரைக்கும், அக்கரைக்கும் வெள்ளப்பெருக்கு, வைகை ஈன்ற ஒரு பிள்ளை நதிதான் கிரிதிருமால் நதி! காசி நகரில் பாயும் கங்கைக்கு பின் அதற்கு ஈடாக கூறப்படும் தென்புலத்து கங்கை!

இந்தத் தென் கங்கையில் இருந்துதான் தினமும் கூடலழகருக்கு அபிஷேக நீர் யானை மேல் எடுத்துச் செல்லப்படும். அன்றும் அதன்பொருட்டு யானை மீதமர்ந்து வந்திருந்தார் பட்டர் அழகர் நம்பி. படித்துறையில் கூடல் நகரத்துப் பெண்கள் நீராடியபடி இருந்தனர். இவர்களில் நீலாவும் ஒருத்தி.

திபுதிபுவென்று பிடரி முடி செழித்த ஒரு வெண் புரவி கணக்காக வந்த பிள்ளை நதி வெள்ளம் கோயில் யானையை மிரளச் செய்துவிட்டது. எனவே, அது பிளிறிக் கொண்டு ஓடப் பார்த்தது. அந்தக் களேபரத்தில் ஆற்றில் விழுந்துவிட்ட நீலாவையும் வெள்ளம் இழுத்துச் செல்லத் தொடங்கியது. இப்பொழுதுதான் ஆற்றோரமாகவே ஒரு புரவியில் ஆரோகணித்தபடி வந்து கொண்டிருந்தான் அந்த இளம் வீரன். பசித்திருப்பவன் எதிரே ஒரு கனியைப் பருந்து கொண்டு போக விடுவானா என்ன? அப்படியே புரவி யோடு ஆற்றில் பாய்ந்து விட்டான். கிட்டத்தட்ட மூர்ச்சித்து பின் எமனுலகின் விளிம்பையும் எட்டிவிட்ட நீலா, நல்ல வேளையாக அவனது வலுவான கரங்களிலே அகப் பட்டாள். ஆனால், காலம் அவள் வரையில் ஒரு சிறு தவறினைச் செய்துவிட்டது. முற்றாக அவளது ஆடையை அந்த வெள்ளம் எனக்கு வேண்டும் என்று எடுத்துக் கொண்டு பிறந்தமேனியாகத்தான் நீலாவை அது அந்த வீரன் கையில் ஒப்படைத்திருந்தது.

நீலா வெட்கித் தலைகுனிந்தாள். அவன் தனது மார்ச் சட்டையைக் சுழற்றி முதல் காரியமாக அவளுக்கு அணிவித் தான். கரையோரமாக கட்டுக்கட்டாக தாழைச் செடிகள் தழைத்திருக்க, அவைகளை வேகமாகப் பறித்து வந்து அப்படியே அவள் மேல் சுற்றியும் விட்டான். ஒரு பசுங் கொடி அழகிய பெண்ணொருத்தியை ஜனிக்கச் செய்தது போல் இருந்தது.

கிடைத்தது வாய்ப்பு என்று அவளை கண்களால் மேய்ந்து கவனிக்கவில்லை அவன். அதன்பின் கரையோரமாக சிலிர்த்தபடி நின்றுகொண்டிருந்த அவனது புரவியின் மேலேயே அவளை ஏற்றி, “பெண்ணே.... நீ இந்த புரவி மேலேயே அமர்ந்து உன் இருப்பிடத்துக்குச் சென்று விடு. இந்தப் புரவி அதன் பின் தானாக என்னை வந்தடைந்து

விடும்'' என்றான். அன்று அந்த இக்கட்டான தருணத்தில் அவன் யார் என்றோ, அவன் பெயர் என்னவென்றோ எதையுமே நீலா கேட்கவில்லை. கண்ணியமான அவனது உதவியை எண்ணி மகிழ்ந்து கொண்டே நாட்களைக் கடத்தியவள், ஒரு நாள் ஏதோ நினைப்பில் அவனைச் சந்தித்த அந்த ஆற்றோர இடத்திற்கு வந்தபோது இன்ப அதிர்ச்சிக்கு உள்ளானாள். அங்கே அவளுக்காகவென்றே காத்திருப்பவன் போல காட்சி தந்தான் அவன்!

''நீங்கள்...?''

''பெயர் இந்த்ர சேனன். நீ எப்படியும் என்னைத் தேடி வருவாய் என்று பகல்பொழுது முழுக்க பல தினங்களாக இங்கே தவமிருப்பவன்.''

''அடேயப்பா... என்ன ஒரு நம்பிக்கை. என்ன ஒரு கணிப்பு. அது சரி, உங்கள் ஊர்?''

''நான் காஞ்சியைச் சேர்ந்தவன்.''

காஞ்சி என்று அவன் கூறிய நொடி நீலா அதிர்ந்து முகம் கலங்கினாள்.

''என்ன பெண்ணே... உன் அரசன் பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையனுக்கும் என் அரசன் நந்திவர்ம பல்லவனுக்கும்தான் பகையுணர்ச்சி, பழி உணர்ச்சி. அதனால் நாமும் பகைவர்களாகி விடுவோமா என்ன?''

அவன் சுற்றிவளைக்காமல் நேராகவே கேட்டு விட்டான். அவள் அவளைப்போல சட்டென்று ஒரு பதிலைக் கூறிவிடவில்லை. வெகு நேரம் அவனையே கூர்ந்து பார்த்தாள்.

''எதற்காக பெண்ணே இப்படிப் பார்க்கிறாய்?''

''பார்க்க வைத்து விட்டீர்கள். உண்மையில் நான் காலத்துக்கும் கடவுளுக்கும் நன்றி கூறுகிறேன்...''

''எதற்கு?''

''என் வருங்கால கணவரை, அது எனக்கு என் விருப்பப்படியே தந்ததற்கு!''

''அப்படியானால் பல்லவ நாட்டிற்கு நீ மருமகளாக வந்து வாழச் சம்மதிக்கிறாயா?''

''இது என்ன கேள்வி... இனி வேறு ஒரு ஆளை நான் எண்ணினால் பாண்டிய நாட்டுப் பெண்களுக்கு மான உணர்வே இல்லை என்று நீங்கள் எண்ண மாட்டீர்களா?''

''அப்படியானால் நான் தவறாக நினைத்துவிடுவேன் என்று பயந்துதான், நீ என்னை ஏற்றுக்கொள்கிறாயா?''

''அதுவும் ஒரு காரணம்... அதே சமயம் வேறு ஒரு காரணமும் இருக்கிறது...''

''என்ன அது?''

''அதுதான் காதல் என்று நான் கூறினால்தான் உங்களுக்குப் புரியுமா?''

அவள் அப்படிக் கேட்க, அவன் சிரிக்க, அந்த நொடியே இருவரிடையேயும் ஒரு இளமைப்புயல் வீசத் தொடங்கி விட்டது.

அதன் பின் தினம் தினம் சந்திப்புதான்!

ஐப்பசி அடைமழை நாளான இன்று சந்திப்போடு சில முக்கியமான சங்கதிகளையும் பேசிவிட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள்.

நீலாவும் இந்த்ரசேனனைச் சந்திக்க கிளம்பிவிட்டாள். எதிர்ப்பட்டான் அவளது சகோதரன் ருத்ராவதி. அவனுக்கு அவளது காதல் மட்டுமல்ல, இந்த்ரசேனன் ஒரு பல்லவன் என்பதும், முத்து வாணிகத்துக்காக அவன் மதுரை வந்திருக்கிறான் என்பதும் நன்றாகவே தெரியும். ஏனென்றால், பாண்டிய அரசின் தலைமை ஒற்றன் அவன்.

இந்த்ரசேனனை மோப்பம் பிடித்துவிட்டதில் ஆச்சரியப் பட ஏதுமில்லை. ஒரு கட்டத்தில் அவன் மூலமாக காஞ்சிப் பல்லவ அரசன் பற்றி, காஞ்சியின் வர்த்தக உலகம் பற்றி யெல்லாமும் அறிந்து கொள்ள வேண்டும் என்பது தனது பணியின் நிமித்தமாக எண்ணியபோதுதான், தன் தங்கை நீலாவின் மேல் அவன் காதல் கொண்டிருப்பதும், அவளும் அவன் மேல் காதல் கொண்டிருப்பதும் அவனால் அறியப் பட்டது. அப்போதே பழம் நழுவிப் பாலில் விழுந்துவிட்ட தாக முடிவு செய்துவிட்டான். நீலா, இந்த்ரசேனனை மணந்து காஞ்சி செல்லுவாள். அதன்பின் தினமும் காஞ்சியில் இருந்து அவள் மூலமாகவே காஞ்சியின் அன்றாட நிலவரங்களை அறிந்து கொள்ளலாம். அதற்காகவென்றே அவன் வளர்த்து வரும் மணிப்புறாக்கள் கர்நாடகத்துக்கும் கெங்க நாட்டுக்குமே சென்று திரும்பி வருகின்றன.

தங்கை வீட்டுக்குத்தான் சென்று வராதா என்ன? அவைகளை எல்லாம் உத்தேசித்து நீலாவைப் பார்த்தவன் ஒரு குறுநகையோடு, ''எங்கே புறப்பட்டு விட்டாய்?'' என்றான், ஒன்றும் தெரியாதவனைப் போல...

''என்ன அண்ணா தெரியாதது போல கேட்கிறாய். உனக்குத் தெரியாமல்தான் இந்த மதுரையில் ஒரு காக்கை குருவிகூட பறக்க முடியாதே...?''

''புரிகிறது.... புரிகிறது. இன்று உன் காதலனிடம் எப்பொழுது திருமணம் என்று நான் கேட்டதாகவே கேள். விரைவில் உங்களுக்குத் திருமணம் செய்து வைத்தால்தான் எனக்கும் ஒரு கடமையைச் செய்த நிறைவு ஏற்படும். அப்படியே நான் சொன்ன விஷயத்தையும் மறந்து விடாதே...''

நீலா அதைக் கேட்டு வெட்கத்துடன் புறப்பட்டாள்.

கிரிதிருமால் நதியோரம்! காத்துக்கொண்டிருந்தான் இந்த்ரசேனன்.

"எவ்வளவு நாளைக்குத்தான் இப்படி கள்ளத்தனமாகச் சந்தித்துக் கொண்டே இருப்பது?" என்றான் ஆதங்கத்துடன் அவள் பொற்கரம் பற்றி.

"கவலைப்படாதீர்கள்... என் சகோதரனே இன்று உங்களிடம் திருமணம் பற்றிப் பேசச் சொன்னான்..."

"ஓ... அப்படியானால் நமது காதலுக்குத் தடையேதும் இல்லை என்று சொல்."

"காதலுக்குத் தடை இல்லை. ஆனால், நீங்கள்தான் உங்கள் காதலுக்காக ஒரு சிறு தியாகத்தைச் செய்ய வேண்டும்."

"என்ன நீலா அது?"

"ஒன்றுமில்லை... நீங்களோ பல்லவ நாட்டுக்காரர். அதிலும் செல்வந்தரான முத்து வியாபாரி. பல்லவ அரசரோடும் வர்த்தக உறவு உடையவர்..."

"எதற்கு இந்தப் பீடிகை? நேராக விஷயத்துக்கு வா."

"நேராகத்தான் வருகிறேன். நீங்கள் பல்லவர் என்றால் என் சகோதரன் பாண்டியன். மாமன்னர் பராந்தக நெடுஞ் சடையரின் நேர்பார்வையில் ஒற்றர் பணிபுரிபவன்."

"அதற்கென்ன?"

"திருமணம் முடியும் வரை யாராவது கேட்டால், நீங்கள் ஒரு பாண்டிய நாட்டுக்காரர் என்றே கூற வேண்டும்..."

அதைக் கேட்டு இந்த்ரசேனன், நீலாவை மெல்லச் சிவந்த விழிகளால் ஊடுருவினான்.

"எனக்கு உங்கள் சங்கடம் புரிகிறது. பெற்ற தாயும், பிறந்த நாடும் சற்றும் தாழாதவைதான். ஆனாலும் நம் காதலை உத்தேசித்து..."

குழைந்து நெளிந்தாள் நீலா. இறுதியில் அரைமனதாக சம்மதம் கூறினான்.

''நம் திருமணம் பாண்டியப் பேரரசர் பராந்தக நெடுஞ் சடையர் தலைமையில் கூடலழகர் ஆலயத் திருச் சந்நிதியிலேயே நடைபெறப்போகிறது.''

''மகிழ்ச்சி நீலா... அதன் பின் நீ என்னோடு காஞ்சிக்கு வந்து அதன் பின்னர் நீ பல்லவப் பெண் ஆவாய்தானே?''

''நிச்சயமாக!''

திருமணம் முடிந்தது. நீலா கூறியது போல பாண்டியப் பேரரசர் பராந்தக நெடுஞ்சடையரே நேரில் வந்து ஆசீர்வதித்து பரிசுகளும் வழங்கினார். அவர் காதில் நீலாவின் சகோதரன் ருத்ராவதியும், ''ஒரு உத்தரவாதமான தகவல் தொடர்பை நான் பல்லவ நாட்டோடு கொண்டு விட்டேன்'' என்று கூற, பராந்தகர் அவனை நெஞ்சோடு அணைத்துக் கொண்டார்.

அன்று மாடவீதியில் நீலாவின் வீட்டிலேயே முதல் இரவும் கூட... தனியறையில் காத்துக்கொண்டிருந்த இந்த்ரசேனன் செம்பஞ்சுக் குழம்பில் ஒரு மெல்லிய பட்டாடையில் சேதி ஒன்றை எழுதிக் கொண்டிருந்தான்.

'பல்லவ சக்கவர்த்தியவர்களின் திவ்ய சமூகத்திற்கு' என் நெடுநாள் திட்டம் ஈடேறியது. பாண்டிய தலைமை ஒற்றன் தங்கையையே மணம் முடித்துவிட்டேன். இது ஒரு தொடக்கம்தான். போகப்போக பராந்தக நெடுஞ்சடையரையே ஒரு முத்து வியாபாரியாக வசப்படுத்தி விடுவேன். இனி எனக்கு தெரியாமல் பாண்டிய சபையில் எதுவுமே நடக்காது.

என்றும் உங்கள் பல்லவ விசுவாகி இந்த்ரசேனன்.'

எழுதி முடித்த பட்டாடையை சுருட்டி மடக்கி குப்பி ஒன்றில் போட்டு தனது புறா காலில் கட்டி அதை வானை நோக்கி பறக்கவிட்டு மஞ்சத்தில் வந்து அமர்ந்தான். பாவம் நீலா, கணவனுக்கும் அண்ணனுக்கும் இடையே நசுங்கப் போவது தெரியாமல் நாணத்தோடு, அந்த முதல் இரவு அறைக்குள் நுழைந்து கொண்டிருந்தாள்.

# 6. என்னை வென்றேன்

விமானம் புறப்படத் தயாராக இருந்தது. காக்பிட்டுக்குள் இருந்து பைலட்கூட சற்றுக் குழறலான ஆங்கிலத்தில் பேசினார். அப்போதுதான் சிவகுமாருக்கு அருகிலிருந்த காலி ஸீட்டில் வந்து அமர்ந்தார், அந்த அமெரிக்க மாபெரும் நடிகர்!

மொத்த விமானமே திரும்பித் திரும்பி பார்த்தது.

பணிப்பெண்கள் அந்த நடிகரைத் தேடித் தேடி வந்து விஷ் செய்தனர். அவர் பக்கத்தில் அமர்ந்திருந்த சிவகுமாரைக் கூட சிலர், 'கொடுத்து வைத்தவன்' என்பது போலப் பார்த்தனர்.

சிவகுமாரும் அந்த நடிகரைப் பார்த்தான். அவர் அவனைப் பார்த்து 'ஹலோ' என்றார்.

அவர் ஒருவரைப் பார்த்து ஹலோ சொல்வதும், லாட்டரியில் லட்ச ரூபாய் பரிசு விழுவதும் கிட்டத்தட்ட ஒன்று என்பதுதான் பலர் கருத்து.

ஆனால், சிவகுமார் அவருக்கு ஒரு பதில் ஹலோகூட சொல்லவில்லை. மாறாக ஜன்னல் வழியாக விமான நிலைய ஓடுதளத்தைப் பார்த்தான். அதில் ஒரு தனியார் நிறுவன விமானம் குடியரசு தின அணிவகுப்பில் மெதுவாகச் செல்வது போல் நகர்ந்தபடி இருந்தது. பின்னாலேயே நூறு மீட்டர் தொலைவில் இன்னொரு விமானம்.

சென்னை விமான நிலையம் மெல்ல கோயம்பேடு பஸ் ஸ்டாண்ட் போல மாற ஆரம்பித்துவிட்டதாக அவனுக்கு ஒரு எண்ணம்.

அவன் தன்னைப் பொருட்படுத்தாதபடி அமர்ந்திருப்பது அந்த மகா நடிகரை சற்று நிரடியதோ என்னவோ? கன்னத்தில் கைவைத்தபடி ஒரு சாய்வுப் பார்வையாக அவனையே பார்க்கத் தொடங்கிவிட்டார். இடைஇடையே பணிப்பெண்கள், பயணிகள் சிலர் தந்ததாகக் கூறி ஆட்டோகிராப் நோட்டை கொண்டு வந்து தந்து, 'எக்ஸ்க்யூஸ் மீ சார்'' என்று தங்களின் செயற்கைச் சாயம் பூசிய உதட்டைத் திறந்துகொண்டு சிரித்தனர்.

அவரும் மறவாமல் தனது பாணிப்படி, 'தமிழ் வாழ்க!' தாயை மறவாதே' என்று எழுதி ஒரு வளைகோட்டை கையெழுத்தாகப் போட்டுக் கொடுத்தார். சிவகுமார் மட்டும் திரும்பவே இல்லை! விமானம் பெரிதாக சப்தம் எழுப்பியபடி நகரத் தொடங்கியது. அந்த நடிகர் ஸீட்பெல்ட் போட மறந்திருந்தார்.

உடனே ஒரு பணிப்பெண் ஓடிவந்து அவருக்கு அவள் கையாலேயே போட்டுவிட்டாள்.

அப்போது அவள் கை அந்த நடிகரின் மேனிமேல் அங்கும் இங்குமாகப் பட்டது. அவள் வரையில் அமுதத்துளிகளே மேலே பட்டது போல் இருந்திருக்க வேண்டும்.

சிவகுமாரும் அதைக் கவனித்தான்... அவனுக்குள் சற்றே பின்னோக்கிய நினைவுகள்!

அன்றைக்கு பொதுத் தேர்வு. சிவகுமாருக்கு சவால்விடும் கணிதப் பரீட்சை. அன்றைக்குத்தான் அந்த மகா நடிகர் இரு வேடங்களில் நடித்த படமும் ரிலீஸ்...

கணிதத்தை மகா நடிகர் வென்றுவிட்டார். சிவகுமார் தியேட்டர் வாசலில் இருந்தான். அவன் முன்னால்

அவருடைய எண்பதடி உயர கட் அவுட்! அதன் தலைப் பாகத்தில் ஒரு விடலை நின்றுகொண்டு, ஒரு குடம் நிறைய பாலை கவிழ்த்துக் கொண்டிருந்தான். கீழே அனேக விடலைகள் அதைப் பார்த்து கை தட்டிக் கொண்டிருந்தனர். ஒருவன் தொண்டை கிழிய விசில் அடித்தான். இன்னொருவனோ போட்டிருந்த சட்டையைக் கழற்றி தலைக்கு மேலே விறுவிறுவென்று கழற்றி, தனது வேகத்தைக் காண்பித்தபடி இருந்தான்.

'கும்தலக்கடி கும்மாவா... தலைவன்னா சும்மாவா?' அதைத் தொடர்ந்து 'விஷ்க் ... விஷ்க்'... என்று சீரான விசில் சப்தம். சில பேர் கைகளில் பாடப்புத்தகங்கள். சிலர் கைகளில் கூடவே சிகரெட் புகைந்து கொண்டிருந்தது.

இந்தியாவைப் பொறுத்தவரை IAS, IPS எல்லாம் சும்மா...! விஞ்ஞானி, புலவன், விளையாட்டு வீரன் என்று எல்லோருமே ஒரு சினிமா நடிகனுக்கு பின்னால்தான் என்றாற்போல் இருந்தது.

அந்த பொதுத்தேர்வில் சிவகுமாரும் தோற்றுப் போனான். இவனைப் போன்றவர்களுக்காகத்தானே அடுத்த இரு மாதங்களிலேயே பரீட்சை வைக்கிறது அரசாங்கம். அதில் எழுதித்தான் தேறினான்.

அப்படியும் பெரிதாக மதிப்பெண் இல்லை. இன்ஜினீயரிங் கல்லூரி பக்கமெல்லாம் திரும்பிக்கூட பார்க்க முடியவில்லை. போனால் போகிறது என்று ஐ.டி.ஐ-யில் மெஷினிஸ்ட் கிரைண்டர் படிப்புக்கு இடம் கிடைத்தது அதைத் தொடர்ந்து ஒரு தொழிற்சாலையில் 2000 ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தது. மூன்று ஷிஃப்ட் உத்தியோகம். ஊரே தூங்கும்போது - அவ்வளவ ஏன் - தெருநாய் கூட தூங்கிவிடும்... சிவகுமாரால் தூங்க முடியாது. பகலிலும் தூங்க வழி இல்லை. அவன் தங்கி இருந்த மாடி அறை வீட்டுக்கு நேர்எதிரே ஒரு டீக்கடை... அந்த

கடைக்காரருக்கு அவரது ரேடியோ பாடியபடியே இருக்க வேண்டும். அது ஒரு நான்ஸ்டாப் நான்சென்ஸ்.

மொத்தத்தில் சிவகுமாரை சினிமா துரத்தித் துரத்தி வேட்டையாடியது. எல்லாமே கொஞ்சம் கொஞ்சமாகத் தான் புரிந்தது. அவன் மிக நேசித்த அந்த மகா நடிகர் படத்துக்குப் படம் கோடிகளில்தான் சம்பளம் வாங்கினார். அவனுக்கோ இரண்டாயிரத்தைத் தாண்டமுடியவில்லை.

சிவகுமாருக்கு அவனது பிறந்தநாள்கூட என்று எனத் தெரியாது. ஆனால், அந்த மகா நடிகர் பிறந்த நாளைக் கொண்டாட வேலைக்கு லீவு போட்டுவிட்டு சென்னைக் குப் போய் அந்த நடிகர் வீட்டு முன்னால் நாய்போல காத்துக் கிடந்து, கடைசியாக அவர் டாட்டா காட்டி தரிசனம் தந்திட, அதை பார்த்துவிட்டு வரும் வழியில் பஸ் விபத்து ஏற்பட்டு, மணிக்கட்டு எலும்பு முறிந்து, ஒரு மாசம் வரை வேலைக்கு வர முடியாதபடி மெடிக்கல் லீவு போட்டதில், அந்த வருஷத்திய கன்ஃபர்மேஷன் மேலும் ஒரு வருஷம் தள்ளிப்போய் வயிற்றெரிச்சலைக் கொட்டி கொண்டது.

இன்று சிவகுமார் தானே ஒரு மினி இண்டஸ்ட்ரி நடத்தும் குட்டி தொழிலதிபர். இப்போதுகூட ஹாதியானா வுக்குப் போய் ஒரு மெஷின் வாங்கத்தான் விமானம் ஏறியுள்ளான். பக்கத்திலேயே அவனது உயிருக்குயிரான மகா நடிகரே வந்து உட்காரவும் அவனுக்கு பகீர் என்றாகி விட்டது.

பழைய மயக்கங்களும் அதனால் ஏற்பட்ட சறுக்கல்களும் ஞாபகத்தில் வந்தபடியே இருக்கின்றன. பல்லைக் கடித்தபடி விண்டோ வழியே வெளியேதான் பார்த்தான். தப்பித் தவறிக்கூட திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால், மகா நடிகருக்குத்தான் பல்லிடுக்குத் தேங்காய் துணுக்காக அவன் செயல் நெருடிக் கொண்டே இருந்தது.

தன்னைப் பார்த்தாலே காலில் விழுந்துவிடும் இளைஞர் கூட்டத்தில் தன்னையும் தெரியாதபடி ஒருவனா?

சிறிது நேரத்திலேயே மினி டிபன் வந்தது.

அதைக்கூட கடிவாளக் குதிரை கொள்ளு தின்பது போலத்தான் தின்றான்.

அதற்குமேல் மகா நடிகருக்கே பொறுக்கவில்லை. "சார்! எங்க போறீங்க?" - பேச்சு கொடுக்க ஆரம்பித்தார். அவனும் நிமிராமலே பதில் கூறினான்...

"டெல்லி..."

"ஐ. ஸீ... சார் என்ன பண்றீங்க..?"

"நான் ஒரு மினி இண்டஸ்ட்ரி நடத்தறேன்..."

"ஓ. வெரிகுட்... என் படங்கள்லாம் பார்க்கறதுண்டா?"

"ஸாரி... நான் சினிமாவை நினைக்கக்கூட விரும்பல..."

"விரும்பலையா... நேரம் இல்லையா...?"

"ரெண்டும்தான்."

"என் லைஃப்ல முதல் தடவையா உங்களைப் போல ஒருத்தரை பாக்கறேன்..."

அதற்குமேல் அவனும் எதுவும் கூறவில்லை. பயணமும் முடிந்தது. டெல்லி விமான நிலையத்தில் அவர் விடை பெறும்போது, "உங்களை என்னால் மறக்கவே முடியாது..." என்றார்.

சிவகுமாரோ நெஞ்சை சற்று நிமிர்த்திக் கொண்டான். நடையிலும் ஒரு கம்பீரம் தெரிந்தது. பழைய பிழைகளுக் கெல்லாம் பிராயச்சித்தம் தேடிக்கொண்டு விட்டது போல இருந்தது.

ஒரு பயணி மெனக்கெட்டு அவனருகே வந்து, "சார் உங்ககூட பேசிக்கிட்டே வந்தார்... கொடுத்து வெச்சவர் சார் நீங்க..." என்றார்.

''ஆமா... அவர் யாரு?' - சிவகுமார் வெடுக்கென்று திருப்பிக் கேட்டான்.

"அட, என்ன சார் நீங்க... அவர் யார்னு உங்களுக்குத் தெரியலை..?''

''தெரியல... தெரிஞ்சுக்க விரும்பல... தலைக்கு மேல வேலை சார். அவர் அவர் வேலையைப் பாக்கட்டும். நாம நம்ம வேலையப் பார்ப்போம் சார்...''

அவருக்கு ஏன் அவனிடம் பேசினோம் என்றுகூட இருந்தது. ''ரொம்ப மோசம் சார் நீங்க...!'' என்று ஒரு வேகமான காமெண்ட் அவரிடம்.

அவனுக்கோ அப்போதுதான் அவ்னைப் பிடிக்கத் தொடங்கியிருந்தது.

# 7. உயிர் மொய்...

ஆபீஸில் வேலையே ஓடவில்லை கங்காதரனுக்கு. அடிக்கொரு தடவை தன் டேபிள் மேல் உள்ள தொலை பேசியைப் பார்ப்பதும் இழுத்து மூச்சு விடுவதுமாகவே இருந்தான். நல்லவேளை... அவன் எதிர்பார்த்தது போலவே அவன் மனைவி காந்தா அவனை அழைத்துப் பேசினாள்.

''இப்ப ரொம்ப நல்லா இருக்காங்க... பாட்டுகூட கேக்கறாங்க!'' என்று சொல்லிவிட்டு அவள் முடித்துக் கொண்டாள். கங்காதரனுக்கு அதைக் கேட்டு அழுகையே வரும்போலகூடத் தோன்றியது.

பார்த்துக் கொண்டே இருந்த நண்பன் பலராமன் அருகில் வந்தான்.

''என்ன கங்கா... உன் மக கல்யாணத்துக்கு இன்னும் பத்து பதினைஞ்சு நாள்கூட இல்ல போலிருக்கே?''

''உம்.''

''அந்த டென்ஷனா?''

''இல்லப்பா... இது என் அத்தையால வந்திருக்கிற டென்ஷன். தொண்ணூறு வயசாகுது. ஒரு மாசமா படுத்த படுக்கையா இருக்காங்க. சாப்பாடே சுத்தமா கிடையாது. உயிர் எப்ப வேணா பிரியலாம். ஆனா, எங்க மகள் கல்யாணத்துக்கு முந்தியோ இல்ல அன்னிக்கோ மண்டையைப் போட்டு கல்யாணத்தை ஒரு வழி பண்ணிடுவாளோங்கற கவலைப்பா...''

ஒரு கல்யாணத்துக்கு எத்தனையோ விதமாய் இடைஞ் சல்கள். அந்தப் பாட்டி இடைஞ்சல் பலராமனுக்கே பெரிய பரிதாபத்துக்குரியதாய்த் தோன்றியது.

கங்காதரனின் அத்தை பெரியநாயகியும் பாவம். பதினாறு வயதில் கல்யாணம்... பதினெட்டு வயதில் விதவை! 72 வருஷமாய் அவள் வாழ்ந்ததெல்லாம் பிறந்துவிட்ட காரணம் ஒன்றிற்காகவே. இப்போது சாவதிலும்கூட அவள் வரையில் இழுபறி...!

ஆனால், என்ன புண்ணியம்?

அவள் வரையில் அத்தைப் பாட்டி ரூபத்தில் விதி வேலை காட்டும் போலத் தெரிகிறது.

எங்கே கல்யாணத்துக்கு முதல் நாளோ இல்லை அதற்கும் முதல் நாளோ மண்டையைப் போட்டு விடுவாளோ என்கிற அச்சம் அவளைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கிறது.

அந்தக் குடும்பத்துக்கும் நல்ல காரியத்துக்கும் எப் போதுமே சிக்கல்தான். ஒரு நல்லதுக்கு நாள் குறிக்கும் போதுதான் யாருக்காவது விபத்து நடக்கும். தூரத்து உறவு களில் ஒன்று அதற்காகவே காத்திருந்தது போல உயிரை விட்டு அந்த நல்ல காரியத்தை தள்ளிப் போட வைக்கும்.

காந்தாவுக்கும் கங்காதரனுக்குமே அப்படித்தான் கல்யாணமாயிற்று... இப்போது அது மகள் வரையிலும்கூட தொடர்கிறது.

இதனால் கூடிக் கூடிப் பேசிக் கொள்கிறார்கள்.

அந்தப் பேச்சில் டாக்டரை கூப்பிட்டு கொஞ்சம் காசைக் கொடுத்து ஏடாகூடமாய் ஒரு ஊசியைப் போட்டு கிட்டத் தட்ட கருணைக் கொலை செய்தால் என்ன என்பதுதான் கேள்வியே...!

அவ்வப்போது டெலிபோன் மூலம் ஆபீஸில் இருக்கும் கங்காதரனையும் கூப்பிட்டு ''அப்படியேதான் இருக்கு...

நாலு ஸ்பூன் பால் உள்ள போச்சு. அஞ்சாவது ஸ்பூன் வழிஞ்சிடிச்சு. சரி, ஒரு முடிவுக்கு வந்தாச்சுன்னு நினைச்சேன். பார்த்தா கண்ணை நல்லா முழிச்சுப் பாக்கறாங்க. ஹூம். என்ன உடம்போ?'' என்று காந்தாவும் அலுத்துக் கொண்டாள்.

டாக்டர் வந்து பரிசோதித்துப் பார்த்துவிட்டு ஒரு வறட்டு சிரிப்புச் சிரித்தார். அறைக்கு வெளியே வந்து சூழ்ந்து கொண்ட சொந்தங்களின் முன்னால் ''தொண்ணூறு வயசு பாடின்னாலே எங்களுக்கே குழப்பம்தான். உடம்புல எந்த பாகத்துலயும் தெம்பு கிடையாது. ஆக்ஸிஜன் இன்டேக்கும் கம்மி... ஆனாலும் சிலர் மூணு நாலு வருஷம்லாம் உயிரோட இருப்பாங்க'' என்று அவர்களை எல்லாம் போட்டுக் கலக்கினார்.

''டாக்டர்! கல்யாணம் நல்லபடியா நடந்து முடியணும். அதுவரை ஆஸ்பத்திரியில செயற்கை சுவாசம் கொடுத்து நாட்களை கடத்த முடியாதா?'' கங்காதரன்தான் கேட்டான்.

''எதுக்கு... சுவாசம் இப்ப பிரச்சினை இல்லையே? பாட்டியோட மெட்டபாலிசத்துல அப்பப்ப கொஞ்சம் ஸ்தம்பிப்பு. அதுக்குக் காரணம் முதுமை. மற்றபடி இவங்களுக்கு எந்த நோயும் இல்லையே...?''

''ஐயோ டாக்டர்... புலி வருது கதையா பயமுறுத்திக்கிட்டுல்ல இருக்காங்க. என் பெண்ணுக்கு படாத பாடுபட்டு மாப்பிள்ளை பார்த்திருக்கேன் தெரியுமா?''

''அதுக்கு என்ன பண்ண முடியும் மிஸ்டர் கங்காதர்? மாப்பிள்ளை வீட்டுக்காரங்க இதைப் புரிஞ்சுக்க முடியாத அளவு மோசமானவங்களா என்ன....? கல்யாணத்தை தள்ளிப் போட்டா போச்சு.''

"இல்ல டாக்டர். ஒரு தடவை தட்டினா தட்டிகிட்டே போகும். நாளைக்கு என் மக வாழப் போற வீட்ல சின்னதா ஒரு சிக்கலானாலும் இந்தத் தள்ளிப் போன காரணத்தைச் சொல்லிப் பேசி என் மக வாழ்க்கையை நாசமாக்கிடுவாங்க."

"இதெல்லாமே அநாவசியமான பயங்கள்."

"நியாயமான பயம் டாக்டர். இந்த விஷயத்துல என் குடும்பத்துக்கு ஒரு சாபமே உண்டு. அது உங்களுக்குத் தெரியாது."

"சரி, அதுக்கு நான் என்ன பண்ண [illegible]ஃபாக்ட் ஸ்லீப்பிங் டோஸை கொஞ்சம் ஹெவியா கொடுத்தாலே கூட அவங்க கதை முடிஞ்சிடலாம். ஆனா, நான் அதை ஒரு பெரிய பாவமா நினைக்கிறேன். நான் போற உயிரை மீட்க மட்டுமே எதையும் செய்வேன்."

-டாக்டர் நாசூக்காக மறுத்துவிட்டு கிளம்பிவிட்டார். தனி அறைக்குள் திவ்யா அழுது கொண்டிருந்தாள். எல்லோரும் மனதுக்குள் பெரியநாயகியைப் போட்டு சபிக்க ஆரம்பித்து விட்டனர்.

"கெழட்டு முண்டம். இதுவும் வாழலை... வாழப் போற ஒண்ணையும் வாழ விடாம இப்படி இழுத்துக்கிட்டு இருக்கே..."

"கங்கா யோசிக்காதடா... அவ வாழ்ந்து முடிச்சவ. உன் பொண்ணு வாழ வேண்டியவ. கல்யாண [illegible] இவளால அப்படியப்படியே நிக்குது பார். அந்த டாக்டர் சொன்ன ஸ்லீப்பிங் டோஸை உன் [illegible]லேயே போட்டு விடுடா. அப்படியே தூக்கத்துலேயே போய்ச் சேரட்டும்."

-கங்காதரனின் மாமா அழுத்தமாகவே தூண்டிவிட்டார்.

RRLF Kolkatta
District Central Library 607 001

இன்றைக்கு பெரியநாயகி கதை முடிந்தாலும் மூன்று நாள்தான் துக்கமும் தீட்டும்... அப்புறமாய் நெருடலே இல்லாமல் கல்யாண காரியங்களில் இறங்கிவிடலாம்.

"சரி, மாமா... நீங்க போய் ஐயரை வரச் சொல்லுங்க. சங்கு ஊதி, கறுப்பு வண்டின்னு எல்லாத்துக்கும் சொல் லிடுங்க. நான் வரேன்!"

- சற்று ஆவேச தொனியோடு கங்காதரனும் ஸ்லீப்பிங் டோஸ் மற்றும் இஞ்ஜெக்ஷன் சிரிஞ்ச் சகிதம் அறைக்குள் போய் கதவையும் தாழிட்டுக் கொண்டான். அதைப் பார்த்த திவ்யாவுக்கு இதய பாகம் முழுக்கவே உறைந்து போன மாதிரி இருந்தது.

தன் கல்யாணத்துக்காக அப்பா ஒரு கொலைகாரனாக கூட ஆகவேண்டியிருக்கிறதே...!

அழுகை பீறிட்டது. ஓடிப்போய் கங்காதரனைத் தடுத்து 'அந்[redacted]கும்போது போகட்டும். எனக்காக நீ கொலைகாரனாகாதே' என்று சொல்லவும் அவள் மனது துடித்தது.

அதை செயல்படுத்தவும் விரும்பி வேகமாக அறைக் கதவை நெருங்கியவள் ஆவேசமாக தட்டுவதற்காக கையை ஓங்கும் முன், கதவு திறந்து கொண்டது.

அப்பா கங்காதரன்.

"அப்பா"

"உன் அத்தைபாட்டி உன்னைப் பார்க்கணும்கறா."

"என்னையா?"

"ஆமாம்... சீக்கிரமா போ..."

அவன் தூண்ட, அவளும் உள்ளே போனாள். படுக்கையில் வலிந்து முயன்று அமர்ந்த நிலையில் இருந்தாள் பெரியநாயகி.

திவ்யாவைப் பார்க்க முடியாமல் பார்த்தாள்.

''பாட்டி... '' திவ்யாவும் லேசான கேவலுடன் முன் சென்று நின்றாள். பெரியநாயகியும் உட்காரச் சொல்லி ஜாடை காட்டினாள். பக்கத்தில் சிரிஞ்ச்சும் மருந்து பாட்டிலும் தாறுமாறாகக் கிடந்தன.

''திவ்யாம்மா... பாட்டி புறப்பட்டுட்டேன். இனி உன் கல்யாணம் நல்லபடியா நடக்கும். எல்லார் வருத்தமும் எனக்குப் புரியுது. பாவம் உன் அப்பன்! அவனை கொலை காரனாக்க நான் விரும்பலை. தொண்ணூறு வயசுல இந்தக் கெழவிக்கு தற்கொலையாலதான் முடிவுங்கறது விதி. போகட்டும்... எல்லாம் என்னோட போகட்டும். உன்கிட்ட இருந்து எல்லாம் நல்லபடியா தொடங்கட்டும். உன் கல்யாணத்துக்கு இந்தப் பாட்டியோட மொய் என்ன தெரியுமா? என் உசுர்தான்...''

அந்தக் கடைசி வார்த்தையோடு பெரியநாயகியின் தலை தொங்கிப் போனது. ''பாட்டீ...!'' திவ்யாவின் பதில் அழுகையில் அந்த வீடே நடுங்கியது.

# 8. கருத்தம்மா

முத்துப்பட்டி கண்மாய்க் கரை ஓரம் பூதாகரமாக வளர்ந்திருந்தது அந்த ஆலமரம்! விழுதுகள் தரையைத் தொட்டு, அவையும் மரத்தைத் தாங்கத் தயாராகி விட்டிருந் தன. நிழலில் அங்கங்கே சிமெண்டு பெஞ்சுகள்... பல பெஞ்சுகளில் சாய்மான முதுகுப் பகுதி உடைந்து போய் தாங்கள் கவனிப்பாரற்றுப் போய்விட்டதை சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன.

எப்பொழுதும் ஊர்ப்பிள்ளைகள் ஓடிப்பிடித்து விளை யாடியபடி இருக்க, சிமெண்டு பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு பெருசுகளும் அரசியல் முதல் அன்றாடப் பாடு வரை பேசிக் கொண்டிருந்த காலமெல்லாம் போயே போய் விட்டதாகத்தான் தோன்றியது.

ஒரு அநாதை போல தனித்துவிடப்பட்டுவிட்ட அந்த மரத்துக்குக் கீழேயும் ஒடுங்குவதற்கு இடம் தேடி ஒரு குடும்பம் வந்ததுதான் வேடிக்கை.

காளிமுத்துவும் அவன் மனைவி கருத்தம்மாவும் அவர் களின் குழந்தையான செல்லப்பாண்டியும்தான் அவர்கள்!

காளிமுத்துவுக்கு பாத்திரங்களுக்கு கலாய் பூசுவதுதான் தொழில்... ஒரு ஊருக்குப் போனால் குறைந்தது மூன்று மாதம்!

மூன்று வருஷத்துக்கு ஒரு முறை என்று வைத்துக்கொண்டு ஊர் ஊராக அவனும் செல்வதால் ஊர்க்காரர்களுக்கும்

அவன் ஒன்றும் புதியவனில்லை. அப்படித்தான் முத்துப்பட்டி கண்மாய்க்கரை ஆலமரத்துக் கரை கீழேயும் வந்து டேரா போட்டான்.

கண்மாய்க் கரை மேல் 'டுர்ர்ர்' என்று ஒரு எம்-80 ஸ்கூட்டரில் போய்க் கொண்டிருந்தான் பஞ்சாயத்து போர்டு வைஸ்பிரசிடெண்ட் அருணாசலம். டெண்ட் எழும்புவதை வைத்து வண்டியை அவர்களை நோக்கித் திருப்பினான். காளிமுத்து கையெடுத்துக் கும்பிட்டான்.

"ஐயா, கும்பிடறேங்க..."

"ஓ.... ஈயம் பூசற காளியப்பனா?"

"காளிமுத்துங்க..."

"இது உன் சம்சாரம் வெள்ளையம்மாதானே?"

"ஐய்ய... மாத்தி மாத்தி சொல்றீங்களே... இது பேர் கருத்தம்மா...."

"ஆங், கருத்தம்மா..." என்ற அருணாசலத்தின் பார்வை, கருத்தம்மா பக்கம் திரும்பியது. பால் ஊறிப் பருத்த அவளது மார்புகளில் ஒரு வழிசல். திமுதிமு என்றும் ஒரு முட்டல்.... அருணாசலம் ஒரு கள்ளப்பார்வை ஸ்பெஷலிஸ்ட்! அது புரிந்தோ என்னவோ கருத்தம்மா தன் சேலை முந்தியைப் பரவலாக இழுத்து விட்டுக் கொண்டாள். அவனும் நாசூக்காகப் பார்வையை விலக்கிக்கொண்டு காளிமுத்து விடம் ஊன்ற ஆரம்பித்தான்.

"மழைக் காலமா இருக்குதே... இந்த டெண்ட் தாங்குமா?"'

"தாங்கித்தானுங்களே ஆவணும்!"

"கவலைப்படாதே, ஏதாவது பிரச்சினைன்னா ஊருக் குள்ள எனக்கொரு வீடு கெடக்குது. காலியாதான் இருக்கு. அங்க வந்து இருந்துக்க."

''ரொம்ப சந்தோஷங்க...''

''சரி, சரி... தொழிலைப் பாரு. வேற ஏதாச்சும் ஒத்தாசை தேவைப்பட்டா கருத்தம்மாளை அனுப்பு. செய்யறேன்...'' என்ற அருணாசலத்தின் பார்வை திரும்பவும் அவள் மார்பைத்தான் அளந்தது. அவளுக்கு கூசியது. பக்கத்தில் ஒரு சாக்கு கிடந்தது. எடுத்து போர்த்திக் கொள்ளக்கூட அவள் மனது துடித்தது. இருந்தும் அவனைத் தவிர்த்துவிட்டு, கூட்டிய குப்பைகளை அதே சாக்கில் அள்ளி தூரச் சென்று கொட்டுவதற்காகப் போனாள்.

**போ**ன இடத்தில் புதருக்குள் அந்தக் காட்சியைக் கண்டாள். தெருநாய் ஒன்று அங்கே நான்கு குட்டிகளைப் போட்டிருந்தது. குட்டிகள் அந்த நாய் மடியை முட்டி முட்டி பால் குடித்துக் கொண்டிருந்தன.

கருத்தம்மாவுக்கு ஜிலீர் என்றது. அவளும் தாய்மைக்குள் மார்பு வழிய பாலைச் சுமந்து கொண்டிருப்பதால் அந்த தாய்நாயின் பரவசத்தை அவளால் நொடிக்குள் கற்பனை செய்து பார்க்கவும் முடிந்தது. குப்பையைக் கூடக் கொட்டத் தோன்றாமல் நின்றுவிட்டாள்.

''ஏ புள்ள... அங்க என்னத்த பார்த்துக்கிட்டிருக்கே... வா இப்படி...'' காளிமுத்து அவள் பரவசத்தைக் கலைத்து அருகில் அழைத்தான்.

''நீ கூட்டிப் பெருக்கி அடுப்புக்குக் குழி போட்டு வை. நான் நாலு தெரு போய் ஒரு சவுண்டு கொடுத்துட்டு வந்துடறேன்...'' என்றவன் லுங்கியை ஒரு தினுசாக ஏற்றிக் கட்டிக் கொண்டு டெண்ட்டை ஒட்டிப் படுத்த நிலையில் கிடந்த சைக்கிளை எடுத்து, கழன்று கிடந்த அதன் செயினையும், சரியாக பொருத்திக் கொண்டு, ஏறி மிதிக்கத் தொடங்கினான். அங்கேயே ராகமான அவனது குரலும்

'பண்ட பாத்ரத்துக்கு ஈயம் பூசறதேய்ய்!... என்று ஆரம்பமாகி விட்டது.

கருத்தம்மா அங்கும் இங்கும் கிடந்த செங்கற்களைப் பொறுக்கி எடுத்து வந்து ஆலஞ்சிறாய்களை வைத்தே அடுப்பு மூட்டி சமைப்பது என்கிற முடிவுக்கு வந்து விட்டாள்.

புதரிலிருந்த நாயும் அதன் குட்டிகளும் வெளியே வந்து விளையாடத் தொடங்கின. கருத்தம்மா அதை ரசித்தாள். அவை அவளை அந்நியமாக நினைக்காமல் அவன் டெண்ட்டுக்குள் நுழைவதும், மரத்தைச் சுற்றி வருவதுமாக, கள்ளம் கபடமற்ற விளையாட்டு அங்கே நிகழ ஆரம்பித்து விட்டது.

பொங்கி முடித்த சோற்றில் சில கவளங்களை குட்டிக்கும் போட்டாள் கருத்தம்மா. அவற்றுக்கு ஏனோ அது பிடிக்கவில்லை. உடனே அவள் அதை அப்படியே தாய் நாய்க்கு வைத்தாள். வைத்த வேகத்தில் அவ்வளவு சோற்றையும் விழுங்கிவிட்டது. அவ்வளவு பசி!

அவளுக்கும் புரிந்தது... நான்கு குட்டிகளுக்கல்லவா அது பால் தர வேண்டும்?

ஒரு வாரம் ஓடிவிட்டது! காளிமுத்து சரியாக பாத்திரங்கள் கிடைக்காத விரக்தியில் இருந்தான். ஊர் முழுக்கச் சுற்றி முடித்துவிட்டு மரத்தடிக்கு வரும்போதே அவன் போதையோடு வந்ததுதான் கொடுமை!

எவ்வளவுதான் உடம்பு வலி என்றாலும் அவன் குடித்து அவள் பார்த்ததில்லை. அவனது புதுப்பழக்கம் அவன் மனதில் அமிலத்தையே சுரக்கச் செய்துவிட்டிருந்தது.

ஒரு நாள் ஊருக்குள் மளிகை வாங்கப் போகும்போது கடைக்காரர் மூலமாக அவன் போதைக்குக் காரணம் தெரியவந்தது. ''என்னம்மிணி... உன் புருஷன் தெனம் தண்ணிய போட்டுட்டு வர்றானாக்கும்? எல்லாம் இந்த

வைஸ்பிரசிடெண்ட்டு அருணாசலம் பயலோட வேலை பாத்து... சரியான பொம்பளை பொறுக்கிப்பய... காரணம் இல்லாம இப்படி தண்ணிய வாங்கித் தரமாட்டான்..." என்றார் அவர்.

கருத்தம்மாவுக்கு பிடரியில் யாரோ கற்பூரம் கொளுத்தியதுபோல இருந்தது. ஆலமரத்துக்கு வந்தவளிடம் அதே நினைவு... காளிமுத்து வந்தவுடன் முதல் காரியமாக இந்த ஊரைவிட்டே கிளம்பிவிடவேண்டும் என்கிற ஒரு வெறி தணல் அடுப்புக்குள் கரித்துண்டு பழுப்பது போல் அவளுக்குள் பழுக்க ஆரம்பித்துவிட்டிருந்து.

இரவு... ஊரடங்கிய நிலையில் காளிமுத்துவும் தன் ஓட்டைச் சைக்கிளில் அது போட்ட சப்தத்துடன் வந்து சேர்ந்தான். வந்தவன் சைக்கிளை பொத்தென்று போட்டு விட்டு வந்து கட்டிலில் விழுந்தான்.

ஆலமர விழுது ஒன்றில் லாந்தர் கட்டப்பட்டு லேசான வெளிச்சம். கருத்தம்மா அவனருகே வந்து பார்த்துவிட்டு கண்ணீரோடு அப்படியே கட்டிலை ஒட்டி அமர்ந்து விட்டாள். அப்படியே அயர்ந்துவிட்டவளை நாயின் குரைப்பு சப்தம்தான் எழுப்பிவிட்டது. ஒரு உருவம் இருட்டுக்குள் அடர்வாக அசைந்து அவளை நோக்கி வருவதும் தெரிந்தது.

"யாரு?" - அவள் கேட்கும் முன் அந்த உருவம் வாயைப் பொத்த முயன்று, படுக்கையில் தள்ளியது. ஆனால், அதுவரை குரைத்துக் கொண்டிருந்த நாய் அந்த உருவத்தின் மேல் பாய்ந்து கடித்துக் குதறவும், அந்த உருவம் வந்த வேகத்தில் திரும்பி ஓடத் தொடங்கியது.

கருத்தம்மா அப்படியே நொறுங்கிப் போய்விட்டாள்!

விடிந்தது!

காளிமுத்துவின் முகத்துக்கு மேலேயே சூரியனின் கதிர் ஒன்று பொசுக்குவது போலத் தாக்கியும் அவன் கண்களைத் திறக்கவில்லை. ஒரு குடம் தண்ணீரை அவன் முகத்தில் கொட்டவும்தான் கண்விழித்தான். விழித்த வேகத்தில், ''அறிவு இருக்குதா புள்ள. என்னா பழக்கம் இது?'' என்று சீறிவிழுந்தான். அப்போதுதான் அவள் முகத்தில் சில இடங்களில் நகக்கீறல்களைப் பார்த்தான். கருத்தம்மா டெண்ட்டை ஒட்டி அவ்வளவு சாமான்களையும் மூட்டை கட்டி வைத்திருப்பதையும் பார்த்தான்.

''புள்ள.... என்னாச்சு?''

''...............''

''உன்னத்தான் புள்ள... வாய் திறந்து பேசு...''

''நான் என்னயே தொலைக்க இருந்தேன்யா...''

அவள் ராத்திரி நடந்ததைக் கூறி முடித்தாள். அவனும் அதைக் கேட்டு சற்று மிரளத்தான் செய்தான்.

''சரி... நான் இப்பவே வைஸ்பிரசிடெண்ட் ஐயாகிட்ட சொல்றேன். நீ கவலைப்படாதே... நாம அவரோட வீட்டுக்கே குடி போய்டலாம்...''

''பைத்தியக்கார கோட்டிக் கிறுக்கா... இது அந்தாள் வேலைதான். ராத்திரி வந்தது அந்த நாயேதான். கெடுக்க வந்தவன்கிட்டயே நாயம் கேக்கப்போறியா நீ?''

''அவர் எவ்வளவு நல்லவர் தெரியுமா?''

''அதான் உனக்கு தினம் தண்ணி வாங்கி ஊத்திவிட்டு அனுப்பறானா?''

''வாயை மூடு... அவரப்பத்தி தப்பால்லாம் பேசாதே...''

பேச்சோடு போய் தரையில் கிடந்த சைக்கிளைத் தூக்கி நிறுத்தியவன் அதில் ஏறிப் போயே போய்விட்டான்.

மதிய நேரம்... காலையில் போன காளிமுத்து வரவே யில்லை. கவலையோடு கருத்தம்மா ஊருக்குள் நுழைந்தாள். தெருத்தெருவாக அலைந்தவள் கோயில் அருகே வந்த போது குபீர் என்றது.

காளிமுத்து கோயில் மதில் சுவரை ஒட்டி தலைகுப்புற விழுந்து கிடந்தான். அப்படியொரு போதை! யாரோ அவள் நெஞ்சில் மண்ணைக் குழைத்து மிதிப்பது போல் இருந்தது. கோயிலுக்கு வெளியே பூக்கடை போட்டிருந்த கிழவிக்கும் காளிமுத்துவின் மனைவிதான் கருத்தம்மா என்பது தெரிந்திருந்தது.

''வா தாயி... பாத்தியா உன் புருஷன் லட்சணத்தை! கள்ளச்சாராயம் குடிச்சாகூட பரவால்ல... உன் புருஷன் குடிச்சிருக்கிறது கலக்கமுட்டிங்கற மோசமான சரக்கு. இதை ஒருத்தன் குடிக்க ஆரம்பிச்சட்டா தா... உள்ற இருக்காளே மாரியாத்தா... இவளாலகூட காப்பாத்த முடியாது...'' -கிழவி சொன்னது அவளை நெருப்புக் குழிக்குள்ளேயே பிடித்துத் தள்ளிவிட்டது போல தெரிந்தது.

''சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே... அந்த அருணாசலம் பயதான் கலக்கமுட்டிய தயார் பண்ணி விக்கிறவன். கொள்ள குடும்பங்களை இதாலேயே அழிச்சிருக்கான். உன் புருஷன் கண்ணு முழிச்சி பாக்கறதுக்குள்ள அவனை எப்படியாவது தூக்கிட்டு இந்த ஊரைவிட்டே ஓடிப் போயிடு. இல்லாட்டி நீ இவனை மீட்கவே முடியாது!'' - கிழவி ஒருவித குமுறலோடு முணுமுணுத்தாள்.

கருத்தம்மா ஆலமரத்தடியை நெருங்கியபோது அவளுக்கு ஒரு பேரதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது. குட்டி நாய்களுக்கு நடுவே தாய்நாய் செத்துக் கிடந்தது. அருணாசலம் தான் விஷம் கலந்த பிரியாணியை அதற்குப் போட்டு அதன் கதையை முடித்திருந்தான். குட்டி நாய்கள் தாயின் உடலைச் சுற்றிச் சுற்றி வந்து கூச்சல் இடுவதில் அவள் இதயமே அவிந்து

போயிற்து. பேசாமல் போய் டெண்ட் அருகே உட்கார்ந்து கொண்டாள்.

நள்ளிரவில் திருடனைப் போல அருணாசலம் திரும்ப வந்தான். இருளில் டார்ச் லைட்டை அடித்து அவன் அவளைத் தேடினான். கட்டிலில் அவள் படுத்திருப்பதைப் பார்த்து மெல்ல நெருங்கினான். பூனைப் போல நெருங்கியவன் குனிந்தபோது இடுப்புக்கு கீழே முன்புறமாக விசுக்கென்று ஒரு உதை. ஒரே உதைதான்... ஆனால், ஆவேசமான உதை!

கத்தக்கூட திராணியற்று அப்படியே சுருண்டு விழுந்துவிட்டான!

**வி**டிந்தது!

அருணாசலத்தைப் சுற்றி ஒரே கூட்டம். உயிர் இருக்கிற மாதிரிதான் தெரிந்தது. ஆனால், மரத்தடியில்தான் கருத்தம்மாவோ அவளது பொருட்களோ எதுவுமில்லை.

“இங்க இருந்த பொண்ணு ஒரு வண்டில அம்புட்டையும் அள்ளிப் போட்டுக்கிட்டு போய்க்கிட்டிருந்துச்சு... அவ புருஷனும் வண்டிக்குள்ள கிடந்தான். வெவரமான பொண்ணுதான்... நம்மாளு பாடுதான் போவப்போவ தெரியும் போல...” என்றார் ஒரு ஊர்க்காரர் அப்படியே சுற்றி ஒரு பார்வை பார்த்தார்.

அந்த நாய்க்குட்டிகளையும் காணவில்லை. அங்கே தாய் நாயின் சமாதி இருந்தது. அதன் முன்னே ஒரு அகல்விளக்கு எரிந்து முடிந்திருந்தது.

# 9. காத்திருந்த காதல்

சினிமாவில் நடப்பது போலவே ஒரு சம்பவம் தன் வாழ்விலும் நடந்துவிட்டது போலத் தோன்றியது சுந்தரத்துக்கு.... மஞ்சுளாவை அவர் பக்கத்து வீட்டு மாடியில் பார்த்தபோது ஒரு கணம் அதிர்ந்துபோனது அவர் இதயம். கிட்டத்தட்ட அவளிடமும் அதே ரீ ஆக்ஷன்.

யதார்த்தமாக அப்பாவைக் கூப்பிடுவதற்காக மாடிப் பக்கம் வந்த சுந்தரத்தின் ஒரே மகள் வர்ஷினிகூட சுந்தரத்தையும் மஞ்சுளாவையும் பார்த்துக் கொஞ்சம் போலத் திணறித்தான் போனாள்.

வர்ஷினியைப் பார்க்கவும் மஞ்சுளாவிடம் ஒரு மீட்சி. தன் நரைத்த தலைமுடியைக் கோதிக் கோதி விட்டபடியே அந்த மாடியைவிட்டு நீங்கி மறைந்து போனாள்.

''அப்பா...''- வர்ஷினியின் அழைப்பொலி சுந்தரத்தை மீட்டுத் திருப்பியது.

''என்னப்பா... யார் அவங்க?''

''யாரு...?''

''என்ன யாரு... பக்கத்து வீட்டு மாடில...'' அவள் முடிக்கவில்லை...

''பழைய பழக்கம்மா...விடு!'' அவர் பதிலோடு மாடியில் இருந்து இறங்கி நடக்கத் தொடங்கினார். அவள் கேள்விகளுடன் தொடர்ந்தாள்.

"பழைய பழக்கம்னா..."

"அந்தக் காலத்துல காலேஜ்லகூட படிச்சவங்கம்மா..."

"ஓ... கேர்ள் ஃப்ரெண்டா?"

"ம்..."

"அப்ப நல்லா கலகலன்னு பேசவேண்டியதுதானே? கடற்கரை சிலைங்க மாதிரி ரெண்டு பேரும் நின்னா என்ன அர்த்தம்?"

-வர்ஷினியின் கேள்விக்கு அவரால் உடனே ஒரு பதிலைக் கூற முடியவில்லை. ஹேங்கரில் தொங்கும் சட்டையைத் தேடி எடுத்து மாட்டிக்கொண்டு பீரோவைத் திறந்து அதனுள் இருந்து ஒரு பழைய டைரியையும் எடுத்துக்கொண்டு வாக்கிங் ஸ்டிக் சகிதம் வெளியே கிளம்பிவிட்டார்.

மெல்ல வாசல் பக்கமாக சென்று ஒரு யூகமாக பக்கத்து வீட்டுப் பக்கம் பார்ப்பது தெரியாமல் பார்த்தாள் வர்ஷினி.

மஞ்சுளா மறைவாக நின்று சுந்தரம் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களை நீர் மறைத்திருப்பதையும் பார்க்க முடிந்தது.

இரவு மணி பத்தாகிவிட்டது! சுந்தரம் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்திருப்பதைக் கவனித்துக்கொண்டே தான் இருந்தாள் வர்ஷினி. அவருடைய தலைமாட்டில் தலையணைக்குக் கீழ் அந்த டைரி.

அதற்குள் தனக்கான விடை இருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது. அது தன் கைக்கு வரவேண்டும் என்றால் அப்பா தூங்க வேண்டியது அவசியம்.

அவள் கணவன் ஒரு மெடிக்கல் ரெப்ரசென்டேடிவ் ஆக இருப்பவன். வீடு முழுக்க ஒரே மாத்திரைக் கூட்டம்தான். அதில் தூக்கத்துக்கு உதவும் ஒரு மாத்திரையைத் தேடி

எடுத்துப் பாலில் கலந்து, அதை அப்பாவின் முன்னால் நீட்டினாள்.

''அப்பா... இந்தப் பாலையாவது குடியுங்க.. இன்னிக்கு நீங்க சரியாகவே சாப்பிடலை'' என்றாள்.

அவரால் மறுக்க முடியவில்லை. குடித்த பதினைந்தாவது நிமிடத்தில் வேதாள குகையைப் போல வாய் பிளக்க, தூக்கமும் அவரை தூக்கிக் கொண்டு போனது.

அந்த டைரி வர்ஷினியின் கைகளில்! அதனுள் பழுப் பேறிய ஒரு கவருக்குள் கடிதம் ஒன்று! இதயம் படபடக்க அதைப் பிரித்தாள்.

'என்னுயிர் சுந்தரம்!

நான் உங்களைப் பிரியும் நேரம் நெருங்கிவிட்டது. நமது காதலுக்குச் சாதி மட்டும்தான் விரோதி என்று நினைத்துக் கொண்டிருந்தேன். உங்கள் அப்பா, என் அப்பாவிடம் வாங்கிய கடனும் இப்போது சேர்ந்துகொண்டு விட்டது. வாங்கிய கடனை அவர் வாங்கவே இல்லை என்று சொன்னதால் என் அப்பாவுக்கு உங்கள் குடும்பம் மேல் துளிக் கூட மதிப்பே இல்லை.

'அது திருட்டுக் குடும்பம்மா... நாணயமில்லாத குடும்பம். இதற்குமேல் என் பேச்சைக் கேட்காமல் நீ அவனுக்குக் கழுத்தை நீட்டினால், நானும் உன் தாயும் தண்டவாளத்தில் தலையைக் கொடுப்போம். இதை எல்லா அப்பன்களையும் போல மிரட்டலுக்காக நான் கூறவில்லை. இதுதான் என் சத்ய பிரமாணம்' என்று அப்பா உறுதிபட என்னிடம் கூறியதோடு எழுந்தும் போய்விட்டார். இங்கே தொடர்ந்து இருந்தால் நான் மனம் மாற சிரமப்படக்கூடும் என்று ஊரை விட்டே போகவும் தீர்மானித்து விட்டார். எந்த ஊர்? எந்தத் தெரு? எதுவும் தெரியாது. ஆனால், ஒன்று மட்டும் தெரியும். நான் உங்களைப் பிரியும் நேரம் வந்துவிட்டது. நமது நான்கு வருட காதலுக்கு இப்படியும் ஒரு முடிவு.

சாதி மட்டும் காரணமென்றால் ஓடிப்போய் அதை முறியடிப்பதை, முற்போக்கானவர்களாவது ஏற்பார்கள். நாணயக் குறைபாட்டிற்கு உங்களால்தான் என்ன செய்து விட முடியும்; என்னால்தான் என்ன செய்துவிடமுடியும்?

உங்களை மனதில் சுமந்துகொண்டு நான் என்னாவேன் என்று எனக்கே தெரியாது. எனக்காகக் காத்திருக்காமல் நீங்களாவது வாழப்பாருங்கள். இறுதி முத்தங்களுடன் உங்கள் பாதம் தொட்டுப் பிரியும் உங்கள் மஞ்சுளா!'

கடிதத்தைப் படித்த வர்ஷினிக்கும் கண்களிரண்டும் கலங்கிவிட்டன. சற்றுத் தள்ளி சுவரில் அவளது தாத்தா மருதாசலம், புகைப்படத்தில் சிரித்துக் கொண்டிருந்தார். சற்றுப் பக்கத்திலேயே அவள் அம்மா புஷ்பாவும் புகைப்படமாய்... இரண்டு படங்களிலும் தொங்கிக் கொண்டிருந்த பிளாஸ்டிக் பூமாலை அவர்கள் நினைவுகளில் மட்டும் வாழ்பவர்கள் என்றது.

அவள் அம்மா அடிக்கடி சொல்லியிருக்கிறாள். "உன் தாத்தா ஒரு பணப்பேய்... உங்கப்பாவை நான் கல்யாணம் பண்ணிக்க எங்கப்பாகிட்ட லட்சக்கணக்குல வரதட்சணை கேட்டவர்" என்று... மௌனமாக டைரியை சுந்தரத்தின் தலையணை அடியிலேயே திரும்பவும் வைத்தாள்.

அந்த நேரம் பார்த்துத் தொலைபேசியின் அலறல். போய்க் காதைக் கொடுத்தாள். மறுபுறம் அவள் கணவன். "என்ன வர்ஷி... இன்னிக்கு போனே பண்ணலை..."

"மனசு சரியில்லீங்க. நீங்க எப்படி இருக்கீங்க?"

"ம்... இருக்கேன்... ப்ரியாதான் அம்மா எப்ப வருவாங்கன்னு உசுரை வாங்கறா..."

"இன்னும் ஒரு நாலு நாள் சமாளிங்க..."

"ஐயோ... என்னாச்சு... இப்பவே ஒரு வாரம் ஓடிப் போச்சு தெரியும்ல..."

''அதுக்கென்ன பண்ண... அப்பாவுக்கு இப்பதான் உடம்பு கொஞ்சம் தேறியிருக்கு. நல்லவேளை மஞ்சக் காமாலை இல்ல. சாதாரண வைரஸ் ஃபீவர்தான்.''

''ஆமா மனசே சரியில்லேன்னியே... என்ன விஷயம் ஏதாவது விவகாரமா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை...''

''மறைக்காதே வர்ஷி...''

''ஒண்ணுமில்லங்க.... நான் நேர்ல சொல்றேனே.''

''இதோ பார்.... நான் இப்பவும் உன் அப்பாவை நம்ம கூட வெச்சுக்கத் தயார். அவர்தான் பொண்ணு வீட்ல மாமனார் இருக்கறதான்னு ஒரு காம்ப்ளெக்ஸ்ல இருக்கார். அவர் இன்னும் அந்தக் காலத்துலேயே இருக்கார். இப்பல்லாம் எல்லாமே மாறிப்போச்சு. தனியா கிடந்து கஷ்டப்பட வேண்டாம்னு உன் அப்பா கிட்ட சொல்லு.''

''எஸ்.டீ.டி. பேசிக்கிட்டு இருக்கீங்க. ஞாபகம் இருக்கட்டும்... நான் நீங்க சொன்னதை மட்டுமில்ல. அதுக்கு மேலேயும் சில விஷயங்கள் அவர்கிட்டே சொல்லப் போறேன். பாவம் அப்பா. அவர் எல்லா காலத்துலயும் பிறர் விருப்பங்களுக்காகவே வாழ்ந்திருக்கார். நம்ம காதலுக்குப் பச்சைக் கொடி காட்டினதையும் சேர்த்துதான் சொல்றேன்.. விவரமா உங்களுக்கு நான் அப்புறமா சொல்றேன். இப்ப போய்ப் படுங்க...''

-ரிசீவரை வைத்துவிட்டு ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தாள் வர்ஷினி!

**ம**றுநாள்!

வாசலிலேயே காத்திருந்து, கடைத்தெருவுக்குப் புறப்பட்ட மஞ்சுளாவைப் பின்தொடர்ந்து சென்று 'ஹலோ' சொல்லி, ஒரு தொடர்பையும் உருவாக்கிக் கொண்டு

கோயில் ஒன்றின் மரத்தடிக்கே அவளை அழைத்துச் சென்று, ஒருவிதத் தீவிரத்துடன் பேச ஆரம்பித்தாள் வர்ஷினி.

''உங்கள என்ன உறவுல அழைக்கறதுன்னே தெரியல. ஆனா நீங்கதான் மஞ்சுளா... என் அப்பாவை ஒரு காலத்துல ஆத்மார்த்தமா காதலிச்சவங்கங்கறது எனக்கு நல்லா தெரியும். நீங்க இறுதியா எழுதின கடிதத்தை அப்பாவுக்குத் தெரியாமல் அவரோட டைரில இருந்து எடுத்துப் படிச்சுப் பார்த்தேன்.

முதல்ல ரொம்ப ஷாக்காதான் இருந்தது. ஏன்னா அப்பாவுக்குள்ள இப்படி ஒரு இழப்பு இருந்ததை அவர் காட்டிக்கிட்டதே இல்லை. ஆனா, அப்பா இப்ப ரொம்ப கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்கார். என் அம்மா நான் காலேஜ் படிக்கும்போதே இறந்துட்டாங்க. அப்ப இருந்தே அப்பா வோட கஷ்டம் அதிகமாயிடுச்சு. ஆனாலும் அப்பா வெளிக் காட்டிக்காம சமாளிச்சுகிட்டே இருக்கார்.

நான் கல்யாணம் ஆகி மும்பைல இருக்கேன். என்கூட வந்துருங்கப்பான்னா வரமாட்டேங்கறாரு. தனியாவே சமைச்சு சாப்பிட்டுக்கிட்டு...''

-வர்ஷினி பேசப்பேச, மஞ்சுளாவின் கண்களில் நீர் திரண்டு உருள ஆரம்பித்தது.

''ஸாரிங்க... உங்கள நான் ரொம்ப டிஸ்டர்ப் பண்ணிட்டேன். எனக்கு இப்ப என்ன தெரியணுமுன்னா...''

-வர்ஷினி முடிக்கும் முன் மஞ்சுளாவே கைகளை உயர்த்தி அவளுக்கான பதிலை கூறத் தயாரானாள்.

''சத்யமா உங்கப்பா இந்த ஊர்ல அந்த வீட்ல இருக்கிறது எனக்குத் தெரியாது. நான் தெரிஞ்சு வரலம்மா...''

''ஐயோ அதுக்கில்ல... உங்களைப் பார்த்தா...''

''பார்த்தா...''

“இல்ல.... உங்க கழுத்துல தாலிச்சரடு இல்ல... ஒரு வேளை உங்க கணவர்...?”

“கணவரா...?” கண்ணீருக்கு இடையில் மஞ்சுளா சற்றுச் சிரித்தும் விட்டாள்.

“அப்படின்னா...?”

“நான் கல்யாணமே செய்துக்கலம்மா. என்னால முடியல. எப்படியோ இதுவரை தனியாவே தாக்குப் பிடிச்சுட்டேன். ஒரு லேடீஸ் ஹாஸ்டலோட வார்டனா இருக்கேன். எங்க ஹாஸ்டல்ல தங்கி இருக்கிற பொண்ணோட கல்யாணத்துக்காக இந்த ஊருக்கு வந்தேன். அந்தப் பெண்ணோட வீடுதான் அது.”

-மஞ்சுளா சொல்லி முடித்த நொடி வர்ஷினிக்கு கண்களிரண்டும் பனித்து நின்றன. சட்டென்று அவள் கைகளை இழுத்துப் பிடித்தவள் “அம்மா, நான் ரொம்ப கொடுத்து வெச்சவ...” என்று அந்தக் கைகளிரண் டையும் கண்களில் ஒத்திக் கொண்டாள்.

மஞ்சுளாவுக்கு மின்னல் வெட்டியது போல இருந்தது.

“நான் அம்மாவா... என்னம்மா சொல்றே?” என்றாள் பதைப்புடன்.

“ப்ளீஸ்... மாட்டேன்னு சொல்லிடாதீங்க. அப்பாவை நான் ஒரு துரதிருஷ்டசாலியாதான் பார்த்திருக்கேன். உங்களைப் பார்க்கவும் அவர் கணக்குல கொஞ்சம் அதிர்ஷ்டம் பாக்கி இருக்கிற மாதிரியும் தெரியுது. ப்ளீஸ்... மாட்டேன்னு மட்டும் சொல்லிடாதீங்க...” என்று வர்ஷினி உதடுகள் துடிக்கக் கெஞ்சினாள்.

மஞ்சுளாவால் பேச முடியவில்லை. கரகரவென்று கண்ணீர் வழிந்தது... வழிந்து கொண்டே இருந்தது.

காதலுக்கு வயதேது?

# 10. நாகரீகக் காதல்

கதைகளிலும், கவிதைகளிலும் அடிக்கடி அடிபடும் 'தேவதை' என்ற வார்த்தைக்கு உண்மையில் சரியான அர்த்தம் தெரிந்தவர்கள் யாருமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், சுரேனைப் பொறுத்தவரை இந்துமதி என்கிற அந்த வரவேற்புப் பெண், ஒரு தேவதை போலத்தான் தோன்றினாள்!

'ஷாம்பூ' போட்ட 'சிலீர்' கூந்தல். அதை பின்னவும் கூடாது! இதுதான், இன்றைய நாகரீக தேவதைகளின் லட்சணங்கள்!

இந்துமதியும் இதற்கு விதிவிலக்கில்லை!

பொதுவில் கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளில் கல்லூரிக்கும், கல்லூரி முடிந்து வேலைக்குப் போகும் பெண்களிடம் புஷ்டியான உடம்பு இருப்பதே இல்லை.

இந்தக் கால பெண்கள் பதினொரு வயதிலே வயதுக்கு வந்துவிடுவது பற்றியும், அவர்கள் ஊட்டச்சத்துள்ள உணவுகளை உண்ணாமல், மேற்கத்திய தாக்கத்துக்கு ஆளாகி ஒல்லிக்குச்சி உடம்புக்கு மாறிக்கொண்டிருக்கிறார்கள். இது ஆபத்தில் முடியும் என்று மருத்துவர் ஒருவர் சொன்னதாக ஞாபகம்.

நல்லவேளை- இந்துமதி அந்த ரகமில்லை. நன்கு பூரித்த உடற்கட்டு. ஆனால், இரண்டு கைகளுக்குள் அடங்கிவிடும் இடை, எவ்வளவு தேவையோ அவ்வளவு உயரம் என்று

கச்சிதமாக இருந்தாள். ஒருவேளை இதனால்தான் சுரேனும் அவளை தேவதையாக நினைத்துவிட்டானோ என்னவோ?

அவளுக்கு ஒரு நட்சத்திர ஓட்டலில் வரவேற்பாளர் வேலை. நுனிநாக்கில் அவளால் நன்றாகவே ஆங்கிலம் பேச முடிந்தது.

அப்புறம், செயற்கையாக சிரிப்பது... வாரப்படாத கூந்தலை ஒதுக்கிவிட்டுக் கொள்வது, குனியும்போதும்... நிமிரும்போதும் சேலை முந்தானையைப் பெரிதாக இழுத்துவிட்டுக்கொள்ளாதது என்று வாடிக்கையாளர்கள் முன்னால ஒரு கவர்ந்திழுக்கும் சக்திவாய்ந்த 'டிரான்ஸ் ஃபார்மர்' போலத்தான் தெரிந்தாள்.

அவளுக்காகவே அவள் பணியாற்றும் ஓட்டலுக்குப் போவது என்பது சுரேனுக்கும் வாடிக்கையாகிவிட்டது. ஒரு நாள் பைக், மறுநாள் கார், இன்னொரு நாள் சொகுசு கார் என்று விதவிதமாக வருகிறான்.

இந்துமதி முன்னே வழியோ வழி என்று வழிகிறான். அவனது வழிசலுக்கான காரணம் அவளுக்கும் தெரிகிறது. அவளுக்கு தெரிகிறதோ இல்லையோ.. அவளோடு ஒரு தூக்குப் பல்லழகி இருக்கிறாள். பெயர் ரீட்டாவோ, பாட்டாவோ?

அவள்தான் அவன் வரும்போதெல்லாம் இந்துவுக்கு 'சைகை' செய்வாள்.

இதோ - இன்றும் வந்துவிட்டான்!

"இந்து! உன் ஆள் வந்து விட்டான்டி...''

"வாயை மூடுடி. என்னை 'சைட்' அடிக்கிறவனெல்லாம் என் ஆளுன்னா நான் ஒரு பொம்பளை தசரதனாகி அவ்வளவு பேரையும் கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தான்.''

"பண்ணிக்கடி... நீதான் ஆம்பளைக்கு ஒரு சட்டமான்னு கேட்கிற ரகமாச்சே?"

"வாயை மூடு... எனக்கு தேவை சுவிட்சர்லாந்துல பணம் போட்டு வைக்கிற அளவுக்கு சம்பாத்தியம் உள்ளவன். அப்படி ஒருத்தன் இருந்தா சொல். நானே போய் 'ஹலோ... டார்லிங்'னு ஆரம்பிக்கிறேன்."

"அதுசரி... ஆறாயிரம் சம்பளம் வாங்கிட்டு உனக்கு இப்படியொரு ஆசை தேவையாக்கும்?"

"ஆசை இல்லை.... கனவு! நம்ம ஜனாதிபதி கனவு காணச் சொல்லி இருக்கிறார். தெரிஞ்சிக்க."

"இப்படி உன்னை மாதிரி சிலர் தப்பா புரிஞ்சுக்கு வாங்கன்னு தெரிஞ்சிருந்தா அவர் அப்படிச் சொல்லி இருக்கவே மாட்டாருடி..."

அவர்கள் இருவரும் மாறி மாறிப் பேசிக்கொள்ள... அவளது மேசை முன் வந்து நின்றான், அவன். அவளைப் பார்த்து எப்பொழுதும் போல் சிரித்தான்.

அவளோ முறைத்தாள்.

"முறைக்காதீங்க மேடம். நீங்க பேசிக்கிட்டிருந்தது என் காதுல விழுந்தது. நீங்க ஆசைப்படுறதுல ஒண்ணும் தப்பு இல்லை" என்றான்.

அவளுக்கு குப்பென்று வியர்த்துவிட்டது.

"ஏன் வியர்க்குது? நான் உங்களை கொஞ்சம்கூட தப்பா நினைக்கலை. ஆனா, என் மனசுக்குள்ள உங்களை குடி வைச் சுட்டேன். இனி வேறு ஒரு பெண்ணை என்னால் நினைச்சு கூடப் பார்க்க முடியாது. இப்படி நான் சொல்றதுனால மட்டுமே நீங்க என்னை 'லவ்' பண்ண வேண்டாம்."

"...."

"நான் ஒரு கம்ப்யூட்டர் இன்ஜினீயர். மாசம் அறுபதாயிரம் சம்பளம். உங்களைப் போல பத்து மடங்கு. ஆனா, நான் வேலைக்குப் போக வேண்டிய அவசியமே இல்லை. ஏன்னா, என் அப்பா ஒரு தொழிலதிபர். கோடிக்கணக்கில் சொத்து இருக்கு.

ஒரு ஆம்பளையா இருந்துகிட்டு, உக்காந்து சாப்பிட்டு சொத்தை அழிக்கிறதுல எனக்கு உடன்பாடு இல்லை. அதான் வேலைக்குப் போறேன். நிச்சயம் சுவிஸ் பாங்கியில் பணம் போடுற அளவுக்கு எதிர்காலத்துல சம்பாதிப்பேன். இந்தாங்க, என் விசிட்டிங் கார்டு. என் காதல் மீது உங்களுக்கு ஈர்ப்பு இருந்தா ஒரே ஒரு போன் மட்டும் பண்ணுங்க. நான் எங்கே இருந்தாலும் என் தேவதைக்காக ஓடி வந்திடுவேன்."

சொல்லவேண்டியதை தெளிவாகவும்... திடமாகவும் சொல்லிவிட்டு, முகவரி அட்டையை அவளது கையில் திணித்துவிட்டு, அவன் போய் விட்டான்.

அவளுக்குள்தான் எத்தனை மாற்றம்? சில்லென்ற ஒரு பனிமழையில் நனைந்து முடித்தது போல் இருந்தது.

ரீட்டாவும் கேட்டுக்கொண்டுதான் இருந்தாள். "என்னடி யோசிக்கிறே? என் வரையில் நீ ஒரு அதிருஷ்டக்காரிடி" என்றாள்.

அதை ஆமோதிப்பது போல இந்துமதியும் அந்த முகவரி அட்டையை தோள் 'பேக்'கில் ஆர்வமாக வைத்துக் கொண்டாள்.

கடற்கரை - கடல் அலைகளிடம் ஒரே ஆவேசத்தனம். கரையோர நண்டுகள் வெளியே வருவதும், மணலுக்குள் பதுங்குவதுமாய் விளையாடிக்கொண்டிருக்க -

அங்கே சுரேன்... அவன் மடிமேல் இந்துமதி!

''உண்மையிலே நான் ரொம்ப கொடுத்து வெச்சவங்க.'' அவள் சொல்ல, அவனோ ''நான்தான்'' என்று சொல்லி, அவளது உதட்டை ஈரமாக்கினான்.

இருபது வயது வாலிபத்துக்கு என்று சில இரகசிய விளையாட்டுகள் உள்ளன. ஆளாளுக்கு தங்கள் ரசனைக்கு தகுந்த மாதிரி விளையாடுவார்கள்.

சுரேனும் விளையாடினான். அவளும் ''இந்த குறும்பு தானே வேண்டாங்கிறது'' என்று சொல்லிச் சொல்லியே மெல்ல மெல்ல இடம் கொடுத்தாள்.

ஒரு மாதம் ஓடிவிட்டது!

இந்துமதியிடம் ரீட்டா கேட்டாள்: ''இந்து, உங்க காதல் எந்த அளவுல இருக்குடி?''

''அதுக்கென்ன... நாளொரு மேனி... பொழுதொரு வண்ணமாக வெளுத்துக்கட்டிக்கிட்டு இருக்கோம்...''

''பார்த்துடி.... வாந்தி எடுத்திடப் போறே?''

''சேச்சே... சுரேன் ரொம்ப கண்ணியமான ஆளுடி... நான் 'ரெடி'ன்னாலும் முதலிரவுதான் அதெல்லாம்னு சொல்ற ஆள்...''

''உன்னைப் பார்த்த எனக்கு இன்னும் பொறாமையா இருக்குடி...''

''அம்மா தாயே... கண்ணு வெச்சுடாதே. எல்லாம் நல்லபடியா முடியணும்னு நானும் துடிச்சிட்டு இருக்கேன். இதுல, வீட்ல மாப்பிள்ளை பார்த்து - அந்த மாப்பிள்ளை வேற நாளை என்னைப் பார்க்க வரப் போறான்.''

''அய்யய்யோ... நீ என்னடி பண்ணப்போறே?''

''ஏன்டி பதைக்கிறே எனக்கே எந்த பதற்றமும் இல்லா டப்பா ''

"அதான் எப்படி?"

"எவ்வளவு சினிமா பார்க்கிற... வர்றவன்கிட்ட தனியா பேசும்போது, என் காதலை சொல்லி... 'நீயே என்னை பிடிக்கலைன்னு சொல்லிடு' என்பேன். இந்த காலத்து பசங்களையும் சும்மா சொல்லக்கூடாது. காதல்னா எவ்வளவு வேணும்னாலும் உதவி பண்ண தயாரா இருக்காங்க தெரியுமா?"

"இருந்தாலும் உனக்கு இந்த துணிச்சல் ஆகாதுடி..."

"சரி, சரி... எனக்கு நேரமாச்சு. சுரேனை நான் 'லைட் அவுஸ்'கிட்ட வரச்சொல்லி இருக்கேன் கிளம்புறேன்."

"சீக்கிரமா தாலி கட்டச் சொல்லுடி."

"சுரேன் எப்பவுமே தயாருடி... நான்தான் இழுத்துக்கிட்டு இருக்கேன். சரி, வர்றேன்."

அவள் அந்த வரவேற்பு அறையிலிருந்து தனது 'பேக்'குடன் நீங்கத் தொடங்கினாள்.

கலங்கரைவிளக்கம் அருகே ஒரு இடத்தில் ஏராளமாய் கூட்டம்.

"ஏதோ விபத்தாம்!'

'ஒரு பத்து நிமிடம்கூட ஆகியிருக்காது' என்கிறார்கள், அந்த விபத்தைப் பார்த்தவர்கள்.

இந்துமதியும் எட்டிப் பார்த்தாள்.

'பகீர்' என்றது!

சுரேன்தான் ஏதோ வாகனத்தில் அடிபட்டு கூழாகக் கிடந்தான்! அருகில் 'சப்பளித்த' மோட்டார் சைக்கிள்.

அவள் மனது ஒரு விநாடி, 'அய்யோ சுரேன்!' என்றது.

போலீஸார் வந்துவிட்டனர். கூட்டத்தை விலக்கினார்கள். தங்களது சம்பிரதாயங்களைத் தொடங்கினார்கள்.

இந்துவும் விலகினாள் - சுரேனை கண்கலங்க பார்த்துக் கொண்டே!

அதைக் கவனித்த போலீஸ்காரர் ஒருவர் அவளிடம் கேட்டார்.

"ஏம்மா... செத்தது யாருன்னு உனக்குத் தெரியுமா?"

அந்தக் கேள்வி அவளை ஒரு சில விநாடிகள் திணறச் செய்தது. சுதாரித்துக் கொண்டு, "சேச்சே... யாருன்னே தெரியாது" என்றாள். அதையே திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டு அங்கிருந்து வேகமாக நழுவினாள்!

ஒரு நாள் ரீட்டாவிடம் கல்யாணப் பத்திரிகை தந்தாள் இந்து. அவள் பிரித்து பார்த்து அதிர்ந்தாள்.

"ஏய் இந்து... என்ன இது? மாப்பிள்ளை பேர் பாஸ்கர்ன்னு இருக்கு... உன் ஆளு பேர் சுரேன்தானேடி?"

"ஆமாடி... ஆனா, வீட்ல அப்பா- அம்மா எகிறிட்டாங்க. நான் இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்கலைன்னா செத்துடுவேன்னு மிரட்டினாங்க. எனக்கும் வேற வழி தெரியலைடி..."

"அப்ப சுரேன்...?"

"நாகரீகமா ஒதுங்கிட்டாருடி... தயவுசெய்து இனி நீ அந்த பேச்சை எடுக்காதே... என்ன...?"

- சொன்ன இந்துவைப் புரியாமல் பார்த்தாள், தோழி.

# 11. மோதிரம்

பிரவீனைப் பார்த்தபோது முகம் வீங்கிப் போகுமளவு அழுதிருந்தான். களையான முகம் கொண்டவன்- அவனது அடர்வான மீசைக்கே பல பெண்கள் காதலித்தனர். தலை முடியும் நல்ல சுருட்டை.... அவன் சிரிக்கும்போது கன்னங் களிலும் குழி விழும்! அப்படிப்பட்டவன்தான் அழுது முகம் வீங்கியிருந்தான். காரணம் வேறு யாருமல்ல... அவன் ஆசை மனைவி சொர்ணாதான்!

ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டதில் அவள் கிட்டத்தட்ட பதினாறு துண்டுகள் ஆகியிருந்தாள். அந்தத் துண்டுகளை இணைத்துத் தைத்து 'இதுதான் உங்கள் ஆசை மனைவி சொர்ணா' என்று சொன்னால் யாருக்குத் தான் அழுகை வராது?

"ஐயோ சொர்ணா... உனக்குப் போய் இப்படியொரு முடிவா? ஐயோ சொர்ணா... சொர்ணா.... "

-அவன் குரல் உடைந்து போனது. கத்தக்கூட முடியாதபடி மயக்கம் வந்து சரிந்து விழுந்தான்!

மின்சாரச் சுடுகாடு!

சொர்ணாவின் மார்பு பாகம் மேல் - எரிகிற கற்பூர கொள்ளி, அரை மயக்க நிலையில் பிரவீனால் வைக்கப்பட - உடம்பு உள்ளே தள்ளப்பட்டது. மின் நெருப்பு மிக ஆவேசமாக சொர்ணாவின் உடம்பை சாம்பலாக்கத் தயாரானது. ஒரு மணி நேர இடைவெளியில் சொர்ணாவை

ஒரு சொம்புக்குள் அஸ்தியாக அடக்கி - அதன் வாயில் துணியைப் போட்டுக் கட்டி - பிரவீன் கையில் அந்தச் சொம்பை வைத்தனர். இளம்சூடு அவன் கைகளில் பரவி திரும்பவும் ''சொர்ணா!'' என்று கதற வைத்தது.

''போற வழியிலேயே சமுத்திரத்துல இறங்கி கரைச் சிடுவோம். இதோட வீட்டுக்குப் போறது உசிதமல்ல...'' என்றார் பிரவீனின் மாமா. அவனும் கண்ணீரோடு சம்மதித்தான்.

அந்தக் கூட்டத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ருத்ராவும் இருந்தார். சொர்ணாவின் துண்டு துண்டான உடம்பை பிரவீனுக்கு காட்டி, அவனை மயக்கத்தில் விழவைத்தவர்!

''ஸாரி மிஸ்டர் பிரவீன்... மனசை தேத்திக்கிட்டு காரியங்களைப் பாருங்க. உங்கள தவறா புரிஞ்சுகிட்டு உயிரைவிட்ட அவங்க ஆத்மா சாந்தியடைய அடுத்தடுத்து என்ன செய்யணுமோ செய்யுங்க...'' என்றார்.

அவர் கூறிய அந்த 'தவறா புரிஞ்சுகிட்டு' என்பதற்கு பின்னால் ஏகப்பட்ட விஷயங்கள் உள்ளன. அவைதான் சொர்ணாவுக்கும், பிரவீனுக்கும் இடையே முதலில் ஊடலை உருவாக்கின... பின் அதுவே கோபக் கொந்தளிப் பாக்கியது. அதன்பின் தினமும் வீட்டுக்குள் சூறாவளிதான்!

பிரவீன் ஒரு திரைப்பட காமிராமேன்!

ஒரு பெண் எந்தக் கோணத்தில் அழகு என்பதை அவனிடம்தான் கேட்கலாம். அதில் அவன் ஒரு பல்கலைக் கழகம்!

அவன் ஒளிப்பதிவு செய்யும் திரைப்படங்களில் நடிக்க நடிகைகள் மிகவும் விரும்பினர்.

சப்பை முகத்தைக்கூட அவன் 'கும்'மென்று மாற்றிக் காட்ட முடிந்ததால்... அவனது ஒவ்வொரு கைவண்ணமுமே வெகு அழகாக இருக்கும். இருமுறை தேசிய விருது வேறு

வாங்கி இருக்கிறான். சொர்ணாவும் தொடக்கத்தில் அவன் திறமையால்தான் கவரப்பட்டாள். அவனை துரத்தித் துரத்தி காதலித்து திருமணமும் செய்துகொண்டாள். அதுவும் எப்படி தெரியுமா? சொர்ணா என்ற தன் பெயர் பொறித்த 'பிளாட்டின' மோதிரத்தை அவன் விரல்களில் மாட்டி அழகு பார்த்தவளாக... இருவரது புகைப்படமும் கிட்டத்தட்ட எல்லா பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அதில் எல்லாம் அந்த மோதிரமும் இடம் பெற்றிருக்கும்.

இப்படியெல்லாம் காதலித்து திருமணம் செய்து என்ன பயன்? 'ஆசை அறுபது நாள் - மோகம் முப்பது நாள் என்பது அவர்கள் வரையில் நிரூபணமாகிவிட்டது. பிரவீன் நள்ளிரவில் பல பெண்களுடன் 'மேக்கப் டெஸ்ட்' என்று கூத்தடிப்பதாக தகவல்கள் அவளுக்கு வந்தபோது, அவளது மனம் கிடந்து துடிக்கும்.

ஒரு முறை அவள் தேடிக்கொண்டு அவன் இடத்துக்கே போனபோது கிட்டத்தட்ட பிறந்தமேனியோடு மனிஷா என்னும் மாடல் அழகி ஒருத்தியுடன் அவன் புகைப்படம் எடுத்தபடி இருந்தான். அரண்டுபோன சொர்ணா அவனையும், அவளையும் வாங்கிவிட்டாள். குறிப்பாக, அந்தப் பெண்ணை ஆடைகூட மாற்றவிடாமல் துரத்தவும் - அவள் 'டூ பீஸ்' உடையோடு ஓடிப்போய் காரில் ஏறி பறந்து போனதெல்லாம் பெரிதாய் அடிபட்ட செய்தி.

இதனால் பிரவீனும், சொர்ணாவுடன் யுத்தம் புரிய வேண்டி வந்தது.

"சொர்ணா... நான் என் தொழில்முறைப்படி நடக்கிறது பிடிக்கலேன்னா சொல்லிடு. உனக்கு விவாகரத்துகூட தர தயாரா இருக்கேன். தயவுசெய்து என் 'பிஸினஸ்' இடத்துக்கு வந்து மானத்தை வாங்காதே" என்று கூறியவன் - சொன்ன மாதிரியே விவாகரத்து நோட்டீஸும் அனுப்பிவிட்டான். அங்கேதான் சொர்ணா வரையில் புயலும், சுனாமியும் ஆரம்பமாயிற்று.

"இல்ல... நான் உன்னை விட்டுத்தர மாட்டேன். விவாகரத்து வாங்கிட்டுப் போய் இன்னொரு பெண்ணின் வாழ்க்கையோட விளையாடலாம்னு நினைக்கிறியா?" விடமாட்டேன்டா... விடவே மாட்டேன்" என்றவள் - அதை பத்திரிகையாளர்களையும் கூட்டி அறிவித்து விட்டாள்.

அப்புறம் என்ன?

அவர்கள் பிணக்கும், சண்டையும் உலகறிந்த ஒரு விஷயம் ஆகிவிட்டது.

பதிலுக்கு ஒரு நாள் பிரவீனும் பத்திரிகையாளர்களை கூட்டி - தான் இங்கே 'கேமரா' தொழிலையே விட்டுவிட்டு ஹாலிவுட்டுக்குப் போய் - இனி அங்கேயே இருந்துவிடப் போவதாக கூறிவிட்டான்.

அதன்பிறகுதான் சொர்ணா தற்கொலையும் நிகழ்ந்தது! எல்லாமே மிக அதிகபட்சமாய்- அவர்களுக்கு திருமணமாகி எட்டு மாதங்களில் நடந்து முடிந்துவிட்டது.

சொர்ணா அவனது பதிலடியைத் தாங்க முடியாமல் ரயில்முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டதை பலரால் இப்போதுகூட நம்ப முடியவில்லை!

பத்திரிகையாளர்களிடம் சொன்னது போலவே அமெரிக்கா புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தான் பிரவீன். எல்லா சாமான்களையும் அழகாக 'பேக்' செய்து - அதில் முகவரி எழுதி ஒட்டிக்கொண்டிருந்தவனை புன்னகை ...யாடு வந்து சந்தித்தான் அவனுடைய உயிர் நண்பனான ...ிரபாகர்.

என்ன பிரவீன்... 'பேக்' பண்ணிக்கிட்டிருக்கியா?"

"ஆமாம்ப்பா... நாளைக்கு மதியம் ஒரு மணிக்கு ...மானம்..."

"நல்லது... எப்படியோ உன் வாழ்க்கை லட்சியத்தை ...டையப் போறேன்னு சொல்..."

"ஆமாம் பிரபாகர். போதும்... நான் இந்த சென்னையில இருந்து குப்பை கூட்டினது. கல்யாணம்னு ஒண்ணு நடக்காதவரைதான் இந்த தொழில் ஜாலி. கல்யாண மாயிட்டா அது 'காளி'யாயிடுது. நாமளும் 'காலி'யாயிடு றோம்."

"பரவாயில்லையே ஜாலி, காளி, காலின்னு கவிதையா பேசறே. சொர்ணா இல்லேன்னு ஆன உடனேயே நீ பழைய பிரவீன் ஆயிட்டேன்னு நினைக்கிறேன்."

"ஆமாம் பிரபா... அவ ஒருபேய். பிசாசு..."

"மெல்லப் பேசப்பா. தற்கொலை செய்துகிட்ட சொர்ணா இப்ப அநேகமா பேயாவோ, பிசாசவோதான் இருக்கணும். ஏற்கெனவே உயிரோடு இருக்கும்போதே உன்னையும், என்னையும் பாடாப்படுத்துவா. இப்ப அவ காதுல விழுந்து உன்னையும், என்னையும் பிடிச்சு ஆட்டப்போறா..."

"நான் அவளை பேய்னும், பிசாசுன்னும் சொன்னது அவ நடத்தையை வெச்சு. நிஜத்துல எனக்கு பிசாசுமேல எல்லாம் நம்பிக்கை கிடையாதுங்கறது உனக்கு தெரியதாதா என்ன?"

"சரிப்பா. நானும் ஒரு ஜாலிக்குத்தான் சொன்னேன். நிஜமா சொல்றேன் பிரவீன்... நீ இப்ப 'ஹாலிவுட்' பக்கம் போறத நினைச்சா எனக்கு ரொம்பவே ஆச்சரியமா இருக்கு. சொர்ணா உன்னைப் போகவிடாம பாடாபடுத்தி எடுப் பாள்னுதான் நான் நினைச்சேன்."

-என்று பிரபாகர் பெருமூச்சு ஒன்றை விட்டான்.

'சூட்கேஸ்' ஒன்றை இழுத்து மூடியபடி, அதைக் கேட்ட பிரவீனும் மர்மமாக ஒரு சிரிப்பு சிரித்தான்.

ஆனால், அதற்கு அர்த்தம்தான் பிரபாகருக்கு புரியவில்லை!

விமானநிலையம்.

பிரவீனை வழியனுப்ப அநேகம் பேர் வந்திருந்தனர். மலர்க்கொத்து, 'கட்அவுட்' என்று ஒரே அமர்க்கள சூழல்!

விமான நிலையத்தில் அவனோடு சேர்ந்து பயணிக்க மாடல் அழகி மனிஷாவும் வந்திருந்தாள். வழியனுப்ப வந்திருக்கிறாள் என்றுதான் பலரும் நினைத்தனர். ஆனால், அவளும் அவனோடு செல்வது என்பது எல்லோருக்குமே பெரிய அதிர்ச்சி! சில பத்திரிகையாளர்கள் கேட்டபோது, அவள் வாயையே திறக்கவில்லை. பிரவீனிடம் கேட்டதற்கு, "அவங்க அவங்களோட வேலையா அமெரிக்கா போகக்கூடாதா?" என்று திருப்பிக் கேட்டு சமாளித்தான்!

**வி**மானத்தின் உள் பகுதி.

விமானம் பறவையாய் நடுவானில் மிதந்து கொண்டிருந்தது. பணிப்பெண்களும் உபசரிப்பை முடித்துக்கொண்டனர். விளக்கும் அணைக்கப்பட்டுவிட்டது. மனிஷா அவனது இடது தோள் மேல் மெல்ல சாய்ந்தாள். மல்லிகை வாசனைத் திரவிய மணம் அவன் மூக்கை நுகவியது. சன்னமான விமானக் குளிர். இருவருக்குள்ளும் ஏகாந்த மனநிலை... மெல்லிய குரலில் பேச்சு ஆரம்பமானது.

"மனிஷா... தப்பிச்சுட்டோம் பாத்தியா?"

"ம்... நீங்க ரொம்ப அதிருஷ்டசாலி பிரவீன்."

"நீயுந்தான்! உனக்காகத்தானே நான் சொர்ணாவையே கழுத்தை நெரிச்சுக் கொலை செய்தேன்..."

"நீங்க கழுத்தை நெரிச்சது... கை-காலை கட்டி உடம்பை கார்ல போட்டு தூக்கிட்டு காட்டுப் பக்கம் போனது, அங்க குழிதோண்டி உடம்பை புதைச்சதுன்னுதான் எல்லாம் எனக்கு தெரியுமே பிரவீன். எனக்காக நீங்க அவ்வளவு தூரம் செய்ததை இப்ப நினைச்சாலும் எனக்கு பிரமிப்பா இருக்கு..."

"அதுக்கு பேர்தான் காதல்... காதல் எதையும் செய்யும் மனிஷா."

"போகட்டும்... இந்த ரயில்ல பாய்ஞ்சு தற்கொலை செய்துகிட்ட பொண்ணு யார் டார்லிங்?"

"யாருக்கு தெரியும்...? அந்தப் பெண்ணோட உடம்பு சொர்ணா மாதிரி இருக்குன்னு போலீஸ்ல சந்தேகிச்சு தகவல் தந்தாங்க. எனக்குப் பழம் நழுவி பாலில் விழுந்த மாதிரி இருந்தது. கப்புன்னு பிடிச்சுகிட்டு ஒரு முகம் தெரியாத பெண்ணுக்கு கொள்ளி போட்டு காரியமும் பண்ணிட்டேன். செய்த கொலைக்கு பரிகாரம் பண்ணிகிட்ட மாதிரியும் ஆச்சுல்ல...?

"ஆமாம் டார்லிங்... கடவுள் உங்க பக்கம்தான் இருக்கார். இல்லேன்னா இப்படியொரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்குமா?"

கடவுளாவது கிடவுளாவது... எல்லாம் புத்திசாலித்தனம் மனிஷா. சந்த்தர்ப்ப சூழ்நிலையைச் சரியா பயன்படுத்திக்க தெரியணும். கேவலம்... மிருகங்கள்கூட இந்த விஷயத்துல புத்திசாலித்தனமா நடந்துக்கும்போது மனுஷன் நான் நடந்துக்கலேன்னா எப்படி?"

"மிருகம்னு நீங்க சொல்றது நரியைத்தானே?"

"ரொம்ப சரி! புத்திசாலிதனத்துல நானும் ஒரு நரி." பிரவீன் சிரித்தான்.

"அப்ப நான்?" - அவள் கேட்டாள்.

"நரிக்கு எப்பவும் தேனுன்னா ரொம்ப பிடிக்குமாம். நீ இந்த நரிக்கு பிடித்தமான கொம்புத்தேன்!" - சொல்லிச் சிரித்தான்.

விமானம் நிதானமாய் பறந்தபடியே இருந்தது!

மும்பை விமானநிலையம்.

அங்கே இறங்கி, வேறு விமானத்தில் ஏறவேண்டும்.

இருவரும் இறங்கி வெளியே வந்தபோது - எதிரில் இன்ஸ்பெக்டர் ருத்ரா... அவருடன் சில போலீஸார்.

பிரவீனுக்கு உடல் மேல் திராவகம் பரவிய மாதிரி இருந்தது. ருத்ராவிடம் வெளியே தெரியும் விதமாக கைவிலங்கு.

முகம் வெளிற ஆரம்பித்த அவனை நெருங்கி வந்தவர், "உங்களை கைதுசெய்ய சென்னைல இருந்து மும்பைக்கே வந்துட்டேன் பார்த்தீங்களா...?" என்றார்.

"இன்ஸ்பெக்டர்... இது என்ன விளையாட்டு? நான் என்ன தப்பு செய்தேன்...?" பிரவீன் எதிர்த்துப் பதறினான்.

"உங்க மனைவியை கழுத்தை நெரிச்சுக் கொலை செய்தது குற்றமில்லையா பிரவீன்...? அவங்க உடம்பை யாருக்கும் தெரியாம திருக்கழுக்குன்றம் மலையோர காட்டுப் பக்கமா புதைச்சது குற்றமில்லையா? உங்களுக்கு சம்பந்தமே இல்லாத ஒரு பெண்ணை உங்க மனைவின்னு சொல்லி 'காரியம்' பண்ணினதும் குற்றம்தானே பிரவீன்?"

-ருத்ராவின் சுருக்கல்களில் தடுமாறிய பிரவீன், "இதுக் கெல்லாம் என்ன ஆதாரம்?" என்று கேட்டான்.

ருத்ராவும் வேகமாக தன் சட்டைப்பையில் இருந்து - சொர்ணா அவனுக்கு அணிவித்த 'பிளாட்டின' மோதிரத்தையும் காட்டினார். அப்போதுதான் அவனே தன் மோதிர விரலைப் பார்த்தான். அங்கே அது இல்லை!

"குழிதோண்டி பிணத்தைப் புதைக்கும்போது கழன்று விழுந்த மோதிரம் எப்படி இப்ப பிரவீன் கைல இருக்க முடியும்? அப்ப நீங்க புதைச்ச குழியை ஒரு நரி தன் மோப்ப சக்தியால கண்டுபிடிச்சு இழுத்துப் போடும்னு நீங்க எதிர்பார்த்திருக்கமாட்டீங்கல்ல..."

-ருத்ரா சொல்லச் சொல்ல... தன்னை ஒரு நரி என்று வர்ணித்துக் கொண்ட தவறோடு சேர்ந்து அப்படியே மயங்க ஆரம்பித்தான் பிரவீன்!

# 12. நல்ல வேளை...

அலுவலகத்தில் வேலை முடிந்து வீடு திரும்பியிருந்த கணேசனின் முகத்தில் சுரத்தே இல்லை. வேலை களைப்பாக இருக்கும்' என்றுதான் நினைத்தாள் மனைவி ஆனந்தி. நுரை ததும்ப தம்ளரில் காபி தரும்போது கேட்கவும் செய்தாள்.

"என்னங்க... ஆபீஸ்ல இன்னிக்கு வேலை அதிகமோ?"

"இல்ல ஆனந்தி... இது வேற மாதிரி விவகாரம்!"

"என்னங்க... நான் தெரிஞ்சுக்கலாமா?"

"நானே உன்கிட்ட பேசணும்னுதான் இருந்தேன். நான் சொல்றதை நல்லா கேட்டுக்க... வெளியே யாருக்கும் தெரியவே கூடாது" என்று கணேசனும் பலமாகவே பீடிகைப் போட்டான்

"சரிங்க... எதுவா இருந்தாலும் சொல்லுங்க."

"சொல்றேன்... யார் காதுலயாவது விழுந்துடப்போகுது. போய் வாசக் கதவை தாழ் போட்டுவிட்டு வா."

அவளும் வாசக் கதவை தாழ் போட்டுவிட்டு வந்தாள். அவனும் காபியை சுவைத்தபடியே சொல்லத் தொடங்கினான்.

"ஆனந்தி உன் சித்தப்பா மகள் பத்மினிக்கு அடுத்த மாசம்தானே கல்யாணம்?"

"ஆமாம்... அதுக்கென்னங்க இப்போ?"

"இல்ல... கிட்டத்தட்ட எல்லா ஏற்பாடுகளும் முடிஞ்சிடிச்சிதானே?"

''அட, என்னங்க நீங்க... சித்தப்பா எல்லாருக்கும் பத்திரிகை கொடுக்கவே ஆரம்பிச்சிட்டார்.''

''சிக்கல் இப்ப அதுலதான் ஆனந்தி.''

''என்னங்க சொல்றீங்க நீங்க?''

''இன்னிக்கு மதியம் கடற்கரையில் இருக்கிற எங்க ஆபீஸ் ஹவுஸ் வரைக்கும் போயிட்டு வர்ற வேலை இருந்தது. அதுக்காக போயிருந்தேன். அப்படிப் போன இடத்துல கடற்கரை ஓரமா உங்க சித்தப்பா மகள் பத்மினிக்கு மாப்பிள்ளையா பார்த்திருக்கிற பாஸ்கரைக் கண்டேன்.''

''இதுல என்னங்க சிக்கல் இருக்கு?''

''பாஸ்கரை மட்டும் நான் பார்த்திருந்தா சிக்கல் இல்ல... கூட ஒரு பெண்ணையும் பார்த்தேன்!''

கணேசன் பஞ்சிங்காக சொன்னது ஆனந்தியைக் கொஞ் சம் அதிர வைத்துவிட்டது.

''நிஜமாங்களா?''

''நீ இப்படிக் கேட்பேன்னு எனக்கும் நல்லா தெரியும். ஆகையினால ஒரு தடவைக்கு பல தடவை பார்த்தேன். அந்த ஆளுக்கு என்னை யார்னு தெரியாததால நான் பார்க் கிறதைக் கண்டுக்கவே இல்லை.''

''ஏன் அந்த பொண்ணு ஒரு நல்ல சிநேகிதியா இருக்கக் கூடாது?''

ஆனந்தி அப்படிக் கேட்கவும் சிரித்துவிட்ட கணேசன், ''எனக்கு தெரிஞ்சு எந்த சிநேகிதன் சிநேகிதியும் முத்த மெல்லாம் கொடுத்துக்கமாட்டாங்கம்மா'' என்றான், அழுத்தமாக.

ஆனந்திக்கு அதன்பின் முகத்தில் உயிர்த்துடிப்பே இல்லை.

''ஆனந்தி! இப்ப என்ன பண்ணப்போறே? நான் பார்க்கக் கூடாத ஒண்ணை பார்த்துட்டேனா? இல்ல பார்க்கவேண்டி

யதைத்தான் பார்த்தேனான்னே தெரியல. நீ என்ன நினைக்கிறே?''

''நான் என்ன நினைக்கிறது... உங்க ஆண்வர்க்கத்துக்குத்தான் துரோகம்கிறது சர்வசாதாராணமாச்சே?''

''பார்த்தியா ...இதுதான் சாக்குன்னு எங்க இனத்தையே போட்டு தாக்கறியே...''

''பின்ன என்னங்க... ஒரு பக்கம் கல்யாணம் பண்ணிக்க ஒரு பொண்ணு தயாரா இருக்கும்போது அந்த ராஸ்கலுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தா அவன் இப்படியெல்லாம் நடந்துக்குவான்?''

''இப்ப அந்த பேச்சையெல்லாம் விடு... உன்கிட்ட நான் விஷயத்தைச் சொல்லிட்டேன். நீ இப்ப என்ன பண்ணப் போறே?''

''அதான் எனக்கும் புரியல... பத்மினிக்கு நூறு இடமாவது பார்த்திருப்பாங்க. இதோ இந்த இடமாவது நல்லபடி அமைஞ்சிதேன்னு நான் சந்தோஷப்பட்டுக்கிட்டு இருந்தேன். இப்ப இந்த இடமும் ஒரு மோசமான இடம்னு தெரிஞ்சா அவ்வளவுதான்.''

''வளவளங்காதே... உங்க சித்தப்பாவைப் பார்த்து நான் விஷயத்தை போட்டு உடைச்சிடட்டுமா?''

''என்னங்க இது? சொன்னா கல்யாணம் நின்னுபோகும். சொல்லாட்டி அவ வாழ்க்கையே கெட்டுப்போகும்.''

''சரிம்மா ஆனந்தி. என் குழப்பமும் இப்ப அதுதான்.''

இருவரும் அதன்பிறகு நெடுநேரம்வரை தீவிரமாக யோசித்துவிட்டுப் பேசாம பையன் சரியில்லைன்னு ஒரு மொட்டைக் கடிதம் எழுதிப் போட்டுவிடுவது என்றெல்லாம் தீர்மானித்து இறுதியாகப் பத்மினியின் அப்பாவிடமே நேரில் கூறிவிடுவது என்கிற முடிவுக்கு வந்தனர்.

வீட்டுக்குள் நுழையும்போதே கல்யாண ஏற்பாடுகள் கண்ணில் பட்டன. பத்மினி ஓடிப்போய் தன் கூறைச் சேலையைக் கொண்டுவந்து காண்பித்தாள். அவள் தம்பி மகேஷ் கல்யாணப் பத்திரிகைக்கு மஞ்சள் தடவிக் கொண்டிருந்தான்.

தாத்தா சாமிநாதன் ஒரு தனியறையில் கடுமையான இருமலுடன் படுத்திருந்தார். ஆனந்தியும் கணேசனும் முதலில் அவரைத்தான் போய் பார்த்து நலம் விசாரித்தனர்.

"பத்மினி கல்யாணம் வரை தாங்கிட்டேன்னா போதும்... அப்புறம் நிம்மதியா கண்மூடிடுவேன்" என்று அவர் சொன்னபோது, இருவருக்கும் கொஞ்சம் மனதைப் பிசைந்தது.

திரும்பின பக்கமெல்லாம் கல்யாண குதூகலமும் மகிழ்ச்சியும் தெரியும் அந்த பின்புலத்தை தான் சொல்லப் போகும் ஒரு உண்மை உருத்தெரியாமல் செய்துவிடப் போவதை எண்ணிப் பார்த்த கணேசன், ஆனந்தியிடம் கிசுகிசுக்கத் தொடங்கினான்.

"ஆனந்தி... இப்ப எதையும் சொல்லாதே."

"ஏங்க?"

"சொன்னா இடிஞ்சு போயிடுவாங்க."

"சொல்லாட்டி அதைவிட இடிஞ்சு போவாங்க."

"அதைவிட நான் வேற ஒரு வழியைக் கண்டு பிடிச்சிருக்கேன்."

"என்னங்க அது?"

"போகும்போது வழியில சொல்றேன்."

அந்த நிமிடத்துக்கு ஆனந்தியைக் கட்டிப்போட்ட கணேசன், பத்மினிக்கும் வாழ்த்து சொல்ல தயங்கவேயில்லை.

''பத்மினி உனக்கு இப்பவே என்னோட அட்வான்ஸ் வாழ்த்துகள்'' என்றான். அவளை மேலும் உற்சாகப்படுத்தும் விதமாக பேசிவிட்டு நல்ல சாப்பாடும் சாப்பிட்டுவிட்டுத் தான் இருவரும் கிளம்பினர்.

ஆட்டோவில் வீடு திரும்பும்போது ஆனந்தி கச்சிதமாக ஆரம்பித்துவிட்டாள்.

''என்னங்க இது... அவளை எப்படியாவது காப்பத்துவீங் கன்னு பார்த்தா வாழ்த்திட்டு வந்திருக்கீங்களே. உண்மை தெரிஞ்சுமா நாம சொல்லாம போறது. அந்த மாப்பிள்ளைப் பையன் பண்ணுற துரோகத்தைவிட ரொம்ப பெரிய துரோகம்...''

''என்ன பண்ணச் சொல்றே? பத்மினி கழுத்துல தாலி ஒண்ணுதான் ஏறலை. அந்தக் குடும்பமே கல்யாண கனவுல மிதந்துகிட்டிருக்கு. அதைத் தகர்த்து எறியறது ரொம்பவே சுலபம். ஆனால், அதுக்கப்புறம் அவளையும் அந்தக் குடும்பத்தையும் நினைச்சுப் பார்க்கவே எனக்குப் பயமா இருக்கு...''

''இப்படிக் குழம்பினா எப்படிங்க? வேற ஏதோ ஒரு வழி இருக்கிறதா சொன்னீங்களே... என்ன அது?''

''சொல்றேன்... நாம ரெண்டும் பேரும் நேரா இப்ப அந்த மாப்பிள்ளைப் பையனைப் பார்க்கப் போறோம். நான் அந்த பையனையே பார்த்து கேட்கிறேன், இது உனக்கே நியாய மான்னு... அப்படியே பத்மினி அவனுக்காக காத்துகிட்டு இருக்கிறதையும் சொல்வோம்.

அந்தப் பையன் திருந்தி நம்ம பக்கமும் சாயலாம். இல்லாட்டி அவனே ஒரு நல்ல முடிவை சொல்லட்டும். அப்புறமா நாம ஒரு முடிவுக்கு வருவோம்... என்ன சொல்றே?''

ஆனந்திக்கும் அந்த நேரத்தில் அந்த மாதிரி ஏதாவது செய்து பார்ப்பதுதான் ஓரளவு புத்திசாலித்தனமாகப்பட்டது.

''இது நல்லபடியா முடியுங்களா?'' என்று வருத்தம் தொனிக்கக் கேட்டாள்.

''முடியணும். இல்லாட்டி முடிக்கணும். ஏன்னா... சில விஷயங்களைப் பார்க்கிறதேகூட தப்புங்கறதுக்கு நான் உதாரணமாயிடுவேன். அதைக் கேட்டது தப்புங்கறதுக்கு நீ உதாரணமாயிடுவே'' என்றான் கணேசன்.

மாப்பிள்ளை வீட்டிலும் கல்யாண ஏற்பாடுகள் தடபுடலாகத்தான் தெரிந்தன. ஆனந்தியையும் கணேசனையும் அவர்கள் வரவேற்று உட்கார வைத்து பத்மினிக்கு வாங்கி இருக்கும் தாலிக்கொடியை எடுத்துக் காட்டியபோது ஆனந்திக்கு சங்கடம். ஐயோ, இவ்வளவு சந்தோஷமான விஷயம் தவறாக முடியப் போகிறதே என்று மனது அலைபாய்ந்தது.

பையனின் அம்மா ஆனந்தியை அழைத்துச் சென்று வீட்டை எல்லாம் சுற்றிக் காட்டினாள். கொஞ்சம்கூட மாப்பிள்ளை வீடு என்கிற பந்தாவோ பகட்டோ இல்லை.

பெரிய வீடு... இல்லையில்லை பங்களா! ஒன்றுக்கு இரண்டு கார்கள். பத்மினிக்கு இப்படியொரு இடம் கிடைப்பதும் அதிர்ஷ்டம்தான். ஆனால்?

ஆனந்தி அவர்களின் உபசரிப்புக்கு நடுவில் தடுமாறிக்கொண்டிருந்தபோது மாப்பிள்ளை பாஸ்கரும் மாடியில் இருந்து வந்துவிட்டான். கொஞ்சமும் நெருடலின்றி கணேசனைப் பார்த்து வணக்கமும் சொன்னான்.

கணேசனுக்குத்தான் இடறியது. ''மாப்பிள்ளை நான் உங்களை நேத்து கடற்கரையில் பார்த்தேனே?''

என்றபோதும் அவனிடம் எந்த சலனமும் இல்லை.

''நான் கடற்கரை பக்கம் போயே வருஷக்கணக்காச்சு'' என்றான் சிரித்துக்கொண்டே.

'அப்ப நான் அங்கே உன்னை ஜோடியா பார்த்தது பொய்யாடா... படுபாவி கல்லுளிமங்கா... அருமையா

நடிக்கிறேடா...' என்று கணேசன் மனசுக்குள் மருகியபோது வாசல் பக்கம் கார் வந்து தேங்கி நிற்கும் சத்தம். காரில் இருந்து இறங்கி உள்ளே வந்த ஆளைப் பார்க்கவும், கணேசன் ஆடிப் போய்விட்டான்.

அச்சு அசல் மாப்பிள்ளை பாஸ்கரைப் போலவே இருந்த அவனும் கணேசனைப் பார்த்து, யாருண்ணே இவங்க என்று கேட்டபோது, கணேசனுக்கு தான் பார்த்தது இவனைத்தான் என்பது புரிந்துவிட்டது.

''என்ன அப்படிப் பார்க்கறீங்க... இவன் என் தம்பி சுதாகர். நாங்க ரெண்டு பேரும் இரட்டையர்...'' என்ற பாஸ்கர், அவர்களையும் அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

கணேசனுக்கும் ஆனந்திக்கும் அப்படியே இலவம்பஞ்சு போலாகி வானவெளியில் மிதப்பது மாதிரி இருந்தது. ஒரு நிம்மதிப் பெருமூச்சு அவர்கள் இருவரிடமும்...

அதற்கு நடுவிலும் கணேசன் காதில், ''நல்லவேளைங்க... நாம இங்கே வந்தோம்... இல்லேன்னா...'' என்று ஆனந்தி ஆரம்பிக்க...

''அதுதான் சொல்லிட்டேல்ல... நல்லவேளைன்னு...'' என்று அவள் வாயை மூடிய கணேசன்...

''மாப்பிள்ளை... நிச்சயதார்த்தத்துக்கு வந்த எங்களால உங்ககூட சரியாவே பேச முடியல. எங்கே நீங்க தப்பா எடுத்துக்கிட்டு இருப்பீங்களோன்னு உங்களைப் பார்த்து பேசிட்டுப் போக வந்தேன்'' என்று அப்படியே கதையைத் திருப்பிப் போட்டான்.

மாப்பிள்ளை பாஸ்கரும் அதைக் கேட்டு வெள்ளந்தியாக சிரித்தான். ஆனந்தியும், அது நல்லவேளை என்பதற்கு அப்போதுதான் முழுமையான அர்த்தம் புரிந்துகொண்டிருந் தாள்.

# 13. தப்பித்தே தீருவேன்...!

அந்த மலைப் பிராந்தியத்தில் குறிப்பிட்ட ஒரு பாறை மேட்டின் மேல்தான் புலிப்பாண்டியன் செல்போனுக்கு சிக்னல் கிடைத்தது. அந்த பாறை மேல் வந்து அவன் அமர்ந்து கொண்ட நொடியே செல்போன் திரையில் சிக்னல் வரிகள் விழத் தொடங்கியபோது ஒரு அழைப்பும் அவனை எதிர்கொள்ளச் செய்தது.

''புலி ...எங்க இருக்கே இப்போ?''

''காமாச்சி மலைக்கு வடக்க... என்னா விஷயம்?''

''உன்னைப் பாத்த இடத்தில சுடச்சொல்லி மந்திரில இருந்து ஐ.ஜி. வரை உத்தரவு போட்டாச்சு. என்கவுண்டர் மணியும் உன்னைத் தேடி அலைய ஆரம்பிச்சுட்டார். அதிகபட்சம் ஒரே வாரம்... நீ சுட்டுக்கொல்லப்பட்ட விஷயம் பத்திரிகைகளிலும் டி.வி-யிலும் வந்தாகணும்னு சொல்லிட்டாங்க. இதுக்கு பின்னால மில் அதிபர் தாழமுத்து இருக்கார்.

அவர் மகன் மேல கை வைக்கிறதுக்கு முந்தி நல்லா யோசிச்சுக்கோன்னு நான் பல தடவை சொன்னேன். நீ கேக்கல. இப்ப பாரு... ஒரு சூட்கேஸோட போய் பார்க்க வேண்டியவர்களைப் பார்த்து உனக்கும் நாள் குறிச்சுட்டாரு... !''

மறுபக்கம் போலீஸ் துறையில் இருந்தே புலிப்பாண்டிக்கு உளவுச்செய்தி சொன்னவர், அவனது மதிப்பிற்குரிய காளியப் பன் என்கிற ஒரு அதிகாரிதான்

அந்த அதிகாரியின் பெண்ணை ஒருவன் காதல் என்கிற பெயரில் மும்பை அழைத்துச் சென்றபோது அவனிடம் இருந்து அந்தப் பெண்ணை மீட்டுவந்தது மட்டுமல்லாமல் அவனைப் போட்டுத்தள்ளியதும் புலிப்பாண்டிதான்

அந்த நன்றி விசுவாசம்.

''ஐயா! நீங்க விடுங்க. இதுல இருந்து நான் எப்படித் தப்பிக்கிறேன்னு பாருங்க. என்னை அந்த என்கவுண்டர் மணி சுட்டுக் கொன்னுட்டதாவும் செய்தி வரும். அதே நேரம் நானும் தப்பிச்சி கொஞ்ச நாள் டெல்லி பக்கம் போயிடலாம்னு பார்க்கறேன்...''

''அது எப்படி புலி... உடம்பை மணிகிட்ட கொடுத்து விட்டு ஆவியா டெல்லியில் சுத்தப் போறியா?''

''அதைப் போகப் போக நீங்க பார்க்கத்தானே போறீங்க?''

புலிப்பாண்டியன் பேச்சில் ஒரு சன்னமான மர்மம் இழையோடியது.

மொத்தத்தில் அவன் ஏதோ செய்யப்போகிறான் என்பது மட்டும் அந்த அதிகாரிக்குப் புரிந்தது.

வில்லாளக்கண்டன் அவன்!

எதைச் செய்ய நினைத்தாலும் நூல் பிசகின்றி செய்து முடிக்கத் தெரிந்தவன். நல்லபடியாக படித்து ஒழுக்கமாக வளர்க்கப்பட்டிருந்தால் அவனால் நான்கைந்து ராக்கெட்டு களாவது விண்வெளியில் சுற்றிவந்து கொண்டிருக்கும். அப்படியொரு புத்திக்கூர்மை

பாழாய்ப்போன காலம் அவனை போலீஸ் தேடும் என்கவுண்டர் ரவுடி ஆக்கிவிட்டது

ஒவ்வொரு மயானமாக ஏறி இறங்கிக்கொண்டிருந்தான் வடுகநாதன் புலிப்பாண்டியனின் நம்பிக்கைக்குரிய ஒற்றன். நடுநடுவே புலிக்கு போன் செய்து பேசினான்.

"புலி நேத்தும் சரி... இன்னிக்கும் சரி... உன் வயசுல உன் உருவத்துக்கு தோதா இந்தப் பக்கம் யாருமே சாகலைப்பா. கொஞ்சம் பொறுமையா இரு... எப்படியும் ஒருத்தன் சாகாமலா போயிடுவான்?"

மயானத்தின் வாயிலில் நின்றுகொண்டுதான் பேசினான் வடுகநாதன். அந்த நேரம் அவன் சொல்லிக் கொண்டிருந்தது போலவே ஒரு பிணம் அச்சு அசலாக புலிப்பாண்டியைப் போலவே...

"புலி நீ யோகக்காரன்... இப்பதான் சொன்னேன்... அதுக்குள்ள ஒரு பொணம் வந்துருச்சி. நீயே செத்து பொணமா படுத்து வர்ற மாதிரிதான் இருக்குப்பா!" என்றவன், "இந்தப் பிணத்தை நான் ஒரே அமுக்கா அமுக்கி ஒரு ஆம்புலன்ஸுல தூக்கிப்போட்டுக்கிட்டு வந்துடுறேன்" என்று போனில் பேச்சை முடித்துக்கொண்டான்.

டண்டண்டண் டனக்கு டனக்கு டண்டண்டண் ... என்கிற மேளச்சப்தத்துக்கு ஏற்ப லேசாக ஆடவும் செய்தான்.

குட்டி குட்டி வாழை மரங்களை கட்டி பல்லக்குபோல பாடை செய்து அதில் உட்கார வைத்து கொண்டுவரப்பட்ட பிணம்! அது நெற்றிப்பொட்டாக ஒரு ரூபாய்.

காட்டில் கரும்பு வெட்டும்போது தவறுதலாக அரிவாள் வெட்டியதில் ரத்தக் குழாய்கள் அறுந்து என்ன செய்தும் காப்பாற்ற முடியாதபடி ஆகி உயிர்போய்விட்ட ஒரு கூலித்தொழிலாளியின் பிணம்

வடுகநாதன் பார்த்துக்கொண்டே இருந்தான்.

இப்போதெல்லாம் பிணத்தை அதிகம் புதைப்பதில்லை. நூத்துக்கு தொண்ணூறு பேர் எரிப்பதைத்தான் விரும்பு கிறார்கள். ஆனால், இந்த சடலத்தை புதைக்க தயாரான போது வடுகநாதனுக்கு ஒரே குஷியாகிவிட்டது.

பழம் நழுவிப் பாலில் விழுந்து பின் அதுவும் நழுவி வாயில் விழுந்த மாதிரி எனப்பார்களே... அப்படி இருந்தது.

இளம் வயது மரணம். எனவே ஒப்பாரிச் சத்தமெல்லாம் பயங்கரமாக இருந்தது. ஒருத்தி அடிக்கடி மயங்கி விழுந்தாள். தண்ணீர் தெளித்து தெளித்து எழுப்பினார்கள். திரும்பத் திரும்ப மயங்கினாள். அவ்வளவு துக்கம். அதுதானே மரணத்தின் சக்தி

இந்தக் கொடுமைகளைப் பார்ப்பதாலோ இல்லை மரணத்துக்குப் பின் என்ன ஆவோம் என்பது தெரியாத தாலோதானே நூறு வயசுக் கிழவனுக்கும் எப்படியாவது வாழும் ஒரு ஆசை வளர்ந்தபடியே இருக்கிறது

ஒரு வழியாக அடக்கம் முடிந்து எல்லோரும் கிளம்பிப் போனார்கள். புதிய சமாதி. அதன் குவி மண்மேட்டின் மேல் மாலைகள். சமாதியை அமைத்துக் கொடுத்துவிட்ட நிலையில் புலையனும் ஒரு பிராந்தி பாட்டிலை திறக்க தொடங்கியிருந்தான்.

அவன் வரையில் உலகின் ஒரே உயர்ந்த இன்பம் மது மட்டும்தான். வடுகநாதன் அவன் கிட்டே நெருங்கினான். "யோவ்... இன்னும் நீ பிராந்திதான் குடிக்கிறியாக்கும். கேனப்பயலே... இந்தா பிரவுன் சுகர். ஒரு இழு இழுத்துப் பாரு. சொர்க்கம் டி.வி. தொடர் கணக்கா கண் எதிரிலே ஓடும்" என்று பத்து கிராம் பொட்டலத்தை நீட்டினான்.

"யார் நீ?" புலையன் கேட்டான்.

"நான் ஒரு பேமானி. பிரவுன் சுகர் விக்கிறவன் எப்படி இருப்பான்? ஊருக்குள்ள எவன் எனக்கு இடம் தருவான்? அதான் இந்தப் பக்கம் வந்துட்டேன். இந்தா... அப்படி கொஞ்சநேரம் கிடந்து மப்பு தெளிஞ்ச உடனே போய்க் கிட்டே இருப்பேன்..." என்று அந்த வெட்டியான் நம்பும் விதமாக சொல்லி முடித்தான்.

அவனும் பிரவுன் சுகரை மூக்கு முன்னால் வைத்து உறிஞ்சத் தெரியாமல் உறிஞ்சியதில் உடம்பு சுருண்டு கீழே விழுந்துவிட்டது.

இனி அது எழுந்திருக்க ஒரு நாள்கூட ஆகலாம்

வடுகநாதனும் தனது அடுத்தகட்ட வேலையைத் தொடங்கினான். யாருக்கோ போன் போட்டான்.

''ஒரு ஆம்புலன்ஸோட சுடுகாட்டுக்கு வந்துடுங்க... அதிகபட்சம் மூணு மணி நேரத்துல வண்டி இங்கே என் முன்ன நிக்கணும். இது புலிப்பாண்டி விஷயம். ஜாக்கிரதை!'' என்றான்.

அதேபோல மூன்றாவது மணி நேர முடிவில் ஒரு ஆம்புலன்ஸ் அந்த மயானத்துக்குள் நுழைந்தது. ஒற்றை ஆளாக வடுகநாதன் தோண்டி எடுத்திருந்த அந்த சடலமும் உடை மாற்றப்பட்டு ஆம்புலன்ஸில் ஒரு ஆண் மாதிரி படுத்துக்கொண்டது.

''வழியில போலீஸு வண்டிய நிறுத்தி எங்கே போகுதுன்னு கேட்டா காட்டுறதுக்கு ஆஸ்பத்திரி அறிக்கையெல்லாம்...?'' வடுகநாதன் கேட்குமுன்னே ஒரு காகித உறையைத் தன் முன்னால் காட்டினான் ஆம்புலன்ஸ் டிரைவர்.

''எலேய்... எப்ப புலிப்பாண்டி விஷயம்னு சொல்லிட்டியோ அப்பவே கம்ப்யூட்டர் கணக்கா அம்புட்டு சோலியையும் பார்த்துட்டோம். உன்னை இப்ப பார்த்தா ஆஸ்பத்திரி ஆள் மாதிரி இல்ல... வண்டியில வெள்ளை பேண்ட் சட்டை இருக்கு. எடுத்து மாட்டிக்கிட்டு வண்டில ஏறு. மிச்சத்தை போறபோக்குல பேசிக்குவோம்'' என்றான் டிரைவர்.

ஆம்புலன்ஸும் புறப்பட்டது. பாவம் புலையன் ... புழுபோல சுருண்டே கிடந்தான்.

பிணத்தைப் பார்த்த புலிப்பாண்டி முகத்தில் மெர்க்குரி விளக்கொளி பட்ட மாதிரி ஒரு பிரகாசம். உற்சாகத்தோடு வடுகநாதனை கட்டிக் கொண்டான். அப்படியே அந்த பிணத்தின் கையில் தன் கையில் இருப்பதுபோலவே புலிப் பாண்டி என்கிற எழுத்துகளை அச்சு அசல் மாறாத மாதிரி பச்சை குத்தி ஒரு புலியின் முகத்தையும் பொறித்து முடித்தான்.

பின்னர் முகத்தில் பெட்ரோலை ஊற்றி தீயைப் பற்ற வைத்து சில நொடிகள் எரியவிட்ட நிலையில் அதை அணைக்கவும், முகம் ஒரு மாதிரி விகாரமாகிவிட்டது

விகாரமான அந்த பிணத்தை தனது ஆடைகளை மாட்டி தான் எப்போதும் மாறாதபடி அணியும் டயர் செருப்பு களையும் அணிவித்து ஒரு காரில் ஏற்றி பின் இருக்கையில் உட்கார்ந்த நிலையில் கிடத்தி தலையை மூடிக் கொண்டிருப்பதுபோல ஒரு துண்டைக் கட்டிவிட்டு பக்கத்திலேயே தானும் அதுபோன்ற உடையில் ஏறிக் கொண்டான்.

வடுகநாதனைப் பார்த்து, "நான் இப்ப இந்த கார்ல தேனி பக்கம் போய்க்கிட்டிருக்கிறதா அந்த என்கவுண்டர் மணிக்கு எப்படியாவது தகவல் கொடு. நான் இந்த காருக்குள்ள இருக்கிறத ஒரு தடவையாவது அந்த மணி பார்க்கணும். பிறகு என்னைத் துரத்தட்டும். வழியிலேயே நான் ஒரு குறிப்பிட்ட இடத்துல கீழே குதிச்சு ரோட்டோரமா புதருக்குள்ள பதுங்கிடுவேன்.

கார்பாட்டுக்கும் போய்க்கிட்டே இருக்கும். நான் குதிக்கும்போது டைம் பாமை ஆன் பண்ணிட்டுத்தான் குதிப்பேன். அதுவும் வெடிக்கும். தீக்காயங்களோடு நாம உக்காத்தி வெச்சிருக்கிறவன் பிணம் அந்த மணி கைல கிடைக்கும். எப்படியோ நான் செத்துட்டதா அவனும்

நினைப்பான்...'' என்று நடக்கவேண்டியதையும் கூறி முடித்தான்.

அதன்பின்கூட அப்படியேதான் நடந்தது. இல்லை யில்லை... நூல் பிசகாதபடி நடத்தப்பட்டது. என்கவுண்டர் மணியும் காருக்குள் ஜன்னலோரமாக இருந்த புலிப் பாண்டியைப் பார்த்துவிட்டு காரை துரத்துத் தொடங் கினார்.

புலிப்பாண்டியும் ஒரு வளைவில் கதவைத் திறந்து கொண்டு விழுந்து உருண்டு சாலையோரப் புதருக்குள் மறைந்துகொண்டான்.

சிறிது நேரத்தில் அவன் எதிர்பார்த்தது போலவே 'டமார்' என்று சப்தம் கேட்டது! அவன் முகத்திலும் ஒரு நிறைவு...

மறுநாள் பத்திரிகைகளில் எல்லாம் புலிப்பாண்டியன் சாவுதான் முதல் இடத்தைப் பிடித்திருந்தது. புலிப்பாண்டிக்கு தகவல் கொடுத்த போலீஸ் அதிகாரி காளியப்பன் கூட அந்த செய்தியைப் பார்த்து அதிர்ந்தபோது புலிப்பாண்டியே அவரைக் கூப்பிட்டான்.

''சார்... புலி பேசறேன்...''

''அப்ப மணி துரத்தும்போது கார் வெடிச்சு செத்துப் போனது?''

''என்னோட டம்மி! எனக்காகவே செத்துப்போன எவனோ ஒருத்தன் சார்...''

''ஓ... இதைத்தான் அன்னிக்கு அப்படிச் சொன்னியா?''

''ஆமாம் சார்... உங்க துறை வரைல நான் இனி செத்துட்டவன். ஆனா, என் வரைல இனிமேதான் சார் நிம்மதியா வாழப்போறேன்...

''நீ பெரிய கில்லாடி புலி... தப்பிச்சே தீருவேன்னே... சொன்னமாதிரி தப்பிச்சுட்டே....''

''புத்திதான் சார் என்வரைல கடவுள். அந்த கடவுள் அருள் இருக்கும்போது என்னை யார் சார் என்ன செய்துட முடியும்?''

''சரி... பேசினது போதும்... என்வரைலயும் நீ செத்தவனாவே இரு. இந்த பேரும் இனி உனக்கு வேண்டாம். வேற பேரு வெச்சுக்க...''

''நீங்களே ஒரு நல்ல பேர் வையுங்களேன்...''

''நீ எங்க போலீஸ் துறைக்கே தண்ணி காட்டின வீரன். அந்த என்கவுண்டர் மணிக்கே அல்வா கொடுத்தவன். ஆகையால பலே வீரமணின்னு வெச்சுக்கோ...''

''நல்லா இருக்கு சார் ரொம்ப நன்றி!''

''நல்ல நேரத்துல இந்த ஊரைவிட்டு டெல்லி பக்கமா போய் செட்டில் ஆயிடு... சில வருடங்கள் போகட்டும், நாம சந்திப்போம்.''

''நாளைக்கு காலைல ஆறு மணிக்கு எனக்கு விமானம் சார். இந்நேரம் நான் மேல இருப்பேன்...'' புலிப்பாண்டி வெற்றிச் சிரிப்போடு சொன்னான்.

மறுநாள் எட்டு மணி இருக்கும். டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார் காளியப்பன். இடையில் ஒரு மிக முக்கிய செய்தி ஓடத்தொடங்கியது.

சென்னையில் இருந்து டெல்லி சென்ற விமானம் எந்திரக்கோளாறு காரணமாக வானிலேயே வெடித்துச் சிதறியது. பயணிகளில் ஒருவர்கூட உயிர் தப்பவில்லை என்ற அந்த செய்தியைப் படித்த காளியப்பனுக்கு பகீர் என்றது.

காவலனைவிட எமன் பெரியவன், விதி வலியது என்பது அவருக்குள் புரியத் தொடங்கியபோது. கீழே கருகிய நிலையில் விழுந்து கிடக்கும் பிணங்களை டி.வி-யில் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

அதில் பலே வீரமணியை அடையாளம் காணமுடியவில்லை.

# 14. விதியும் சதியும்!

'பாம்... பாம்... '

'பீம்...பீம்...'

'டர்ர்ர்ர்...'

தினுசு தினுசான சப்தங்கள்... பிரதான அந்த சாலையே திணற ஆரம்பித்து விட்டது.

சொல்ல முடியாத சோகத்துடன் தன் ஸ்கூட்டரை தேங்கித் தேங்கி முன்னேறி ஒரு கட்டத்தில் துளியும் நகர வழியின்றி நின்றுவிட்ட அனந்துவுக்கு அழுகை பீறிட்டு வரும் போல் தோன்றியது.

பாக்கெட்டில் வெளியே பிதுங்கலாய் தெரிந்து கொண்டிருந்தது தந்திக் காகிதம். ஏழாவது தடவையாக இன்னொரு முறை எடுத்துப் படித்தான். இந்த முறை கண்களில் நீர் துளிர்த்தே விட்டது. அப்பொழுது பார்த்து ஒரு காட்டுக் கத்தல்...

"வண்டிகளை நகரவிட மாட்டோம். கலெக்டரு வரட்டும். நியாயம் பொறக்கட்டும். அப்பத்தான் நகரும் வண்டி!"

"இந்தா... நீ பேசறது கொஞ்சமும் சரியில்லை. இன்டர் வியூவுக்கு போறவன், நாலு நல்லது கெட்டதுக்கு போறவன், டாக்டரை பார்க்கப் போறவன்னு எவ்வளவு பேர் இப்ப பாதிக்கப்பட்டிருப்பாங்க தெரியுமா?"

"உங்களைப்பாதிச்சா இவ்வளவு கத்தறீங்களே... எங்க பாதிப்புக்கு மரியாதை கொடுத்தீங்களா?"

"யாரோ செத்ததுக்கு ஏன்யா எங்க உசுரை வாங்கறீங்க... பிணத்தை எடுங்கய்யா."

அப்பொழுதுதான் டிராஃபிக்ஜாமின் காரணமே அனந்துவுக்கு புரிய ஆரம்பித்தது.

"யார் செத்ததாம்?"

"அந்த முக்குல இட்லி கடை போட்டிருக்குமே கிழவி, அதான்... பிணத்தை நடுரோட்ல வச்சிருங்காங்க. கிழவி அநாதை! மண்டையை போட்ருச்சு. அள்ளிப் போட ஆள் இல்லை. முனிசிபாலிடிக்கு போன் போட்ருக்காங்க. ஒரு பிரயோஜனமும் இல்ல... பொதுவுல அந்த ஏரியாவுல ஒழுங்கா குப்பையும் வார்றது கிடையாது; சாக்கடை அள்றதும் கிடையாது..."

"இப்ப ஒரு அநாதை செத்தது தெரிஞ்சும் யாரும் வரலை. அதான் பொதுஜனங்க சிலர் இப்படி ஐடியா பண்ணி ரோட்ல கிழவிய தூக்கிப் போட்டு டிராஃபிக்கை நிறுத் திட்டாங்க."

"போலீஸ்ல இருந்து கமிஷனர் வரைக்கும் வரணும்... நியாயம் பொறக்கணும்... அப்பத்தான் வழி விடுவோம்னு பொணத்தை போட்டுக்கிட்டு அது முன்னாடி ஒரு கூட்டமே உட்கார்ந்துருக்கு..."

காரணம் விஸ்தாரமாக விளங்கியபோது மக்கள் சக்தி யின் அந்த புதிய பரிமாணத்தை எண்ணி சற்று ஆச்சரியப் பட்டுப் போனான் அனந்து...

"சரி..எப்ப க்ளியராகும்?"

"யாரு கண்டா? கலெக்டர் கேம்ப் போயிட்டாராம். சப் கலெக்டரும் லீவு... தனி அதிகாரிதான் வரணும்... வந்து கிட்டிருக்காருன்னாங்க!"

"போலீஸு..."

"ஏ.எஸ்.பி. வந்து பஞ்சாயத்து பண்ணிக்கிட்டிருக்காரு!"

வாஸ்தவம்தான். பஞ்சாயத்து நடந்து கொண்டிருந்தது ஆனால், சற்று வித்தியாசமாக,

"ஏய்யா அறிவிருக்கா! அநாதை பொணம்னா துண்ட விரிச்சா காசு சேர்ந்துட்டு போகுது. எத்தனை பேர் வேலை வெட்டியில்லாம சும்மா இருக்காங்க. அவுங்கல்லாம் ஒண்ணா சேர்ந்து அள்ளி எறிய வேண்டியதுதானே! இப்படி பப்ளிக்குக்கு தொந்தரவு பண்ணிக்கிட்டு. கூச்சல் போட்டா எப்படிப்பட்ட தண்டனை கிடைக்கும் தெரியுமா?"

"தெரியுமாவா? நாத்தம், கொசுக்கடி, தெருவிளக் கில்லாம இருட்டுன்னு நாங்க இப்ப அனுபவிச்சுக்கிட்டிருக் கிறது வேற என்னவாம்?"

"அதிகம் பேசுனால்லாம் எங்கிட்ட ஒண்ணும் நடக்காது; நான் பொல்லாதவன்."

"உதார்லாம் வேண்டாம் சார். எங்களுக்கு நியாயம் கிடைக்கணும். அதுவரைக்கும் அசர மாட்டோம்... என்ன வேணா பண்ணுங்க."

கையைப் பிசைந்து கொண்டார் ஏ.எஸ்.பி.

"சொன்னா கேளுங்கப்பா பிணம் நாறுதுல்ல."

"அது நேத்தே நாற ஆரம்பிச்சுடுச்சு."

"நான் ஒரு அம்பது ரூபாய் போடுறேன்... எல்லாரும் அஞ்சு, பத்து போடுங்க. தூக்கி எறிஞ்சுடுவோம்."

"உங்க அப்பன் ஆத்தா செத்தா இப்படிச் சொல்வீங் களா?"

"அநாதைக்கும் ஆதரவுள்ளவங்களுக்கும் வித்தியாச மில்லை?"

"ஏன் போன் பண்ண உடனே வரலை? முனிசிபாலிடில இதைவிட வேற என்ன வேலை தட்டு கெட்டுப் போவுது?"

"நாங்க எந்த புகார் தந்தாலும் ஏன் கண்டுக்கறதே இல்லை?" ஏழைங்கன்னா இளப்பமா...?"

ஜனநாயகம் வீதியில் ஒரு பிணத்தை மேடையாக போட்டு எழுப்பிய கேள்விகள் ஏ.எஸ்.பி-யை நெரித்தன.

இப்படிப்பட்ட கேள்விகளை கூட்டத்தில் ஒரு சிலர்தான் எழுப்பிக் கொண்டிருந்தனர். விவகாரம் மிகவும் முற்றினால் பத்திரிகை வரை போகும், பெரிய இஷ்யூ ஆகும் சாத்தியமும் தெரிந்தது.

இதற்குள் டிராஃபிக் ஜாமின் நீளம் 3 கி.மீ தூரத்தை தொட்டுவிட்டது.

ஸ்கூட்டரை அப்படியே போட்டுவிட்டு விவாதம் எழுப்பும் அந்த பிணம் கிடந்த இடத்தில் இப்போது இருந்தான் அனந்து.

என்னதான் நடக்கிறது என்று பார்க்கும் ஆர்வம். கூடவே தன் கவலையை மறக்கும் நோக்கம். கிழவியின் சடலத்தை பார்த்தான். கண்கள் திறந்த நிலையில் மரித்திருந்தாள். திறந்த அந்த கண்கள் அவனையே பார்ப்பது போல் ஒரு பிரமை.

வாழும் நாளில் சாகும் நிமிடம் வரை உழைத்தே பிழைத்த கவுரவமான கிழவி. அந்தப் பக்கமாய் ஸ்கூட்டரில் போகும்போதும் வரும்போதும் அனந்துகூட பார்த்திருக்கிறான். அவள் மரணம்கூட ஒருவகையில் ஊருக்குப் பயன்பட்டுக் கொண்டிருப்பதை பார்க்க சற்று நெகிழ்ச்சியாகக்கூட இருந்தது.

அனந்து கிழவியை வெறித்துக் கொண்டிருந்த அதே சமயத்தில் அரக்க பரக்க ஓடிவந்தார் முனிசிபாலிடி தனி அதிகாரி...

"என்னய்யா... என்ன கலாட்டா?"

அவரிடம் விவரிக்கப்பட்டது ஏ.எஸ்.பி-யும் தனி அதிகாரியும் ஏரியாவாசிகள் இன்னும் சிலரும் சற்று ஓரமாக ஒதுங்கினர்.

"ஏற்கெனவே மினிஸ்டருக்கு என் மேல கோபம். இப்ப பார்த்து இப்படி கலாட்டா பண்றீங்களே... இந்த டிராஃபிக்ல அவர் மகளோட காரும் சிக்கிக்கிட்டிருக்கு... அஞ்சு நிமிஷத்துல சரியாகாட்டி என் போஸ்ட் அவ்ளோதான்."

"அப்ப எல்லாத்தையும் சரிபண்றோம்னு சொல்லுங்க'.'

"பண்றேன்... பண்றேன்... இப்ப பொணத்தை எடுங்க."

"ஏன் இப்பகூட நீங்க எடுக்க மாட்டீங்களா?"

"அட ஆயிரம் ஐந்நூறை கூட வாங்கிக்கோ... உசுரை வாங்காதீங்க... கார்ப்பரேஷன்ல துப்புரவுத் தொழிலாளிங்கள்லாம் ஸ்டிரைக் பண்றது தெரியாதா?"

பல நூறுகள் கை மாற, கூட்டம் உடனே கலையத் துவங்கியது. பிணத்தையும் அப்படியே சாலை ஓரமாக மடக்கி விட்டனர்.

'பீம்... பீம்...'

'பாம் ...பாம்...' டிராஃபிக் க்ளியரானது. ஓடிப் போய் தன் ஸ்கூட்டரை கிளப்பி முன்னேறப் பார்த்தான் அனந்து. இருந்தாலும் கிழவி எப்படி அப்புறப்படுத்தப்படப் போகிறாள் என்பதை காணும் ஆவலும் உள்ளுக்குள்!

எனவே, சற்று ஓரமாக ஒதுங்கி நடக்கப் போவதை கவனிக்க ஆரம்பித்தான்.

டிராஃபிக் ஒருவழியாக சீராகி முடிந்திருந்தது. "துண்டு விரிச்சிருந்தா இவ்ளோ காசை பாத்துருப்போமா?"

"டேய், உன் ஐடியாவே தனிதாண்டா... நான் பல ஆயிரம் பார்க்க முடியும்னு நினைச்சேன். பரதேசி 800 ரூபாயை கொடுத்து ஒப்பேத்திட்டான்..."

"அதான் சாக்கடை வார்றேன்... லைட் போடறேன்னு சொல்லிட்டான்ல... ஏதோ கிழவிய கொண்டு நமக்கும் காசு; நம்ம ஏரியாவுக்கும் லாபம்னு நினைச்சுக்க வேண்டியது தான்."

"சரி... கிழவியை என்ன பண்ண?"

"நம்ம வேலப்பனை கூப்பிட்டு ஒரு 200 மில்லி வாங்கி ஊத்து... கிழவியை தோள்லேயே தூக்கிக்கிட்டுப் போய் எங்காவது குழியைத் தோண்டிப் புதைச்சிட்டு வந்துடு வான்!"

அந்த கோஷ்டியின் பேச்சு அனந்துவை பெரிதாக பாதித்துக் கொண்டிருந்தது. இப்படியும்கூட ஒரு ஏய்ப்பா...? மனது பதற ஆரம்பித்தது. அப்பொழுது அவனது ஆபீஸ் கிளார்க் அவனைத் தாண்டி நடந்தார். அவனைப் பார்த்து விட்டு,

"என்ன அனந்து... இங்க நின்னுட்டே? தந்தி வந்து லீவு போட்டுட்டு கிளம்பினியே... ஊருக்குக் கிளம்பலை?"

"கிளம்பணும் சார்!"

"போகிறதுக்குள் உடம்ப எடுத்துடுவாங்கதான். கோல் கட்டா என்ன பக்கத்துலயா இருக்கு. ஆனா, அதுக்காக நீ இப்படி நிக்ககறது தப்பு அனந்து."

"அது இல்ல சார்... இங்கு ஒரு கிழவி இறந்துட்டா!" என்று நடந்ததை கூறி முடித்தான்.

"இது கலிகாலம்... இதுவும் நடக்கும்... இதுக்கு மேலேயும் நடக்கும். நம்மளால வேடிக்கைதான் பார்க்க முடியும்."

அவரின் கருத்து அவனை வன்மமாக இடித்தது. முகம் என்னவோ போல் ஆனது.

"ஏன் ஒரு மாதிரி ஆகறே... நான் வேடிக்கை பார்க்கற வன் இல்லைங்கறியா... நாம காசு வேணா போடலாம்

அனந்து! கிழவியைக் காட்டுக்கு எடுத்துட்டுப் போய் நல்லடக்கமா பண்ண முடியும்! கிழவியோட விதி இப்படி அவ சீரழியணும்னு இருக்கு... நீ கிளம்பு.''

விதி, சதி என்று சுற்றிலும் நிற்கும் யதார்த்தங்களை பார்த்தான். பாக்கெட் தந்தியை எடுத்து திரும்ப ஒரு முறை படித்தான்.

'மதர் எக்ஸ்பையர்டு. ஸ்டார்ட் இம்மீடியட்லி! அண்ணா.' என்று இருக்கிறது.

அங்கே போய் பெத்தவங்களுக்கு தான் கர்மம் செய்ய விதி இல்லை. அத்தோட அவளுக்கு கர்மம் செய்ய அண்ணன் இருக்கிறான். இங்கே இந்த கிழவிக்கு யார் இருக்கின்றனர்?

இந்த நிமிஷம் இந்த கிழவிதான் என் செத்துப்போன தாய்... அவன் கால்கள் கிழவியை நோக்கி நடந்தன.

''எங்கே போற அனந்து?''

''அம்மாவுக்கு கர்மம் பண்ணப் போறேன்!'' என்ற அவன் பேச்சில் விதி சதி போன்ற விஷயங்களை ஜெயித்த நிறைவு தொனித்தது.

# 15. காலு சரியில்லாத பொண்ணு!

"ராகுகாலம் வர்றதுக்குள்ள கிளம்பணும். ம்ம்... சீக்கிரம்..." கணேசனை நெம்பிக் கொண்டிருந்தாள் அவன் அம்மா பார்வதி.

"அவசரப்படாதம்மா... ராகு காலம் வந்தா வரட்டும். அண்ணே... நீ அந்த கோட் சூட்டையும் போட்டுப் பார்த்து அளவு சரியா இருக்கான்னு வந்து சொல்லு..." என்று குறுக்கில் நுழைந்தாள் அவன் தங்கை ஷைலஜா.

"எதுலயும் நேரம் காலம் ரொம்ப முக்கியம். நாலு பேர் செய்யாததை நாள் செய்யும்னு சொல்லுவாங்க பெரியவங்க. உங்களுக்கு சொன்னா புரியாது. சட்டுப்புட்டுன்னு கிளம்புங்க." பார்வதி விடுவதாக இல்லை.

அவளுக்கு மனதில் கல்யாணச் சந்தோஷம் .

படாத பாடுபட்டு ஆளாக்கிய பிள்ளைக்குப் பெண் பார்க்கப் போகிறாள். பெண் வீடும் லேசுப்பட்ட இடமில்லை. எம்.ஏ. வரை படித்திருக்கும் பெண். ஒரு இழுத்து கெந்தி நடந்தாலும் லட்சணத்திற்கு குறைவில்லை. காசு பணம் எக்கச்சக்கம்.

பெண்ணின் அப்பாவுக்கு ரெவின்யூ டிபார்ட்மெண்டில் பெரிய உத்தியோகம். தாசில்தார் லெவலுக்கு என்று சொன்னார்கள் .

கரை சேர முடியாமல் தவிக்கும் பெண்களில் யாருக்காவது ஒருவருக்கு வாழ்வு தர வேண்டும் என்பதுதான் கணேசனது லட்சியமும். ஆக அவன் விருப்பத்துக்கு ஏற்ற இடம்.

இந்த பெண் பார்ப்பது பாடுவது, போன்ற சம்பிரதாயத்தில் எல்லாம் உடன்பாடு இல்லை கணேசனுக்கு. எனவே கழுதையோ குதிரையோ நீ பார்த்து சொல்லும் இடத்தில் தாலி கட்டுகிறேன் என்று அம்மா பார்வதியிடம் சொல்லியிருந்தான்.

ஆனாலும் பார்வதிக்கு சம்பிரதாயங்களில் நிறைய நம்பிக்கை உண்டு. ஆகையால் விடாப்பிடியாக அவனை பெண்வீட்டிற்கு அழைத்துக் கொண்டு கிளம்பிக் கொண்டிருக்கிறாள்.

இதோ கிளம்பியாயிற்று...

புதிதாய் வாங்கிய காரில், அவன் டிரைவருக்குப் பக்கத்தில்! பின்னால் பார்வதியும் ஷைலஜாவும்... ஒரு காலத்தில் பத்து பாத்திரம் தேய்த்து போட்டு கணேசன் ஆளாக காரணமாக இருந்திருக்கிறாள் பார்வதி.

வீதியிலுள்ளோர் அவர்களையே வேடிக்கை பார்த்தனர். கணேசனும் வீதியைப் பார்த்தான். அப்படியே திரும்பி அம்மாவை பார்த்தான்.

"ஏம்ப்பா அப்படிப் பார்க்கறே?"

"ஒண்ணுமில்லேம்மா... இதே வீதியில் அப்பா செத்துட்ட பிறகு நாம வாழ்ந்த வாழ்க்கையை நினைச்சுப் பார்த்தேன். இப்ப இருக்கிற நிலையையும் நினைச்சுப் பார்த்தேன். இக்கட்டான நேரத்தில் நீ காட்டுன மனோஉறுதி ஞாபகத்துக்கு வருது..."

"அதுதானேடா மனுஷனோட நிகரில்லாத சொத்து!"

"அது மட்டுமில்லம்மா... நேர்மை, நியாயம், துணிவுன்னு வாழறதுக்கு எவ்வளவோ விஷயம் தேவை. அதெல்லாம் நம்மகிட்ட இருந்ததுனாலதானே நாம முன்னுக்கு வந்துருக்கோம்."

"கூட நல்ல நேரம்ங்கறதையும் சேர்த்துக்கோ..." என்றாள் பார்வதி.

எதுவும் பதில் பேசாமல் சாலையை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான் கணேசன். அப்போது சாலை ஓரமாக போய்க் கொண்டிருந்தான் சாரங்கபாணி, கணேசனின் நண்பன்.

காரை நிறுத்தி சாரங்கபாணியை ஏறிக்கொள்ள சொன்னபோது அவன் கூசினான்.

"பரவாயில்லை கணேசு... நீ போ... எனக்கு வேலை இருக்கு" என்று நழுவினான்.

சாரங்கபாணிக்கு கலெக்டர் ஆபீஸில் குமாஸ்தாவாக உத்தியோகம். இதே வேலைக்கு கணேசனுக்கும் எம்ப்ளாய்மெண்டில் இருந்து கார்டு வந்தது.

கார்டு வந்தால் போதுமா?

'பத்து ரூவாக்கு கொறையில்லாம வெட்டணும்; பத்து ரூவான்னா பத்தாயிரம். இல்லாட்டி இன்டர்வியூ, ரிட்டன் டெஸ்ட் எல்லாம் அவ்வளவுதான். பணம் கொடுக்க முடியுமா உன்னால?' என்றார் அதிகாரி.

'அம்மா பத்து பாத்திரம் தேய்க்கறவங்க. நாங்க எங்க சார் போறது பத்தாயிரத்துக்கு?'

'அப்ப நீகூட அண்டா குண்டான்னு கழுவப் போ. உனக்கெதுக்கு கலெக்டர் ஆபீஸ் ஜோலி?'

'வேலைக்கு படிப்பும் மார்க்கும்தானே சார் தகுதி?'

'என்னா பெரிய படிப்பு? என்னா பெரிய தகுதி? அமெரிக்காரான் சர்டிபிகேட் வேணுமா உனக்கு... இன்ஜினீயர் பட்டத்துக்கு ஒரு ரேட், டிப்ளமோ பட்டம்னா தனி ரேட்... நாட்ல ஜனாதிபதி போஸ்ட்டே ரேட்டுல போய்க்கிட்டிருக்கு!'

'அப்ப படிக்கறதுல அர்த்தமேயில்லையா?'

'ஏன் அர்த்தமில்லாம...? காசு கொடுத்து சர்டிபிகேட் வாங்க வேண்டாம்ல...'

'அப்ப என்னை மாதிரி ஏழைங்களுக்கு வேலையே கிடைக்காதே சார்...'

'ஏன் கிடைக்காம... தள்ளுவண்டில பழம் விக்கலாம். வீடு வீடா போய் அப்பளம், சோப்புன்னு விக்கலாம். பொட்டி கடை வெச்சு பீடி, சிகரெட் விக்...'

'நிறுத்துங்க சார்! நீங்க அதை செய்ய வேண்டியதுதானே?'

'எனக்கென்ன தலையெழுத்து? எனக்கு ஆடற மாட்டை ஆடிக் கறக்கத் தெரியும். பாடற மாட்டை பாடிக் கறக்கத் தெரியும். நானே லஞ்சம் கொடுத்துதான் ப்ரமோஷன் வாங்கியிருக்கேன். லஞ்சத்தை லஞ்சத்தாலேயே அட்ஜஸ்ட் பண்ணிடுவேன்... நான் விட்டதை எப்படிச் சம்பாதிக்கறதாம்?'

அன்று கணேசன் மட்டும்தான் இப்படி வாதப்பிரதி வாதம் செய்தான். ஆனால் சாரங்கபாணி கெட்டிக்காரன் ? அம்மாவின் சங்கிலி அது இதுன்னு வாங்கி விற்று பத்தாயிரம் தந்துதான் உத்தியோகம் வாங்கியிருக்கிறான்.

இப்பொழுது கலெக்டரேட்டில் ஏதாவது கையெழுத்து கால் எழுத்து என்றால் நியாயமாக லஞ்சம் வாங்குவதாக தகவல்

சாரங்கபாணியைப் பார்த்த மாத்திரத்தில் பழைய நினைவெல்லாம் ஓடுகிறது கணேசனுக்குள்.

அதிலும் பணம் கொடுத்தால்தான் வேலை என்று அன்று அழிச்சாட்டியம் செய்த அந்த பெரிய அதிகாரியின் முகம் நினைவுக்கு வந்தது. மதிமந்திரி மாதிரி அவ்வப்போது அறிவுரை கூறிய அம்மாவை பெருமிதத்துடன் பார்த்தான்.

'வீர சிவாஜிக்கு ஒரு ஜீஜாபாய். எனக்கு நீ...' என்று நினைப்பில் பெருமிதம் கொள்ள, பெண்வீடும் வந்து விட்டது.

**வா**சலில் கதவைத் திறந்து கணேசனை பெண்வீட்டார் எதிர்கொள்ள பெண்ணின் அப்பா என்று சொல்லி எதிரே பட்டு வேட்டியுடன் வந்தவரை பார்க்கவும் கணேசனுக்கு தூக்கிவாரிப் போட்டது.

அன்று லஞ்ச உபதேசம் செய்த அதே லஞ்ச மகா பிரபு. எல்லாம் புத்தியில் இருக்கு என்று நெற்றிப் பொட்டில் விரலால் தட்டிச் சிரித்தவர்.

அவர் முகம் அநியாயத்துக்கு மாறியது.

நாம் புறக்கணித்த நபரா இப்படி நம் முன்னால் விசுவரூபம் எடுத்து வந்திருப்பது? விதிர்த்தார்.

வறட்டு சம்பிரதாயங்களின் துவக்கம்.

பெண் வந்தாள்... அவள் கண் நிறைய நம்பிக்கை. இந்த நொண்டியையும் பொருட்படுத்தி வந்து வாழ்க்கை தர இருப்பவனே... என்று நன்றியோடு கணேசனை பார்த்தாள்.

கணேசனுக்கு அந்தப் பெண்ணை பார்க்க ஒரு பக்கம் பரிதாபம். மறுபக்கம் அவள் தகப்பனை பார்த்து இனம் புரியாத அருவருப்பு...

அம்மாவின் காதை கடித்தான்...

''அம்மா இந்த மகானுபாவர்தான் எனக்கு லஞ்ச உபதேசம் செய்தவர். வேலைக்குப் பணம் கேட்ட புண்ணியவான். போயும் போயும் இவன் வீட்லயா சம்பந்தம் வெச்சுக்கறது?''

கணேசன் காதை கடிப்பதை அவரும் கவனித்துவிட்டு அவரது மனைவியிடம்,

''அடியே... இந்த இடம் கூடிவராது. இந்த பிள்ளையை எனக்கு முந்தியே தெரியும்...''

''ஏங்க கூடி வராது?''

''வராதுன்னா வராது. எல்லாம் நான் பண்ண பாவம்...''

''நீங்க சொல்றது புரியலையே...''

''உனக்குப் புரிய வேண்டாம். நம்ம பொண்ணை உள்ள கூட்டிக்கிட்டுப்போ...''

''அட என்னங்க நீங்க... ஜாதகப் பொருத்தத்துல இருந்து பேர் பொருத்தம் வரை எல்லாம் ரொம்ப ஜோரா பொருந்தியிருக்கிற இடம் இது. பையனும் நல்லா இருக்கான். நம்ம பொண்ணோட குறை தெரிஞ்சிதானே கட்டிக்க வந்திருக்காங்க. பணம் காசுல இடிச்சா இந்த வீட்டை வித்தாவது சீர் செய்துடலாம். எப்படியாவது முடியுங்க...''

அவள் பேசப் பேச அவர் குமைந்து போனார். அதற்குள் கணேசனும் பார்வதியும் பேசி ஒரு முடிவுக்கு வந்திருந்தனர்.

கணேசன் எழுந்து வெளியேறி காரில் போய் உட்கார்ந்து கொண்டான்; கூடவே ஷைலஜாவும்! கல்யாணப் பெண்ணுக்கு தலை சுற்றாத குறை.

''ஏன் மாப்பிள்ளை எழுந்து போயிட்டாரு. நீங்க எதிர் பார்க்கறதுக்கும் மேல சீர் செய்யறோம். அவரைக் கூப்பிடுங்க.'' அலறினாள் பெண்ணின் அம்மா.

பார்வதியின் முகத்தில் அர்த்தபுஷ்டியுள்ள மவுனம்...

''கொஞ்சம் தனியா வர்றீங்களா?'' பெண்ணின் அப்பாவை தனியாக அழைத்தாள் பார்வதி.

''எனக்குத் தெரியும், நீங்க என்கிட்ட இனி சம்பந்தம் வெச்சுக்க மாட்டீங்கன்னு. உங்க பையனை ஒரு காலத்துல நான் ரொம்ப துச்சமா பேசினவன்; லஞ்சம் கேட்டவன்...''

அவரே தனியறையில் ஆரம்பித்தார். மவுனமாக இருந்தாள் பார்வதி.

''அதனால என்ன... கால்ல விழுந்து மன்னிப்பு கேட்டுக்கறோம். இப்பகூட இவர் மனசு வெச்சா பத்து பேருக்கு வேலை வாங்கித் தர முடியும். சர்வீஸ் கமிஷன் அதிகாரிகளே இவருக்கு நேரடிப் பழக்கம். அந்த வகைல ஒரு இரண்டு லட்சம் அன்பளிப்பா வரும். அதை அப்படியே தந்துட

றோம். எங்க பொண்ணை வேண்டாம்னு சொல்லிடாதீங்க. உங்க கால்ல விழறோம்...''

இது அவர் மனைவி. அதை கேட்டு புன்னகையோடு வாயைத் திறந்தாள்...

''இந்த கல்யாணம் நடக்கும். ஆனா ஒரு கண்டிஷன்...'' என்றாள் மெலிதாக.

''என்ன... இனி லஞ்சம் வாங்கப் போறதுல மாப்பிள்ளைக்கும் ஒரு பங்கு கமிஷன் தரணுமா? தந்துடறேன்.'' பதட்டத்துடன் கேட்டவரை சற்று கோபத்துடன் முறைத்தாள் பார்வதி.

''என்ன? நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா?'' பதிலுக்கு மேலும் பதறினார் அவர்.

''நீங்க முதல்ல மனுஷன் மாதிரி பேசுங்க...'' சற்று உரக்கவே கத்தினாள்.

''நான் என்ன செய்யணும்?'' இப்போது அவரிடம் கெஞ்சல் தெரிந்தது.

''கற்பூரம் ஏத்தி சத்தியம் செய்யணும். பெத்த பெண் தலையில் அடிச்சு சத்தியம் செய்யணும். நீங்க பொண்ணுக்கு சீர் செனத்தின்னு ஒரு காசுகூட செலவு செய்யக் கூடாது. அவ முகூர்த்தத்தின்போது வக்கிற பொட்டுகூட என் மகன் சொந்த காசில் வாங்கித் தந்ததைத்தான் வெச்சுக்கணும்.

அது மட்டுமில்லாமல் இனி யார்கிட்டேயும் இனி காலணா லஞ்சம் வாங்க மாட்டேன்னு சத்தியம் பண்ணணும். இதுதான் நீங்க எங்க பையனுக்கு தரப் போற சீர். அப்படின்னா கல்யாணம். இல்லேன்னா...''

அவர் அப்படியே பார்வதியம்மாவின் காலில் கண்ணீரு டன் வேரற்ற மரம் மாதிரி விழுந்தார்.

வெளியே காரில் அம்மாவின் அந்த கோரிக்கை நிமித்தம் நெகிழ்ந்துகொண்டிருந்தான் கணேசன்.

# 16. ஒரு வீரனின் வாழ்க்கை!

கி.பி. 1685-ம் வருடத்தில் ஒரு நாள்...

மறவர் சீமை என்றும் மாவீரர்களின் சாம்ராஜ்யம் என்றும் போற்றப்பட்ட ராமநாதபுரத்துக்குள், அதாவது சேது நாட்டுக்குள் வீரவாஞ்சேரி என்னும் ஒரு சிற்றூர்.

கருவேலங்காடும் கானாக்குருவிகளின் கூட்டமுமாய் திகழ்ந்த வீரவாஞ்சேரியில்தான் இருந்தது சேது நாட்டு அரண்மனையின் ஒற்றன் வீரசிங்கத்தின் மனை.

அந்த மறவன் மனையின் பின்பாகத்தில் ஒரு குதிரை லாயமும், கூடவே ஒரு கருமான் பட்டறையும் சேர்ந்தே இருந்தன. பட்டறையில் பெரும்பாலும் வீச்சரிவாளும் கட்டாரிகளும்தான் தயாரிக்கப்பட்டு வந்தன. குதிரை லாயத்திலும் எப்போதும் ஒன்றுக்கு நான்கு குதிரைகள் லாடம் கட்டுவதற்காக நின்றபடி இருக்கும்.

வீரசிங்கத்தின் அண்ணனும் சிலம்பத்தில் கரை கண்டவனுமான கந்தமாடன்தான் அந்த பட்டறையை கருமார்களைக் கொண்டு நிர்வகித்து வந்தான். வீரசிங்கம் அரண்மனைக்கு புறப்படும் சமயம் கந்தமாடனும் வீச்சரிவாளை எடுத்த வீசி எறிந்து பார்த்தபடி இருப்பான். அவன் எறிந்து பார்க்க தோதாக எதிரில் ஒரு மருத மரமும் இருந்தது. அதன் அடிப்பாகம் முழுக்க வீச்சரிவாளால் உண்டான காயங்கள் மிகுந்து காணப்பட்டன.

இதை எல்லாம் பார்த்தபடியே புரவியைப் பிடித்துக் கொண்டு சேது அரண்மனையாகிய ராமலிங்க விலாசம் நோக்கிப் பயணிப்பதுதான் வீரசிங்கத்துக்கும் வழக்கம். அன்றும் வீரசிங்கம் புறப்பட்ட சமயம் எதிரில் கந்தமாடனும் அவன் இளமக்கள் இருவரும் சிலம்பப் பயிற்சியில் ஈடு பட்டிருந்தனர்.

தனக்கு பின் தன் வாரிசுகளை உருவாக்கிடும் முஸ்தீபுக் குள் கந்தமாடன் இருப்பதும் வீரசிங்கத்துக்கு புரிந்தது.

அவன் மக்களும் வீரசிங்கத்தை பார்த்துவிட்டு சின்னப்பா என்றபடி ஓடிவந்தனர். ஒருவனுக்கு வயது பத்தாகிறது. அடுத்தவனுக்கு எட்டாகிறது. இவருக்கும் சின்ன பெருமாள், பெரிய பெருமாள் என்று பெயர்.

கந்தமாடன் திருப்புல்லாணி தர்ப்பசயனப் பெருமாளின் ஆப்த பக்தன். எனவேதான் இரு மக்களுக்கும் பெருமாள் பெயரையே வைத்து விட்டான். ஆனால், வீரசிங்கம் அப்படி இல்லை. வீரசிங்கத்துக்கு இரு பெண்கள். ஐந்து வயதில் ஒருத்தி. அவள் பெயர் வாடாமல்லி. அடுத்தவள் பெயர் செவ்வந்தி. பொதுமையான பூக்களின் பெயர்களைத் தன் பெண்களுக்கு வைத்து விட்டான். அவர்கள் இருவரும் மனைக்குள் வீரசிங்கத்தின் மனைவி வஞ்சிக்கொடியுடன் கூடி பல்லாங்குழி விளையாடிக் கொண்டிருந்தனர். சோழிக் குப் பதிலாக கொற்கையில் முத்துக் குளிக்கையில் அகப் பட்டிருந்த ஊளை முத்துக்களை அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

வீரசிங்கன் தன்னை வந்து கட்டிக்கொண்ட சின்ன பெரு மாளையும் பெரிய பெருமாளையும் பார்த்து,

"எலே மக்கா... மனைக்குள் உங்க தங்கச்சிங்க பல்லாங் குழி ஆடுறாங்க. இங்க நீங்க செலம்பம் கத்துக்கிறீங்களோ?" என்று கொஞ்சலாக கேட்டான்.

''ஆமாம் சின்னய்யா. அப்பா நாளைக்கு நரி வேட்டைக்குப் போகையில. வேட்டையாடவும் கத்துக் கொடுக்கப் போறதா சொன்னாரு...'' என்றான் சின்ன பெருமாள்.

''மீசை முளைக்குமுன்ன அண்ணன் தனக்கு தெரிஞ்ச அம்புட்டையும் சொல்லிக் கொடுத்துடறதுன்னு முடிவு செய்துட்டார் போல...'' என்றபடியே வீரசிங்கன் அண்ணன் கந்தமாடனை பார்த்தான்.

கந்தமாடனிடம் ஒரு ஆமோதிப்பு பாவனை.

''சரிண்ணே... நான் அரண்மனை வர போய்ட்டு வந்துடறேன்...''

''நல்லது வீரசிங்கா! கவனமா போய்வா!''

''உங்கிட்ட ஒரு விஷயம் கேட்கணும்னு... நம்ம சேதுபதிராசா மருதைக்குப் போய் நாயக்கரை பார்த்து பேசிட்டு வந்திருக்காரோ?''

''ஆமாண்ணே! மருதைல நாயக்கருக்கு நாலாபக்கம் இருந்தும் சிக்கல். குறிப்பா அங்க இருக்கிற ருஸ்தம்கான்கிற ஒரு குதிரைப்படை தளபதி நாயக்கரை விரட்டிட்டு அவனே நாடாள உக்காந்துடுவானோங்கற அளவுக்கு ஒரு பேதலிப்பு இருக்குது. நாயக்கர் வெட்கத்தை விட்விட்டு நம்ம சேதுபதி ராசா உதவியைக் கேட்டிருக்காரு. மதுரை மண்ல வெச்சு பெரிய விருந்துபசாரமெல்லாமும் நடந்திருக்கு!''

''ஹூம்... ஒரு காலத்துல நம்ம கிழவன் சேதுபதி ராசா பேர்லயே நாயக்கருக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது. ஆனா, இப்ப பார்... நம்ம உதவி இல்லாட்டி நாடே பறிபோயிடற ஒரு நிலை!''

''அதாண்ணே காலமாற்றம்கறது... சரிண்ணே! நான் போய்ட்டு வந்துடறேன். தேவிப்பட்டணத்துலயும் அழகன் குளத்துலயும் பரங்கி ஆட்கள் வந்து தங்கிகிட்டு மீனவ சனங்ககிட்ட ரொம்ப இணைக்கமா நடந்துக்கறதா ஒரு தகவல்.

அவங்களுக்கும் நம்ம ஓரியூர் பாதிரியார்க்கும் சம்பந்தம் இருக்குதான்னு பாக்கற சோலி எனக்கு. நம்ம ராசாவே மந்திரி மூலமா எனக்கு தகவல் சொல்லி விட்ருக் காரு. ஆகையால நான் திரும்பி வர ரெண்டு நாள்கூட ஆகலாம்.''

''பார்த்து சிங்கா... சூதானமா நடந்துக்க. பரங்கி ஆளுங்க கிட்ட துப்பாக்கியெல்லாம் இருக்கும். அவங்க ஒரு துப்பாக்கியும் சரி நம்ம நூறு கட்டாரியும் சரி... ஒண்ணுக்கு கொண்ணு சமம்.

''சரிண்ணே... நான் வரரேன். நீ வஞ்சிக்கொடியையும் என் மக்களையும் ஊருணிப் பக்கம் போக விடாம பாத்துக்க. ஊருணியைக் கண்டா என் மக்கள் இறங்கிக் கும்மாளமடிக்க ஆரம்பிச்சிடறாங்க...''

வீரசிங்கன் தன் சகோதரனிடம் வாஞ்சையும் பாசமும் ததும்ப பேசிக் கொண்டே தன் புரவியின் மேல் ஏறி அமர்ந்த அந்த நொடி ஒரு கூர்மையான கட்டாரி கந்தமாடன் மார்பை பிளந்து கொண்டு ஐந்தாறு அங்குல ஆழத்துக்கு உள் இறங்கி விட்டது. கந்தமாடனும் அப்படியே துவண்டு போய் மண் மீது விழ, வீரசிங்கனிடம் பேச்சு மூச்சுமில்லை.

நிமிர்ந்து பார்த்தபோது கந்தமாடன் மகன்களில் மூத்த மகன்களில் மூத்தவன் பெரிய பெருமாள்தான் கட்டாரியை எறிந்திருந்தான். அவன் மரத்தை நோக்கித்தான் எறியப் பார்த்தான். கந்தமாடன் விதி தவறாக இருக்கும்போது அது எப்படி மரத்தில் போய் தைக்கும்?

கந்தமாடன் உயிரும் சில நொடிகளிலேயே ஒரு பெரும் துடிப்பிற்கு பின் அடங்கியது. வீரசிங்கனால் அந்த காட்சியை சகிக்க முடியவில்லை.

கந்தமாடன் போன்ற வீரர்களுக்கு போர்க்களத்தில மார்பில் கத்திப் பட்டுத்தான் உயிர் பிரியலாம். ஆனால் இது என்ன மகன் கையால்? ஓ! எவ்வளவு மோசமான விதி?

வீரவாஞ்சேரி முழுக்க தொம்தொம் என்று சட்டிப் பானை முரசு ஒலிக்க வப்பாளத்தான் என்னும் ஊர் சொல்லி ஊருக்கு கந்தமாடனின் சாவைப் பற்றியும், அவனுக்கு நடக்க இருக்கும் தகனக்கிரியை பற்றியும் கூறியதோடு கூடவே கந்தமாடன் மனைவி ஆராயி உடன்கட்டை ஏறப் போவதையும் சொல்லிவிட்டு அகன்றபோது அதைக் கேட்டு ஒருவர் முகத்திலும் சுரத்தில்லை.

அவன் சொன்ன செய்திக்கேற்ப ஊரின் அக்னி மூலை பாகத்தில் ஒரு கல் மண்டபம் அருகே சிதை குழி சுத்தப் படுத்தப்பட்டு குழிக்கு அருகில் சரிவான மேடை ஒன்றும் கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. பனை மரத்துண்டுகளும் மூங்கில் கழிகளும் அந்த மேடைக்குப் பயன்பட்டபடி இருந்தன.

அப்போதே ஊரின் பலர் அதை வேடிக்கை பார்த்த படியே கூட ஆரம்பித்து விட்டனர். சிறிது நேரத்திலேயே கந்தமாடன் சடலமும் ஒரு வீரனைப் போல அலங்கரிக்கப் பட்ட சிதை குழிக்கு வந்து சேர்ந்தது. அதன்பின் வண்டி களில் வந்து கொட்டப்பட்டிருந்த விறகுகளை எடுத்து வேப்பெண்ணெயில் நனைத்து சிதைமேல் வைத்து மூடவும் செய்தனர்.

வீரசிங்கன் கண்ணீரும் கம்பலையுமாக துடித்தபடி நிற்கும் அவன் மக்களான சின்ன பெருமாளையும் பெரிய பெருமாளையும் அணைத்துக் கொண்டு நிற்க, ஒரு சப்பரத்தில் தேவதை போல ஆராயியும் வந்து சேர்ந்தாள். ஆராயியின் கண்கள் கறுப்புத் துணியால் கட்டப்பட்டிருந் தன. திருமண வேளையில் கட்டிக் கொண்டிருந்த பரமக்குடி புடவையையும் தங்கத் தாலியையும் பார்க்க வெகு அழகாக இருந்தாள். ஆனால், முகத்தில் தன் இரு மகன்களை தத்தளிக்கவிட்டு கணவனோடு உடன்கட்டை ஏறி

சொர்க்கத்திற்கு செல்லப் போகின்ற அந்த பீதி நன்றாகவே தெரிந்தது.

உயிரோடு இருக்கும் தாயும் உடன்கட்டை ஏறப் போவதை பார்த்த சின்ன பெருமாளும் பெரிய பெருமாளும் பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினர். அந்த அழுகை ஆராயியின் காதில் விழுந்திட, அவளும் குமுறி அழ ஆரம்பித்தாள். ஆனால், எவ்வளவு துடித்தாலும் அழுதாலும் தான் உடன்கட்டை ஏறாவிட்டால் தன்னையோ தன் சமுதாயத்தையோ இந்த ஊர் மதிக்காது... முகம் கொடுத்தும் பேசாது என்பதுதான் அன்றைய நிலைப்பாடு.

கணவன் கந்தமாடன் ஆத்மாவும் மனைவியின் துணை இன்றி சொர்க்கம் புக முடியாமல் தத்தளித்தபடியே ஊரைச் சுற்றிவரும். இதனால் ஊரில் தோஷம் ஏற்பட்டு மழை பெய்யாது நோய் நொடி பெருகி ஊரே அழிந்துவிடும் என்பதெல்லாம் அன்று உறுதியாக நம்பப்பட்ட விஷயங்கள்.

அதை மீறி உயிர்வாழ யாரும் விரும்பவில்லை.

பிள்ளைகள் இருக்க தாய்க்காரி ஊர்த் தலையாரி அனுமதி பெற்று உயிர்வாழ முயற்சிக்கலாம். ஆனாலும் குடும்பப் பெருமை, பரம்பரை மானம் என்கிற விஷயங்கள் அவர் களையும் உடன்கட்டை ஏறத் தூண்டியதுதான் கொடுமை.

அப்படி ஒரு கொடுமை நடந்தேறியது. சிதையை ஒட்டி கட்டப்பட்ட மூங்கில் மேடை ஏறி கண்ணீர் திரள கைகளைக் குவித்தபடியே நடுநடுங்க நின்ற ஆராயியை ஒரு கட்டத்தில் சிலர் பிடித்து தள்ளிவிட, வானைத் தொடுமளவு எழும்பிய தீ நாக்குகள் உயிருள்ள அவள் உடம்பையும் விழுங்கி பதிலுக்கு சாம்பலையும் தர தயாராயின.

சில மாதங்கள் சென்றிருக்கும். கந்தமாடன் மக்களையும் தன் மக்களாகவே கருதி வளர்க்கத் தொடங்கி விட்டான் வீரசிங்கன். அவர்களும் தாயையும் தந்தையையும் இழந்த துக்கத்தில் இருந்து மீண்டுவிட்ட நிலையில் ஒரு நாள்...

வீரசிங்கன் தன் மனைவி வஞ்சிக்கொடியிடம் சொல்லிக் கொண்டு தேவிப்பட்டணம் துறைமுகப் பக்கமாய் உளவறியப்போனபோது கூடவே போனான் சக உளவாளி ராமய்யா

ராமய்யாவுக்கும் நாலு பிள்ளைகள். சொப்பு சொப்பாக இருந்தார்கள் அவர்கள்... ராமய்யா மனைவி ரஞ்சிதமும் நல்ல அழகி... பொரிவிளங்காயும் மனோகரமும் செய்து ஒரு மூட்டையாக கட்டிக் கொடுத்துவிட்டிருந்தாள்.

செல்லும் வழியில் ஒரு தென்னந்தோப்பில் அமர்ந்து அந்த இனிப்புப் பண்டத்தை இருவரும் சுவைத்தபோதுதான் அந்த கொடுமையான விஷயம் நடந்தேறியது.

சாப்பிட்ட களைப்பில் காலை நீட்டி கண்ணயர்ந்த வீரசிங்கனை ஒரு நல்லபாம்பு தீண்டிவிட்டு ஓடியும் விட்டது. அதைப் பார்த்த ராமய்யாவுக்கு ஒரு கணம் மூச்சே நின்றுபோனது.

ஐயோ! என்ன ஒரு கொடுமை இது...

சில மாதங்களுக்கு முன்தான் அண்ணன் போய்ச் சேர்ந் தான். அதுவும் பரிதாபமாய்... இன்று விதி தம்பியையும் விட வில்லை.

இது அவன் மனைவி வஞ்சிக்கொடியையும் விடாதே?

ராமய்யாவால் அதற்கு மேல் நினைக்கவே முடியவில்லை. ஊரே ஒன்று திரள, வீரசிங்கன் சடலம் எரிகிறது. மூங்கில் மேடைமேல் இருந்து கண்களுக்கு கறுப்புத் துணி கட்டிக் கொண்டவளாக தேங்கித் தேங்கி நிற்கும் வஞ்சிக்கொடியை சில விதவைப் பெண்கள் குலவை போட்டபடி சிதை நெருப்புக்குள் தள்ளியும் விடுகின்றனர்.

அதை காண சகியாமல் வஞ்சிக்கொடி மக்கள் மயங்கி விழுகின்றனர்.

என்ன ஒரு கொடிய காட்சி?

எண்ணிப் பார்த்த ராமய்யா சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவனாய் அங்கேயே அருகில் ஆழமாக ஒரு குழியை தோண்டத் தொடங்கினான். நல்லவேளை. ஆளரவ மில்லை. அதில் வீரசிங்கன் உடம்பை கண்ணீருடன் இழுத் துப் போட்டு மூடவும் செய்தான். பின் மண்டியிட்ட அமர்ந் தவன் 'என்னை மன்னித்துவிடு நண்பா. என் வரையில் நீ சாகவில்லை. சாகவும் கூடாது. உன் மனைவி மக்கள் நன்றாக இருக்க வேண்டுமானால் நீ இறந்தும் உயிர் வாழ்ந்தே தீரவேண்டும். பாழாய்ப்போன உடன்கட்டைச் சடங்குகள் மண்ணோடு மண்ணாகும் வரை நீ மண்ணாகாமல் இருந்தே தீர வேண்டும். என்னை மன்னித்து விடு. உண்மையில் இப்போதுதான் உன் ஆன்மா சாந்தியடையக்கூடும், என்று மனதுக்குள் உருக்கமாக பிரார்த்தனை செய்து கொண்ட ராமய்யா, அப்படியே நேராக அரண்மனையில் அமைச்சர் வள்ளல் சீதக்காதியின் முன்பு போய் நின்றான்.

''அமைச்சரவர்களே! நம்முடைய வீரசிங்கனை சில பரங்கியர்கள் தங்கள் கப்பலில் ஏற்றிக் கொண்டு தங்கள் நாட்டுக்கு கொண்டு சென்று விட்டனர். நான் எவ்வளவு முயன்றும் என்னால் தடுக்க முடியவில்லை. ஆனால், வீரசிங் கன் மாவீரன்... நிச்சயம் இன்றில்லை நாளை அவர்களிடம் இருந்து தப்பித்து வந்து விடுவான்...'' என்றான்.

சீதக்காதி முகத்தில் ஏராளமான அதிர்வலைகள். ராமய் யாவுக்கோ ஒருவருக்கு ஐவரை காப்பாற்றிவிட்ட திருப்தி யும் மனச்சாந்தியும் ஏற்பட்டு அவனை ஒரு பெருமூச்செறிய விட்டது .

அவன் மனைவி மக்களும் தன் கணவனுக்காக காத்திருக் கத் தொடங்கிவிட்டனர். அவர்களை பாவிகள் என்பதா... புண்ணியம் செய்தவர்கள் என்பதா?

# 17. தவப் பிழைகள்!

அந்த விஷயத்தை கேள்விப்பட்டபோது அனந்த நாபனுக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது. பலத்த அதிர்ச்சி. திக்குமுக்காடிப் போனார் என்றுகூட சொல்லலாம். அவர் மனைவி விசாலம் சமையல் காரியங்களில் கர்ம சிரத்தையாக இருந்தாள். சமையல்கட்டில் ஒரு பக்கம் அவள் கறிகாய் நறுக்கிக் கொண்டிருக்க, மறுபடியும் கிரைண்டர் ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு காரியத்தில் தன்னை மறந்துபோவதும் சற்று தவத் தோடு சேர்த்திதான். எனவே, அவள் தவத்தைக் கலைத்து தன் காதில் விழுந்த அந்த தகவலை அவளிடம் பகிர்ந்து கொள்ள அனந்துவுக்கு சற்று தயக்கமாகக்கூட இருந்தது.

ரிட்டயர் ஆகிவிட்டவர்களுக்கென்று சில அடையாளங் கள் இருக்கின்றன. அதில் கைவைத்த பனியனும், பழுப் பேறிப்போன வேட்டியும் ஒன்று. அவர்களுக்கென்றே சில இடஒதுக்கீடுகளும் காலங்காலமாக இருந்து வருகிறது. குறிப்பாக வராண்டாவும் அதில் போடப்பட்டிருக்கும் பிரம்பு நாற்காலியும் என்று சொல்லலாம். ஃப்ளாட் வீடாக இருந்தால் பால்கனி! மேற்படி அடையாளங்களும் இடஒதுக் கீடும் அனந்துவும் பெற்றிருப்பவர். பேசாமல் அந்த நாற்காலி யில் போய் உட்கார்ந்துவிட்டார். அல்பமான ஊறுகாய் ஜாடிக்கெல்லாம் ஒரு மூடி இருக்கிறது. ஆனால், மனிதக் காதுகள் இரண்டுக்கும் அது இல்லாமல் போனது

பிரம்மனிடமும் கவனப் பிசகு இருப்பது போல அவரை எண்ண வைத்தது.

இரண்டு காதுக்கும் இரண்டு மூடி இருந்தால் ஒரு வேளை அந்த செய்தியில் இருந்து தப்பித்திருக்கலாம் என்று தோன்றியதால் புத்தி இப்படி எல்லாம் யோசிக்கிறது.

நடுவில் அவர் மனைவி விசாலம் அவரது யதாஸ்தான மான வராண்டா பக்கம் வந்து எட்டிப் பார்த்தவளாக,

''ஒரு வா காபி தரட்டுமா?'' என்று கேட்டாள் .

''இல்ல வாண்டாம்.''

''சமையல் முடிய கொஞ்சம் நாழி செல்லும்...''

''பரவால்ல...''

''என்ன பரவால்ல... டிகாக்ஷன் மிச்சமா இருக்கும்போது உங்களுக்கு காபி கேக்கவே தோணாது. காபி பொடி தீர்ந்த அன்னிக்கு நூறு தரம் கேப்பீங்க. உங்கள திருத்த முடியாது...'' என்று அலுத்துக்கொண்டே போனாள் விசாலம்.

அந்த அதிர்ந்த கனத்திலும் ஒரு சின்னச் சிரிப்பை அவர் உதடிரண்டும் சிந்தி முடித்தன. அந்தச் செய்தி ரத்தத்தில் கலந்துவிட்ட விஷம் மாதிரி அவர் சித்தத்தில் ஓடியபடியே இருந்தது.

செய்தி இதுதான்...

''அனந்தா! நீ சொன்னேன்னு பெங்களூர்ல வேலைல இருக்கற உன் பெண் அகல்யாவைப் பார்க்க ஹாஸ்டலுக்கு போயிருந்தேன். அவ இப்ப ஹாஸ்டல்ல இல்ல! கூட வேலை பார்க்கற வர்ஷன்கற ஒரு பையனோட தனியா ஒரு ஃப்ளாட் வீட்ல இருக்கானு கேள்விப்பட்டு எனக்கு ஒரே ஷாக்! சரின்னு அந்த ஃப்ளாட் வீட்டுக்கும் போனேன். கிட்டத்தட்ட அங்க அவங்க இரண்டும் பேரும் குடும்பம் நடத்திக் கொண்டிருக்காங்க. எனக்கு திரும்பவும் ஷாக்!

ஆனா, உன் பொண்ணு என்னைப் பார்த்து கொஞ்சம் கூட ஷாக் ஆகலை. வாங்க மாமான்னு என்ன கூப்பிட்டு ஒரே தடபுடல் உபசாரம். அந்த பையனும் நல்லாவே பேசினான்.

என்னம்மா இது... ஹாஸ்டல் என்னாச்சுன்னு கேட்டேன். அதைவிட ஃப்ளாட் செளகர்யமா இருக்குன்னு சொன்னா. வர்ஷன் கூட இருக்கறதால பாதுகாப்பா இருக்கறதாவும் சொன்னா...

நானும் விடலை. வர்ஷன்கற அந்த பையனை காதலிக்கிறயா நீ? உன் அப்பாகிட்டே சொல்ல பயமா இருக்கா... நீ என்கிட்ட சொல், நான் உன் அப்பன்கிட்ட சொல்றேன்னு சொன்னேன்.

இந்த நிமிஷம் வரை அப்படி எல்லாம் இல்லைன்னா. இது ஒரு ப்ரீ மேரீட் லைஃப்! அதாவது ஒத்திகை வாழ்க்கையாம். கொஞ்ச நாள் இப்படியே இருப்பாங்களாம். இதுல ரெண்டு பேர் மனசும் ஒத்துப்போனா, அதாவது எல்லா விஷயத்துலயும்... எப்படி இருக்கு பார்.

ஒத்துப்போனா கல்யாணம் பண்ணிப்பாங்களாம். இல்லைன்னா நட்போடு பிரிஞ்சிடுவாங்களாம். ரொம்ப கூலா சொல்றா உன் பொண்ணு

அவ கால்ல அவ நிக்கணும்கறதுக்காக அவளை ரொம்ப சிரமப்பட்டு படிக்க வெச்சே. நல்ல வேலையும் கிடைச்சது. வேலைக்கும் அனுப்பி வெச்சே. ஆனா, அவ வாழற விதம் இப்படி இருக்கறதை நினைச்சா ரொம்ப கஷ்டமா இருக்கு. இந்த தலைமுறைக்கு மேரேஜ் லைஃப்கூட ஒரு டெஸ்ட் பீஸா போச்சு!'' என்று ஒரு பாட்டம் புலம்பிவிட்டு போயிருந்தார் அனந்துவின் நண்பர் ஆத்மநாதன்.

''டேய் ஆத்மா...'' என்று அனந்து அவரைக் கூப்பிடும் போது அத்தனை அழகாக இருக்கும். உயிரோடு பேசுகிற மாதிரியும் இருக்கும்.

அவரும் அனந்துவின் உயிருடன்தான் பேசிவிட்டுப் போய் விட்டார்.

அனந்துவுக்கு திக்திக்கென்றிருந்தது. தன் மகளா இப்படி? என்கிற கேள்வி சீண்டப்படும்போதெல்லாம் சீறி எழும் நாகம் கணக்காக எழும்பிக் கொண்டே இருந்தது.

ஒது முறை அனந்து அவரது அப்பாவின் சட்டை பாக்கெட்டில் இருந்து ஒரு நாலணா காசை திருடிவிட்டார். அதை அவர் அப்பாவும் உணராத நிலையில் அந்த திருட்டு ஒரு தொடர்கதையாகிப் போனது. பல நாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டாக வேண்டும் என்று ஒரு கணக்கு இருக் கிறதே? அப்படி ஒரு நாள் அனந்து அப்பாவிடம் மாட்டிக் கொண்டார். ஆனால், அவர் அப்பா அனந்துவை துளிகூட கோபிக்கவில்லை. மாறாக தன்னைத்தான் நொந்து கொண்டார்.

''நான் எங்கயோ தப்பு பண்ணியிருக்கேன். என் வாழ் நாள்ல நான் காசு திருடினதில்லை. ஆனா, எனக்கே தெரியாம நான் எதையோ திருடியிருக்கேன். அதுதான் என் உயிர்த்துளி வழியாக புகுந்து இப்ப உன் மூலமா எனக்கு வெளிப்பட்டிருக்கு. இது உன் தப்பு இல்ல... என் தப்பு'' என்று அன்று அவர் பேசியது போல எந்த ஒரு தகப்பனும் பேசியிருக்க மாட்டார்.

அனந்துவை அது மிகவே யோசிக்க வைத்தது.

அவர் திட்டி அடித்திருந்தால்கூட அது வழக்கமான அப்பாத்தனம் ஆகியிருக்கும். ஆனால், அனந்துவின் பிழையை அவர் தன் பிழையாக கருதியது அனந்துவை நிறையவே யோசிக்க வைத்து நிறையவே சலவையும் செய்துவிட்டது. இன்று தன் மகள் தனக்கே தெரியாமல் பவித்ரமான குடும்ப வாழ்க்கையையே ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பது தெரியவரவும், இதில் தன் பிழை எங்கே இருக்கிறது என்றுதான் புத்தி யோசித்தது.

விதியைப் பற்றி எல்லோரும் அடிக்கடி பேசியிருக்கிறோம். எல்லாம் என் தலைவிதி என்று அலுத்துக்கொள்ளாதவர்கள் ஒருவர்கூட இருக்கமுடியாது. அனந்துவும் இப்போது விதியை பற்றி யோசிக்கிறார்.

எந்த விதி இப்படி அவரது மகள் அகல்யாவை செலுத்திக் கொண்டிருக்கிறது? கேள்வியும் குழப்பமுமாகவே பொழுது ஓட ஆரம்பித்தது. சாப்பிடும்போதும் ஸ்மரணையே இல்லை. விசாலமும் கவனித்தாள்.

"என்ன ஆச்சு உங்களுக்கு? ஏன் இப்படி இருக்கீங்க?"

"ஒண்ணுமில்ல விசாலம்..."

"அப்ப மனசுல ரத்தம் வடியுற அளவுல ஏதோ விவகாரம் இருக்குன்னு அர்த்தம். உங்களை எனக்கு தெரியாதா? நம்ம கல்யாண பந்தத்துக்கு வயசு இப்ப முப்பத்தி மூணுங்க. இதுல நான் உங்களுக்குள்ள எவ்வளவு தடவை புகுந்து வந்திருப்பேன். நீங்களும் எனக்குள்ள எவ்வளவு தடவை கலந்திருப்பீங்க.

இவ்வளவு காலத்துக்குப் பிறகும் உங்க வலிக்கும் மௌனத்துக்கும் எனக்கு அர்த்தம் தெரியலைன்னா நம்ம தாம்பத்ய வாழ்க்கைலதான் கோளாறு இருக்குன்னு அர்த்தம்..."

விசாலம் ஏறிப் பிடித்தாள். புகுந்து கலந்து என்ற அவள் சொன்ன விதங்களில் நல்ல ரசனை. அதுதானே உண்மை?

எப்பொழுதும் மனதுக்கும் உடம்புக்கும் ஒரு நெருங்கின தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. அது வேலை செய்யத் தொடங்கியது. அனந்துவை அது ஹார்ட் அட்டாக்கிற்கு மிக சமீபத்தில் கொண்டு போய் நிறுத்திவிட்டது. பதறத்தான் முடிந்தது விசாலத்தால். துணைக்கு வந்த ஆத்மநாதன், அனந்துவை ஹாஸ்பிட்டலில் சேர்த்தார். ஹார்ட் சமாசாரம் என்றாலே டாக்டர்கள் இப்பொழுது ரிஸ்க் எடுப்பதேயில்லை. இன்டென்ஸிவ் கேரில் அவரைக் கொண்டு

போய் போட்டுவிட்டனர். கூடவே மூக்கிலும் நாக்கிலும் குழாய்களைச் செருகி அருகேயும் இருக்க விடவில்லை. ஒரே பதைப்பாக இருந்தது விசாலத்துக்கு... கூடவே ஆத்மநாதன்.

"அண்ணா..."

"கவலைப்படாதே. வயசானா இதெல்லாம் சகஜம்..."

"இல்லண்ணா... இது முதுமையால வரலை. அவருக்குள்ள ஏதோ கவலை..."

விசாலம், ஆத்மநாதனை நெருக்கினாள்.

"அப்ப அனந்து உன்கிட்ட உன் பொண்ணைப் பத்தி எதுவும் பேசலியா?" மெல்லிசாய் கேட்டார் ஆத்மநாதன்.

"என் பொண்ணைப் பத்தி... பொண்ணைப் பத்தி... அப்ப அவதான் கவலைக்கு காரணமா? என்னண்ணா அது? அவர் எப்பவுமே கஷ்டம் கவலைன்னா தான் மட்டுமே சுமக்க நினைப்பார். அகல்யாவுக்கு என்னண்ணா?"

"நான் அதை சொல்லியிருக்க வேண்டாம். ஆனா, மனசு கேக்கல..."

"ஐயோ! முதல்ல என்னன்னுதான் சொல்லுங்களேன்."

"சொல்றேன். உன் மனசை திடப்படுத்திக்கோ. ஏன்னா அனந்துவை பார்த்துக்க நீதான் இருக்கே? உனக்கும் ஏதாவது ஆயிடப் போறது..."

"பீடிகை போதும். விஷயத்துக்கு வாங்க..."

விசாலம் கட்டி இழுக்க, அவரும் சொல்லி முடிக்க, விசாலத்துக்கு குபீர் என்று கோபம்தான் வந்தது.

"அப்ப இதுதான் விஷயமா. இதுக்குதான் இவர் இப்படி மனசு ஒடிஞ்சு போனாராக்கும்... சரிதான்." என்று தலையில் கை வைத்துக் கொண்டாள்.

"நீ என்ன சொல்றே விசாலம்?"

"என்னத்த சொல்ல... அகல்யா வேலைக்குப் போன இடத்துல வர்ஷன்கறவன் அவளை காதலிச்சிருக்கான்...

ஆனா, இவளுக்கு அவன் மேல் அப்படி எல்லாம் அபிப் பிராயமில்லை. அவனோ நீ எனக்கு கிடைக்கலைன்னா தற்கொலை செய்துக்ககூட நான் தயங்க மாட்டேன்னுல் லாம் பேசியிருக்கான். பேசின மாதிரியே ஒரு நாள் தற்கொலைக்கும் முயற்சி பண்ணியிருக்கான். அகல்யா பதறிப் போய் அதுக்குப் பிறகுதான் என் கவனத்துக்கு அந்த காதல் விஷயத்தை கொண்டு வந்தா. என்கிட்டயே ஆலோ சனையும் கேட்டா.

அம்மா உன் பொண்ணு வேலைக்குப் போய் சுயமா தன் கால்ல நிக்கணும்னு ஆசைப்பட்டே. ஆனா, நான் இப்ப நிக்கலம்மா, தள்ளாடிண்டிருக்கேன்னு அழுதா. நான் உடனேயே, வேலையை எழுதிக் கொடுத்துட்டு வந்துடு அகல்யான்னேன். ஆனா, அதுக்குப் பிறகு அவகிட்ட இருந்து கொஞ்ச நாளைக்கு எந்த போனும் வரலை. வர்ஷனை சமாளிக்க ஒரு வழி கண்டுபிடிச்சிட்டேன்னு சொன்னா... கவனமாக இரு அகல்யா, இப்பவும் சொல்றேன்... இப்படி ஒரு சூழ்நிலையில் நீ எங்க கூட இருக்கணும். இல்ல நாங்க உன் கூட இருக்கணும். அதுதான் சரின்னேன்.

அவதான் ஆஸ்துமா வியாதி உள்ள அப்பாவுக்கு பெங்க ளூர் ஒத்துக்காது. அதோட சொந்த வீட்டை பூட்டிட்டு இங்க வரவேண்டாம்னா. இதுதான் விஷயம். ஆனா, இப்ப நீங்க சொல்லும்போதுதான் அவ எப்படி அவனை சமாளிச்சுக்கிட்டு இருக்காங்கறது தெரியவந்திருக்கு. முழு விவரம் தெரியாம இவரும் இங்க இடிஞ்சு போயிருக்கார். நான் என்னத்த சொல்ல...?''

விசாலம் தலையில் கை வைத்துக்கொண்டாள். ஆத்ம நாதனுக்கே தான் சற்று அவசரப்பட்டுவிட்டோமோ என்று தோன்றியது.

''இந்த விஷயத்தை நீங்க எனக்கு சொல்லியிருக்க கலாமேண்ணா. அவர்கிட்டயா சொல்வீங்க. இப்ப பாருங்க...'' என்று சற்று கோவிக்கவும் செய்தாள்.

''விடும்மா... அவன் கிட்ட நானே நீ சொன்னதை பக்குவமா சொல்லிடறேன். உண்மையான மருந்து டாக்டர்கள் கொடுக்கறதுல இல்ல. நான் பேசப்போறதுலதான் இருக்கு ...'' என்ற ஆத்மநாதனைப் பார்த்து வேகமாக கை எடுத்துக் கும்பிட்டவள், ''போறும்ணா... இனி இது பத்தியே பேசாதீங்கோ. நான் சமாளிச்சுக்கிறேன்'' என்றாள். ஆத்மநாதனுக்கும் சங்கடமாகத்தான் இருந்தது. திரும்பினார். எதிரில் தோளில் தொங்கும் ஹேண்ட் பேக் சகிதம் அகல்யாவும் அந்தப் பையனும்! பார்த்துக்கொண்டே போய்விட்டார்.

''அம்மாாாாா!'' அகல்யா பாய்ந்து வந்து விசாலத்தைக் கட்டிக் கொண்டாள். அவள் அந்த அணைப்புக்கு நடுவிலும் அந்த பையனைத்தான் பார்த்தாள். அவனும் பார்க்க நன்றாக தேஜஸுடன்தான் இருந்தான். அவளைப் பார்த்து கை எடுத்து கும்பிடவும் செய்தான். நேராக இன்டென்ஸிவில் அனந்து படுத்திருப்பதையும் கண்ணாடி தடுப்பு வழியாக அங்கிருந்தே பார்க்க முடிந்தது.

விசாலம் இருவரையும் முதல் காரியமாக அங்கிருந்து தள்ளிக் கொண்டு ஒரு மறைவிடத்தில் போய் நின்றாள்.

''என்னம்மா... ஆத்மா மாமா எங்களப்பத்தி தப்புத்தப்பா ஏதாவது சொல்லிட்டாரா... அதான் இப்படியா?'' அவளே ஆரம்பித்தாள்.

''ஆமாம் அகல்யா... உன் விஷயம் பத்தி நான் உன் அப்பாகிட்ட ஒரு வார்த்தைவிட பேசலை. அவர் தாங்கிக்க மாட்டார்னு தெரியும். அதே மாதிரிதான் என் வரைல அவரும் நடந்துகிட்டிருக்கார். உன்னைப் பத்தி ஆத்மாண்ணா மூலமா கேள்விப்பட்ட அவர், என்கிட்ட மூச்சு கூட விடலை... உன் சிக்கலை நான் சிக்கலா மட்டும்தான் பார்த்தேன். ஆனா, அவர் அதை பெரிய இன்டிசிப்ளினா பார்த்துட்டார். தன் பொண்ணா இப்படின்னு அவர் துடிச்சிப் போயிட்டார்டி.''

விசாலம் சொல்ல, அகல்யா பார்வை வர்ஷனைத்தான் ஊடுருவியது. அவன் தலையை தாழ்த்திக் கொண்டான்.

"ஆத்மா மாமா நிச்சயம் அப்பாகிட்ட எங்களைப் பத்தி சொல்வார். அப்பாவும் உடனே கோபத்தோட பெங்களூர் வருவார். அப்ப மனசுவிட்டு எல்லா விஷயங்களையும் பேசலாம்னு நினைச்சேன். ஆனா, அது இப்படி திரும்பும்னு தெரியாதும்மா..."

அகல்யா கண்ணீரை துடைத்தபடி விசும்பினாள்.

"அது சரி, எந்த தைரியத்துல இப்படி இரண்டு பேரும் ஒண்ணா வந்துருக்கீங்க. உங்களைப் பார்த்தா அவருக்கு ரத்தக் கொதிப்பு அதிகம்தாண்டி ஆகும்."

"நான் வராம போனாலும் அதுவும் அவரைப் பாதிக்கத் தானேம்மா செய்யும். தன் பொண்ணு தன்னை முழுசா தலைமுழுகிட்டதா நினைக்க மாட்டாரா?"

"அது சரி, தனியா வரதுக்கென்ன ... இந்த பையன் கூட எதுக்கு?"

"நான்தான் கூட்டிக்கிட்டு வந்தேன். நீ என் மேலே வெச்ச காதலோட விளைவுகளைப் பாருன்னு காட்டத்தான் கூட்டிக்கிட்டு வந்தேன்."

அவனும் தலை நிமிர்த்தி வாய் திறந்தான்.

"ஸாரிங்க... வெரி ஸாரி... நான்தான் இந்த ஓத்திகை வாழ்க்கைக்கு அகல்யாவை வற்புறுத்தினேன். இதுல யாருக்கு ஒரு பாதிப்புன்னாலும் ஜென்டிலா விலகிக்க லாம்னும் சொன்னேன். எங்க பேரண்ட்ஸுக்கும் எங்க ஓத்திகை வாழ்க்கை விஷயம் தெரியும். அவங்க சிம்பிளா இனி எங்க முகத்துல முழிக்காதீங்கன்னு மட்டும்தான் சொன்னாங்க. ஆனா, இங்க சார் இந்த அளவு பாதிக்கப் படுவார்னு நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கலைங்க..."

"என்னப்பா பண்ண?... உங்கப்பாம்மா பையனைப் பெத்திருக்காங்க. ஆனா, நாங்க பொண்ணைப் பெத்தவங்களாச்சே..."

"உண்மைதான் ஆன்ட்டி! அகல்யா மீது நான் வெச்சிருந்த கண்மூடித்தனமான காதலால நான் அவளை ரொம்பவே கஷ்டப்படுத்திட்டேன். காதல் இயல்பா வரணும்... எனக்கு அது தெரியல. என் ஆசையால இவ்வளவு தூரம் பாதிப்புகள் ஏற்படுங்கறதையும் நான் யூகிக்க தவறிட்டேன்..."

வர்ஷன் நிஜமாலுமே மனம் வருந்திப் பேசினான்.

"போனது போகட்டும்... இனி நீங்க என்ன பண்ணப் போறீங்க? அதுதான் இப்ப என்னோட பிரதான கவலை..."

"நான் தோத்துட்டேன் ஆன்ட்டி! நான் காதலிக்கவே தகுதியில்லாதவன் எங்க அக்ரீமெண்ட்படி நான் விலகி இனி அகல்யாவை அவ வழியிலே போக விடறதுதான் சரி. ஸாரி ஆன்ட்டி... நான் கிளம்பறேன். இனி நான் அகல்யா வாழ்க்கைல குறுக்கிடவே மாட்டேன்..."

வர்ஷன் தன் முடிவைச் சொல்லிவிட்டு அதை செயல்படுத்தவும் ஆரம்பித்தான். அகல்யா உடனேயே விசாலத்தைதான் பார்த்தாள்.

அவள் முகத்தில் ஒரு வித விரக்திச் சிரிப்பு.

"என்னம்மா சிரிக்கிறே?"

"சிரிக்காம... கல்யாண வாழ்க்கைக்கூட தோக்கலாம். ஒத்திகை வாழ்க்கை மட்டும் தோக்கவே கூடாதுடி... அப்படி தோத்தா அதுக்கு அர்த்தமே வேறடி..."

"அம்மா..."

"போடி... போய் அந்த பிள்ளையோட போய் உங்கப்பா கால்ல விழு. மிச்சத்த நான் பார்த்துக்கறேன்..." இருவரும் மறுபேச்சு பேசவில்லை. விசாலத்துக்கும் விடிந்து எல்லாம் சரியாகிவிடும் என்கிற ஒரு நம்பிக்கை உருவாகத் தொடங்கியது.

# 18. ஒரு அன்னமும் சில காகங்களும்!

அந்த ஆபீஸே ஒரே குஷியுடன் இருந்தது! ஆளுக்கு ஆள் ஸ்வீட்பாக்ஸும் கையுமாகத்தான் தெரிந்தனர். ஒரு மாபெரும் நிறுவனத்தின் அக்கவுன்ட்ஸ் டிபார்ட்மெண்ட் எனப்படும் கணக்கு வழக்குகளை கூட்டிக் கழிப்பவர்களிடம் தான் இந்த கூத்தெல்லாம்...!

மொத்தமாய் 40 பேர். அதில் 39 பேருக்கு ப்ரமோஷன் என்றால் குஷிக்கு கேட்கவா வேண்டும்? மூன்று வருஷத்திற்கு ஒருமுறை பரீட்சை ரிசல்ட் மாதிரி வரும் ஒரு விஷயம் அது. இப்போது வாங்கும் சம்பளத்தில் இருந்து எப்படியும் ஐநூறு ரூபாயில் இருந்து ஆயிரம் ரூபாய் வரை கூடும்.

சிலருக்கெல்லாம் டபுள் ப்ரமோஷன் வேறு. அதில் ரங்கராஜன்தான் கில்லாடி.

"டேய் ரங்கா... நீ நம்ம ஜி.எம்-முக்கு கார் கதவை திறந்து விட்டே அவரை கவுத்துட்டடா" என்று ரங்கராஜனின் சகாக்களும் அவனிடம் கலாட்டா செய்து கொண்டிருந்தனர்.

"நீ என்ன யோக்கியம்... ஜி.எம்.பொண்ணு கல்யாணத்துல ரிசப்ஷன் வேலை அவ்வளவையும் இழுத்துப் போட்டு செஞ்சே. உன் பொண்டாட்டிக்கு அன்னிக்கு உடம்பு வேற சரியில்ல... அவ டாக்டர் கிட்ட கூட்டிக்கிட்டுப் போக

சொன்னதுக்கு, டையமில்ல! மெடிக்கல் ஷாப்புல மாத்திரை வாங்கி சாப்பிடு. சரியா போய்டும்னு சொல்லிட்டே...''

என்று ரங்கராஜனும் பதிலடி கொடுத்தான். அவர்கள் பேசிக் கொண்டதில் ஒரு விஷயம் துல்லியமாக விளங்கிற்று. யாரும் தவறியும் வேலையில் காட்டிய சாமார்த்தியங் களுக்காகவோ, இல்லை சத்தியத்துக்காவோ ப்ரமோஷன் வழங்க வில்லை என்பதுதான் அது

இந்த கூட்டத்தில் துளியும் சேர்ந்துவிடாதபடி போன முறையும் ப்ரமோஷன் லிஸ்ட்டில் இடம்பெறாமல் இந்த முறையும் இடம்பெற்றிடாமல் பாதிக்கப்பட்ட ஒரு ஆத்மாவும் அந்த டிபார்ட்மெண்ட்டில் இருக்கத்தான் செய்தது.

அந்த ஆத்மாவுக்கு பெயர் ராமரத்னம். இத்தனைக்கும் 25 வருஷ அனுபவம் உடையவர். மூன்று பெண்கள் அவருக்கு. இரண்டு பேருக்குதான் கல்யாணம் ஆகியிருக்கிறது. மூன்றாவது பெண் தயாராக இருக்கிறாள். மாப்பிள்ளை பார்த்து கடைத்தேற்ற வேண்டும். இந்த உத்தியோகத்தில் வரும் வருமானம்தான்... வாஸ்தவமாய் ராமரத்னத்துக்கு ப்ரமோஷன் கிடைத்தால்தான் பிரமோஷனுக்கும் ஒரு மதிப்பு. அந்த அளவு வேலையில் சிரத்தையுடன் இருப்பவர். தான் உண்டு தன் வேலை உண்டு ரகம்.

ஒரு நாளைக்கு பத்து தடவை டாய்லெட் போவது, அங்கே ஒரு பாக்கெட் சிகரெட்டை ஊதிக் கரியாக்குவது, சிகரெட் சாம்பலாகும் அதே சமயம் கம்பெனி விஷயங் களுக்கு கண் காது மூக்கு வைத்து கண்டபடி பேசுவது போன்ற இந்தியக் கம்பெனிகளின் குணாதிசயங்கள் எதோடும் சேராதவர்.

ஆனாலும் மேலதிகாரிகளை அனுசரிக்கத் தெரியாதவர். அவர்கள் எதிர்பார்க்கும் போலியான மரியாதையை

போட்டி போட்டுக் கொண்டு வழங்க முடியாதவர். இதனால் அவர்களிடம் கர்வி என்றும் சிடுமூஞ்சி என்றும் பெயரெடுத்தவர். தம் கோஷ்டிகளுடனும் பேச்சுக் கொடுக்க பிரியப்படாதவர். இதனால் அவர்கள் எல்லாம் ராம ரத்னத்தை கச்சத்தீவு என்று அழைத்தனர்.

வழக்கம் போலவே அவருக்கு ப்ரமோஷன் வராததை பற்றி ஆபீஸ் டாய்லெட்டில் பட்டிமன்றமும் களை கட்டத் துவங்கி விட்டது.

"டேய், நம்ம கச்சத்தீவுக்கு இந்த தடவையும் நாமத்தை குழைச்சுப் போட்டுட்டாங்க போல இருக்குடா..."

"போடாம... ஜி.எம். பொண்ணு கல்யாணத்துல பெரிய பிரைம் மினிஸ்டர் மாதிரில்ல வந்துட்டு போனான். மனுஷன் சாப்பிடக்கூட இல்லையே. இவர் என்ன அவ்வளவு பெரிய மனுஷனா...?

"ஆஃப்ட்ரால் ஒரு அக்கவுன்ட்ஸ் க்ளார்க்குக்கு இவ்வளவு அழுத்தம் இருந்தா அவருக்கு எவ்வளவு இருக்கும். அதான் போட்டுத் தாக்கிட்டார் ஜி.எம் .,!"

"கொடுமைய பாரு... அந்த ஆள்கிட்ட ஒரு ஃபைல் கேட்டுப் போனேன். அப்ப என்கிட்ட இருந்து ஒரே சிகரெட் வாடை அடிக்கறது அந்த ஆளுக்கு கொமட்டிக்கிட்டு வருதாம். உடனே எனக்கு அட்வைஸ் பண்ண ஆரம்பிச்சிட்டான்.

நான் ஒண்ணும் சும்மா இல்லை... 'சார்! கொஞ்சமாவது அனுபவிச்சு வாழணும். உங்கள மாதிரி தயிர்சாதம் ஊறுகாயாவே இருந்து செத்துப்போக நான் ஒண்ணும் கஞ்சப்பய இல்லை'ன்னு நல்லாவே பதிலடி கொடுத்தேன்."

"நல்லாதான் சொல்லியிருக்கே. ஆனா, நீ எவ்வளவு சொல்லு... அந்த ஆள் திருந்தமாட்டான் பாரு... ஆபீலே

ஸ்வீட் கொடுத்து கொண்டாடிக்கிட்டு இருக்கோம். தனக்கு மட்டும் ப்ரமோஷன் கிடைக்கலியேங்கற வருத்தம் அந்தாளுக்கு இருக்கா பார்த்தியா?''

''அதெல்லாம் இல்லாம இருக்குமா... அந்தாள் அதை எல்லாம் வெளியவே காட்டிக்க மாட்டான்யா, சரியான நெஞ்சழுத்தக்காரன்யா...''

பட்டிமன்றம் பல தினுசுகளில் கருத்துப் புயலாக வடிவம் எடுத்துக் கொண்டிருந்தது. அந்த இடத்திலும் ஒரே புகைக் கொட்டாரம். யாராவது வந்தால் மூச்சுத் திணறி செத்தே போய் விடுவர். அதற்காக ஆத்திர அவசரத்துக்கு வராமலும் இருக்க முடியாதே...-

ராமரத்னமும் முகத்தை கர்ச்சீப்பால் மூடியபடி வந்து சிறுநீர் கழித்துவிட்டு சென்றார். அவர் வந்து சென்ற அந்த சில நிமிட நேரம் மட்டும் அங்கே ஒரு வித அமைதி. அவர் விலகின நொடி ரங்கராஜனே திரும்ப ஆரம்பித்தான்... ''நான் போய் வாயப்பிடுங்கறேன் பார்...''

ராமரத்னம் எப்போதும் போலவே எந்த சலனமும் இல்லாமல் வேலைபார்த்துக் கொண்டிருந்தார். மூக்கு கண்ணாடி பாதி மூக்கின் மேல் சாய்வாக படுத்திருக்க, கண்ணிரண்டும் கம்ப்யூட்டர் மானிட்டர் மேல் கூர்மையாக குவிந்திருக்கும்போது, ''என்ன ராமரத்னம் சார்... இந்த தடவையும் டாப்ல உங்களுக்கு ஆப்பு வெச்சுட்டாங்க போல இருக்கே?'' என்று கேட்டபடி வந்து நின்றான் ரங்கராஜன்.

''ஆமாம்ப்பா... உனக்கு டபுள் ப்ரமோஷன் போல இருக்கே...?''

''எல்லாம் உங்களாலதான் சார்...''

''என்னாலயா?'' அதிர்ந்து போனார் ராமரத்னம்.

"ஆமாம் சார்! எப்படி எல்லாம் ஒருத்தர் இருக்கக் கூடாதுங்கறதுக்கு நீங்க எங்களுக்கு உதாரணமாக இருக்கும் போது எங்களுக்கென்ன சார் கவலை...?"

அவன் கருத்து அவர் கன்னத்தில் அறைந்த மாதிரி இருந்தது.

"அப்ப நானெல்லாம் உங்களுக்கு ஒரு ரெட் சிக்னல்னு சொல்லுங்க."

"எக்ஸாக்ட்லி... நீங்க ரெட் சிக்னல் மட்டுமா? ஒண்ணா நம்பர் கர்வியும்கூட... கேட்டா சுயமரியாதை அப்படி இப்படிம்பீங்க. இன்னிக்கெல்லாம் ஆடற மாட்டை ஆடிக் கறக்கணும் பாடற மாட்டை பாடித்தான் சார் கறக்கணும். அது தெரியலியே உங்களுக்கு..."

"வாஸ்தவம்தாம்ப்பா... என் மனைவிகூட என்னை பொழைக்கத் தெரியாத அசமந்தம்னுதான் சொல்றா... என்னப்பா பண்ணட்டும், என்னால என்னை மாத்திக்க முடியலியேப்பா..."

"வேண்டாம் சார்! நீங்க இப்படியே இருங்க. அப்பதான் நாங்களும் மேல மேல போக முடியும். நீங்க இப்படி இருக்கறதாலதான் எங்களோட அப்ரோச் ஜி.எம். கிட்ட ஓர்க் அவுட் ஆகுது. முள் மாதிரி ஒருத்தர் இருந்தாதானே பூ மாதிரி ஒருத்தர் இருக்கறது தெளிவா போய் சேரும்..."

ரங்கராஜனும் அவர் வாயைப் பிடுங்கியவனாக போனால் போகிறது என்று தன் ஸீட்டுக்கு சென்று வேலையை பார்க்கத் துவங்கினான்.

அப்போதுதான் அந்த செய்தியும் வந்தது... ஜி.எம். வந்த கார் வரும் வழியில் ஆக்ஸிடெண்ட் ஆனதில் அவருக்கு பலத்த காயம் என்று

ஆபீஸே அதிர்ந்து போனது.

**ப**தினைந்து நாட்கள் கடந்து விட்டன.

ஜி.எம். உடம்பில் அங்கங்கே சில கட்டுக்களுடன் சற்று தடுமாறியபடி ஆபீஸுக்கும் வந்து விட்டார்.

பூங்கொத்து ஆரஞ்சுப்பழங்கள், விபூதி பிரசாதம் என்று அவர் டேபிள் முழுக்க டிபார்ட்மெண்ட் சகாக்களின் அன்பு பளிச்சிட்டபடி இருந்தது.

“என்ன சார் இது... முழுசா குணமான பிறகு வரலாமே இப்படியா அவசரப்படுவீங்க...?” என்று கேட்காதவர்கள் இல்லை.

“எனக்கு ஒண்ணும் இல்ல. ஐ ஆம் ரைட். உங்க அன்பு பிரார்த்தனை - இது என்னை வேகமா குணப்படுத்திடுச்சு” என்று அவரும் நெகிழ்ந்தபோது ராமரத்னமும் அவர் அறைக்குள் நுழைந்தவராக ஒரு மூலையில் போய் நின்றார்.

ஜி.எம்மும் கவனித்தார். ராமரத்னத்திடமும் ஒரு சோர்வு தெரிந்தது.

ஜி.எம்முக்கு ரத்தம் தேவைப்பட்டபோது ராமரத்னம் ரத்தம்தான் பொருந்தியது. சென்னையில் ஒரு பிளட் பேங்கில்கூட அன்று ஏபி நெகட்டிவ் வகை ரத்தம் கிடைக்க வில்லை.

ஜி.எம்மும் ராமரத்னத்தின் உதவியை அறிந்து நெகிழ்ந்து போயிருந்தார். ஓரமாக போய் நின்றவரை கூப்பிட்டு “ரொம்ப தேங்க்ஸ் ராமரத்னம்! நீங்க ரத்தம் கொடுக்க லேன்னா நான் இவ்வளவு சீக்கிரம் ஆபீஸுக்கு வந்திருக்க முடியாது” என்று எல்லாருக்கும் நடுவில் நன்றியும் தெரி வித்தார்.

ரங்கராஜனுக்கு அதுவே என்னவெல்லாமோ செய்தது. அறையை விட்டு வெளியே வந்தவன், தன் சகா ஒருவ னிடம், “டேய்... கிழவனுக்கும் ப்ரமோஷன் வந்துடும்டா...

ஆக்ஸிடெண்ட் ரூபத்துல அதிர்ஷ்டம் அடிச்சிடிச்சிடா... ச்சே!'' என்ற மனம் புழுங்கிடப் பேசினான்.

அதைத் தொடர்ந்து ஆபீஸிலும் அந்த பேச்சுதான். சிலர் தங்கள் உடம்பில் ஓடியபடி இருக்கும் ரத்தத்துக்காக வருத்தமும் பட்டனர்.

“கிழவனுக்கு நேரம்யா... அந்த சிடுமூஞ்சியும் ரத்ததானத் துக்கு அசரலை பார்...'' என்று வாயைப் பிளந்தனர்.

ஒரு வாரம் கழிந்த நிலை

ஜி.எம். அறைக்குள் இருந்து ராமரத்னத்துக்கு பிரத்தியேக அழைப்பு. அன்று எம்.டி-யும் வந்திருந்தார். எம்.டி-யை ஆபீஸே கடவுள் என்றுதான் அழைக்கும்.

கடவுள் வந்திருக்கார். கிழவனுக்கும் அழைப்பு. நிச்சயம் ப்ரமோஷனோட கேஷ் அவார்டும் கிடைக்கப்போகுது, என்கிற முணுமுணுப்புகள். உள்ளேயும் அதுதான் உண்மை என்பது போல சம்பவங்கள்.

எம்.டி., ராமரத்னத்தை கைகுலுக்கி பாராட்டி முடித்திருக்க, ஜி.எம்-மும் ப்ரமோஷன் ஆர்டரை எடுத்து நீட்டினார்...

“ஸாரி ராமரத்னம்... எல்லாருக்கும் போடும்போது உங்களுக்கு விட்டுப்போச்சு'' என்கிற சமாதானமான வார்த் தைகளுடன்.

ஆனால், ராமரத்னம் கைகள் அதைப் பெற நீளவில்லை.

“என்ன ராமரத்னம் யோசனை... கமான்...''

“இல்லை சார்...''

“ஏன்?''

“இப்ப நான் இதை வாங்கிக்கறது சரியில்ல சார். நான் ரத்தம் கொடுத்தது மனிதாபிமானத்துல... ப்ரமோஷனுக்காக வெல்லாம் இல்ல. என் உதவியை தயவுசெய்து கொச்சைப்

படுத்திடாதீங்க. இதை நான் வாங்கிட்டா மனிதாபி மானத்துக்கு நான் ஒரு விலை வெச்ச மாதிரி ஆயிடும்.

''வேண்டாம் சார். ப்ளீஸ்! எப்பவும் போல இன்னும் மூணு வருஷம் கழிச்சு உங்களுக்குப் பிரியம் இருந்தா கொடுங்க. ப்ரமோஷன்கறது ஊக்கப்படுத்தற ஒரு விஷயம் தானே?

இங்க வேலை பார்க்க எனக்குள்ளே சுயமாவே நிறைய ஊக்கம் இருக்கு. ஆகையால என் வேலையை நான் எப்பவும் போல செய்துகிட்டே இருப்பேன். அதுக்கு ஒரு குறையும் என்னால வராது.

நான் கீதையை ரொம்ப மதிக்கறவன். 'கடமையை செய், பலனை எதிர்பாராதே'ங்கிற கிருஷ்ண பரமாத்மாவோட உபதேசம் என்னை ரொம்ப கவர்ந்த ஒண்ணு. நான் வரேன் சார்!''

சொல்ல வேண்டியதை சொல்லிவிட்டுப் போய் விட்டார் ராமரத்னம். ஜி.எம்மிடம் ஸ்தம்பிப்பு. எம்.டி-யோ தன் நிறுவனத்துக்கு ஒரு பொறுப்பான மேலாளர் கிடைத்து விட்டதாக நினைத்து அதற்கான ஆர்டரை மனதுக்குள் தயாரித்தபடி இருந்தார்.

வெளியே சில முணுமுணுப்புகள்...

'இந்த ஆளுக்கு கொழுப்ப பார்த்தியா...?'

'இந்த கிழவனை திருத்தவே முடியாதுய்யா. கிடைச்ச ப்ரமோஷனைகூட வேண்டாம்னுட்டானே... பெரிய பரம்பொருள்னு மனசுக்குள்ள நினைப்பு...'

ஆபீஸுக்கு வெளியே மரத்தில் காகங்களிடமும் ஒரே கூச்சல். ராமரத்னம்தான் காகமில்லையே!

அமைதியாக வேலையில் மூழ்கி விட்டிருந்தார்...

# 19. சுட்ட பழம்!

கல்லூரி முடிந்து திரும்பும்போதுதான் கண்களில் பட்டது அந்தச் சுவரொட்டி! 'சிந்தனைக் கருத்தரங்கம் எழுத்தாளர் ராஜராஜன் பேசுகிறார்' என்று அது சொன்ன செய்தி உண்மையில் தேன்மொழி வரையில் தித்திப்பான ஒன்றாகத்தான் தோன்றியது. தனது ஸ்கூட்டியை நிறுத்திக் கவனித்தான்.

சமீபத்தில்தான் ராஜராஜனின் நேர்முகம் ஒன்றை டி.வி-யில் பார்த்திருந்தாள். அறிவுத் தெளிவுக்கு இலக்கணம் சொல்கிற மாதிரி இருந்தது அந்த நேர்முகம். அன்றிலிருந்தே ராஜராஜனால் வெகுவாக ஈர்க்கப்பட்டுவிட்டிருந்தாள் தேன் மொழி. அதற்கு முன்பே அவருடைய எழுத்தால் ஈர்க்கப் பட்டிருந்ததால் அவளுக்குள் ஒரே குதூலகம்.

இன்று ராஜராஜனை நேரிலேயே சந்திக்க ஒரு வாய்ப்பு. மனதில் ஆறு மணி நேர வகுப்பறைக் களைப்பையும் மீறிக் கொண்டு ஒரு தனி உற்சாகம் பீறிட்டது. அந்த டி.வி. நேர்முகமும் அவளுக்கு ரீவைண்ட் ஆகத் தொடங்கியது.

"மிஸ்டர் ராஜராஜன், இன்றைய தமிழோட நிலைப்பாடு உங்க வரையில் எப்படியிருக்கு?"

"நீங்க மிஸ்டர் போட்டு விளிக்கிற அளவுக்கு இருக்கு. ஆங்கிலத்தை விட முடியலை பார்த்தீங்களா?"

"உண்மைதான். அதுக்காகத் தமிழ் தமிழ்னு குண்டு சட்டிக் குதிரையாவே இருந்தா உலகை எப்படி ஜெயிக்க முடியும்?"

''இப்படி ஆங்கிலம் பேசி மட்டும் எதையெல்லாம் ஜெயிச்சிருங்கீங்க? மொழிக்கு அவசியமே இல்லாத உடல் மொழியான விளையாட்டுலகூட ஒரு வெள்ளிதானே நமக்கு ஒலிம்பிக்ல கிடைச்சிருக்கு?''

''ஒலிம்பிக்ல சாதனை புரியணும்னா நாம என்ன செய்யணும்?''

''விளையாட்டுத் துறையைத் தனியார்கிட்ட ஒப்படைக்கணும். மெடல் வாங்கித் தர்ற தனியார் நிறுவனத்துக்கு ஒரு ஆண்டுக்கோ... இல்லே இரண்டு ஆண்டுக்கோ இலவசமா மின்சாரம் தந்து அவங்களுக்கு இந்திய அரசாங்கம் ஏதாவது ஓர் உயர்வான விருதும் தரலாம். தனியார் துறையும் தன்னோட வர்த்தக விஸ்தரிப்புக்கும் புகழுக்கும் ஒலிம்பிக்கை நல்லாவே பயன்படுத்திப்பாங்க?''

''இன்றைய எழுத்தும் இலக்கியமும் எப்படியிருக்கு?''

''பத்து வருஷத்துல படிக்கிற விருப்பம் பெரிசா இங்கே வளரலை. பதிலா பார்க்கறதுங்கற அம்சம் அதிகரிச்சிருக்கு. காரணம், நீங்க என்னைப் பேட்டி கண்டுக்கிட்டிருக்கிற இதே ஊடகமான தொலைக்காட்சிதான்!''

மொத்தத்தில் ராஜராஜன் தொலைக்காட்சிப் பேட்டியில் வெளுத்து வாங்கினான். உலக அரசியல், இலக்கியம், விளையாட்டுத்துறை அனைத்தைப் பற்றியும் விரிவாக அலசினான்.

பேட்டியில் கேள்வி - பதில் சூடாகப் போய்க் கொண்டிருந்தது. பேட்டி கண்டவர் இறுதியாக இன்றைய பெண்கள் நிலை பற்றிக் கேள்வி கேட்கத் தொடங்கினார். அதற்கான பதில்களில்தான் தேன்மொழி பெரிதும் கவரப்பட்டாள்.

''இன்றைய பெண்கள் முழுசுதந்திரத்தோட இருக்கிறதா நீங்க நினைக்கிறீங்களா?''

''எது முழு சுதந்திரம்னு நீங்க சொன்னா நல்லது.''

''இல்லே... ஒரு ஆணைப் போலப் பெண் எல்லா விஷயத்துலயும் முழுசுதந்திரத்தோட இருக்காளா?''

''அப்ப உங்க ஒப்பீடு ஆண் சமூகத்தோடவா?''

''ஆமாம். உலகத்துல ஆண் பெண்ணுனு இரண்டு இனம்தானே இருக்கு?''

''உங்க கேள்விப்படி பார்த்தா பெண்ணுக்குச் சுதந்திரமே இல்லை ரொம்பக் கஷ்டப்படறாங்கனு ஒரு தொனி இருக்கு. நான் அப்படி நினைக்கலை! பெண்களுக்குனு ஒரு இயல்பு இருக்கு. அதுக்கு உட்பட்ட சுதந்திரம் அவங்களுக்கு இருக்கவே செய்யுது.

ஒரு சில இடங்கள்ல பெண்கள் கொடுமைப்படுத்தப் படலாம். அதே மாதிரி, பெண்களால் அவங்களோட சில ஆசாபாசங்களால ஆண்கள் அவதிப்படறதும் இருக்கத்தான் செய்கிறது. என்வரையில் பெண்களுக்குச் சுதந்திரம் இருக்கு. அப்புறம் இந்த 33 சதவிகித ஒதுக்கீடு... இதெல்லாம் சும்மா தமாஷ்!''

''அப்ப பெண்களுக்கு எந்தத் தேவையும் இல்லை... அவங்களுக்கு வேலை வாய்ப்பெல்லாமும் தேவையில்லை... அப்படித்தானே?''

''நான் சொன்னதுக்குப் பொருள் இது இல்லை... பெண்களோட இயல்புக்குப் பொருந்துற எவ்வளவோ பணிகள் இருக்கு. அதை அவங்கதான் செய்யமுடியும். அதேசமயம் ஒரு குடும்பத்தைத் தாங்கறதுங்கற கடமை ஒரு ஆண், பணம் சம்பாதிக்கச் செய்யற கடமையைவிடப் பெரியது. அதை மறுதலிச்சுட்டு, நானும் சம்பாதிப்பேன். என் கையிலயும் பணம் இருக்கணும்னு ஒருவிதப் பிடிவாதத்துல பெண்கள் வேலைக்குப் போறதை நான் வெறுக்கிறேன்...''

''அப்ப உங்க மனைவிக்கு அருமையான கவர்ன்மெண்ட் ஜாப் கிடைச்சாலும் வேண்டாம்னு சொல்லச் சொல்லிடு வீங்களா?''

''நிச்சயமா!''

''அப்ப வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கிற பெண் உங்களுக்கு வேண்டாமா?''

''வேண்டவே வேண்டாம்.''

''வேலைக்குப் போகாத பெண்ணுக்குப் பெரிய படிப்பும் அவசியமில்லையே?''

''இன்றைய கல்விமுறையே விநோதமானது. கல்விங் கறதை யாரும் அறிவுக் கண்களைத் திறந்துவிடற சாதனமா இங்கே பார்க்கலை. அதை வேலைக்குப் போகத் தேவைப் படற ஒரு அடிப்படை விஷயமாத்தான் பார்க்கிறாங்க. அதனாலதான் முதுகலைப் பட்டம் வாங்கினவர்களிடம்கூட வாழ்க்கை பற்றிய சரியான பார்வையோ, தெளிவோ இல்லை.

பிழை இல்லாம, தடுமாற்றமில்லாம ஒரு ஆங்கிலக் கடிதமோ... இல்லை தமிழ்க் கடிதமோ எழுதக்கூட ரொம்பப் பேருக்குத் தெரியலை. அதனால படிச்ச பெண்தான் மேலானவங்கறதெல்லாம் பம்மாத்து! பண்பு நலன் இருந்தால் போதும்.''

''இப்படிப் படிப்பில்லாத, பண்பு மட்டும் உள்ள ஒரு பெண் துரதிர்ஷ்டவசமா விதவையாகிட்டா அவளோட எதிர்காலமே இருண்டுபோயிடாதா?''

''என்னைக் கேட்டா... திருமணம் செய்துக்கத் தயாராகிற ஆண்கள் தங்களுடைய பரிசீலனைக்கு விதவைகளைத்தான் முதல்ல எடுத்துக்கணும்னு சொல்வேன். அவங்ககிட்டத்தான் ஒரு ஆணுக்குத் தேவையான அன்பு, பாசம்... இதெல்லாம்

கூடுதலா கிடைக்கும். தனக்கு மறுவாழ்க்கை கொடுத்த வன்கிற அதிகபட்ச நன்றியோடவும் இருப்பா!''

அந்த டி.வி. பேட்டியில் ராஜராஜனின் தோரணை வார்த்தைக் கோவை மாடுலேஷன் என்று எல்லாமே தேன்மொழியை ஒரு அள்ளு அள்ளிவிட்டது.

ஸ்கூட்டியில் வீட்டை எட்டியவள் வேகவேகமாக முகம் கழுவிக் கொண்டு காபி சாப்பிட்டுவிட்டு வெளிர் நீலத்தில் சுடிதாரைத் தேடி எடுத்து அணிந்துகொண்டு ராஜராஜனின் பேச்சைக் கேட்கப் புறப்பட்டுவிட்டாள்.

கல்யாண மண்டபத்தில் அந்த நிகழ்ச்சி ஆரம்பிக்கப் பட்டிருந்தது. பெண்களும் நிறையப் பேர் கூடியிருந்தது தேன்மொழிக்கு ஆச்சரியமாக இருந்தது. முன்வரிசையில் மட்டும் பத்துப் பதினைந்து நாற்காலிகள் ரிசர்வ் செய்யப் பட்டுக் காலியாகக் கிடந்தன. அதில் அமரவேண்டிய வி.ஐ.பி-க்கள் எப்போது வேண்டுமானாலும் வரலாமாம்.

தேன்மொழி விறுவிறுவென்று சென்று அதில் ஒன்றில் அமர்ந்துகொண்டாள். அதைப் பார்த்துவிட்டு ஒருவர் வந்து எழுந்திருக்கச் சொன்னபோது அவள் முறைத்த முறைப்பில் அனல் பறந்தது.

''எப்ப வரப்போறாங்கன்னே தெரியாதவங்களைவிட ஆசையா வந்திருக்கிற என்னோட வருகையைத்தான் நீங்க பெரிசா எடுத்துக்கணும்...'' என்று ஒரு போடு போட்டு விட்டுக் கருத்தரங்கைப் பார்த்தாள். ஒரு ஆச்சரியம் போல அவளையே ராஜராஜனும் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் முகத்தில் அவள் துணிவை மெச்சுவது போல ஒரு பாவனை. தேன்மொழி அப்படித்தான் அர்த்தம் செய்து கொண்டாள். வணக்கமும் சொன்னாள். அவனும் பதில் வணக்கம் சொன்னான். கருத்தரங்கில் ஒருவர் வீரப்பனைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

"வீரப்பன் நம்ம வரையில ஒரு கண்ணாடி மாதிரினும் சொல்லலாம். நம்ம போலீஸுக்கு எவ்வளவு சக்தி இருக்குனு வீரப்பன் விஷயம் ஒண்ணை வெச்சே தெரிஞ்சுக்கலாம்..." தேன்மொழியும் அந்தப் பேச்சை ரசித்தாள். ஆனால், பார்வை என்னமோ ராஜராஜன் மேலேயே இருந்தது. இறுதியாக அவன் பேச வந்தபோது பலமாகக் கைதட்டி அவன் கூர்ந்து பார்க்கும்படி நடந்துகொண்டாள்.

கருத்தரங்கில் ராஜராஜனும் வழக்கம் போல் வெளுத்து வாங்கினான்.

"எல்லாப் பெண் பெயர்லயும் தொலைக்காட்சித் தொடர் எடுக்கிறாங்க. அவ்வளவும் நகரப் பெயர்கள். ஏன் கிராமத்துப் பெண்கள் பெண்களில்லையா? பூவாத்தா, பொன்னம்மா, அருக்காணினும் பேர் வெச்சு சீரியல் எடுக்கலாம்தானே?

அதுலகூட நகரம், கிராமம்னு பிரிவு... அட அரசியல்வாதிகள்தான் கிராமங்களைக் கண்டுக்கறதில்லேன்னா... தொடர் எடுக்கிறவங்களும் லட்சியம் பண்ண மாட்டேங்கறாங்களே?" இப்படி அவன் பேசியதில் ஒரு நியாயம் இருப்பதாகத் தோன்றியது. தேன்மொழிக்கு நிகழ்ச்சி முடிந்தவுடன் ஆட்டோகிராஃப் நோட்டுடன் அவனை நோக்கி ஓடினாள்.

அவனும் 'பாரதி காண விரும்பிய பெண்ணாக உன்னைப் பார்க்கிறேன்' என்று எழுதி கையெழுத்துப் போட்டான்.

"சார்! உங்க சிந்தனை சூப்பரா இருக்கு! ஒரு விஷயத்துல கூட எனக்கு உங்ககிட்ட கருத்து வேற்றுமையே ஏற்படலை சார்!" என்றாள். அதற்குப் பதிலாக ராஜராஜன் சிரித்தான்.

"சார் ... சார்..." அவள், அவன் முன் தத்தளித்தாள். அவன் என்ன நினைத்தானோ, "நிறைய பேசத் துடிக்கிற நீ ... மிட்லண்ட்லதான் தங்கியிருக்கேன். ரூம் நம்பர் 105-ல் வந்து பார்" என்று கூறிவிட்டு நகர்ந்தான்.

ஓட்டல் அறையில் தேன்மொழி உள்ளே நுழைந்தாள். ராஜராஜன் அவளை உட்காரச் சொன்னான். அவள் தயங்கியவாறே நின்றாள்.

"சும்மா உட்காரு..."

"இல்ல... உங்க முன்னால உட்கார எனக்குத் தயக்கமாக இருக்கு" என்றபடியே அமர்ந்தாள்.

"என்மேல் அவ்வளவு மரியாதையா?"

"மரியாதை இல்லே, அதுக்கும் மேல ஒரு வார்த்தை இருந்தா அதைச் சொல்லலாம்..."

"அது என்னமோ தெரியலை... பல பெண்கள் என்கிட்ட இப்படித்தான் சொல்றாங்க."

"காரணம், பெண்கள் பற்றிய உங்க தெளிவான கருத்து தான். அதுலயும் விதவைகள் பற்றிய உங்க கருத்து நீங்க பேட்டியில் சொன்ன மாதிரி இளைஞர்கள் அவங்களைக் கட்டிக்க முன்வந்தா இந்த நாட்டுல விதவைகளே இருக்கமாட்டாங்க." பதிலுக்கு ராஜராஜன் சிரித்துவிட்டு,

"காபி சாப்பிடறியா?" என்று கேட்டான்.

"இல்லே சார்! நான்தான் உங்களுக்கு எங்க வீட்ல ஒரு விருந்து தர விரும்பறேன். வீட்டுக்கு வருவீங்களா?" அவள் குழைந்தாள்.

"உங்க வீடு எங்க இருக்கு?"

"இங்கேதான் பக்கத்துல நாளைக்கு லஞ்ச்சுக்கு வர்றீங் களா?" அவளிடம் ஆவல் கொப்பளித்தது. அவன் கூர்மை யாக மட்டும் பார்த்தான்.

"சரினு சொல்லுங்க சார்... ப்ளீஸ், ப்ளீஸ்!"

"என்மேல உனக்கு இருக்கிற அன்பையும் மதிப்பையும் பார்க்கும்போது ரொம்ப சந்தோஷமா இருக்கு!" அவன்

சந்தோஷத்தை வெளிக்காட்ட, அங்கே இன்னொரு நபரின் பிரவேசமும் நிகழ்ந்தது.

“வா நீலா... இவங்க என் வாசகி. இவங்க வீட்டுக்கு விருந்துக்குக் கூப்பிட வந்திருக்காங்க. ஆங்... தேன்மொழி இது என் நண்பன் நீலகண்டன்.” ஒரே மூச்சில் இருவர் அறிமுகத்தையும் முடித்தான்.

தேன்மொழிக்கு வணக்கம் சொன்ன நீலகண்டன், “ராஜராஜனோட உதவியாளன் நான். ஆனா, என்னையும் நண்பர்னுதான் சார் சொல்வார்” என்று முகமலர்ந்தான்.

“ரொம்ப பெரிய மனசு... அரிய பண்பும்கூட!” தேன் மொழி உடனே ஒரு சர்டிபிகேட் தயாரித்துக் கொடுத்தாள்.

“எல்லாம் இருக்கு. ஆனா, கல்யாணம் பண்ணிக்கச் சொன்னாதான் சார் நெளியறாரு. கேட்டா... தன் கொள்கை, கோட்பாடு இதுக்கெல்லாம் பொருந்தற மாதிரி ஒரு பெண் கிடைக்கட்டும்னு சொல்றார். நீங்களும் சொல்லுங்க...” நீலகண்டன் ஜாலியாகச் சொன்னது தேன்மொழி காதில் தேனை ஊற்றிய மாதிரி ஆக்கிவிட்டது.

“சார் மட்டும் ‘உம்’னு ஒரு சைகை காட்டட்டும்... நான் நீனு எவ்வளவு பேர் ரெடியா இருக்காங்க தெரியுமா?” கண் இமைகள் படபடக்க தேன்மொழி சொன்னவிதமே ஒரு தினுசாக இருந்தது.

தன் ஹேண்ட்பேக்கிலிருந்து ஒரு ஆல்பத்தை வெளியே எடுத்தாள் தேன்மொழி. அதில் ராஜராஜன் பற்றி பத்திரிகை களில் வந்த செய்திகள், துணுக்குகள், குறிப்புகள் என்று எல்லாமே...

“இவ்வளவு கஷ்டப்பட்டு கலெக்ட் பண்ண உனக்கு எப்படி நன்றி சொல்றதுனு தெரியலை...” ராஜராஜனின் பரவசத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதுபோலப் பார்த் தவள், “நீங்க விரும்பினா நன்றியை வேறவிதமா சொல்ல

முடியும். நான் உங்களை ஒண்ணு கேட்கவா?'' என்று சற்று புதிர் போட்டாள்.

பின்னர் கொஞ்சமாக வெட்கப்பட்டுவிட்டு இன்னிக்கு வேண்டாம்... நாளைக்குக் கேட்கிறேன். முதல்ல விருந்து... அப்புறமாதான் எல்லாம்'' என்றாள்.

''என்ன தேன்மொழி... எதுவா இருந்தாலும் இப்பவே கேள்.''

''இல்ல சார்! நான் அவசரப்பட விரும்பல... அதே சமயம் ஒரு பெண் மனசு இன்னொரு பெண்ணுக்குத்தான் தெரியும்னு சொல்வாங்க. ஆனா, என்வரையில் உங்களுக்குத் தெரிஞ்ச அளவு ஒரு பெண் மனசு யாருக்குமே தெரியாது.

அதனால, நான் நினைக்கிறதை நாளைக்குச் சொல்றேன். அப்ப உங்க பதிலைச் சொல்லுங்க போதும்...'' என்றவள், ஆல்பத்தைப் பதவிசாக எடுத்து பேக்கில் வைத்துக் கொண்டாள். பின் அவன் கதைகள் பற்றி, எழுத்துப் பயணம் பற்றிப் பலவாறு பேசிவிட்டு விடைபெற்றுக் கொண்டாள்.

அவள் வெளியேறவும் ஒரு சூனியம் வந்து அந்த அறையை ஆக்கிரமித்துக் கொண்டது போல உணர்ந்தான் ராஜராஜன்.

அகத்தைக் காட்டும் கண்ணாடியை முகத்தில் அதன் எதிரொலிகள்.

''என்ன சார்... இந்தப் பொண்ணு உங்களை ரொம்பப் பாதிச்சுட்ட மாதிரி தெரியுதே'' என்று நீலகண்டன் தேன்மொழி பேச்செடுக்கவும், ஒரு ஆமோதிப்புப் பாவனையுடன் நீண்ட பெருமூச்சும் வெளிப்பட்டது ராஜராஜனிடம்.

''ஆமா, உங்கிட்ட அந்தப் பெண் கேட்க நினைக்கிறது எதுவா இருக்கும்?'' நீலகண்டன் மெள்ள பாயிண்ட்டைத் தொட்டான்.

"வேற என்ன... என்னைத்தான் கேட்கப் போறா!" ராஜராஜனின் பதிலைக் கேட்டு நீலகண்டனிடம் ஒரு மெல்லிய திணறல்.

"யூ மீன் அந்தப் பொண்ணு உங்களை விரும்பறதா நினைக்கிறீங்களா?"

"தெரியலை. உடனே யெஸ்ஸுன்னோ நோன்னோ சொல்றதும் சரியில்லை..." அவனிடம் நிறையவே கர்வம் எட்டிப் பார்த்தது.

"இப்படியொரு பெண்ணுக்காகத்தானே காத்துக் கிட்டிருந்தீங்க! ஒரே கருத்து நிரம்பிய மதிப்பு அதீதமான ஈடுபாடு... அதே சமயம் தைரியம்னு எல்லாத்துலயும்தான் ஜொலிக்கிறாங்களே!" நீலகண்டனின் விமரிசனத்தை ரசித்துச் சிரித்தான் ராஜராஜன்.

"அவங்க தன் விருப்பத்தைச் சொல்லும்போது தயவு செய்து இழுத்தடிக்காம உடனே சரினு சொல்லிடுங்க சார்... அதனால உங்க மதிப்பு ஒண்ணும் குறைஞ்சுடாது."

"பார்ப்போம்..." ராஜராஜன் சொன்னவிதத்தில் அப்படியே செய்துவிடலாம் என்னும் தொனி

கூடவே கொஞ்சம் இறுமாப்பு... நீலகண்டனுக்கோ பொறாமையாக இருந்தது.

**ம**றுநாள்...

ஒரு ஆட்டோவில் வந்திறங்கிய ராஜராஜனை நிஜமாகவே மலர்தூவி வரவேற்று வீட்டிலுள்ள அக்கா அம்மா என்று எல்லோரையும் அறிமுகப்படுத்தினாள் தேன்மொழி.

அக்கா தர்மா வெட்கப்பட்டுக் கொண்டு ஒரு வணக்கம் சொன்னதோடு சரி... உள்ளே போய் ஒளிந்துகொண்டு விட்டாள்.

அப்பா இல்லாத குடும்பம், அம்மாவின் டியூஷன் வருமானம், அதன்பின் அப்பாவின் பென்ஷன்... அதில் குடும்பம் செல்லும் விதம் என்று ஒரு சின்ன சுருக்கத்தை மட்டும் சொல்லிக்கொண்டவள், அருமையான சமையலுக் குக் காரணம் அக்கா தர்மா என்பதையும் சொல்லி ராஜராஜனை ஆச்சரியப்பட வைத்தாள்.

அப்படியே அக்கா கணவர் கார்கில் போரில் உயிர் விட்டதையும் கூறி, அவனைச் சற்று உருக வைத்தாள். ஆனால், இறுதிவரை தான் கேட்க நினைத்ததை மட்டும் சஸ்பென்ஸாகவே வைத்திருந்தாள். நீலகண்டனும் அந்த நொடிக்காகவே காத்திருந்தான்.

விருந்து முடிந்து தாம்பூலம் போட்டாயிற்று. கொஞ்சம் போல பிடித்த கதை, அதன் சில வரிகள் பற்றியும் பேசியாகிவிட்டது. நீலகண்டனால் பொறுக்க முடிய வில்லை.

"மிஸ் தேன்மொழி... நீங்க நம்ம சார்கிட்ட ஒண்ணு கேட்கறதா சொல்லியிருந்தீங்க. ஆனா, இதுவரை கேட்கலை... எப்ப கேட்கப் போறீங்க?"

நீலகண்டன் தூண்டவும், சற்று தயங்கினாள். பின் நெளிந்தாள்.

"என்ன தயக்கம்? நீங்க என்ன கேட்கப் போறீங்கனு சாருக்குத் தெரியும் நீங்க கேட்க வேண்டியதுதான் பாக்கி..."

"சாருக்கு எப்படித் தெரியாமப் போகும்? அவர்தான் எல்லார் மனசுக்குள்ளேயும் புகுந்து வெளியே வர்றவராச்சே. என் வீட்டுக்கு வந்து என் குடும்பச் சூழலைப் பார்த்த நிமிஷம் அவர் ஒரு முடிவுக்கு வந்திருப்பார். இதை நான் எதிர்ப்பார்த்தேன்... அதே சமயம் கல்யாணம்கறது ஒரு பெரிய விஷயம்.

அந்த மாதிரி விஷயத்துல பெண்வீட்டார் விருப்பம் என்னங்கறது தெரியாமப் பேசறதும் விவேகம் கிடையாது. அதனால சார் தயங்கறதும் எனக்குத் தெரியும். எனக்கும் ஒருவிதத்துல தர்மசங்கடமாத்தான் இருந்தது. சாரை நான் ஃபோர்ஸ் பண்ணதா ஆகிடக்கூடாதே?''

''பீடிகை எதுக்கு?'' போட்டு உடையுங்க ...''

''உடைக்கறேன் சார்! என் அக்காவுக்கு இந்த மறுமணத்துல பரிபூரண சம்மதம்... கார்கில் யுத்தம் அக்காவை இப்படி ஆக்கிடுச்சு. சாரோட சித்தம்தான் அவளைப் பழையபடி ஆக்கணும். அவரால மட்டும்தான் ஆக்கவும் முடியும்.'' தேன்மொழி பேசி முடித்துவிட்டாள்.

ஆனால், ராஜராஜனால்தான் எதுவுமே சொல்ல முடியவில்லை. முருகன் முன்னால் நாவல்பழத்தை ஊதிய அவ்வை போலத் தன்னை உணர்ந்தவன், தேன்மொழியைப் பார்க்கவே கூசிப்போனான். அவளிடமோ... விஸ்வரூபம்! நீலகண்டனுக்கும் திகைப்பாகத்தான் இருந்தது.

''சார்! இனிமேல்தான் நீங்க பெண்களையே புரிஞ்சுக்கணும்!'' என்றான் ராஜராஜனின் காதோரமாக. ராஜராஜனோ அந்தச் சில நொடிகளில் படுவேகமாகத் தனக்குள் நிமிர்ந்தான். வேறுவழி இருப்பதாகவும் அவனுக்குத் தெரியவில்லை.

''கூடிய சீக்கிரம் முறைப்படி சந்திச்சுப் பேசுவோம் தேன்மொழி...'' என்றபடி கைகளைக் கூப்பினான். அவள் கண்களில் பனிப்பு.

''உங்கவரையில என் கணிப்பு வீண்போகலை சார்'' என்றாள் பரவசமாக. ஆனால், அவளைப் போல அப்படிப் பரவசமாக அவனால் அவளைப் பற்றி எண்ணிப் பார்க்க முடியவில்லை! அவன், அவனது கர்வத்திடம் வகையாகச் சிக்கிக் கொண்டிருந்தான்.

# 20. புதிய சீதை

சென்னை வானத்தில் மே மாத சூரியன்! அக்டோபர் நவம்பரில் பெய்திருந்த மழை நீரை எல்லாம் தன் கதிர் என்னும் ஸ்ட்ரா போட்டு உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந் தான். குடையை எடுத்துக் கொள்ளாமல் கிளம்பி வந்து விட்டது ஒரு பெரிய குற்றம் போல தோன்றியது ஜானகிக்கு.

நல்லவேளை...

பாண்டிபஜாரில் ஓதிய மரங்கள் ஓங்கியிருந்ததால் அங்கே மட்டும் நிழல் இருந்து கடைகளில் ஏறி இறங்கும்போது உதவியாக இருந்தது.

பை நிறையப் பொருட்கள். கை மாற்றி கை மாற்றி தூக்கியபடியே தனது காரை பார்க் செய்திருக்கும் இடம் நோக்கி நடப்பதற்குள் ஷவரில் ஒரு ஐந்து நிமிஷம் நின்றது போல வியர்த்து விட்டது அவளுக்கு.

டிக்கியை திறந்து பைகளை வைத்துவிட்டு டிரைவிங் ஸீட்டில் ஏறி அமர்ந்தாள். அடுத்த நொடி ஒரு பழுப்புச் சீட்டுடன் பார்க்கிங் கட்டணத்துக்காக ஒரு கை அவள் முன் நீண்டது.

டேஷ் போர்டில் இருந்து ஐந்து ரூபாய் நாணயம் ஒன்றை எடுத்து நீட்டினாள்.

''பத்து ரூவாம்மா... ஏரியாவுக்குப் புதுசா?'' என்று கேட்டான் அவன்.

அவன் கேட்டதுதான் சரி...

ஜானகி இந்த மாதிரி தனியாக வெளியே வந்து பர்ச்சேஸ் செய்து வருஷக்கணக்காகி விட்டது. அவன் கேட்ட பத்து ரூபாயை அழுதுவிட்டு காரை பின்னுக்கு எடுத்தாள். பின் முன் பக்கம் வளைத்துத் திருப்பும்போதும் மிகச் சரியாக அவள் முன்னால் தலையைச் சொறிந்து கொண்டு இடுப்பில் குழந்தையுடன் ஒரு பிச்சைக்காரி.

முதலில் அவளைப் பார்க்கவும் எரிச்சல்தான் வந்தது. இருந்தும் அவளது புடவையும் அதன் மெரூன் நிறமும் அந்தக் குழந்தையும் அவளது எரிச்சலை வெகு வேகமாகத் தணித்து விட்டன.

நொடிக்கும் குறைவான காலகதியில் அதே போல ஒரு மெரூன் கலர் புடவையுடன் கைக் குழந்தையுடன் சென்ட்ரல் ஸ்டேஷன் வாசலில் அவளே நிற்பது போல ஒரு காட்சி ஒரு முறை தோன்றி மறைந்தும் போயிற்று.

அவளும் பக்கவாட்டில் வந்தாள். வாட்டிச் சுட்ட கத்தரிக்காய் போல முகம். குழந்தை நேர்எதிராக கொஞ்சம் புஷ்டியோடு இருந்தது. தலையிலும் நிறைய முடி.

அம்மாவின் பிச்சைக்கு உதவும் ஒரு பரிதாப சாதனம் நான் என்கிற எந்த எண்ணப் பிசுக்கும் இன்றி மனசு சமநிலையில் இருக்கும் ஒரு யோகி போல அதன் முகத்தில் அப்படி ஒரு சந்தோஷம். இதழ்க்கடையில் எண்ணெய்க் கோடு போல எச்சில் ஒழுக்கு. அந்த நொடி அவளுக்குள் ஸ்ரீராமின் ஞாபகம்தான் வந்தது.

ஒரு நூறு ரூபாயை எடுத்து அவள் நீண்ட கரத்தில் திணித்தாள். அதே வேகத்தில் சாலையில் நல்ல வேகமெடுத்

தாள். முகத்தில் பார்க்கக் கூடாத காட்சியைப் பார்த்துவிட்ட ஒரு மெல்லிதான அவஸ்தை.

ஏனோ காரை அவள் அவளது கணவரின் டிஸ்பென் சரியை நோக்கிச் செலுத்தினாள்.

கே.ஆர். நர்ஸிங்ஹோம் என்றால் அது கோடம் பாக்கத்தில் மிக பிரபலம். நவீனமும் பழமையும் கலந்து கிடக்கும் ஒரு அதிசயம்.

நர்ஸிங்ஹோம் முன்னால் ஒரு குட்டி பூங்கா. அதில் அம்மை மருந்து கண்டிபிடித்த லூயி பாஸ்டருக்கு ஒரு மார்பளவு சிலை. அந்த சிலைக்கு நாள் தவறாமல் ஒரு விஷ் செய்வார். டாக்டர் நரேந்திரன் ஜானகியின் கணவர்... காரை விட்டு இறங்கி தன் அறைக்குள் நுழைந்த வேகத்தை வைத்தே அவளது மனதில் இடி இறங்கியிருப்பதை யூகித்து முடித்து விட்டார்.

''என்னம்மா... எனிதிங் பிராப்ளம்?''

''.......''

''நீ மௌனமா இருக்கறத வெச்சே ஆமாம்னு தெரிஞ்சுகிட்டேன். ஒரு சேஞ்சுக்காக கொஞ்சம் வெளிய போய்ட்டு வான்னா போன இடத்துலயும் ஏதாவது...''

''ஓ... ஊருன்னு இருந்தா இப்படிப்பட்ட காட்சிகளும் கோலங்களும் சகஜம்தானே ஜானகி. நீ ஏன் உன்னோட சேர்த்து பார்த்துக்கறே..''

''பாக்காம இருக்க முடியலையே... எனக்கு நீங்க கிடைச்ச மாதிரி அவளுக்கு யாராவது கிடைச்சா பரவால்ல... ஆனா, அவளுக்கு...''

''போதும்... போதும். சரி, பர்ச்சேஸ் எல்லாம் முடிஞ்சுதா?''

"என்ன பர்ச்சேஸ்... பெரிய பர்ச்சேஸ்... இப்படி பர்ச்சேஸ் பண்ற எதையாயவது நாம போகும்போது கொண்டு போக முடியுமா? ஜானகி அப்படியே தத்துவத்துக் குத் தாவி விட்டாள்.

ஜானகிக்குப் பூவைவிட மெல்லிய மனது... இப்படி ஒரு மனதை அவளுக்குக் கொடுக்க இறைவன் அதற்கேற்ற சூழலைத் தராமல் அவளை வாழ்க்கைச் சூழலில் போட்டு வதக்கி எடுத்து விட்டான். அதிலும் அவளது இளமைக் காலம் மிகமிகக் கொடிய காலம். அவள் பிறந்தபோதே தாயைத் தொலைத்தவிட்டாள். சிற்றன்னையின் வளர்ப்பில் தான் வளர வேண்டி வந்தது.

சிற்றன்னை என்றாலே அவள் தாயன்பு கொண்டவளாக இருக்கத் தேவையில்லை என்று கடவுளே நினைத்து விட்டாரோ என்னவோ? ஜானகிக்கு வாய்த்தவள் ஜானகி யிடம் சிம்மகர்ஜனை புரிந்தாள். இப்பொழுதும் ஜானகியின் கணுக்காலுக்கு மேல் நாலைந்து தழும்புகள் தெரியும்.

ஜானகியின் அப்பாவுக்கு ஆபீஸுக்குப் போகவும் வந்தால் தூங்கவுமே நேரம் சரியாக இருந்தது. இதனால் வெளியே யாரிடமாவது சொல்லி அழலாம் என்றால் அதற்கும் அவள் வரையிலும் வழி இல்லாது போய்விட்டது. மீறி யாரிடமாவது பேசினாலும் சித்தி ஒரு வழி பண்ணிவிடுவாள்...

இப்படி ஒரு கட்டத்தில்தான் அவன் குறுக்கிட்டான்.

அவன் என்றால் எப்படி... மூர்த்தி என்று அவன் பெயரையும் அவன் ஒரு வாலிபன், தூண் போல கிருதா வைத்திருப்பவன், சாக்குப்பை போல பெல்பாட்டம் பேண்ட் போட்டிருப்பவன் என்று அவனைப் பற்றி விவரமாகச் சொன்னால்தானே உங்களுக்கும் அவனைப் பற்றி அனுமானம் செய்ய உதவியாக இருக்கும்?

சரி, அவன் ஜானகி விஷயத்தில் என்ன செய்தான், ஏது செய்தான் என்பதை எல்லாம் பிறகு பார்க்கலாம். இப்போது அவனுக்கும் ஜானகிக்குமே ஒரு பெரும் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது... அதைப் பார்த்துவிடுவது நாம் பின்னால் பார்க்கப் போகும் விஷயத்துக்கு வலு சேர்க்கும்.

சரி, இப்போது...

ஜானகியை அவள் தாவாக்கட்டையைப் பிடித்து முகத்தை உயர்த்திப் பார்த்த டாக்டர் நரேந்திரன் ஒரு சிரிப்பு சிரித்தார். அப்படியே, ''உனக்கு இப்ப என்ன குறை? எதுக்காகப் பிரச்சினைக்குரிய சிந்தனைகளைத் தேடிப் பிடிச்சு சிந்திக்கிறே? கடவுளா பார்த்து உன்னை நல்ல விதமா வைச்சாலும் நீ வேண்டாம்னு சொல்லி நான் கவலைப்படுவேன், கவலைப்பட்டே தீருவேன்கற மாதிரி நடந்துக்கறே...'' என்றபடி அவள் நெற்றி வகிட்டை வருடி விட்டார். அவர் சொல்வதும் உண்மைதான்... அவளுக்கே அது தெரிந்தது.

''என்னால் என்னோட பழசு எதையும் மறக்க முடியலை... என்னைப் போல யாரைப் பார்த்தாலும் எனக்குப் பகீர்னு இருக்கு. நான் என்ன செய்யட்டும்?'' என்று திருப்பிக் கேட்டாள்.

''சரி... பேசினது போதும். என் கூட வா...'' டாக்டர் நரேந்திரன் அவள் தோள் மேல் கை போட்டு அவளை வார்டு பக்கம் அழைத்துச் சென்றார். ''இல்ல, வேண்டாம்... நான் வரலை. நான் வந்தா அவனைப் பார்க்க வேண்டி இருக்கும் ...'' என்று அவளும் முரண்டுபிடித்தாள்.

''நீ பார்க்கணும். உன்னையும் என்னையும் ஒருசேர அவனும் பார்க்கணும். அப்படிப் பார்க்கறதுகூட ஒருவித ட்ரீட்மெண்ட் ஜானகி. அவனுக்கு மட்டுமல்ல... உனக்கும் தான்.'' அவர் பதிலில் ஆயிரம் உள்ளர்த்தங்கள்.

வார்டில் அவன் காலை விரித்தபடி படுத்திருந்தான். உடம்பு முழுக்க ஒரே சிரங்கு.. அங்கங்கே தோல் உரிந்து ரத்தக் கசிவு வேறு... சில இடங்களில் சீழ்கட்டி அந்த இடம் மட்டும் வெள்ளையாய் பழுத்திருந்தது. தலையில் கோரைப் புதர் போல முடி... தாடியும் தொப்புளை தொட்டது... அதில் பாதிக்கு மேல் நரைகள்.

அமைதியாகக் கண்களை மூடிக் கொண்டு படுத்திருந்த வன், டாக்டரும் ஜானகியும் வரவும் கொஞ்சம் போல சங்கடப்பட்டான். படுத்த நிலையிலேயே நெளிந்தான். நோ... நோ... நீங்க பார்த்ததும் நெளியறீங்க... அமைதியா படுத்திருங்க...'' என்றார் நரேந்திரன்.

ஜானகி அவனைப் பார்ப்பதை முற்றாகத் தவிர்த்தாள். பக்கத்தில் சுவரில் ஒரு ப்ளோ அப் போஸ்டர். அதைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அவன் கண்ணிரண்டும் கலங்கி பக்கவாட்டில் ஒரு சிறு ஸ்படிக மணி அளவுக்கு கண்ணீர் உருண்டும் ஓடியது.

''அடடா... என்ன சார் நீங்க? பழசை எல்லாம் நினைக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கேன்ல. அதை எல்லாம் மறந்துடுங்க. ஜானகிய மறந்ததாலதானே உங்களை இங்க சேர்த்து ட்ரீட்மெண்ட் கொடுக்க என்னால முடிஞ்சது... கெட்டது கசப்பானது நமக்கு வருத்தம் தரக் கூடியதுன்னு நினைவுகள் பல நினைக்கவே கூடாது. இப்ப எப்படி இருக்கோம். அடுத்து என்ன செய்யப் போறோம். இல்லை, என்ன செய்யணும்னுதான் யோசிக்கணும். நீங்களும் அவைகளை நினைங்க. நாங்க உங்களை முதன்முதலா பார்த்தப்ப நீங்க இருந்த இருப்புக்கு இப்ப பல மடங்கு தேறிட்டீங்க. இன்னும் 15 நாள்ல நீங்க ரொம்பவே குணமாயிடுவீங்க...

டாக்டர் நரேந்திரன் பேசி முடிக்கவும் அவன் கைகளைக் கூப்பவும் சரியாக இருந்தது. ஜானகி அப்பொழுதும் அந்த ப்ளோ அப் போஸ்டர் மேல்தான் குறியாக இருந்தாள்.

“டார்லிங்... நாம போலமா?” அவன் எதிரில் டாக்டர் நரேந்திரனும் அவளை டார்லிங் என்ற அழைத்தது அவளை என்னவோ செய்தாலும் அந்த அழைப்பு அவள் அடிமனத்துக்கு மிகப் பிடித்திருந்தது.

ஒரு முந்திரி நீலத்திற்கு அதே போல உதட்டை வளைத்துச் சிரித்தவள், அப்படியே அவரோடு அங்கிருந்து அகலத் தொடங்கினாள். அவனிடமோ கண்ணீர் கொப்பளித்து நெஞ்சப் பகுதிக்குள் திபுதிபுவென்று ஒரு யானைக் கூட்டமே நுழைந்தது போல இருந்தது. அவளுக்கோ ஒரு யானைக் கூட்டம் அவள் மன மைதானத்தில் இருந்து வெளியேறியது போல இருந்தது.

சரி...

இந்த மூர்த்தி அந்த நாளில் ஜானகியை என்ன செய்தான் என்று ஒரு பார்வை பார்த்துவிடுவோம். இவன் யாரோ அல்ல... ஜானகியின் சித்திக்கு ஒன்றுவிட்ட தம்பி வேலை தேடி சென்னை வந்தவன் சித்தியோடு அப்படியே தங்கிவிட்டான். அவளுக்கும் பிறந்தவீட்டு அனுசரணை கொஞ்சம் தேவைப்பட்டது.

வாலிப வயது... வேலை கிடைக்கவில்லை. ஆனால், ஜானகியிடம் காதல் கிடைத்தது. அவளது வாலிப வனப்பைக் குறிவைத்து அவளிடம் போலியாகப் பழகினான். பாவம் ஜானகி... அவளுக்கு போலிக்கும் அசலுக்கும் வித்தியாசமே தெரியவில்லை. அவள் அப்படி ஒரு வளர்ப்பு. எனவே, மூர்த்தியைத் தனது உதயசூரியனாகத்தான் நினைத்தாள். அவனும் அவளிடம் அவ்வப்போது அத்தமீறிட முயன்று அதில் மட்டும் தோற்றுத் தோற்றுப்

போனான். ஒரு நாள் கூல்ட்ரிங்க்ஸில் தூக்க மாத்திரையைக் கலந்து கொடுத்து அவளை மயங்கச் செய்து தனது வெறியையும் தணித்துக் கொண்டு விட்டான்.

அது அவளை மசக்கையில் கொண்டு போய் நிறுத்தவும், சித்திக்காரி சாமியாடி விட்டாள். யார் இதற்குக் காரணம் என்று கேட்டபோது அவளால் யாரைச் சொல்ல முடியும்...?

மூர்த்தியைத் தவிர வேறு எவரும் அவளிடம் தப்பாக எந்த முயற்சியும் செய்ததில்லை. எனவே, அவனை நோக்கித் தான் கையை நீட்டினாள். ஆனால் அவனோ ''அடிப் பாவி...'' என்று ஆரம்பித்து அவளை வேசி என்று முடித்து எவன்கிட்டயோ படுத்துட்டு வந்து இப்ப என்னைச் சொல்லிட்டியா என்று பிளேட்டையே திருப்பிப் போட்டு விட, அதுவரை அமைதியாக வேலை - வீடு வீடு. வேலை என்று செக்குமாட்டு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த ஜானகியின் அப்பாவும் ஏதோ வாழ்ந்து புதிதாகக் கண் விழித்துக் கொண்டவர் போல ஜானகியைப் பார்த்துப் புலம்பி, ''நீ எல்லாம் என் பொண்ணா... என் வயித்துல பொறந்து குடும்ப மானத்தை கப்பலேத்திட்டியே...'' என்று ஆலாபனை பாட, சித்தி கையில் துடைப்பத்தை எடுத்துக் கொடுத்தாள். அது பிய்ந்து போகும் வரை அடித்தாலும் தப்பு இல்லை என்றாள். அவரும் அடித்தார்! அப்படிப்பட்ட அடிக்கு மருந்து போட்டவர்தான் டாக்டர் நரேந்திரன்! அவரிடம் என்ன நடந்தது என்பதை மனம்விட்டுக் கூறியவள், அவர் மடி மேலேயே மயங்கியும் விழுந்து விட்டாள்.

அந்த நொடியே நரேந்திரனிடமும் ஒரு முடிவு. ஆனால், அவர் தன் முடிவை உடனே சொல்லவில்லை. அவளைத் தன் டிஸ்பென்சரிக்கு அழைத்துச் சென்று உதவியாளராக வைத்துக் கொண்டு வயிற்றுக் குழந்தையும் போஷாக்குடன் வளரும்படிப் பார்த்துக் கொண்டார். அவளைத் தேடிக்

கொண்டு யாருமே வரவில்லை. ஒழிந்தது தொல்லை என்று நினைத்திருக்க வேண்டும். அதே சமயம் ஜானகியும் நல்ல விதமாகக் குழந்தைப் பெற்றுக் கொள்ளுமுன் அவளிடம் மனம்விட்டுப் பேசினார். அவள் சம்மதத்தை வாங்கிக் கொண்டு ரிஜிஸ்தர் மேரேஜ் செய்து கொண்டார் நரேந் திரன். ஜானகியால் இன்றுவரை அதை நம்ப முடிய வில்லை.

“இதோ பார்... எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. நான் காந்தீயவாதி. உனக்கு வாழ்க்கை தர்றதுல எனக்கு திருப்தி இருக்கு. நீ பிள்ளை பெத்துக்கறதுக்கு முந்தி நம்ம கல்யாணம் நடக்கணும். அப்பதான் அது அந்த குழந்தைக்கு நல்லது. இல்லேன்னா பாவம் அந்தக் குழந்தை... நீ யாருக்காக இல்லேன்னாலும் அதுக்காக வாழ்ந்தாகணும். அப்புறம் எனக்காகவும் நீ வாழணும் உன்கிட்ட கேட்டுக்கறேன்” என்ற போது ஜானகி அப்படியே சரிந்து அவர் காலில் விழுந்து விட் டாள். இன்று வரை அவளை விட்டு ஒரு அகலாத பிரமிப்பு எதுவென்றால் அது நரேந்திரன்தான்

இன்று அவள் குழந்தைக்கு... தப்பு தப்பு அவள் அன்று பெற்ற பெண்ணுக்கு இருபத்தியோரு வயது! மெடிக்கல்தான் அவளும் படிக்கிறாள். நரேந்திரன் பேஷண்ட்டுகளைப் பார்க்கும்போது கூடவே செல்வாள். மூர்த்தியைக்கூட அவள்தான் பார்க்கிறாள். அவள் தொட்டு வைத்தியம் பார்க்கும்போது மூர்த்திக்கே ஒரு இனம்புரியாத கூச்சம், பரவசம், அதிர்ச்சி, ஆச்சரியம் எல்லாம் ஏற்படும். பின் ஏற்படாதா என்ன?

ஏன் என்றால் அவனுக்குத்தானே அவள் யார் என்பது தெரியும்? அவள் வந்தாலே மூர்த்தி கூர்மையாகி விடுவான். விழுங்கிவிடுவது போலகூடப் பார்ப்பான். நீ என் ரத்தம் என்று சொல்ல நாக்கு துடிக்கும். ஆனால், அதற்கு அவனிடம்

தைரியம் ஏது? அது சரி. இந்த மூர்த்தி இங்கே எப்படி வந்தான் என்று கேட்கிறீர்களா?

அங்கேதான் விதியைப் பற்றி நாம் சிந்தித்தே தீர வேண்டும். ஜானகி, நரேந்திரனை மணந்துகொண்ட பிறகு தன் பிறந்தவீட்டுப் பக்கம் திரும்பிக்கூட பார்க்கவில்லை. நரேந்திரனும் பார்க்க விடவில்லை என்றுகூடக் கூறலாம். சொல்லப் போனால் அப்படியே ஒதுங்கி விட்டாள். நரேந்திரனோடு சேர்ந்து ராணுவத்தில் பணியாற்றுவதற்காக அவர் சென்றபோது ஜானகியும் கூடவே போய் விட்டாள்.

ஒரு பதினைந்து வருட ஓட்டத்திற்குப் பிறகு மகள் ஸ்ரேயாவை சென்னை மெடிக்கல் காலேஜிலேயே சேர்க்க வாய்ப்பு வந்தது. மகளுக்காக சென்னை வந்த இடத்தில் நரேந்திரனும் ஒரு டிஸ்பென்ஸரி துவக்கிட, இன்று அது சென்னையின் கைராசி மருத்துவமனைகளில் ஒன்று.

ஜானகியிடமும் அடையாளம் தெரியாதபடி ஒரு உருமாற்றம். ஒரு முறை அவளது பக்கத்து வீட்டுக்காரியைத் தங்கள் ஆஸ்பத்திரியிலேயே பார்க்க நேர்ந்தும் அவளுக்கு ஜானகியை அடையாளம் தெரியவில்லை. ஜானகியும் தான் யார் என்று அவளிடம் காட்டிக் கொள்ளவில்லை. ஒரு விதத்தில் அந்த மாற்றம் அவளுக்குப் பாதுகாப்பான ஒன்றாகக்கூட தோன்றியது.

அப்படியே காரில் ஒரு நாள் தான் பிறந்து வளர்ந்த வீட்டுப் பக்கமும் போய் வந்தாள். அந்த வேளையில் அப்பா சில வருடங்கள் முன்பு இறந்துவிட்டதும், சித்தி ஒரு கை கால் விளங்காமல் இழுத்துக் கொண்டு கிடப்பதும் தெரியவந்து மனது பாரமாகிப் போனது.

அப்போது மூர்த்தி என்னவானான் என்பது பற்றித் தகவல் இல்லை. ஒருவர் மட்டும், ''குடிச்சிவிட்டு எந்த குப்பை தொட்டிகிட்ட விழுந்து கிடக்கறானோ?'' என்றார்.

அது உண்மையாகிப் போனது.

ஒரு நாள் ஜானகி வசிக்கும் தெருவிலேயே குப்பைத் தொட்டி ஓரமாக சொறி சிரங்குகளோடு கிடந்து அவள் கண்களில் நெருப்பை மூட்டி விட்டான். அவனை ஸ்ரேயாவும் பார்த்து அநாதை இல்லம் ஒன்றுக்கு தகவல் அனுப்பினாள். ஆனால், யாரும் அவ்வளவு சுலபத்தில் வந்து அவனைத் தூக்கிச் சென்றுவிடவில்லை.

அந்த நாள்கள் ஒவ்வொன்றுமே ஜானகி வரையில் ரணமாய்த்தான் கழிந்தது. கடவுள் அவனைத் தண்டித்து விட்டானா..? இல்லை. அவனை இப்படிக் கண்ணில் காட்டித் தன்னைத் தண்டிக்கிறானா என்று கேட்டுக் கொண்டாள்.

அவளது துடிப்பைச் சரியான கோணத்தில் பார்த்தது நரேந்திரன்தான். துணிச்சலாகத் தானே அவனைத் தூக்கி வந்து தனது ஆஸ்பத்திரியிலேயே வைத்து மருத்துவமும் பார்க்கத் தொடங்கி விட்டார். ஜானகி விக்கித்துப் போய் நிற்கவும், நரேந்திரன் சொன்னது ஜானகியை வாயடைக்க வைத்து விட்டது.

''ஜானகி... மன்னிக்கறதைவிட பெரிய தண்டனை உலக்கத்துல இல்லை. அந்த மூர்த்தியைக் காலம் தண்டிச்சிடிச்சு. அது உடம்பாலதான் தண்டிச்சிருக்கு. நாம நம்ம பண்பான செயல்களால அவன் மனசைத் தண்டிப் போம். இந்தத் தண்டனை நிச்சயம் அவனைப் புடம் போடும்.

எவ்வளவு பேசினாலும் பழைய தப்பு நேராகிப் போறதில்லை. ஆகையால அதைப் பற்றிச் சிந்திக்காம இனி இவன் எப்படி இருக்கப் போறான்னு நாம பார்க்கணும்.

இவனை காலம் காரணமில்லாம நம்ம கண்ணுல காட்டலை. ஒரு வகைல உன்னை நான் சந்திக்க, என்னை நீ சந்திக்க இவன்தானே காரணம்? அதுக்கு நன்றியா

அவனைக் குணப்படுத்துவோம். அவன் எதிர்க்க நீ சகஜமாக நடமாடு. உடம்பால கெட்டாலும் கடவுள் உன்னைக் கைவிடலைங்கறது அவனுக்கும் தெரியட்டும்.

அதுதான் அவனைச் சிந்திக்க வைக்கும்.இது நமக்குக் கிடைச்சிருக்கற அருமையான சந்தர்ப்பம். இவனுக்கு நான் சிகிச்சை செய்தாதான் நான் உன்னை மனப்பூர்வமா ஏத்துக்கிட்டதுக்கே ஒரு அர்த்தம் கிடைக்கும். கொஞ்சம் வெறுப்பைக் காட்டினாலும் உனக்கும் எனக்கும் இடை வெளி இருக்கறதா அர்த்தமாயிடும் ... என்ன சொல்றே?'' என்று நரேந்திரன் கேட்டபோது ஜானகி ஆடிப்போய் விட்டாள். மூர்த்தியை நிற்க வைத்து அடித்திருந்தால் கூட அவனும் பெரிதா உணர்ந்திருக்கப் போவதில்லை. ஆனால், இப்போது அவன் அங்குலத்துக்கு அங்குலம் கூச்சம் கொள்கிறான். வெட்கப்படுகிறான். காலத்தின் சக்தியையும் புரிந்தவனாகவே இருக்கிறான்.

அவர்கள் இருவரின் பெருந்தன்மையையும் அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை. அதிலும் ஸ்ரேயா அருகே வரும்போதெல்லாம் அவனுக்குத் தூக்கித் தூக்கிப் போடுகிறது.

அவளை அப்படியே ஏக்கத்துடன் பார்க்கிறான். அவளுக்கு அவனைப் பற்றித் தெரியாது... ஆகையால் அவன் ஏக்கத்தை ஒருவித பரிதாபமாகப் பார்த்து அவனிடம் கனிவுடன் பேசினாள்.

''கவலைப்படாதீங்க ... உங்களுக்குப் பரிபூரணமா குணமாயிடும். ஆனா, இனி எக்காரணத்தைக் கொண்டும் நீங்கள் குடிக்க மட்டும் கூடாது. நீங்க என்கிட்ட சத்தியம் பண்ணுங்க'' என்று பேசியபடியே அவன் முன் தன் சிவந்த கைகளை நீட்டிட, அவனும் நடுங்கும் தன்கரங்களால் அவளுக்குச் சத்தியம் செய்து கொடுத்தான். அதை நரேந்திரனும் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். அதன்பின்

ஸ்ரேயாவை தனியாக அழைத்துப் பாராட்டவும் செய்தார். அவள் சிரித்துக்கொண்டே போய்விட்டாள். அவனிடம் மட்டும் சொல்ல முடியாத அளவிற்கு ஒரு மனப்புழுக்கம். சரி... இனி அடுத்த கட்டம் இவர்கள் வாழ்க்கையில் எப்படி இருக்கும் என்று பார்த்துவிடுவோமா?

அன்று...

அவனால் படுக்கையில் இருப்புக் கொள்ள முடிய வில்லை. எழுந்து நரேந்திரனின் அறைக்கே சென்று அவர் முன் கைகூப்பியபடி நின்றான்.

"என்ன மூர்த்தி?"

"சார்... என்னை எதுக்குக் குணப்படுத்தறீங்க . உங்களால எப்படி என்மேல் கருணை காட்ட முடியுது?"

"இதைக் கேட்கதான் வந்தீங்களா?"

"இல்ல சார்... எனக்குள்ள இப்ப எவ்வளவோ கேள் விங்க. நீங்க காட்றது பெருந்தன்மையா, இல்லை என்னை நீங்க சித்ரவதை செய்யறீங்களான்னு குழப்பா இருக்கு."

"சித்ரவதையா?"

"ஆமாம்... சார் உங்க பெருந்தன்மை என் வரைல சித்ரவதைதான். நான் ஒரு கேடு கெட்டவன் சார்.."

"இப்ப எதுக்கு அந்தப் பழைய பேச்செல்லாம்... இனி நீங்க நல்லவிதமா வாழப் பாருங்க.."

"எனக்கு அது எப்படின்னே தெரியாது சார்... என்கிட்ட யாருமே உங்கள மாதிரி நடந்துகிட்டதில்ல. இப்பதான் நான் முதன்முதலா ஒரு நல்ல விஷயத்தோட விஸ்வரூபத்தை உங்க மூலமா பார்க்றேன்."

"சரி, இனி நல்லவிதமா வாழலாமே?"

"நான் நல்லவிதமா வாழறதுல யாருக்கு என்ன சார் பிரயோஜனம்?"

"இந்தப் பூமியில ஒரு கெட்டவன் குறையறதுங்கறது ஒரு நல்ல விஷயமில்லையா?"

"சார்... நான் ஜானகி கால்ல விழுந்து மன்னிப்புக் கேட்க விரும்பறேன் சார்.."

"நீங்க இப்ப என்கிட்ட சொன்னதே போதும். நான் அவகிட்ட சொல்லிடறேன்..."

"சார்.."

"போங்க... போய் உணர்ச்சிவசப்படாம படுங்க... " நரேந்திரன் அவனைச் சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டு வந்து தன் ஸீட்டில் அமர்ந்து நெடுநேரம் சிந்தித்தார். மேஜை மேல் ஒரு காந்தியின் சின்ன உருவச் சிலை. அது தன் டேபிள் மேல் இருப்பதில் ஒரு அர்த்தம் இருப்பதாகத் தோன்றியது. மனதுக்கும் பூரிப்பாக இருந்தது. உற்சாகமாக வீட்டிற்குக் கிளம்பினார்.

வெளியே வந்து காரை எடுத்துக் கொண்டு அவராகவே டிரைவிங் செய்தபடி, சென்னை நகர வீதிகளில் பயணித்தபடி இருந்தபோதும் மூர்த்தி பற்றிய எண்ணம்தான். அவனைப் பற்றிய உண்மைகளை ஸ்ரேயாவிடம் கூறி, நான் உண்மையில் உன் தகப்பன் இல்லை. அவன்தான் என்று கூறிவிடுவதுகூட உத்தமம் என்றுகூடத் தோன்றியது.

குறைந்தபட்சம் அவளது அன்பாவது அவனை இனிவரும் காலங்களில் புத்துயிர்ப்பாக வைத்திருக்கும் என்றெல்லாம் யோசித்தபடியே காரை டிரைவிங் செய்தவரை நோக்கி ஒரு அரை பாடி லாரிக்காரன் அசுர வேகத்தில் வந்து மோதியதில் அவரது காரும் சில நொடி கால சதியிலேயே அப்பளமாகி அவரையும் ரத்த சகதியாக்கி விட்டது

ஜானகி வரையில் இடி இறங்கின மாதிரி இருந்தது. ஆஸ்பத்திரிக்கு வந்து பார்த்தபோது நரேந்திரன் உடம்பில்

உயிர் இல்லை. ஆனால், அவர் கடைசி கடைசியாக எழுதியதாகச் சொல்லி ஒரு கடிதத்தைக் கொடுத்தார்கள்.

அதை வாங்கும்போது அவளது கைகளில் அப்படி ஒரு நடுக்கம். அப்போது மூர்த்தியும் செய்தி அறிந்து வந்து அப்படியே நரேந்திரன் உடல் மீது விழுந்து கதறினான்.

அவனது கதறலுக்கு நடுவில் நரேந்திரனின் கடிதத்தைப் படித்தவளுக்குப் பகீர் என்றது.

'என் அன்பு ஜானு!

இப்படியாகும் என்று இறைவனுக்கு முன்பே தெரியும் போலும். அதனால்தான் மூர்த்தியை நம் கண்ணில் காட்டி அவனையும் ஒரு முழு மனிதனாக மாற்ற வைத்து விட்டான். இன்று மூர்த்தியேகூட, நான் வாழ்வதால் யாருக்கு என்ன லாபம் என்று கேட்டான்... என் பணத்தைப் பார்க்கும்போது அவனுக்கு என்ன லாபம் என்பது தெரிந்துவிடும். அவனை இனியும் புறக்கணிக்காதே... ஏன் என்றால் இனி அவன் வேறு, நான் வேறு இல்லை.'

கடிதத்தை படித்த ஜானகிக்கு நெஞ்சையடைத்தது. முதல் காரியமாக அந்தக் கடிதத்தைக் கிழித்தவள் சற்று ஆவேசத்தோடு மூர்த்தி அருகே வந்தாள். அவனும் அவளைப் பார்த்தான். கண்களில் நீர் திரண்டு நின்றபடி இருந்தது. உதடிரண்டும்கூட 'கவலைப்படாதே. நானிக் கிருக்கிறேன்' என்று சொல்லத் துடித்து அவன் வரையில் முடியாமல் போனது.

"ப்ளீஸ்... நீ கொஞ்சம் வெளிய போறியா. நான் கொஞ்சம் நிம்மதியா அழணும், என் நரேனுக்காக.." என்றாள். அவனுக்குப் புரிந்தது. ஒரு கை குவிப்புடன் திரும்பி நடக்கத் தொடங்கினான். அதேசமயம், இனி எந்த நாளிலும் ஜானகியின் கண்களில் பட்டுவிடாத தூரம் நோக்கி...

# 21. படிப்பு

மதுரை ரயில்நிலையம்

சென்னைக்குப் புறப்பட வேண்டிய பாண்டியன் எக்ஸ்பிரஸ் ரயில் ஒரு நீளமான இரும்பு வீதி போல பிளாட் ஃபாரத்தில் நின்றுகொண்டிருந்தது. அதில் தனக்குரிய பெட்டியைத் தேடிப் பிடித்து, அதனுள் இருக்கையையும் தேடிப் பிடித்து அமர்ந்திருந்த கணேசனுக்கு அவன் வாழ் விலும் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருப்பது போல ஒரு சின்ன பிரமை...

மதுரைக்கு வெளியே மாடக்குளம் எனும் ஒரு அரை நகரமும் அரை கிராமமுமான ஊரில் அரசியல் கட்சி ஒன்றின் செயலாளர் ஆகவும் ரியல் எஸ்டேட் புரோக்கர் ஆகவும் இருந்துவரும் கணேசன் எட்டாம் வகுப்பைக் கூட கடக்க முடியாதவன். அவனுக்கு ஆங்கிலமும் கணக்கும் சுடுகாட்டுப் பூதங்களைவிட கொடுமையாகத் தெரிந்தது தான் காரணம். இந்த இரண்டும் சுத்தமாய் வசப்பட மறுத்ததால் தன்னை ஒரு முட்டாளாக யாரும் கருதிவிடக் கூடாது என்பதற்காகவே தமிழ் தமிழ் என்று தாய்மொழிப் பாடத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, என் மொழிக்கு எதிரான ஆங்கிலம் கற்பதை நான் கேவலமாகக் கருதுகிறேன் என்று அப்போதே சாமர்த்தியம் காட்டத் தொடங்கிவிட்டவன்! அதைக் கவனிக்க ஆங்கில வகுப்பெடுக்கும் ராமசாமி வாத்தியார் என்பவரும்

'எதிர்காலத்தில் நீ நிச்சயம் அரசியல்வாதியாகிவிடுவாய்... அப்போது ஒரு நாள் ஆங்கிலத்தை வசப்படுத்திக் கொள்ளாமல் போனதற்காக ரகசியமாக வருத்தப்பட்டே தீருவாய்' என்றும் கூறியிருந்தார்.

ரயில் பெட்டியில் இடம் பிடிப்பதற்காக அதில் ஒட்டியிருந்த சார்ட் பேப்பரைப் பார்த்தபோது அவனுக்குள் ராமசாமி வாத்தியார்தான் தோன்றிச் சிரித்திருந்தார். டிக்கெட்டிலேயே கோச் நம்பர், பர்த் நம்பர், என்று எல்லாம் இருந்தும் ஏனோ அது அவனுக்கு விளங்கவில்லை . முதலில் டிக்கெட்டை டிராவல் ஏஜெண்ட் கொடுத்தபோதே குழம்பிப் போய்விட்டான். ''இது என்ன டிக்கெட்டைக் கேட்டா துண்டு தாளைக் கொடுக்கிறீங்க...?'' என்று ஏஜெண்டிடம் கேட்டு அவர்களுக்கென்று சிரித்தபடியே, ''ரயில்ல போய் ரொம்ப வருஷமாச்சோ?'' என்று கேட்டதெல்லாமும் ஒரு நடந்து முடிந்துவிட்டிருந்த வேடிக்கை.

ஆள் நடமாட்டமில்லாத பொட்டல்வெளிகளில் காலை வைக்கும்போது மிளகு கணக்காய் இருந்து கொண்டு 'ஆ' வென அலறவிடும் நெருஞ்சிமுள்ளாகவும் அந்த ஏஜெண்ட்டின் ஏளனச் சிரிப்பு அவன் மனதைக் குத்திக் கொண்டிருந்தது.

இருந்தும் அதை கஷ்டப்பட்டுத் தவிர்த்துவிட்டு ரயில் பெட்டிகளிடம் வந்து எதில் ஏறுவது, எதில் இறங்குவது என்று குழம்பி நின்றபோது சென்னைக்குப் போனால் இன்னமும் சிரமப்பட வேண்டி வந்துவிடுமோ என்கிற பயமும் சேர்ந்து கொண்டது.

பளிச்சென்று கட்சிக்கரை வேட்டி பாலியஸ்டரில் சந்தனக் கலர் சட்டை மூணு பவுனில் ஒரு மைனர் செயின் புதிதாய் வாங்கியிருப்பது தெரியும்படியான விலை எழுதப்பட்ட ஸ்டிக்கரைகூட எடுத்திராத லெதர்பை காலில்

கூட புதிய செருப்பு என்கிற தோரணைகளே அவனது அறியாமைகளைக் காட்டிக் கொடுத்துவிட்டன. பிறகு மாடக் குளத்திலேயே ஒரு மளிகை கடைக்காரன் வீட்டுப் பையன் சென்னையில் இன்ஜினீயரிங் கல்லூரியில் படிக் கிறான், லீவுக்கு வந்திருந்தவன் திரும்பிச் செல்லும்போது கணேசன் சார்ட் பேப்பர் அருகே தடுமாறிக் கொண்டு நிற்பதைப் பார்த்துவிட்டு அவன்தான் கோச்சையும் பர்த்தையும் காட்டிக் கொடுத்தான்.

அப்போதும் கணேசனுக்குள் ஒரு கூச்சம் பொருக்கெடுக்கத்தான் செய்தது. இருந்தும் எப்போதுமே அவனை ஆட்சிப் படைக்கும் அந்தச் சுய செருக்கு அவனிடம் சமாளித்து விட்டது.

"அப்பாடி... சூதானமான ஆள்தான் நீ... அண்ணனுக்கு உதவி செய்யிறியா, இல்ல கண்டுக்காம போறியான்னு பார்க்கத்தான் உன் வெதுப்பால கூமாப் பய மாதிரி தடவிக்கிட்டுத் திரிஞ்சேன். நீ நல்ல பயதான்... பாத்து அப்பு! பட்டணத்துல கவனமா இருந்துகிட்டு கருத்தா படிக் கோணும். உங்கப்பாரெல்லாம் உசுரைக் கொடுத்து உன்னைப் படிக்க வைக்கறாரு. நீ மேல வந்தா உன் குடும்பத் துக்கு மட்டுமில்ல... நம்ம மாடக்குளத்துக்கே பெருமை..."

என்று கணேசன் கொடுத்த லெச்சரும் அந்தப் பையன் பதிலுக்கு பார்த்த பார்வையும்கூட ஒரு தனித்த விஷயம்.

போகட்டும்... இத்தனை பாடுபட்டு கணேசன் எதற்காக சென்னை போகிறானாம்? அதே நேரத்தில் கணேசனுக்கு நன்கு பரிச்சயமான நல்லசாமி என்பவரே அதைக் கேட்கவும் செய்தார். நல்லசாமி பத்திரப் பதிவு அலுவலகத்தில் டைப்பிஸ்டாக இருப்பவர். மதுரையில் எந்த ஏரியாவில் புறம்போக்கு நிலம் இருக்கிறது, எங்கெங்கே யார் யார் எவ்வளவு தூரத்துக்கு ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள்

என்பதை எல்லாம் விரல் நுனியில் வைத்திருக்கும் ஒருவித விவகாரமான பேர்வழி.

பல ஆபீஸர்களேகூட ஃபைல்களைப் பார்த்து விவரங் களை அறிந்து கொள்ள முயலும்போது குழம்பிப் போய் நல்லசாமியைத்தான் கூப்பிட்டுக் கேட்பார்கள்.

கணேசனுக்கும் நல்லசாமியிடம் தொழில் ரீதியாக ஒரு இணக்கம் எப்போதுமே உண்டு. வயதிலும் பெரியவர்.

''என்ன கணேசா... நீயும் பட்டணத்துக்குத்தான் போற போல இருக்குதே...'' என்று அவரே ஆரம்பித்து விட்டார்.

''ஆமாண்ணே... ஒரு டி.வி-ல பேசக் கூப்பிட்டிருக் காங்க..

''டி.வி-ல பேசவா... உன்னையவா?'' நல்லசாமி ஆச்சரி யம் பாதி ஏளனம் பாதி என்கிற சமவிகித கலவையோடு கேட்டுக் கண்களையும் அகட்டினார்.

''ஆமாண்ணே... என் கூட படிச்ச சுகுமார் பய ஒரு டி.வி-லதான் வேலை பாக்கறான். அந்த டி.வி-ல வாரா வாரம். எதாச்சும் ஒரு தலைப்பை எடுத்துக்கிட்டு வெட்டியும் ஒட்டியும் பேசுவாங்களாம்ல? அதுல ஒரு பக்கத்துல நான் பேசணும்கறது சுகுமார் பயலோட ஆசை. ஏரோப் ளேன்லயே புறப்பட்டு வாங்கன்னு சொல்லி ரொம்பவே வற்புறுத்தினான் நான்தான், அம்புட்டு தர்பார்லாம் எதுக்குடா சுகுமார்... நான் சிம்ப்பிளான ஆள், எனக்குப் பாண்டியன் எக்ஸ்பிரஸ்ஸே போதும்னுட்டேன்...''

''ஆமாம். என்ன தலைப்புல நீ எந்த பக்கம் பேசப் போறே?''

''வாழ்க்கைல முன்னுக்கு வரதுக்கு படிப்பு தேவையா, இல்ல கடுமையான உழைப்பு தேவையாங்கறதான்னே கேள்வி. உங்களுக்கே தெரியும், நான் உழைப்பாளர் அணியிலதான்' பேசுவேன்னு...''

"அப்ப உன்வரைல காலேஜ் பள்ளிக்கூடத்தை எல்லாம் இழுத்து மூடிப்பிடலாமா?"

"என்னண்ணே கேள்வி இது... படிப்பும் வேணும்னே. அது ஒருபக்கம்... ஆனா, கடுமையா பாடுபட்டா முன்னேற்றம் நிச்சயம்ல...?"

"என்னத்த... நாப்பது வருஷமா ரிஜிஸ்டர் ஆபீஸ்ல டைப்ரைட்டிங் மெஷினோட சாவறேன். என் பொண்டாட்டிய தொட்டதைவிட நான் அதை தொட்டு அடிச்சதுதான் அதிகம்... ஆனா அது ஒண்ணும் எனக்கு வாரித் தந்துடலை... ஆனா, புதுசு புதுசா அதிகாரிங்க வருவாங்க... பச்சை இங்குல கையெழுத்தும் போடுவாங்க. ஒரு மாசம் எழுத்த அடிச்சு நான் சம்பாதிக்கறதை அவுக ஒரு கையெழுத்துல எடுத்திடுவாங்க..."

நல்லசாமி யதார்த்தமாகப் பேசியது கணேசனை கொஞ்சம் கட்டிப் போட்டது போலாக்கியது. நிறையவே யோசனைகளோடும், வழிசல் சிரிப்போடும் அவரைப் பார்த்தான். டி.டி. வந்து நின்றபோது தன் வசம் உள்ள டிக்கெட்டைக் காட்டவேண்டும் என்றுகூட தோன்றவில்லை. நல்லசாமி காட்டவும், அதைப் பார்த்து அவனும் டிக்கெட்டைக் கொடுக்க, அதில் கையெழுத்து என்கிற பேரில் ஒரு சுழி சுழித்து அவரும் திருப்பித் தந்தார். அவர் அகலவும் "இதை பத்திரமா வெச்சுக்கணுமாண்ணே?" என்று நல்லசாமியிடம் கேட்டான்.

"ஆமாம். சென்னை ஸ்டேஷனை விட்டு வெளியே போவைல கோட்டு போட்ட எவனாவது கேட்டாலும் கேப்பான். பத்திரமா வெச்சுக்க. அப்புறடா தூக்கிப் போட்டா போடு, இல்லாட்டி ஃப்ரேம் போட்டு உன் வீட்ல மாட்டி கூட வெச்சுக்க..."

"அது எதுக்குண்ணே... வெட்டிச் செலவு."

"நல்லவேளை இதாவது புரிஞ்சிச்சே. ஆமாம். இப்பதான் ரயில்லயே போறியா?"

"ஆமாண்ணே... மாடக்குளமே மருதை... மருதையே தமிழ்நாடு... தமிழ்நாடே உலகம்னு ஒரு வைராக்கியமா இருந்துட்டேண்ணே..."

"குப்புற விழுந்தாலும் மீசைல மண்ணு ஒட்டலைன்னு நல்லாவே பேசறே... பாக்கறேன் டி.வி-ல உழைப்பை நீ எவ்வளவு தூரம் தூக்கிப் பிடிக்கறேன்னு..." நல்லசாமியும் கணேசனும் பேசிக்கொள்வதை அவர்களைச் சுற்றி அமர்ந்திருந்தவர்களும் ரசித்தார்கள். அவர்களில் டை கட்டிய ஒருவரும் அமர்ந்திருந்தார். அவரது சிகரெட்டால் கறுத்துப் போயிருந்த உதட்டில் ஒரு குறுஞ்சிரிப்பு விழுந்துவிடுவது போல ஒட்டிக் கொண்டிருந்தது. நல்லசாமி அதைக் கவனித்தவராக, "சார் என்னவோ நினைக்கற மாதிரி தெரியுது... சும்மா சொல்லுங்க... உழைப்பு பெருசா, இல்ல படிப்பு பெருசா?"

"நான் அதை நினைச்சு சிரிக்கலைங்க... இந்த டி.வி. காரங்களை நினைச்சு சிரிச்சேன்..."

"அவுகள நினைச்சா?"

"ஆமாங்க... எத்த தின்னா பித்தம் தெளியும்னு அவங்களுக்கு தெரியல. படிப்பு, உழைப்பு ரெண்டும்தான் பெருசு. உங்களைப் பார்த்து வலதுகண் பெருசா, இடது கண் பெருசான்னா நீங்க என்ன சொல்வீங்க...?"

"ரெண்டும்தான் பெருசு... அது எப்படி ஒண்ண மட்டும் சொல்ல முடியும்? "

"அப்படித்தான் இந்த சப்ஜெக்ட்டும்... ரெண்டும் வலதுகை, இடது கை மாதிரி... ஒண்ணா சேர்ந்து செயல் பட்டாதான் ஒரு செயல் வெற்றியடையும். அவங்களையே பாருங்க... இரண்டு பேரையும் புத்திசாலித்தனமா மோத

விட்டு அவங்க தூர நின்னுக்குறாங்க. கடைசில அவங் களுக்கு எப்படியோ ஒரு மணி நேரம் நல்லா பொழுதும் போயிடுது...''

''நீங்க சொல்றபடி பார்த்தா அவங்க புத்திசாலித்தனம்ல ஜெயிக்குதுங்கற மாதிரி வருது...''

''புத்திசாலித்தனம்தான் ஜெயிக்குது... ஆனா எப்படி...? வெட்டியும் ரெட்டியும் பேசற இவங்க புத்திங்கிற உழைப்பாலதானே?''

''அப்ப புத்திசாலித்தனமும் உழைப்பும் ஒண்ணு பட்டா தான் ருசியா ஒரு விஷயம் நமக்கெல்லாம் கிடைக்குதுன்னு சொல்றீங்க...''

''இதைச் சொல்லுணுமாக்கும்... பார்த்தாலே தெரியு துல்ல...'' டை கட்டிய மனிதர் கேள்வியைத் தொடர்ந்து தமிழாசிரியரைப் போன்ற தோற்றத்தில் இருந்த ஒருவர் அடக்கமாட்டாமல் ஆரம்பித்தார்.

''நம்ம சார் சொல்றதெல்லாம் சரிதான்... ஆனா நம்ம அவ்வைப் பாட்டி என்ன சொல்றாங்க தெரியுமா?'' என்று அவர் அத்தனை பேர் கவனத்தையும் தன் பக்கமாகத் திருப்பினார்.

''என்ன சொல்றாங்க..?''

*''ஆத்தங்கரை மரமும் அரசறிய*
*வீற்றிருந்த வாழ்வும் வீழுமன்றே - ஏற்றம்*
*உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்*
*பழுதுண்டு வேறோர் பணிக்கு... ன்னு*

பாட்டி ஒரு பாட்டுப் பாடியிருக்காங்க... இதுக்கு அர்த்தம் என்ன தெரியுமா?'' அவர் கேட்க, எல்லோரும் மார்பை நிமிர்த்திக் கொண்டு அவர் சொல்லப் போகிற பொருளுக்காக காதை கூர்மையாக்கிக் கொள்ள அவரும் தொடர்ந்தார்-

"அதாவது ஆத்தங்கரை ஓரமா நல்லா பொசு பொசுன்னு வளர்ந்திருக்கற மரம் ரொம்பவே ஊட்டமா இருக்கு... அதே போலதான் ஒரு ஊருக்கே ராஜாங்கறவனும்... ராஜாகிட்ட இல்லாத காசு பணமா? இருந்தாலும் அந்த மரம்கூட ஒரு நாள் பட்டுப் போயிடும். ராஜாவும் ஒரு நாள் யாராது எதிரி நாட்டு மன்னனால போர்க்களத்தில் கொல்லப்படலாம். ஆனா, வயல்ல உழுது பயிர் செய்து பாடுபடறவங்களுக்கு மட்டும் எப்பவுமே மதிப்பும் சிறப்பும் உண்டு. அவங்களுக்கு மட்டும் அழிவே கிடையாதுன்னு அவ்வைப் பாட்டி சொல்றாங்க... அப்படின்னா படிப்பு, அதிகாரம் இதை எல்லாம்விட மண்ணை நம்பி பாடுபடறதுக்குத்தானே எப்பவும் மதிப்பு?"

அவர் திருப்பிக் கேட்டது எல்லோரையுமே சிந்திக்க வைத்தது. கணேசன் அவர் சொன்ன அந்தத் தமிழ்ப் பாடலில் விழுந்திருந்தான்.

"சார்! கொஞ்சம் அந்தப் பாட்டைத் திருப்பிச் சொல்லுங்க?" என்று கேட்டு அதைத் தனக்குத் தெரிந்த தமிழில் எழுதியும் எடுத்துக் கொண்டான். அதுவும் ஒரு சிகரெட் அட்டையின் பின்முதுகில் பக்கத்து ஸீட்காரரிடம் பேனா வாங்கி...

அவன் மெனக்கெட்டு எழுதிக் கொள்வதைப் பார்த்து ஒருவர் சிரித்தார்.

"நீங்க ஏன் சிரிக்கிறீங்க?"

"சிரிக்காம... நானும் விவசாயிதான். அம்பது ஏக்கரை வெச்சிருந்தேன். மழை பெஞ்சால்ல முறையா விவசாயம் பண்றதுக்கு...? இங்க கூவன்னாவைக் கழுவவே தண்ணி இல்லை. இருக்கற ஆறு குளங்களை எல்லாம் ஆக்கிரமிப்பு செஞ்சு வீட்டைக் கட்டிப்புட்டோம். அப்புறம் எங்கிட்டு இருந்து தண்ணி வரும்?

தண்ணி இல்லாததால அம்புட்டு நிலமும் வானம் பார்த்த பூமியா கிடக்குது... பார்த்தேன்... வீடு கட்டி விக்கற ஒரு கோஷ்டி வந்து இடத்தைக் கேட்டாங்க. வித்துப்புட்டேன். அந்தப் பணத்தைப் பேங்க்குல போட்டு அதுல வர்ற வட்டியில ஏதோ காலத்தைக் கடத்திக்கிட்டிருக்கோம்.''

''அப்ப அவ்வைப் பாட்டி பாட்டும் பொய்யாப் போச்சுதா...''

''இந்தக் காலத்துல எல்லாமே பொய்யாத்தான்யா போகும்... காலம் அப்படி... உழைப்பும் சரி, படிப்பும் சரி, நேரம் நல்லா இருந்தாதான் வேலை செய்யும். இல்லாட்டி ஒரு பிரயோஜனமும் கிடையாது.''

கடைசியா உழைப்பு, படிப்பு இரண்டையும் தூரத்தூக்கிப் போட்டுவிட்டு நேரம் காலம்தான் என்கிற மாதிரி அவர் முடிக்கவும், எல்லோரிடமும் கொஞ்சம் ஸ்தம்பிப்பு.

கணேசனுக்குள் மட்டும் ஒன்றுக்குப் பத்தாகப் பலவித கருத்துகள் கிடைத்துவிட்ட மகிழ்ச்சி. தான் படிக்காததால் படிப்பு பற்றி அவனுக்குப் பெரிய அபிப்பிராயமில்லை. அவ்வப்போது படிப்பில்லாததால் தடுமாறினாலும் எப்படியாவது சமாளித்து எழுந்து நிற்கும் அந்தச் சாமர்த்தியம் இருந்தால் போதும் என்றுதான் முதலில் நினைத்தான். எனவே படிப்பு, உழைப்பைவிட சாமர்த்தியம்தான் பெரிது என்று பேசிவிட வேண்டும் என்பதுதான் அவன் எண்ணமாக இருந்தது. இப்போது இது எதுவுமேயில்லை, எல்லாமே கால நேரம்தான் என்கிறார். ஒருவேளை அதுதான் உண்மையோ? கணேசன் அந்த நேரம் கால கருத்தையும் அப்போதே ஆராயத் தொடங்கி விட்டான்.

எக்மோர் ஸ்டேஷனுக்குச் சுகுமார் வந்திருந்தான். எட்டாம் வகுப்பில் கூட படித்தவன்.. ஒரே தெருவைச் சேர்ந்தவன் வேறு... ஆளே உருதெரியாதபடி மாறியிருந் தான். ஜீன்ஸ் பேண்ட், முழுக்கை சட்டை, இடுப்பில் லெதர்

பெல்ட், அதில் செல்போனுக்கான கூடு... முகத்தில் சிறிய செவ்வகக் கண்ணாடி, காதில் இயர் போன் என்று அவனைப் பார்த்த கணேசனுக்கு ஒரு வேற்று கிரகத்து விஞ்ஞானபூர்வமான மனிதனைப் பார்ப்பது போல்தான் இருந்தது.

"எலே சுகுமாரு ... என்னடா இது, இப்படி மாறிட்டே?"

"நான் மாறிட்டேனா. பாவிப்பயலே. உலகமே மாறிடிச்சிடா... மாடக்குளத்தையே கட்டிக்கிட்டு அழுவறதால நீதான் மாறாம அப்படியே இருக்குறே..."

"சுகுமாரு... சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே. நான் சுத்தமான கிராமத்தான். மாறிக்கிட்டேயிருக்க பச்சோந்தி இல்ல..."

கணேசன் புத்திசாலித்தனமாகப் பதில் சொல்வதாக நினைத்துக் கொண்டு பேசிய பேச்சு சுகுமார் முகத்தைச் சூம்ப வைத்தது.

"என்னடா... ஏண்டா வாயைக் கொடுத்தோம்னு இருக்குதா?"

"ஏண்டா உன்னைக் கூப்டேன்னுகூட இருக்குது."

"அட, என்னடா நீ சும்மா தமாஷுக்குச் சொன்னேண்டா"

"என்னா தமாஷு... இந்த வெடுக்வெடுக்குன்னு பதில் சொல்றது, தெரியாட்டியும் தெரிஞ்ச மாதிரி காட்டிக்கறது... இதெல்லாம் இப்பவும் அப்படியே இருக்குதுடா உன்கிட்ட."

"விட்றா... படிச்சவங்க நீங்க எது செஞ்சாலும் அது படிப்பால வந்த புத்திசாலித்தனம். ஆனா, நான் ஏதாவது பேசுனா அதுதான் தப்போ..?"

"திரும்பவும் விடாம சமாளிக்கிறே பாரு... என்கிட்ட நீ பாக்கற விஷயமெல்லாம் வேஷம் இல்லை. வளர்ச்சி! நீ எந்த ஊர்ல இருந்தாலும் இப்படித்தான் இருந்தாகணும்.

போலீஸ்காரனா மாறுனா காக்கி உடுப்பைப் போட்டுத்தான் தீரணும், வக்கீலா மாறுனா கறுப்பு கவுனை அணிஞ்சுகிட்டுத்தான் கோர்ட்டுக்குப் போகணும். அந்த மாதிரிதான் இதுவும்.''

''சரி, சுகுமாரு.. இந்த விஷயத்தை இத்தோட விடு... நாம வேற விஷயம் பேசுவோம்.''

கணேசனே சுகுமாருக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து எக்மோர் ஸ்டேஷனுக்கு வெளியில் வந்தான். சுகுமாரும் தன் மாருதி காரில் அவனை ஏற்றிக் கொண்டான். அந்தக் காரை அங்குள்ள டிராஃபிக்கில் சுகுமார் எப்படித்தான் ஓட்டப் போகிறானோ என்று நினைத்தான். ஆனால், புகுந்து புகுந்து கார் ஓடுவதைப் பார்க்கும்போது உலகிலேயே சுகுமார்தான் மிகப் பெரிய திறமைசாலி மாதிரி தெரிந்தான். சென்னையின் விசாலம், வாகனங்களின் ஆரவாரம், பிசுபிசு வென்ற ஒருமாதிரி புழுக்கம்... ஓயாமல் உறைந்து போய் காட்சி தரும் கூவம் ஆறு, முணுக்கென்றால் கண்ணில் படும் விண்ணை முட்டும் காம்ப்ளெக்ஸ் கட்டடங்கள், அதே வேகத்தில் கண்ணில் படும் சாலையோரக் குடிசைகள் என்று கணேசனைக் காணுகின்ற காட்சிகள் அவ்வளவும் உலுக்கி எடுத்தன. அவன் வாழ்ந்து வரும் மாடக்குளமெல்லாம் புள்ளியைவிட சிறியதான ஒரு ஊராகிப் போயிற்று.

எல்லாமே முதல் பிரமிப்பு.

சுகுமாரின் காம்ப்ளெக்ஸ் கட்டட வீடும் வந்தது. லிஃப்டில் மேலேறும்போது அடேங்கப்பா... எத்தனை சொகுசு... என்று மனசுக்குள் திரும்பவும் ஒரு எண்ணத் திகைவு.

சுகுமாரின் மனைவி கணேசனை வரவேற்ற உபசரித்தாள். அவள் சுடிதார் உடுத்தியிருந்தாள். அதைப் பார்த்த கணேசன் தன் மனைவிக்கும் ஒன்று வாங்கித் தந்து அவளையும் அந்தக் கோலத்தில் பார்க்கவெல்லாம் ஆசைப்பட்டான்.

இறுதியாக சுகுமார் குளித்து முடித்துவிட்டு ஹாலில் உள்ள சோபாவில் கணேசன் எதிரில் வந்து அமர்ந்தான். கணேசனைப் பெரிய அளவில் மௌனம் ஆக்கிரமித் திருந்தது.

"என்ன கணேசா... கம்முன்னு இருக்கே? எப்படி இருக்கு மெட்ராஸு..?

"என்னத்த சொல்றது.. நீ எல்லாம் எப்படியோ மாடக்குளத்தை விட்டுத் தப்பிச்சு இங்கவந்து ஒரு மாதிரி தேறிட்டே.."

"நீயும் படிச்சிருந்தா தேறியிருக்கலாம்ல..?" சுகுமாரின் வார்த்தைகள் ஊசி போல தைத்தன.

"வாஸ்தவம்தான். இப்பத்தானே புரியுது, சரியான கேணித் தவளையாவே இருந்துட்டேனப்பா..."

"இப்ப கூட நீ படிக்கறதுன்னா படிக்கலாம். லண்டன்ல 98 வயசுல ஒரு பாட்டி டாக்டர் பட்டம் வாங்கியிருக் காங்க..."

"அப்படியா?"

"ஆமாம். நம்ம காலம் மாதிரியெல்லாம் கிடையாது தபால் மூலமா எவ்வளவு வேணும்னாலும் படிக்கலாம்."

"அப்ப ஒம்பதாம் வகுப்பு சேர முடியுமா நானு..."

"பார்ரா... எதுக்கு ஒம்பதாம் வகுப்பு டைரக்டா எஸ்.எஸ்.எல்.சி-யே எழுதலாம்."

"சுகுமாரு.. அதுக்கு நீ ஏற்பாடு பண்றியா?"

"அது என்ன பெரிய விஷயம்! ஆமா, என்ன இது திடீர்னு படிப்பு மேல உனக்குக் கவனம் திரும்பிடிச்சு.."

சுகுமார் கேட்க, கணேசனிடம் திரும்ப ஒரு திகைப்பு.

"உன்னைத்தான் கணேசா... என்ன திடீர்னு படிப்பு மேல உனக்கு ஆசை?"

''ஆசையில்ல சுகுமார்.. எனக்குள்ள இருக்கறது இப்ப அவஸ்தை.''

''அவஸ்தையா?''

''ஆமாம். மாடக்குளம்தான் உலகம்னு இருந்துட்டேன். எனக்குள்ள நான் ஒரு பெரிய பீலாங்கற எண்ணம் நிறையவே இருந்துச்சு. ஆனா, நெசத்துல நான் ரயில் பெட்டில இடம்பிடிக்கக்கூட தெரியாத ஒரு தற்குறி. ராத்திரி ரயில்பெட்டில என் கூட வந்தவங்கல்லாம் பேசுனாங்க. அது எனக்குப் பெருசா தெரிஞ்சிச்சு.. அடுத்து ஒருத்தர் பேசினாரு. அது அதைவிட பெரிசா தெரிஞ்சிச்சு. எல்லாரும் பேசப் பேச, நான் ரொம்ப சின்னவன் ஆயிட்டேன். நான் எவ்வளவு சின்னவன்கறதே நேத்து ராத்திரிதாம்ப்பா தெரிஞ்சிச்சு...''

கணேசனின் குரலில் கொஞ்சம் நெறி கட்டிக் கொண் டதைப் போல ஒரு உரசலும் கூட....

''எப்பவும் எனக்குக் கீழ விழறதே பிடிக்காது. ஒரு நூல் கிடைச்சாலும் பிடிச்சிகிட்டு எந்திரிச்சு நிப்பேன். ஆனா, நேத்தும் சரி, இப்ப உன் முன்னாலயும் சரி, முடியில அது...''

''போதும் கணேசா! ரொம்பவே குழம்பிக்கறே நீ. இங்க என் வாழ்க்கைலயும் நிறையவே சிக்கல், சங்கடங்கள்லாம் உண்டு. நான் வேலை பாக்கற டி.வி. கம்பெனியும் போராடிக்கிட்டுத்தான் இருக்கு... இந்தக் கார், காம்ப் ளெக்ஸ் கட்டடத்தை எல்லாம் பார்த்து நீ தப்புக் கணக்கு போட்றாதே..''

''புரியுது சுகுமாரு... உன் போராட்டம் இன்னும் மேல மேல போறதுக்கு... ஆனா, நான் குழிக்குள்ளல்ல கிடக்கேன்? கொஞ்சமாவது நான் மேல வரவேண்டாமா?''

கணேசனின் எதிர்கேள்வி சுகுமாரையும் ஒப்புக் கொள்ள வைத்தது.

"சரி.. மதியம் ஏ.வி.எம். ஸ்டுடியோவுல ஷூட்டிங்! நான் இப்ப கிளம்பறேன். உனக்குப் போய் கார் அனுப்பறேன். வந்துடு."

"வந்து.."

"என்னடா கேள்வி இது... வந்து உழைப்புதான் பெருசுன்னு உன் பாணில அடிச்சு விடு. உன்னைக் கூப்பிடும்போதே உழைப்பில் உயர்ந்த ஒரு கிராமத்து மனிதர் இவர். சென்னைக்கு இப்பொழுதுதான் முதன் முதலாக வந்திருப்பவர்னு சொல்லித்தான் கூப்பிடுவாங்க. சும்மா கலக்கு... என்ன?"

சுகுமார் கேள்வியோடு தன் காரில் ஏறிக் கொண்டு போயே போய் விட்டான். கணேசனுக்கு அவன் போகவும் டி.வி.தான் அவனுக்கான நேரம் கடத்தியாக மாறியது. அவன் வீட்டு டி.வி-யை நேராக டி.வி. பெட்டியைத் தொட்டுத்தான். இயக்க வேண்டும். ஆனால், சுகுமார் வீட்டு டி.வி-க்கு ரிமோட் இருந்தது. அதை எப்படி இயக்குவது என்றுதான் தெரியவில்லை. சுகுமார் மனைவியே வந்து இயக்கிக் கொடுத்துவிட்டுப் போனாள். டி.வி-க்குப் பக்கத்திலேயே ஃபாக்ஸ் மெஷின் இருந்தது. அதில் அவ்வப்போது செய்திகள் வந்து பேப்பர்கள் சுருண்டு விழுந்தன. சுகுமார் மனைவி அதை அவ்வப்போது எடுத்துக் கொண்டு போய் சமையல் செய்தபடியே காதுக்கு இயர் போனை மாட்டிக் கொண்டு செல்போன் வழியாகப் பேப்பரில் வந்த செய்திகளை எல்லாம் சுகுமாரிடம் பகிர்ந்து கொண்டாள்.

அதைப் பார்த்த கணேசனுக்கு முதலில் அவள் தனக்குத்தானே பேசிக் கொள்கிற மாதிரிதான் இருந்தது. பிறகுதான் அவள் சுகுமாருடன் பேசுவது புரிந்தது. அதுவும் அவள் தன் இயர் போனைக் கணேசனின் காதுகளில் மாட்டி உம் பேசுங்க..." என்று அவனைத் தூண்டியபோதுதான் புரிந்தது. இடையில் சுகுமாரின் மகன் யூனிஃபார்முடன்

பள்ளிக்குப் புறப்பட்டபோது சுகுமார் மனைவியிடம் அவன் பேசிய ஆங்கிலம் கணேசனை வாயைப் பிளக்க வைத்துவிட்டது.

கணேசனுக்கும் ஒரு மகன் இருக்கிறான். அவன் மாடக்குளம் உயர்நிலைப் பள்ளியில் அவனைப் போலவே ஏதோ படிக்கிறான். காக்கி அரை டிராயரும் வெள்ளை சட்டையும் தான் அவனது யூனிஃபார்ம்.

சுகுமாரின் மகன் பள்ளிக்கு மொபெட்டில் ஏறிக் கொண்டு முதுகில் புத்தகப் பை அமர்ந்திருக்க போன விதமே கண்கொள்ளாக் காட்சி போல இருந்தது. இதெல்லாம் எதுவுமே தெரியாமல் மாடக்குளத்தில் மயங்கிக் கிடந்த தெல்லாம் அந்த நொடியில் அவனை வதைக்கும் ஒருவித எண்ணக் கூட்டமாக மாறிவிட்டது.

டி.வி.பாட்டுக்கு ஓடிக்கொண்டிருந்தது. கணேசனும் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால், மனது மட்டும் அங்கே எதிலும் இல்லை. அது அவனை ஒரு அரைகுறையாகவே அவன் இருந்துவிட்டதை எடை போட்டுக் கொண்டிருந்தது.

மதியம் இரண்டு மணி.

கார் வந்து விட்டது. ஆனால், சுகுமாரின் மனைவி கார் டிரைவிரிடம் வந்து "கணேசன் ஊருக்குத் திரும்பிப் போய்ட்டாரு. நான் எவ்வளவு சொல்லியும் கேக்ககலை. 'குறைஞ்சபட்சம் எஸ்.எஸ்.எல்.ஸி.யாவது பாஸ் பண்ணிட்டுத் தான் நான் டி.வி.முன்னாலல்லாம் நிப்பேன். அப்பதான் எனக்கும் என்னைப் பிடிக்கும்'னு சொல்லிட்டுப் போயே போய்ட் டாரு. இதை அவர் கிட்ட சொல்லிடுங்க. நான் செல்போன்ல ட்ரை பண்ணினேன். ஆஃப் பண்ணி வெச்சிருக்கார் போல" என்றாள்.

கார் டிரைவருக்குக் கொஞ்சம் சுருக்கென்றது. அந்த டிரைவர்கூட எஸ்.எஸ்.எல்.சி. தேறாத கேஸ்தான். திரும்பி நடக்கும் அவருக்குள்ளும் நாமளும் படிக்கலாமோ என்கிற ஒரு எண்ணம்!

# 22. விடலைக் காலம்

**தொ**லைபேசி ஒலிக்கும்போதெல்லாம் தியாகராஜனுக்குப் பொறியில் சிக்கிக் கொண்டிருக்கும் எலியைப் போல அப்படி ஓர் அவஸ்தை!

பொறியியல் கல்லூரி ஒன்றில் பேராசிரியராக இருப்பவர் தான் தியாகராஜன்.

பார்த்துக் கொண்டேதான் இருந்தாள். அவரது பதிவிரதை ஜானகி.

"வாங்க, வந்து வேலையப் பாருங்க. அவ விருப்பப்படியே கல்யாணம் பண்ணிக் கொடுத்ததோட நம்ம கடமை முடிஞ்சது. வாழ்க்கையை அவ எப்பதான் தெரிஞ்சுக் கறதாம்?''

ஜானகிதான் இப்படிக் கேட்டாள். அவளா இப்படிக் கேட்கிறாள் என்று தியாகுவுக்கு ஆச்சரியமாகக்கூட இருந்தது. நள்ளிரவில் எழுந்து போய் பூஜை அறையில் விளக்கைப் போட்டுக் கொண்டு மஞ்சள் துணியில் காசு முடிந்து வைத்தவள், இப்பொழுது மட்டும் எப்படி இப்படிப் பேசுகிறாள் என்று வியப்பாக இருந்தது.

இருவருக்கும் திருமணமாகி இருபத்தேழு வருடங்கள் ஓடிவிட்டன. இன்னமும்கூட தன் மனைவியைத் தன்னால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றுதான் அப்போது அவருக்குத் தோன்றிற்று.

ஆனால், அவளிடம் ஒரு தெளிவான பதில்! ''நான் பிரச்சினையை அந்தத் திருப்பதி பெருமாள்கிட்ட விட்டுட்டேன். பொண்டாட்டியைப் பிரிஞ்சு தனியா நிக்கற அவருக்குத் தாம்பத்யம்னா என்னன்னு மத்தவங்களைவிட கூடுதலாகவே தெரியும். அவர்தான் நம்ம ப்ரியாவுக்கு சரியான முடிவு எடுக்கக்கூடிய நல்ல புத்திய கொடுக்கணும். இனி அவர் பாடு, அவள் பாடு. உங்களுக்கு காலேஜ்ல இன்னிக்கு ஸ்பெஷல் செமினார். அதைப் பத்தி யோசிங்க. எங்க பேங்க்ல புது மேனேஜர் சார்ஜ் எடுத்துக்கறார். நேத்து வரை இருந்தவர் ஒரு மரியாதை பைத்தியம். ஒரு குட்மார்னிங் சொல்ல மறந்தாலும் அதையே நினைச்சுப் புழுங்கற ஒரு ஜந்து. இன்னிக்கு சார்ஜ் எடுத்துக்கப் போறவர் எப்படியோ?'' என்று கூறிக்கொண்டே தனது லெதர் பேக்கில் மினி லஞ்ச் ஹாட்பேக்கை வைத்துக் கொண்டிருந்தாள். தியாகராஜனால் அவ்வளவு சுலபமாக அவளது பேச்சால் எல்லாம் விடுபட முடியவில்லை. பக்கத்திலேயே டேபிள் மேல் அவரது குடும்பப் புகைப்படம். சோகமாக அதைப் பார்த்தார்.

அவருக்கு வலப்பக்கமாக சற்றே அவர் தோள் மேல் சாய்ந்த மாதிரி மூத்தவள் வைஜெயந்தி பக்கத்தில் ஜானகி. ஜானகியின் தோள் மேல் சாய்ந்த மாதிரி இளையவள் ப்ரியா.

இருவருக்கும் ஒரு வருடம்தான் வித்தியாசம்.

மூத்தவள் வைஜெயந்தி தற்சமயம் அமெரிக்காவில் இருக்கிறாள். தற்போதைய இந்தியாவின் அப்பர் மிடில் கிளாஸ் குடும்பத்துப் பெற்றோர்களின் தங்கக் கனவான அமெரிக்காவில் வாழும் ஓர் இந்தியப் பையனுக்கே வாழ்க்கைப்பட்டு அங்கே வாழ்ந்து கொண்டிருப்பவள்! ஆனால், வாழ்க்கைப்பட்டவனோடு அல்ல...

ஒரு வருஷம்கூட தாங்கவில்லை அந்த முதல் கல்யாணம்... மியூச்சுவலாகவே கோர்ட்டில் கூடி ஜட்ஜ் முன்னால் கையெழுத்து போட்டு விலகிக் கொண்டார்கள். திட்டத்தட்ட பத்தரை லட்ச ரூபாய் செலவில் நடத்தப்பட்ட கல்யாணம் அது. இரண்டு நாள் கல்யாணத்துக்கான எலெக்ட்ரிக் பில்லே பதிமூணாயிரம் ரூபாய் வரை வந்தது. ஜானகிதான் பேங்க்கில் அக்கௌண்டண்ட் ஆயிற்றே! எனவே அவளுக்கு நிறைய கடன் கிடைத்தது. அதில் இன்னும்கூட பாக்கி இருக்கிறது. ஆனால், வைஜெயந்தியோ கணவனுக்கு 'பபாய்' சொல்லிவிட்டாள். ஓர் ஆறுதல் போல அவளே அங்கே இன்னொருவனை சிம்பிளாகக் கல்யாணம் செய்துகொண்டு ஒரு சில வாரங்கள் மட்டுமே அவளைப் பற்றிய தவிப்பைப் பெற்றோர்களுக்கு அளித்தாள். அந்த இரண்டாவது மாப்பிள்ளை ஒரு வங்காள பானர்ஜி. மெக்கானிகல் இன்ஜினீயரிங் படித்து அங்கே போய் எம்.எஸ். முடித்து அதற்கான ஒரு பணியில் சேர்ந்து விட்டவன்.

எப்படியோ மூத்தவள் சந்தோஷமாக இருக்கிறாள்.

அந்தப் பெருமையைச் சுமந்துகொண்டே இளையவளுக்கு மாப்பிள்ளை பார்க்க ஜாதகத்தை எடுத்தபோது ப்ரியா அதற் கெல்லாம் அவசியமே இல்லை என்கிற மாதிரி தன்னோடு காலேஜில் பணியாற்றும் கல்யாணகுமார் என்பவனை அழைத்து வந்து அப்பா அம்மாவுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். இருவர் கைவிரலிலும் ஒரே மாதிரி கார்னெட் மோதிரம், கழுத்திலும் ஒரே மாதிரி சங்கிலி என்கிற ஐட்டங் கள். அவர்கள் 'உனக்கு நான், எனக்கு நீ' ரகமாக ஊர்சுற்றிக் கொண்டிருப்பதை தியாகராஜனுக்கு உணர்த்திவிட்டது.

''என்ன ப்ரியா! கல்யாணகுமார்தான் உன் உட்பீயா? பேசாம முகூர்த்தத் தேதியப் பார்த்துடட்டுமா?'' என்று தியாகராஜனும் ஈஸியாக எடுத்துக் கொண்டார்.

ஆனால், ஜானகிக்குத்தான் மனசு குமுறிற்று.

"அந்தப் பையன் எந்த ஜாதின்னாவது உங்களுக்குத் தெரியுமா?"

"அடி போடி பைத்தியக்காரி... இப்பல்லாம் ஐ.டி. இண்டஸ்ட்ரில இருக்கற எல்லாரும் ஒரே ஜாதிடி. அதாவது மாசம் நாப்பதாயிரம் அம்பதாயிரம் சம்பாதிக்கற ஜாதி."

"சம்பாதிச்சா போதுமா... கல்ச்சர்னு ஒண்ணு இருக்குல்ல?"

"எந்தக் காலத்துல கல்ச்சரும் சம்பாத்தியமும் ஒண்ணா இருந்துருக்கு?"

"இப்படி எதுக்கெடுத்தாலும் ஒரு பதில் சொன்னா எப்படிங்க? ஏற்கெனவே ஒருத்தி வயித்துல புளியைக் கரைச்சிட்டா. இவ விஷயத்துலயாவது..."

"புரியது ஜானகி! பெரியவ கல்யாணத்தை நாமதான் பண்ணி வைச்சோம். என்னாச்சு?"

"அதுக்காக இவளை இவ இஷ்டத்துக்கு விட்டுறதா?

"நான் தெரியாமதான் கேக்கறேன். உன் பொண்ணு உன் பேச்சைக் கேப்பான்னு நீ நம்பறியா?"

"கேக்காட்டி போடி வெளியேன்னு சொல்வோம்."

"எதுக்கு...? அவளுக்கு ரொம்பவே சௌகர்யம் பண்ணிக் கொடுக்கவா?"

"அப்ப பசங்க விஷயத்துல அவங்க கிணத்துல விழப் போறாங்கன்னு தெரிஞ்சாலும் வாயை மூடிக்கிட்டு இருக்கணும்னு சொல்றீங்களா?"

"ரொம்ப தர்மசங்கடமான கேள்வியக் கேட்டுட்டே ஜானகி . மனுஷப் பருவத்துல எப்படி விடலைப் பருவம்கறது

ஒரு ரெண்டும் கெட்ட பருவமோ அப்படி ஒரு பருவம் நாட்டுக்கும் இப்ப வந்திருக்கு. இது விடலைக் காலம்.''

''இது என்ன புதுமாதிரி ஒரு டெஃபினிஷன். நாளைக்கு இவளும் கல்யாண வாழ்க்கைல தோத்துப் போயி கண்ணைக் கசக்கினா என்னங்க பண்ண?''

''அதுக்கு அப்புறமாதான் நாம விரும்பற ஒரு வாழ்க்கையை நாம நம்ம மகளுக்குக் கொடுக்க முடியும்கறத புரிஞ்சிக்கோ.''

தியாகராஜன் இப்படித் தனக்குத் தெரிஞ்ச பதில்களை எல்லாம் சொல்லி மனைவியைச் சமாதானப்படுத்தினாலும் அவரால் சமாதானமாகவே முடியவில்லை. தனக்குத் திருமணமே நடக்காமல் பிரம்மச்சாரியாகவே இருந்திருந் தால் இந்தச் சிக்கல்களுக்கே இடமில்லாமல் போயிருக்கும் என்றெல்லாம் அவருக்கும் தோன்றிக் கொண்டிருந்தது. ஜானகி பேங்க்குக்குக் கிளம்பிப் போயே போய் விட்டாள்.

**தி**யாகராஜன் உடை மாற்றிக் கொண்டு கல்லூரிக்குப் புறப்படலாம் எனும்போது அவர் அதிகம் எதிர்பார்த்து பயந்த அந்தத் தொலைபேசி ஒலித்தது. நெடுநேரம் ஒலிக்க விட்டு அது அடங்கப் போகும்போது மனசு கேட்காமலே மெள்ளத்தான் எடுத்தார்.

''அப்பாாா...!''

-மறுபுறம் ப்ரியாவேதான்.

''சொல்லும்மா அப்பாதான்.''

''நாங்க ரெண்டு பேரும் தெளிவா. ஒரு முடிவுக்கு வந்துட்டோம்ப்பா..''

''ம்..''

''அவர் டேஸ்ட் வேற. என் டேஸ்ட் வேறன்னு எப்ப ரெண்டு பேரும் துருவமா இருக்கோமோ அப்பவே காலம்

பூரா ஒத்துப்போறது கஷ்டம்கறது தெளிவாகிடிச்சு. ஆகை யால மியூச்சுவலா கோர்ட்ல டைவர்ஸ் வாங்கிடலாம்னு சொன்னேன். அவர் பெருசா ஒண்ணும் சொல்லல...''

''ம்..''

''இன்னிக்கே வக்கீலைப் பார்க்கலாம்னு இருக்கேன். அப்பா நீங்க கொஞ்சம் கூட வரணும்ப்பா...''

''ம்...''

''என்னப்பா... நான் கதையா சொல்றேன். எல்லாத் துக்கும் 'ம்... உ....' னா என்ன அர்த்தம்?''

''நீ சொல்றத கதையா இருந்தா அதைவிட இந்த அப்பாவுக்குச் சந்தோஷம் தரப்போற விஷயம் எதுவும் இல்லம்மா. ''

''வாட் டூ யூ மின்? நீங்க என்ன சொல்றீங்க?''

''ப்ரியா! அவசரப்படாதே. இன்னும் நல்லா யோசிம்மா...''

''இதுல யோசிக்க என்னப்பா இருக்கு. அமெரிக்காவுல வைஜெயந்தி இப்ப நல்லா இல்லையா?''

''அது இங்க இருக்கற நமக்கு எப்படிம்மா தெரியும்?''

''போதும்ப்பா... உங்களுக்கும் ஆணாதிக்கப் புத்திதாம்ப் பா. அம்மாவை கண்ட்ரோல் பண்ணுன மாதிரியே எங்களையும் நீங்க கண்ட்ரோல் பண்ணப் பாக்கறீங்க.''

''ப்ரியா! வார்த்தைகளை ஒரேயடியா கொட்டாதே. வாழ்க்கைல சகிப்புத்தன்மையும் விட்டுக்கொடுத்தலும் தான் ரொம்பவே முக்கியம்.

''நான் ஒண்ணும் விட்டுக் கொடுக்காமலோ, சகிப்புத் தன்மை இல்லாமலோ பேசவேயில்லை. ஒரு நாளைக்குப் பத்து பாக்கெட் பான்பராக் போட்டுக்கறார். இப்பவே உங்க மாப்பிளைகிட்ட நெருங்க முடியலை. அத சகிச்சுக்கறேன்.

என் வீட்டு வாட்ரோபுக்கு ஸ்ப்ரே அடிச்சே நான் ஓய்ஞ்சு போயிடுவேன். அப்படி ஒரு வியர்வை வாடை.... இதையும் நான் சகிச்சுக்கறேன்.''

ப்ரியா பட்டியல் போடப் போட தியாகராஜன் அடக்கமுடியாதபடி சிரித்தே விட்டார்.

''என் வருத்தம் உங்களுக்குச் சிரிப்பா இருக்காப்பா...''

''பின்ன என்னம்மா.. கூவத்த சகிச்ச சென்னைல வாழறவங்க நாம். இதெல்லாம் ஒரு பிரச்சினையாம்மா?''

''டொடக்!''

மறுபக்கம் ப்ரியா ஆத்திரத்தோடு போனை வைக்கும் சப்தம் மட்டும் கேட்டது. அதேசமயம் இருவரையும் சரிசெய்து அவர்கள் வாழ்க்கையைத் தொடர வைக்க முடியும் என்று ஒரு நம்பிக்கையும் அவருக்குள் திடமாகவே எட்டிப் பார்த்தது

**அன்று இரவு...!**

தியாகராஜனும் ஜானகியும் தங்களது மாருதி காரில் ப்ரியாவும் கல்யாணகுமாரும் வசித்துவரும் வீட்டுக்குக் கிளம்பி விட்டனர்.

''அந்தப் பெருமாள்தான் நமக்கு இனி துணை. அவர்தான் அவங்களுக்கு நல்ல புத்திய தரணும்'' என்று மூக்கைச் சிந்தியபடியே வந்தாள் ஜானகி.

தியாகராஜன் மௌனமாகவே வந்தார். பெரியவளுக்கு ஏற்பட்ட விபத்தை இவளுக்கு நிகழவிடாமல் செய்தே தீர வேண்டும் என்னும் ஆவேசம் ஓர் அழுத்தமான மௌன மாக மாறி அவருக்குள் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் போலத் தோன்றியது.

**ப்ரியாவின் ஃப்ளாட்!**

''ஹலோ! வாங்க... வாங்க...'' என்று சிரித்த முகத்துடன் வரவேற்றான் கல்யாணகுமார். ப்ரியா சொன்ன மாதிரியே குப்பென்ற பான்பராக் வாடை

ஹாலில் டி.வி. ஓடிக்கொண்டிருந்தது. ஹாலில் எல்லோரும் அமரவும் டி.வி-யை ஆஃப் செய்தான்.

''எங்க மாப்பிள்ளை ப்ரியா?''

தியாகராஜன் இதமாக ஆரம்பித்தார்.

''அவ அவளோட ஃப்ரெண்ட் வீட்ல இருக்கா மாமா. இனி இங்க என்னோட அவ இருக்க விரும்பலைன் னுட்டா..''

சோபா தலையணை ஒன்றை எடுத்து மடிமேல் வைத்தபடி கல்யாணகுமார் சொன்னபோது தன் கோபத்தை அதன் மீது காட்டுவதை தியாகராஜனுக்கும் உணர்த்திற்று. இருந்தும் அதிலிருந்து விடுபட்டு, ''இருங்க... குடிக்க ஏதாவது கொண்டு வரேன்..''

அவன் எழுந்து செல்ல முயன்றபோது தடுத்தாள் ஜானகி.

''நீங்க இருங்க. நான் பார்த்துக்கறேன்.'' சமையலறை நோக்கிச் சென்றாள் ஜானகி.

''அப்படி என்ன மாப்பிள்ளை உங்களுக்குள்ளே பிரச்சினை?''

ஜானகி பட்டென்று கேட்டுவிட, அவனும் மௌன மாகவே நெடுநேரம் வரை இருந்தான்.

''என்ன மாப்பிள்ளை! வாயைத் திறந்து இப்பவாவது எங்ககிட்ட உங்க சிக்கல்களைச் சொல்லுங்க. இத்தனைக்கும் நீங்க காதலிச்சுக் கல்யாணம் செய்துகிட்டவங்கதானே..? ''

''உண்மைதான் ஆன்ட்டி! காதலிக்கும்போது ரெண்டு தரப்புலயுமே ஒரு தப்பு ரொம்ப சகஜமா நடக்குது. ஒருத்தரை ஒருத்தர் அட்ராக்ட் பண்ணிக்கறதுக்காக அப்ப

நிறையவே நம்மளை மாத்திக்கறோம். ஃபார் எக்ஸாம்பிள், நான் ரெகுலரா ஷேவ் பண்றவன் கிடையாது. ஆனா ப்ரியாவை லவ்பண்ணினப்போ ரெகுலரா ஷேவ் பண்ணிக் கிட்டேன். கல்யாணத்துக்குப் பிறகு நம்ம பெண்டாட்டி தானேன்னு ஒரு நம்பிக்கை ஏற்பட்ட நிலைல அதுல என் பழைய சுபாவமே தொடர ஆரம்பிச்சிடிச்சு. ஆனா, இதை ப்ரியா தப்பா புரிஞ்சிக்கிட்டு நான் அப்ப அவளை அட்ராக்ட பண்றதுக்காக ஏமாத்தினதா சொல்றா. அப்படிப் பார்த்தா அவளும்தான் என்னை ஏமாத்தியிருக்கா. பி.எஸ்ஸி-யில அவ அரியர்ஸ் வெச்சுதான் பாஸ் பண்ணியிருக்கா . என்கிட்ட கோல்டு மெடலிஸ்ட்னு பொய் சொன்னா...''

கல்யாணகுமார் முடிக்கும் முன்பே தியாகராஜன் களுக் கென்று சிரித்து விட்டார்.

''என்ன மாமா... ரொம்பவே சைல்டிஷா இருக்கா நான் சொல்றது?''

''உங்களுக்குப் புரிஞ்சா சரி மாப்பிள்ளை... போகட்டும்... இந்த மாதிரி குட்டி குட்டி விஷயங்கள்தான் டைவர்ஸ் வரை போயிருக்கா... ஆர் யூ ஷ்யூர்?''

''இல்ல மாமா... சங்கீதான்னு ஒரு விடோ லேடி. ஆபீஸ்ல எனக்கு பி.ஏ-வா வந்திருக்கா. ப்ரியாவுக்குப் பிடிக்காத என் நடவடிக்கை அவளுக்குப் பிடிச்சிருக்கு. அதை நான் ப்ரியா கிட்ட ஷேர் பண்ணிக்கிட்டதுலதான் பிரச்சினையே ஆரம்ப மாச்சு. நான் அவளை விட்டு ஒதுங்கி அந்த சங்கீதாகூட ஓடிப்போயிடுவேங்கற அளவுக்குக் கற்பனை பண்ணிக்க ஆரம்பிச்சுட்டா. உடனே எனக்குக் கவுண்ட்டர் கொடுக் கறதுக்காக அவ ஆபீஸ்ல இருக்கிற ரமேஷ் மாதிரியே தனக்கு பையன் பொறக்கணும்னு சொல்றா. இதுக்கு என்ன அர்த்தம் மாமா?''

கல்யாணகுமார் கேட்ட மறுநொடி கன்னத்தில் ஓர் அறை விழுந்த மாதிரி இருந்தது தியாகராஜனுக்கு.

நெடுநேரம் பேச்சே வரவில்லை.

ஜானகியும் கைகளைப் பிசைந்துகொண்டே இருந்தாள். அதன் பிறகும் அவனே தொடர்ந்தான்.

''நான் அந்த சங்கீதாவை அனுதாபத்தோட மட்டும்தான் பார்த்தேன். ஆனா, ப்ரியாவோ எங்களுக்குள்ள ஒரு உறவை உருவாக்கிடுவா போல தெரியுது.''

கல்யாணகுமார் சொல்லி முடித்ததில் கிட்டத்தட்ட எல்லாமே தியாகராஜனுக்கு விளங்கிவிட்டது.

''ஓகே. மாப்ளை .... ப்ரியா ரொம்பவே அவசரப்படறா.. விட்டுக் கொடுக்கறது, சகிப்புத் தன்மைங்கற விஷயங்கள்ல அவளுக்கு ஒரு தெளிவும் இல்லை. நீங்க உங்க பலவீனங்களை நல்லாவே புரிஞ்சு வெச்சுக்கிட்டுப் பேசினீங்க. என் பொண்ணை உங்க வழிக்குக் கொண்டு வர முடியும்னு நான் நம்பறேன். அதே சமயம் நீங்களும் ஒத்துழைக்கணும் ...''

''என்ன செய்யணும் மாமா... சங்கீதாவைப் பத்தி நான் இனி ப்ரியாகிட்ட பேசமாட்டேன். அதுதானே?''

''ஐயோ! தாராளமா பேசுங்க. சங்கீதாவை உங்க சகோதரியா ஆக்கிட்டுப் பேசுங்க. அவ்வளவுதான் நான் உங்களுக்குச் சொல்ல நினைக்கிறது..''

ஒரு வாரம் ஓடிவிட்டது

ப்ரியாவும் கல்யாணகுமாரும் ஒன்றாகவே வேலைக்குக் கிளம்புகிறார்கள். போகும் வழியில் அவன் அவளை இறக்கி விட்டுவிட்டுச் செல்கிறான். பான்பராக் பழக்கத்தைக் கஷ்டப்பட்டு விட்டுவிட்டதைப் போலத்தான் தெரிகிறது. அவளிடமும் ஒரு பயம் தெரிகிறது. அவனை மதிப்பு மிக்கவனாகவும் பத்திரமாகக் கைக்குள்ளேயே வைத்துக்

கொள்ள வேண்டும் என்றும் அவள் நினைக்கிறாள் என்பது காலை ஆறு மணிக்கெல்லாம் அவள் சமையல்கட்டில் குக்கர் வைப்பதிலேயே புரிகிறது.

ஒன்பது மணிக்குள் குழம்பு, ரசம், பொரியல் என்று முடித்து அவனை கேன்டீன் சாப்பாட்டிலிருந்து விலக்கி விட்டாள்.

ஜானகியாலும் இதை நம்ப முடியவில்லை. தியாகராஜன் என்ன சொல்லி இதை சாதித்தார் என்று மண்டையைப் பிய்த்துக் கொண்டவள், அதைக் கேட்டும் விட்டாள். அவரோ ஜானகியை ஊன்றிப் பார்த்துவிட்டு ஆரம்பித்தார்.

"ஜானு! நானே இதை உன்கிட்ட பேசணும்னுதான் இருந்தேன். முப்பது வருஷத்துக்கு முந்தி நாம இருந்த இருப்பையும் அப்ப அதை எப்படிச் சமாளிச்சோம்கறதையும் சொன்னேன். அவ்வளவுதான், ப்ரியாவும் அதைக் கேட்ட நிமிஷம் ரொம்ப அதிர்ச்சியாதான் இருந்தது. என்ன பண்றது, அந்த உண்மைதான் அவளுக்கே அவளைப் புரிய வைச்சது."

தியாகராஜன் சொல்லிவிட்டு மூக்குக் கண்ணாடியை எடுத்து அதை வேட்டி முகப்பில் துடைத்தார். பதிலுக்கு ஜானகியின் கண்களில் நீர் பொலபொலவென்று கொட்டத் தொடங்கிவிட்டது.

"ஸாரி ஜானகி...

அந்த உண்மையைச் சொல்லாமலே இருக்க நமக்கு விதி இல்லை. உனக்கே தெரியும், ஒண்ணை இழந்தாதான் ஒண்ணைப் பெற முடியும்கறது. உனக்கும் எனக்கும்தான் ப்ரியாவும் வைஜெயந்தியும் நாம தத்து எடுத்துக்கிட்ட குழந்தைகள்ங்கறது தெரியும். இப்ப அந்த நிஜம்தான் அவளை அவளுக்கு உணர்த்தியிருக்கு.

பிறக்கும்போதே தாய் தந்தைங்கற இரண்டு பெரிய உறவுகளை இழந்துட்டவன் நான். இனி வாழ்க்கைல ஒரு சிறு உறவைக்கூட இழந்துவிடக்கூடாதுங்கற பொறுப்புணர்ச்சியையும் உருவாக்கியிருக்கு.

இன்ஃபாக்ட் இதை நான் மாப்பிள்ளைகிட்ட சொன்னப்போ அப்படியே என் கால்ல விழுந்து கதறிட்டார். 'மாமா! உங்க பெரிய மனசுக்கும் தியாகத்துக்கும் முன்னால நான் ரொம்பவே சின்னவன். இனி ப்ரியா என்ன செஞ்சாலும் சகிச்சுப்பேன்'னு பொங்கி வழிஞ்சுட்டார்.."

முடிக்கும்போது தியாகராஜனின் கண்களிரண்டும்கூட கலங்கிவிட்டன. நிதானமாகப் போய் நாற்காலி ஒன்றில் அமர்ந்து மூக்குக் கண்ணாடியைக் கழற்றினார்.

"பெரியவ விஷயத்திலேயே நான் இப்படி நடந்துக்கிட்டிருக்கலாம். நம்ம குழந்தைங்க அவங்கங்கற அந்தப் பாசம் அப்ப கட்டிப் போட்டுச்சு. இப்ப அதை அடகு வெச்சுதான் சின்னவ வாழ்க்கையை சரிசெய்திருக்கேன். அவளுக்கு வாழ்க்கை சரியாயிடுச்சு. ஆனா, நமக்குத்தான்..."

முடிக்க முடியாமல் பொங்கிப் பொங்கி அழ ஆரம்பித்து விட்டார், அந்தப் பேராசிரியர்.